# அம்ருதம்

மார்கழி 2023 12

# இலக்கிய உலகின்

# One-Trick Ponies!

ஏடு இட்டோர் இயல்

# இலக்கிய உலகின் One-Trick Ponies!

வெளிநாடுகளுக்கு அகதிகளாக வந்த நாங்கள் பலர், இங்கே உள்ள உணவகங்களில் தான், பகுதி நேரமாகவேனும், வேலைகளை ஆரம்பித்திருக்கிறோம். அந்தச் சமையலறை வேலைகளும் கோப்பை கழுவுவதில் தான் ஆரம்பிக்கும். அவற்றிற்கான சம்பளம் குறைவாக, வேலைப்பளு அதிகமாக இருப்பதால், அந்த வேலைகளைப் பலரும் செய்ய விரும்பாததாலும், ஏற்கனவே அங்கே வேலை செய்கிற நண்பர்கள், உறவினர்கள் காரணமாகவும், நம்மைப் போன்ற அகதிகளுக்கு, தகுதிகளும் அனுபவமும் தேவைப்படாத அந்த வேலைகள் சுலபமாகக் கிடைக்கும். கோப்பைகள் கழுவுகிறவர்களாக வேலை செய்தாலும், வேலை இல்லாத நேரத்தில் சும்மா நிற்க முடியாது. சமையல்காரருக்கு உதவி செய்ய வேண்டி இருக்கும். அதையும் மீறி முதலாளியின் விசுவாசத்தைப் பெற, 'பொஸ்ஸிற்கு' அடித்துக் கொடுக்கும் ஆர்வக் கோளாறுகளும் உண்டு.

அதில் வெங்காயம் வெட்டிக் கொடுப்பதும் ஒரு உதவி.

இதில் நீண்ட காலமாக வேலை செய்வோர், வெங்காயம் வெட்டுவதைப் பார்க்கும்போது, கையை வெட்டிக் கொள்ளாமல், கண்ணீர் விட்டுக் கொள்ளாமல், இப்படி லாவகமாக, வேகமாக வெட்டுகிறார்களே என்று ஆச்சரியப்படும் அளவுக்கு அதில் நிபுணர்களாக இருப்பார்கள்.

மூளையைப் பயன்படுத்தத் தேவையில்லாமல் திரும்பத் திரும்பத் திரும்ப ஒரே வேலையைச் செய்வதால் வரும் நிபுணத்துவம் அது.

இலக்கியவாதிகளோடு பரிச்சயம் உள்ளவர்கள், அவர்கள் தாங்கள் வாசித்தவைகளில் இருந்து மேற்கோள் காட்டுவதை எப்போதுமே கண்டிருப்பார்கள். அதில் தாங்கள் சொல்ல வரும் கருத்துக்கு உரம் சேர்ப்பதை விட, உள்ளூர தங்கள் புலமையைத் தெரியப்படுத்துவதற்கான முனைப்பு அதிகமாக இருப்பது தெரிந்திருக்கும்.

அதைப் போல, தாங்கள் வாசிக்கிற இலக்கியப் புத்தகங்களை பேஸ்புக்கில் படம் போட்டும், பட்டியல் போட்டும் பிரசித்தம் செய்யும் பழக்கம், இலக்கியவாதிகளுக்கு மட்டுமன்றி, இலக்கிய ஆர்வலர்களுக்கும் இருக்கும். அதை வாசித்து முடிப்பார்களோ என்னவோ, வந்து சேர்ந்திருப்பதைக் கூடப் படமாகப் போட்டாலேயே, இலக்கிய அந்தஸ்தும் பெருமையும், கூடவே போனஸாக சில விருப்புக்குறிகளும் கிடைக்கும்.

அதைவிட, இத்தனை புத்தகங்களையும் இவர்கள் எல்லாம் விலை கொடுத்து வாங்கியிருந்தால், இந்த இலக்கியவாதிகள் எல்லாம் ஏன் பட்டினியால் வாடி, யாசகம் செய்ய வேண்டிய தேவையோ, சமூகத்தைத் திட்ட வேண்டிய தேவையோ ஏற்படுகிறது என்ற பெருங்கேள்வி உங்களுக்குத் தோன்றவும் கூடும்.

வேலை வெட்டிக்கே போகாமல், முழுநேர வாசிப்பும், எழுத்துமாகத் தவம் செய்யும் எழுதுவினைஞர்கள் தமிழ் இலக்கியத்தில் அதிகம். அதற்கு வேலைக்குப் போய் சம்பாத்தியம் பண்ணுகிற இவர்களின் தர்மபத்தினிகளும் ஒரு காரணமாக இருக்கலாம். அதைக்

•••

ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்

> **இந்தக் கருத்து முதல்வாதிகளுக்கு கருத்துச் சொல்வதற்கு எது பற்றியும் பாண்டித்தியம் என்ன, அடிப்படை அறிவே வேண்டியிருப்பதில்லை. அல்லது சமூக நீதி பற்றிய நிலைப்பாடு கூடத் தேவைப்படுவதில்லை.**
>
> **தாங்கள் பிறந்து, வளர்க்கப்பட்ட வழிகளில் சொல்லிக் கொடுக்கப்பட்ட, முன்மாதிரியாக வாழ்ந்து காட்டப்பட்ட எதையும் கேள்விகளுக்கு உள்ளாக்காமல், அதையே பேருண்மைகளாக விசுவசித்துக் கொண்டிருப்பவர்களுக்கு, கருத்துக் களைச் சொல்வதும், அதைக் கேள்விக்குள்ளாக்குவோர் மீது கொலை வெறி கொண்டிருப்பதும் தங்களின் பிறப்புப் பெருமையின் தொடர்ச்சியை உறுதி செய்வதற்கான வழி மட்டுமே.**
>
> **அதற்கு தர்க்கரீதியான நியாயங்கள் கூடத் தேவையில்லை.**
>
> **வெறும் நம்பிக்கைகளே போதுமானவை. அந்த நம்பிக்கைகள் கூட பெரும்பாலும் மூடத் தனமானவையாகவே இருக்கும்.**



**facebook: George RC**

கூட, அவர்களின் பதினைந்து நிமிடத்திற்கு ஒரு தடவையான பதினைந்து நிமிடப் புகழ் பதிவுகள், கவிதைகள், விமர்சனங்களிலேயே கண்டுகொள்ளலாம்.

அம்புலிமாமா கதைகளின் முடிவில் வரும் 'சதா இன்புற்றிருந்தார்கள்' மாதிரி, இந்த இலக்கியவாதிகள் எல்லாரும் சதா (சு)வாசிப்பது ஏன் இலக்கியமாக மட்டுமாகவே இருக்கிறது என்பது எனக்கு எப்போதும் ஆச்சரியமாகவே இருக்கிறது.

வழமை போல, உள்ளூர் அரசியல் முதல் உலக அரசியல் வரைக்குமான கட்டாய கருத்துக்கள், பதிவுகளை எல்லாம் இதனோடு சேர்க்க முடியாது. அது சாதாரண தமிழனாக இருக்கிற எல்லோருடையவும் கட்டாய சமூகக் கடமை.

கருத்துச் சொல்லாமல் விடுவது என்பதே 'கள்ள மௌனம்' என்று கருத்துக் கந்தசாமிகளால் சாட்டப்படக் கூடிய குற்றம். நீங்கள் கருத்துச் சொல்லா விட்டால், எப்படி உங்களை விமர்சனம் செய்ய முடியும்?

'கனக்கத் தெரிஞ்சது மாதிரிக் கதைக்கிறாய்? உனக்குக் கனக்கத் தெரியுமோ?' என்றோ, 'எல்லாம் தெரிஞ்ச மாதிரிக் கதைக்கிறார். உவரையும் கடந்து போக வேணும்' என்றோ, எல்லாம் தெரிந்த யாழ்ப்பாணிகள் மாதிரிச் சொல்ல வேண்டும், தன்னை உங்களை விட மேலான புத்திசாலியாகக் காட்ட வேண்டும் என்றால், நீங்கள் கருத்துச் சொல்லியாகத் தானே வேண்டும்?

இருக்க வேண்டியவர்கள் இருந்து, அவர்களின் கைகளில் துப்பாக்கி இருந்த போது, கையைக் கட்டி வாயைப் பொத்திக் கொண்டிருந்தவர்கள் கூட, இப்போது வெளியே கிளம்பி மற்றவர்களின் 'கள்ள மௌனம்' பற்றிக் குற்றம் சாட்ட முடியும்.

நான் சொல்ல வருவது, இந்த சர்வ சாதாரணக் கருத்து முதல் வாதிகள் பற்றியதல்ல. இந்தக் கருத்து முதல்வாதிகளுக்கு கருத்துச் சொல்வதற்கு எது பற்றியும் பாண்டித்தியம் என்ன, அடிப்படை அறிவே வேண்டியிருப்பதில்லை. அல்லது சமூக நீதி பற்றிய நிலைப்பாடு கூடத் தேவைப்படுவதில்லை. தாங்கள் பிறந்து, வளர்க்கப்பட்ட வழிகளில் சொல்லிக் கொடுக்கப்பட்ட, முன்மாதிரியாக வாழ்ந்து காட்டப்பட்ட எதையும் கேள்விகளுக்கு உள்ளாக்காமல், அதையே பேருண்மைகளாக விசுவசித்துக் கொண்டிருப்பவர்களுக்கு, கருத்துக் களைச் சொல்வதும், அதைக் கேள்விக்குள்ளாக்குவோர் மீது கொலை வெறி கொண்டிருப்பதும் தங்களின் பிறப்புப் பெருமையின் தொடர்ச்சியை உறுதி செய்வதற்கான வழி மட்டுமே.

அதற்கு தர்க்கரீதியான நியாயங்கள் கூடத் தேவையில்லை. வெறும் நம்பிக்கைகளே போதுமானவை. அந்த நம்பிக்கைகள் கூட பெரும்பாலும் மூடத் தனமானவையாகவே இருக்கும்.

அவர்களை விட, இந்த இலக்கியவாதிகள் தான் இங்கே கேள்விக்குள்ளாக்கப்படுகிறவர்கள்.

இவர்களின் கருத்துக்கள் கூட எந்த விதத்திலும், மேற்சொன்ன கருத்துமுதல்வாதிகளினதை விட மேலானதாக இருப்பதில்லை. அவர்களும் இதே சமூகத்தில் தான் பிறந்து, வளர்க்கப்பட்டிருப்பவர்கள். அதே சமூக அநீதிகளை, நியாயங்களாக நம்பிக் கொண்டிருக்கிறவர்கள். இன்றைக்கும் அதே சாதீய மனநிலைக்குள்ளால் வெளியேற முடியாமல் இருக்கிறவர்கள். அவர்களுடைய சிந்தனையும் அதற்குள்ளால் தான் இருந்து வளர்ந்திருக்கிறது.

சாதாரண 'சாமான்யர்களை'

அபத்தம்
மார்கழி 2023




ஆக்கங்களுக்கு ஆக்கியோர்களே பொறுப்பு. ஆயினும் அதைப் பிரசுரிப்பதற்கான பொறுப்புகளில் இருந்து அபத்தம் விலக மாட்டாது.

email: apaththam@gmail.com
www.thayagam/apaththam
www.facebook.com/apaththam

ஆசிரியர், வடிவமைப்பு
ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்
Editor/Design
George R. Ckrhushchev

விட, இலக்கியவாதிகள் ஏதோ ஒரு விதத்தில் மேம்பட்டவர்களாகத்தானே இருக்க வேண்டும். அவ்வாறான எதிர்பார்ப்பு சமூகத்தில் இருப்பதும் நியாயமானது தானே!?

சாதாரண வாழ்வை ஓட்டிக் கொள்வதற்கு, பெரும்பாலும் பகுத்தறிவு தேவைப்படுவதில்லை. நான் சொன்ன, உணவகத்தில் கோப்பை கழுவுவதற்கு அறிவு எதுவும் தேவைப்படுவதில்லை. நானும் என் பாடசாலை நண்பர்களும் வந்த புதிதில் இப்படி வேலை செய்த போது, அந்த வேலையை கர்மசிரத்தையோடு முப்பது வருடங்களாகச் செய்து கொண்டிருந்த ஒரு வெள்ளையர் அங்கிருந்தார்.

யாழ்ப்பாணிகள் தங்கள் புத்திசாலித்தனத்தை விளம்பிக் கொள்ளச் சொல்லும், 'கண் பார்க்கக் கை செய்யும்' என்ற பதம், மூளைக்கு இதெல்லாம் போக வேண்டிய தேவை இல்லை என்பதைத் தானே காட்டி நிற்கிறது. பெரும்பாலும் சாமானிய மனிதர்களின் முடிவுகளும் தீர்மானங்களும் பகுத்தறிவு சார்ந்ததாக இருக்காமல், உணர்வு, நம்பிக்கை, தப்பிப் பிழைத்தல், சுயநலம் ஆகியன சார்ந்ததாகத் தான் இருக்கும். அதற்கு அவர்களுக்கு வேறு தெரிவுகள் இல்லாமல் இருப்பதும், இயலாமையும் மிகப் பெரிய காரணங்களாக இருக்கும். அவர்கள் தேர்தல்களில் வாக்களிக்கும் விதங்களை அவதானித்தாலேயே, அதற்கான ஆதாரங்களைக் கண்டுகொள்ளலாம்.

ஆனால், இலக்கியவாதிகள் எனப்படுவோர், சிந்தனையை வெளிப் படுத்துகிறவர்களாக, பதிவு செய்கிறவர்களாகத் தான் அறியப்படுகிறார்கள். அவர்களுக்குத் தர்க்கரீதியான பகுத்தறிவும், சமூக உணர்வு நிறைந்த பார்வையும், அதற்கு மேலாக சமூக நீதி பற்றிய தெளிவும் இருக்க வேண்டும்.

காரணம், மேலே சொன்ன சாமானிய மனிதர்களுக்கு, தங்களுக்கு கிடைக்க வேண்டிய நீதியை உறுதி செய்வதற்கான வழிகளோ, அதற்காகப் போராடுவதற்கான துணிச்சலோ இருப்பதில்லை. அதனால், இந்தச் சிந்திக்கத் தெரிந்த இலக்கியர்கள் தான் தங்கள் கடமையாக இதையெல்லாம் உணர்ந்து செயற்பட வேண்டியவர்கள். சமூகத்தில் சிந்தனை எழுச்சியை ஏற்படுத்துவதாயின் அவ்வாறான பெறுதிகளைக் (Values) கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

அரசியல் தலைமை வழங்குவோர், போராட்டங்களுக்குத் தலைமை தாங்குவோரின் நிலைகள் அவ்வாறானவை அல்ல. அவர்கள் எப்போதுமே அதிகாரங்களை அடையும் போது, அவர்களுக்கான சமூக உணர்வு மறைந்து, அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதும், அதை சுயநலனுக்காகப் பயன்படுத்துவதிலும் அக்கறை வந்து விடுகிறது. சமூக நீதி என்பது அவர்களுக்கு வெறும் afterthought மட்டுமே.

இலக்கியம் படைப்போருக்கு அந்த எல்லைகளும் சிக்கல்களும் இருப்பதில்லை. அவர்கள் அவற்றுக்குக் கட்டுப்படாமல், சுதந்திரமாக இயங்கலாம். செயற்படலாம்.

அவர்கள் தலைமை வழங்கி வழிநடத்த வேண்டியதில்லை. வழிகாட்ட வேண்டியவர்கள்.

அந்த வழிகாட்டலைச் செய்வதற்கு, அவர்களுக்குச் சுயநலம் கடந்த சமூக உணர்வு மட்டுமன்றி, சமூகம் பற்றிய பரந்து பட்ட பார்வையும் அறிவும் முக்கியம்.

அது எங்கே இருந்து கிடைக்கும்?

அது வாசிப்புகள், அவதானங்கள் அடிப்படையிலான சிந்தனை மூலமாகத் தான் கிடைக்க முடியும்.

எங்கள் இலக்கிய உலகத்தினருக்கு அந்தத் தேடல் என்பது மிகவும் அபூர்வமானதாகத் தான் இருக்கிறது. எவரைப் பார்த்தாலும், இலக்கியம் என்று அவர்கள் நம்புகிற எதையோ வைத்துக் கொண்டு, குண்டுச்சட்டிக்குள் அங்கீகாரத்தைத் தேடிக் குதிரை ஓடுகிறவர்களாகத் தான் பார்க்க முடிகிறது.

உலகத்திலே இருக்கிற எல்லா இலக்கியவாதிகளும் ஏதோ சமூக நோக்கத்தோடு தான் எழுதுகிறார்கள்

என்றெல்லாம் இல்லை. சமூகத்தோடு ஒன்றிக் கொள்ளாமலேயே, தங்களைத் தனிமைப்படுத்திப் பெயர் வாங்கியவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். தாங்கள் எழுதுவது தவிர்ந்து வேறு எதையுமே தெரிந்து கொள்ளாதவர்கள் எல்லாம் இருக்கிறார்கள்.

ஆனாலும், பிரபலமடைந்த பலர் அதை சமூக வெளியில் பொதுமனிதர்களுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு எதிராகக் குரல் கொடுத்த வண்ணமே இருக்கிறார்கள். அந்தச் சமூகங்களில் தங்களுக்குக் கிடைத்த பெயரை வைத்து அந்தச் சமூகத்திற்குப் பயன்படக் கூடிய விடயங்களில் குரல எழுப்புகிறார்கள். அவர்களுடைய அந்தச் செயற்பாடுகள், மானிடம், சமூகம் சார்ந்ததாகவே இருக்கின்றனவே அன்றி, கட்சி சார்ந்ததாக இருப்பதில்லை. இதனால் தான் அவர்கள் அரசியல்வாதிகளுக்கு ஓடி வந்து முட்டுக் கொடுக்கும் வேலைகளைச் செய்வதில்லை.

ஊடகங்கள் எதிர்க்கட்சியின் வேலையைச் செய்ய வேண்டும் என்ற காலம் போய் விட்ட பின்னால், இலக்கியவாதிகளிடம் தான் இப்போது அந்தப் பொறுப்பு வந்து விழுந்திருக்கிறது.

அரச அதிகாரங்களும் ஊடகங்களும் யுத்தங்களை நியாயப்படுத்தி, பொதுமக்களுக்கு விற்பனை செய்யும் சூழல்களிலும், எங்கோ எவரோ ஒரு இலக்கியவாதி குரல் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். தற்போதைய சூழ்நிலைகளில் அது ஒரு தற்கொலைக்குச் சமமாக இருந்தாலும், அதனால் வரக்கூடிய பாதிப்புகளைத் தெரிந்து கொண்டும் அதைச் செய்கிறார்கள்.

அந்தச் செயற்பாடுகள் கூட, தொடர்ச்சியானதாகத் தான் இருக்கின்றன. பேஸ்புக் பரபரப்புகளின் போது, 'உள்ளேன் ஐயா!' என்று கடமைக்குத் தன் இருப்பைத் தெரிவித்துக் கடந்து போவது மாதிரியானதாக இல்லாமல்.

எங்களுடைய சூழலில் இதெல்லாம் மிகவும் அபூர்வமானதாகத் தான் இருக்கின்றது.

**இவர்கள் பலருடைய வாசிப்புகள் இவர்கள் இலக்கியம் என்று சொல்கிறவை மட்டுமானவையாகத் தான் இருக்கின்றன. உலக இலக்கியம் பற்றி வாசிப்பதாகப் பெருமை கொள்கிறவர்களால், உலக விவகாரங்கள் பற்றி தெளிவாக அறிய முடிவதில்லை. இலக்கியம் கடந்த அரசியல் வாசிப்பாளர்களும், தாங்கள் கைக்கொண்டு இருப்பதாகச் சொல்லும் (அல்லது பாசாங்கு காட்டும்!) சர்வரோக நிவாரணிச் சித்தாந்தங்களின் சிறைக்கைதிகளாகத் தான் இருக்கிறார்கள்.**

அதற்கான காரணங்களும் இருக்கின்றன.

குறிப்பாக எங்கள் யாழ்ப்பாணச் சூழலில், துறைசார் நிபுணர்கள் அதிகம். அறிவு என்பதை விட, படிப்பு என்பது முதன்மைப் படுத்தப்பட்ட சூழல் அது. படிப்பும் அதனால் வரும் பட்டமும், 'கோழி மேய்த்தாலும் கொர்ணமேந்தில் மேய்ப்பதற்கானவை!'. அந்தப் படிப்புக் கூட, சீதனம் வாங்கலாம், உழைத்துச் சீதனம் கொடுக்கலாம் என்பது போன்ற அடிப்படைக் காரணங்களைக் கொண்டனவாகத் தான் இருக்கும்.

அறிவை ஆர்வத்துடன் தேடாது, ஒரு இயந்திரத்தனத்தோடு படிப்பது தான் எங்கள் சமூகத்தில் படித்த முட்டாள்களை உற்பத்தி செய்து வைத்திக்கிறது. அந்தப் படித்த முட்டாள்களுக்கு பகுத்தறிவு என்பது சம்பந்தமில்லாத விடயம். அந்த வெறும் படிப்பு, பொதுவெளியில் 'தாங்கள் படித்தவர்கள்' என்ற பெரிய எண்ணத்தோடு, முட்டாள்தனமான கருத்துக்களை வெட்கமில்லாமல் முன்வைப்பதற்கான துணிச்சலையும் கொடுக்கிறது.

கடைசியில், தீவிரமான தர்க்கரீதியான விவாதங்களுக்குப் போகும் போது, சாதாரண பொதுமனிதர்களைப் போல, தங்கள் பிற்போக்குத்தனமான நம்பிக்கைகள், சிந்தனைகள் அடிப்படையில், வழமை போல, 'துரோகிகள்' மாதிரியான ஒரு முத்திரையைக் குத்தி விட்டு, தங்களைப் பற்றிய பெருமிதத்தோடு கடந்து போக வைத்து விடுகிறது.

இவர்களில் பெரும்பாலோர் புத்தகப்படிப்பு மட்டும் படித்த அறிவாளிகள். இவர்களுக்கு சமூகம் பற்றிய விசாலமான பார்வைகள் இருப்பதில்லை.

அரசியலுக்கும் அப்பால், சமூகம் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றிய தெளிவுகள் இருப்பதில்லை. சுற்றாடல் மாசுபடுதல், பூமி வெப்பமாகுதல், தொழில் நுட்ப வளர்ச்சிகள் சமூகத்தில் ஏற்படுத்தப் போகும் மாற்றங்கள், சமூகத்தில் இளையதலைமுறை எதிர்நோக்கும் சவால்கள் என, இந்த உலகம் எதிர்கொள்ளும் பல பிரச்சனைகள் குறித்து அறிவோ, தெளிவோ, ஆர்வமோ எதுவும் இல்லை.

தமிழ்நாட்டுச் சினிமா வெளியீடுகளிலும், பேஸ்புக் பரபரப்புகளிலும் இருக்கும் ஆர்வம் கூட, இந்த சமூகச் சவால்கள் குறித்து இருப்பதில்லை.

தாங்கள் செய்கிற ஏதோ ஒன்றை மட்டும் அறிந்தவர்களாக இருந்து கொண்டு, அதற்கு அப்பாலானவற்றை வெறும் கேள்விச் செவியர்களாக, அதன் அடிப்படைகளைக் கூடத் தெரிந்து கொள்ளாமல், மேலோட்டமாக எதையோ தெரிந்து கொண்டு மேதாவித்தனமான தீர்ப்புகளைச் சொல்கிறவர்களாக இருக்கிறார்கள்.

இவர்கள் பலருடைய வாசிப்புகள் இவர்கள் இலக்கியம் என்று சொல்கிறவை மட்டுமானவையாகத் தான் இருக்கின்றன. உலக இலக்கியம் பற்றி வாசிப்பதாகப் பெருமை கொள்கிறவர்களால், உலக விவகாரங்கள் பற்றி தெளிவாக அறிய முடிவதில்லை. இலக்கியம் கடந்த அரசியல் வாசிப்பாளர்களும், தாங்கள் கைக்கொண்டு இருப்பதாகச் சொல்லும் (அல்லது பாசாங்கு காட்டும்!) சர்வரோக நிவாரணிச் சித்தாந்தங்களின் சிறைக்கைதிகளாகத் தான் இருக்கிறார்கள்.

இந்தக் குண்டுச்சட்டிக் குதிரையோட்டம் எங்கள் இலக்கியச் சூழலிலும் இருப்பது இந்தச்

சமூகத்திற்கும் உலகத்திற்கும் என்ன பயனைத் தரக் கூடியது?

எங்களுடைய இலங்கை சார் இலக்கியச் சூழலில் டாக்டர் நோயல் நடேசன் பல்வேறு வகையான சமூகச் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். வைத்தியசாலை கட்டிக் கொடுத்தது முதல், புற்றுநோயால் பாதிக்கப் பட்டவர்களுக்கான உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறார். அண்ணன் வடகோவை வரதராஜன் விவசாயம் குறித்து மட்டும் எழுதுகிறவராக இல்லாமல், சூழலியல் செயற்பாடுகளில் ஆர்வம் கொண்டவராக, மரம் நடுதல் போன்ற களப்பணிகளில் ஈடுபடுகிறார். கவிஞர் கருணாகரன் அங்குள்ள முன்னாள் போராளிகள், வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்வோர் நலன் குறித்த செயற்பாடுகளில் மிகவும் அக்கறையுள்ளவராக இருக்கிறார். இவர்களைப் போல, வேறு சிலரும் ஏதோ வகைகளில் சமூகம் சார்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் இவ்வாறான செயற்பாடுகள் மிகவும் அரிதாகவே நடைபெறுகின்றன. செயற்பாடுகள் என்று இல்லாவிட்டாலும், இலக்கியம் கடந்த பார்வை என்று வந்தால், முன்பு சுஜாதா ஒருவர் தான் இலக்கியம் கடந்து தொழில்நுட்பம் என்றல்லாம் பல்வேறு விடயங்கள் குறித்து ஆர்வம் கொண்டவராக இருந்திருக்கிறார். அவரது சமூகப் பார்வை குறித்த விமர்சனங்கள் தனியானவை. உடன்பட முடியாதவை.

மற்றும்படி, சமூகம் சார்ந்து விழிப்புணர்வு பற்றிய கருத்துக்கள் என்றால், தலித் சார்ந்த கருத்துக்கள் கொண்டோரில் சிலரையே நினைவுக்கு கொண்டு வர முடிகிறது.

அவர்களை விட, இலக்கியம் சாராத சமூகச் செயற் பாட்டாளர்களையே உதாரணமாகக் கூற முடியும்.

மற்றும்படி, பெரும்பாலான இலக்கியச் செம்மல்கள் இந்துத்துவ ஊடுருவலைக் காட்டி, தி.மு.கவுக்கு முட்டுக் கொடுக்கிறவர்களாகவே இருக்கிறார்கள்.

**இந்த இலக்கியச் செம்மல்களும் தங்கள் 'நமக்குத் தெரிந்தது எழுத்து' மனநிலைக்கும் அப்பால், தங்கள் மனதில் ஊறியிருக்கும் பிற்போக்குச் சிந்தனைகளையும் கடந்து உலகத்தைப் பார்க்கும் அளவுக்கு தங்கள் பார்வையை விரிவுபடுத்திக் கொள்ளாவிட்டால், செத்துப் போன குதிரைக்குட்டி மாதிரி, ஏதோ ஒரு வித்தையை வைத்துக் கொண்டு, கொஞ்ச நேரம் வேடிக்கை காட்டிக் கொண்டிருப்பதிலும், வெங்காய வெட்டு நிபுணர்கள் மாதிரி தாங்கள் இல்லாமல் இந்த உலகம் எப்படி வாழப் போகிறதாம் என்ற நினைப்போடு காலத்தை ஓட்டிக் கொள்வதிலும் தான் முடியும்.**

அதற்கான காரணங்கள் என்ன?

சமூக விழிப்புணர்ச்சியைத் தோற்றுவிப்பதை விட, அந்தந்த வார இலக்கிய, அரசியல் சர்ச்சைகள் எங்களுக்கு முக்கியமானவையாக இருக்கின்றன. சமூகத்தின் சவால்கள் பற்றி எழுதுவதை விட, எங்களுக்கு அங்கீகாரமும் விருதுகளும் முக்கியமானவையாகி விட்டன.

'நமக்குத் தெரிந்தது எழுத்து' என்று யாரோ எங்கோ எழுதி எப்போ வாசித்த ஞாபகம். ஆக, தெரிந்தது எழுத்து மட்டும் தான் என்ற நிலை அதிகம்.

உணவகங்களில் கற்றுக் கொண்ட, வெங்காய வெட்டு நிபுணர்கள் மாதிரி, இவர்களின் நிபுணத்துவம் திரும்பத் திரும்பச் செய்வதால் கூர்மை பெற்ற 'நமக்குத் தெரிந்த எழுத்துக்குள்ளேயே' பீலா காட்டிக் கொண்டிருக்கிறது.

அந்த ஒரிஜினல் வெங்காய வெட்டு நிபுணர்கள் கூட, தங்களைப் பற்றிய அதீதமான மதிப்பீடுகளையே கொண்டிருப்பார்கள். தங்களை வேலையில் இருந்து நிறுத்தினால், உணவகமே ஸ்தம்பித்து விடும் என்பது போன்ற நினைப்போடு தான் இருப்பார்கள்.

அதைப் போலத் தான் இலக்கியவாதிகளும், தாங்கள் இல்லாமல் இந்த உலகம் ஸ்தம்பித்து விடும் என்ற கனவில் புதையுண்டிருக்கிறார்கள்.

சர்க்கஸ் கூடாரங்களில் பொதுமக்களுக்கு கேளிக்கை வித்தை காட்டுகிற குதிரைக் குட்டிகளுக்குப் பெரும்பாலும் பல வித்தைகள் தெரிந்திருப்பதில்லை. ஒரே ஒரு வித்தையை மட்டும் வைத்துக் கொண்டு வித்தை காட்டிக் கொண்டிருக்கும். அது கூட, சுவாரஷ்யமானதாக இல்லாமல், இறந்து போயிருப்பது போல நடிப்பதாக மட்டும் தான் இருக்கும்.


அது எவ்வளவு நேரம் மகிழ்ச்சிப்படுத்த முடியும்? அவற்றால், நீண்ட நேரத்திற்குக் கூட்டத்திற்கு கேளிக்கை காட்ட முடிவதில்லை. கூட்டம் பொறுமையிழந்து விடும்.

இந்த இலக்கியச் செம்மல்களும் தங்கள் 'நமக்குத் தெரிந்தது எழுத்து' மனநிலைக்கும் அப்பால், தங்கள் மனதில் ஊறியிருக்கும் பிற்போக்குச் சிந்தனைகளையும் கடந்து உலகத்தைப் பார்க்கும் அளவுக்கு தங்கள் பார்வையை விரிவுபடுத்திக் கொள்ளாவிட்டால்,
செத்துப் போன குதிரைக்குட்டி மாதிரி, ஏதோ ஒரு வித்தையை வைத்துக் கொண்டு, கொஞ்ச நேரம் வேடிக்கை காட்டிக் கொண்டிருப்பதிலும், வெங்காய வெட்டு நிபுணர்கள் மாதிரி தாங்கள் இல்லாமல் இந்த உலகம் எப்படி வாழப் போகிறதாம் என்ற நினைப்போடு காலத்தை ஓட்டிக் கொள்வதிலும் தான் முடியும்.

இருக்கும் வரைக்கும், 'நானும் ரெளடிதான்!' என்று பீலா காட்டலாம். வாங்கின விஸ்கிக்கோ, விருதுக்கோ, சேர்ந்து குடிக்கிற முகாம் கும்பல் என்பதற்காகவோ அதற்கு 'செமண்ணே!' பிற்பாட்டுப் பாட ஒரு கூட்டம் இருக்கும்.

அதற்குள், சமூகம் எங்கோ போய் விடும்.

உங்களை கொண்டா டுவதற்கு என்ன, நினைவில் வைத்திருக்கவே அதற்குத் தேவை இருக்காது.







ராகவன்

# தமிழ் நாட்டு புலி விம்ப அரசியலின் மேலான விமர்சனம்

**அவர் இந்த நூலை எழுதி வெளியிட்டபின் நூலைப் படிக்காமலே தமிழ் நாட்டையும் இலங்கையையும் சேர்ந்த புலிப்பற்றாளர் பலர் இந்த நூல் இலங்கை அரச ஆதரவென்றும், சம தர்ம பௌத்தத்திற்கும் சனாதன இந்துத்துவத்துக்கும் எதிரான யுத்தமென அவர் இனப்பிரச்சனையை வர்ணிப்பதாகவும் வழமையான புரட்டுக்களை அவிழ்த்து விடுகின்றனர்.**

**இதில் துளியளவும் உண்மையில்லை.**

**சல்மான் ருஸ்டி சத்தானிக் வேர்சஸ் என்ற நூலை எழுதியபோது மதவாதிகள் பலர் நூலைப்படிக்காமலே கொளுத்தினர். ருஸ்டிமேல் பத்வா.**

**அதே மன நிலை தான் இந்த புலிப்பற்றுக்கொண்ட தமிழ் தேசியர்களுக்கு.**

லஜபதிராய் எழுதி, நீலம் பதிப்பகத்தால் செப்டெம்பர் 2023 இல் வெளியிடப்பட்ட வேடர் நாட்டில் சிங்கங்களும் புலிகளும் என்ற நூல் விடுதலைப்புலிகளே இலங்கை தமிழரின் விடுதலைக்கான ஏகபோக பிரதி நிதிகள் என்ற மாயையை உடைத்துள்ளது.

இதுவரை தமிழ் நாட்டில் விடுதலைப்புலிகளை விதந்தோதும் நூலகளே வெளிவந்தன. அ.மார்க்ஸ் போன்ற ஒரு சிலர் விடுதலைப்புலிகள் மேல் விமர்சனப்பார்வை கொண்டிருப்பினும் தமிழக அரசியலில் விடுதலைப்புலிகள் பற்றிய விமர்சனங்கள் எழவில்லை எனவே சொல்லலாம்.

லஜபதிராய் ஒரு வழக்கறிஞர் மட்டுமல்ல, சமூக நீதிக்காக குரல் கொடுப்பவர். பட்டியல் இன மக்களுக்கெதிரான வன்கொடுமை போன்ற பல நூல்களை எழுதியவர். 2009 ஜனவரியில் இலங்கையில் போர் உச்சகட்டத்தில் இருந்தபோது தீக்குளித்து மரணமடைந்த தமிழ் நாட்டை சேர்ந்த முத்துக்குமாருக்கு சிலை வைப்பதற்கு பொலிசார் தடையுத்தரவு கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததற்கு எதிராக வாதாடி வென்றவர் லஜபதிராய்.

அவர் இந்த நூலை எழுதி வெளியிட்டபின் நூலைப் படிக்காமலே தமிழ் நாட்டையும் இலங்கையையும் சேர்ந்த புலிப்பற்றாளர் பலர் இந்த நூல் இலங்கை அரச ஆதரவென்றும், சம தர்ம பௌத்தத்திற்கும் சனாதன இந்துத்துவத்துக்கும் எதிரான யுத்தமென அவர் இனப்பிரச்சனையை வர்ணிப்பதாகவும் வழமையான புரட்டுக்களை அவிழ்த்து விடுகின்றனர்.

இதில் துளியளவும் உண்மையில்லை.

சல்மான் ருஸ்டி சத்தானிக் வேர்சஸ் என்ற நூலை எழுதியபோது மதவாதிகள் பலர் நூலைப்படிக்காமலே கொளுத்தினர். ருஸ்டிமேல் பத்வா. அதே மன நிலை தான் இந்த புலிப்பற்றுக்கொண்ட தமிழ் தேசியர்களுக்கு.

தமிழ் நாட்டை பொறுத்தவரை இந்த நிலைக்கு அடிப்படைக்காரணம் திராவிட கழக அமைப்பைச்சார்ந்த சுபவீ, விடுதலை ராஜேந்திரன், கொளத்தூர் மணி போன்றவர்களும், விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பை சார்ந்த திருமாவளவன் போன்றவர்களும் மற்றும் நெடுமாறன், வைகோ போன்றவர்களுமே.

இலங்கை தமிழரின் அரசியல் உரிமையை விடுதலைப்புலிகள் மட்டுமே வென்றெடுப்பவர்கள். அவர்கள் மேலான விமர்சனம் விடுதலைக்கெதிரான விமர்சனம் என்ற ஒற்றைப் பரிமாண அரசியலை அவர்கள் முன்னெடுத்தனர். சுபவீ, திருமாவளவன் போன்ற தெளிந்த அரசியல் பண்பாடு கொண்டவர்கள் இந்தியாவில் நல்லிணக்கம், ஜன நாயகம், சகிப்புத்தன்மை, பகுத்தறிவு, விவாதம், விமர்சனப்பார்வைபோன்ற விழுமியங்களை முன்னெடுக்கும் அதே வேளை இலங்கை அரசியலில் விடுதலைப்புலிகளை விமர்சனமின்றி ஆதரித்தது முரண் நகை. இந்த அரசியலின் விளைவு இன்று சீமான் போன்ற தமிழ் பாசிஸ்டுகளை தோற்றுவித்திருக்கின்றது.

2009 இல் யுத்தம் முடிவுக்கு வந்தவுடன் சீமான் புலியை தனது அரசியல் பிரவேசத்துக்கான குறியீடாக்கி படிப்படியாக திராவிட அரசியல் மீது கல்லெறியத் தொடங்கினார். பெரியாரை கன்னடரென்றும், திராவிடம் தமிழருக்கு விரோதி என்றும் திட்டமிட்ட பரப்புரைகளை மேற்கொண்டார். கருணாநிதியும் காங்கிரசும் சேர்ந்தே இலங்கை அரசுக்கு உதவி செய்து புலிகளை அழித்ததாக பொய் பரப்புரைகளை தொடர்ந்தார். ஆனால் புலிகளின் மேலான விமர்சனப் பார்வையை விடுத்து சுபவீ, திருமாவளவன் போன்றவர்கள் தாங்களே புலிகளின் உண்மையான சீடர்கள் என்ற வகையில் பரப்புரையை மேற்கொண்டனர். இங்கு தான் பிரச்சனை எழுகிறது.

லஜபதிராயின் நூலுக்கு முன்னாள் நீதிபதி சந்துரு தனது முன்னுரையில் தமிழக அரசியல் தலைவர்கள் சிலருக்கு தமிழீழம் பற்றிய சரியான புரிந்துணர்வு இல்லாமல் வரலாற்றை தங்களுக்கேற்றது போல் திரித்து எழுதுதலை இந்த நூல் வெளிப்படுத்துகிறது என்றார்.

அதே வேளை போருக்கு பின் கருணாநிதி மேலும், பெரியார் மேலுமான அவதூறுகள் திட்டமிட்டு நாம் தமிழர் கட்சியாலும் அவர்களுக்கு ஆதரவான புலம் பெயர்ந்த தமிழர்களாலும் பரப்பப்பட்டன. இதனால் பல திராவிட கழக, திமுக இளைஞர்கள் அதிருப்தி உற்று, புலிகள்

சம்பந்தமான விடயங்களை ஆய்வு செய்யத் தொடங்கினர். முறிந்த பனை போன்ற புத்தகங்கள் அவர்களுக்கு புதிய வெளிச்சத்தைக்கொடுத்தன.

விடுதலைப்புலிகளின் ஜன நாயகமறுப்பு, பாசிச மன நிலை, மாற்று இயக்கங்களையும் அறிவுஜீவிகளையும் அரசியல் தலைவர்களையும் கொன்று குவித்த வரலாறுகளை அவர்கள் படிக்கத்தொடங்கினர். இதன் விளைவாக சமூக வலைத்தளங்களில் பல்வேறு விவாதங்கள் எழுந்தன. இது ஒரு ஆரோக்கியமான அரசியல் வெளியை உருவாக்கியது.

இதன் தொடர்ச்சியே லஜபதி ராயின் நூலின் வருகை. இனி நூலைப் பற்றி பார்ப்போம்.

லஜபதிராய் இந்த நூலுக்கு பெரும் உழைப்பைக் கொடுத்துள்ளார். நான்கு ஆண்டுகளாக இலங்கை சம்பந்தமான பல நூல்களை படித்தது மட்டுமல்லாமல், நெடுமாறன் உட்பட பலரை நேர்காணலும் செய்துள்ளார்.

342 பக்கங்களைக்கொண்ட இந்த நூல், 20 அத்தியாயங்களைக கொண்டது. எத்தியோப்பியாவே மானிடத்தின் தொட்டில் என்ற மானிடவியல் கோட்பாட்டின் வெளிச்சத்திலேயே லஜபதி ராய் இந்த நூலை சமைத்துள்ளார். அமபேத்கர் பாகிஸ்தான் பிரிவினை பற்றிய நூலின் முன்னுரையில் சொல்கிறார்

'முஸ்லிம்களும் இந்துக்களும் இந்த நூலை நிராகரித்த காரணமே போதும் நான் இந்த நூலை பக்கச் சார்பின்றியும் பயம் இன்றியும் எழுதியதற்கான சாட்சி என நிரூபிக்க. இந்த நூலில் இருக்கும் ஆதாரங்கள் கட்சி சார்ந்தவையல்ல. நான் சொன்ன விடயங்களால் சிலர் மனக்கசப்படைந்திருக்கிறார்கள்.

மற்றவர்களை காயப் படுத்தும் என்பதற்காக தனி நபர்களதோ, குறிப்பிட்ட சமூகப் பிரிவினருடையதோ கருத்துக்களால் பாதிக்கப்பட்டு நான் இதனை எழுதவில்லை. அதற்காக நான் மன்னிப்புக்கேட்கவும் மாட்டேன். நான் சிலரை மனம் நோகவைத்தால் அதற்காக வருந்தும் அதேவேளை நான் அறம் வழுவாமல் எழுதியுள்ளேன் என்று உறுதிப்படுத்துகிறேன்'

லஜபதிராயும் அவ்வாறே அறம் வழுவாமல் எழுதியுள்ளார் எனலாம். தமிழர், சிங்களவர் என்ற இனப்பாகுபாடு இனத்துவ அரசியலின் வெளிப்பாடே தவிர தமிழர், சிங்களவர் பல இனங்களின் கலப்பே. அவர்களிடம் பல மொழி, பண்பாட்டு ஒற்றுமைகள் இருக்கின்றன. இலங்கையின் பூர்வீக குடிகள் வேடர்கள். அவர்களின் மொழி தமிழோ, சிங்களமோ அன்று. அவர்கள் பௌத்தர்களாகவோ இந்துக்களாகவோ இருக்கவில்லை. இந்தியாவிலிருந்து வெவ்வேறு காலங்களில் குடியேறிய மக்கள் வேடர்களுடன் சேர்ந்து வாழ்ந்து உருவாகிய இனக்குழுக்களே இலங்கை மக்கள் என்கிறார். 1814 இல் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியில் எடுக்கப்பட்ட முதல் மக்கள் கணக்கெடுப்பில் சாதியை வைத்து தான் மக்கள் குழுவினர் பிரிக்கப்பட்டனர். 1824 வரை தமிழரோ சிங்களவரோ ஒரு இனக்குழுவினராக பார்க்கப்படவில்லை.

மாறாக அவர்களின் சாதிகளே அடையாளப்படுத்தப்பட்டு கணக்கெடுப்பு நிகழ்ந்தது என்கிறார் நிரா விக்ரமசிங்கே எனும் வரலாற்றாசிரியர். எனவே இனத்துவ அடையாளங்கள் நவீன காலத்துக்குரியவை. மகாவம்ச புராணக்கதை கொண்டு சிங்கள தேசிய வாதிகள் கட்டமைப்பது போல் சிங்களவர் ஆதிக்குடிகள் அல்ல. அதே போல் தமிழ் தேசியவாதிகள் கட்டமைப்பது போன்று கல் தோன்றி மண் தோன்றாக்காலத்து மூத்த குடி தமிழரல்ல.

இவ்வகையில், சிங்களவர்கள் தாமே பூர்வகுடியினர் என்பதற்கு வேடர்களுடனான அவர்களது இனத்தொடர்புகளே காரணம். ஆனால் அதே தொடர்புகள் தமிழருக்குமுண்டு என்ற உண்மையை மகாவம்சம் மறைக்கிறதென முடிக்கிறார் லஜபதி ராய்.

வேடர் நாட்டில் சிங்கங்களும் புலிகளும் என்ற தலைப்பின் குறியீடு அங்கு சிங்கங்களும்( சிங்களவர்) இருக்கவில்லை புலிகளும்(தமிழர்) இருக்கவில்லை என்பதே. இந்த புள்ளியில் இருந்தே நூல் தொடங்குகிறது. மனிதர்கள் வேற்றுமையில் ஒற்றுமை காண்பதும், புரிந்துணர்வு,சம உரிமை, சமூக நீதியுடன் வாழத் தலைப்படுதலின் அவசியம் பற்றி நூல் பேசுகிறது.

இரண்டாவது அத்தியாயத்தில் அனாகரிக தர்மபால பற்றிய விவரங்கள் பேசப்படுகிறது. அவர் இன்றைய சிங்கள இனவெறிச் சூழலுக்கு தர்மபாலவை மட்டும் குற்றம் சாட்டுவது சரியல்ல என்பது லஜபதிராயின் கருத்து. அதில் ஒரு சில உண்மைகள் இருப்பினும் தர்மபால நவீன சிங்கள பௌத்த கருத்தியலின் உருவாக்கத்துக்கான முக்கிய காரணகர்த்தா என்பதும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியது.

எப்படி ஆறுமுக நாவலர் சைவ மறுமலர்ச்சிக்கு காரணமாக விளங்கினாரோ அதே போன்ற பௌத்த சிங்கள தேசிய வரலாற்று நாயகன் தர்மபால. சாதியத்தை முன்னிறுத்தி சைவமறுமலர்ச்சியை ஆறுமுக நாவலர் ஏற்படுத்தினார். மாறாக சிங்கள இனத்தை முன்னிறுத்தி பௌத்த மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார் தர்மபால. இருவரும் மிஷனறி பாடசாலைகளில் கல்வி கற்றவர்கள்

ஆங்கிலம், கிறீஸ்தவம் பற்றிய புலமை கொண்டவர்கள். புத்தமதத்தின் மாற்றம் எனும் நூல் (கனத் ஒபயசேகர, ரிச்சார்ட் கொம்ரிக்) தர்மபாலவின் பௌத்தம் எவ்வாறு புரஸ்டட்டாண்ட் விழுமியங்களை உள்வாங்கி வழமையாக இருந்த ஆன்மீக பௌத்த வழிப்பாடுகளை இகழ்ந்து தூய்மைவாத பௌத்தத்தை உருவாக்கியது. அது எவ்வாறு இனத்துவ அரசியலுக்கான ஆயுதமாக மாறியது என விளக்குகிறது. தம்பையா, குமாரி ஜயவர்த்தன, செனிவரட்ன போன்ற பல அறிஞர்கள் சிங்கள பௌத்த அடையாள உருவாக்கம் பற்றி எழுதியுள்ளனர்.

இதில் முக்கியமான விடயம் இலங்கையில் பௌத்தம் ஒரு கலப்பு மதமாக இருந்த விடயம். புத்தர் முதன்மையாக கொண்டாடப்படினும் காளி, வினாயகர், முருகன், விஸ்னு போன்ற கடவுள் வழிபாடுகள், சாத்திரம், பில்லி சூனியம் போன்ற நம்பிக்கைகள் கொண்ட சமயமாக இருப்பதை ஏற்றுக்கொள்ள மறுத்து எங்கள் மதம் கிறீஸ்தவ மிசனரிகள் சொல்வது போல் மூட நம்பிக்கை கொண்டதல்ல என நிறுவும் முயற்சியில் பௌத்தத்தை நேர ஒழுங்கு, தியானம், சுய தூய்மை, சோம்பேறித்தனத்துக்கெதிரான, குடி, மாமிசம் புசித்தலுக்கு எதிரான பௌத்தமாக உருவாக்குவதே தர்மபாலவின் நோக்கம். இந்த முயற்சியில் தமிழர்களையும் முஸ்லிம்களையும் அவர் எதிர் நிலையில் வைத்தார். அதன் தொடர்ச்சியாக பௌத்த பீடங்கள் அரசியல் மயமானது ஒரு புறம் இருக்க, அவரது தூய்மை வாத பௌத்த கொள்கை நடைமுறையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

மாறாக அரசியல் ரீதியான உலகப்பார்வைக்கு சிங்கள பௌத்தம் கருத்தியலானது. அதே வேளை பெரும்பாலான சிங்கள மக்களின் நாளாந்த உலகப்பார்வை பழைய வழிபாட்டு முறைகளை, சாத்திரம், பில்லி சூனியத்தை நம்பிக்கை வைக்கும் உலகப் பார்வையாக இருக்கிறது எனலாம். அதுமட்டுமல்ல இலங்கையில் சிங்கள தலைவர்கள் ராஜபக்ச உட்பட பெரும்பாலோர் சாத்திரத்திலும் சூனியத்திலும் நம்பிக்கை கொண்டவர்களாக இருப்பது கவனத்துக்குரியது. இந்த விடயம் மேலும் ஆய்வுக்குரியது.

மூன்றாவது அத்தியாயம் மலையகமக்கள் குடியுரிமை மறுக்கப்பட்டதையும் ஜீ.ஜீ பொன்னம்பலம் சட்டத்திற்கு ஆதரவான நிலைப்பாட்டையும் எடுத்தது பற்றியும் சிறிமாவோ சாஸ்திரி ஒப்பந்தத்தில் பண்டங்கள் போல் மலையகமக்கள் பரிமாறப்பட்டது பற்றியும் 83 கலவரத்தில் கொதித்தெழுந்த தலைவர்கள் நாடு திரும்பிய மலையக மக்கள் பற்றிய பெரும் கவனத்தை எடுக்கவில்லை எனவும் லஜபதிராய் குறிப்பிடுகிறார்.

**விடுதலைப்புலிகள் எவ்வாறு மாற்று இயக்கங்களை அழித்தனர். மாற்றுக்கருத்தாளர்கள், அறிவு ஜீவிகளை கொன்று குவித்தனர் என்பதை பட்டியல் போட்டு காட்டுகிறது. 1989 மாவீரர் உரையில் அறிவாளிகளையும் பெண்களையும் வீரர்களையும் போற்றாத நாடு காட்டுமிராண்டி இனமாகவே அழிந்து விடும் என்று கூறிய பிரபாகரன் அறிவாளிகளைப் புகைப்படமாக்குவதில் புகழ் பெற்றார் என்கிறார் நூலாசிரியர்.**

**1990 இல் இரண்டு மணி நேர இடைவெளியில் ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களை வடக்கிலிருந்து வெளியேற்றியதும் அவர்களது உடமைகளை பலாத்காரமாக சுவீகரித்ததும் பாசிச நடவடிக்கைகளே. ஆனால் தமிழ் நாட்டில் இவை பேசு பொருளாகவில்லை. இருட்டடிப்பே நிகழ்ந்ததென்கிறார்.**

**ராஜபக்சர்களை 2005 இல் பதவிக்கு கொண்டுவருவதில் புலிகள் முன்னின்றது. தமிழ் மக்களை வாக்களிக்காமல் தடுத்தது, ராஜபக்சர்களிடம் பணம் வாங்கியது போன்ற விடயங்களும் பேசப்படுகிறது.**

**இலங்கை அரசின் மோசமான இனவாத நடவடிக்கைகள் பற்றி நூலாசிரியர் பதிவு செய்யும் அதேவேளை புலிகள் வெறும் இராணுவவாதம், தலைவர் வழிபாடு போன்ற மிக மோசமான அம்சங்களே அவர்களின் தோல்விக்கான காரணம் என்கிறார்.**

ராஜீவ் காந்தி கொலை புலிகளின் அரசியல் வங்குரோத்துக்கு சாட்சி எனவும் தங்கள் செல்லக் குழந்தைகளின் தவறுகளை மறைக்கும் பெற்றோர் போல் புலிகளின் ஆதரவாளர்கள் ராஜீவ் காந்தியை புலிகள் கொல்லவில்லை என கூறி கட்டுச்சோற்றில் புலியை மறைக்கும் அரசியலை செய்வதாக குற்றம் சுமத்துகிறார்.

இனியது நாற்பது எனும் அத்தியாயத்தில் விடுதலைப் புலிகளின் தளபதிகளான தீபன், பால்ராஜ், கருணா போன்றவர்களின் அபார போர் வெற்றிகளையும் புலி உறுப்பினர்களின் போர்க்குணத்தையும் பேசுகிறார். சாதியை, சீதனத்தை ஒழிக்கும் நடவடிக்கைகளை அவர்கள் மேற் கொண்டதாகவும் குறிப்பிடுகிறார்.

ஆனால் விடுதலைப்புலிகள் அமைப்பில் சாதி பார்க்கப்படவில்லை எனினும் தமிழ் சமூகத்திலும் புலம் பெயர் தமிழ் சமூகத்திலும் சாதி வேரோடி இருப்பதும் அதற்கான எந்த வித அரசியல் வேலைத்திட்டமும் அவர்களிடம் இருக்கவில்லை. பிரபாகரனின் மாவீரர் உரைகளிலோ அல்லது புலிகளின் பரப்புரைகளிலோ சாதிய ஒடுக்குமுறை பற்றி பிரஸ்தாபிக்கப் படவில்லை. ஸ்டாலின் காலத்து சோவியத் யூனியனுக்கு கட்டுப்படுத்தப்பட்ட சுற்றுலாக்களை மேற்கொண்ட சில கம்யூனிஸ்ட் தலைவர்கள் அங்கு தேனும் பாலும் ஒடுவதாக வர்ணித்தது போலவே அன்பரசன், திருமாவளவன் போன்றவர்கள் புலிக்கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு சென்று வந்த நிலையும்.

இன்னா நாற்பது என்ற அத்தியாயம் விடுதலைப்புலிகள் எவ்வாறு மாற்று இயக்கங்களை அழித்தனர். மாற்றுக்கருத்தாளர்கள், அறிவு ஜீவிகளை கொன்று குவித்தனர் என்பதை பட்டியல் போட்டு காட்டுகிறது. 1989 மாவீரர் உரையில் அறிவாளிகளையும் பெண்களையும் வீரர்களையும் போற்றாத நாடு காட்டுமிராண்டி இனமாகவே அழிந்து விடும் என்று கூறிய பிரபாகரன் அறிவாளிகளைப் புகைப்படமாக்குவதில் புகழ் பெற்றார் என்கிறார் நூலாசிரியர்.

1990 இல் இரண்டு மணி நேர இடைவெளியில்

ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களை வடக்கிலிருந்து வெளியேற்றியதும் அவர்களது உடமைகளை பலாத்காரமாக சுவீகரித்ததும் பாசிச நடவடிக்கைகளே. ஆனால் தமிழ் நாட்டில் இவை பேசு பொருளாகவில்லை. இருட்டடிப்பே நிகழ்ந்ததென்கிறார்.

ராஜபக்சர்களை 2005 இல் பதவிக்கு கொண்டுவருவதில் புலிகள் முன்னின்றது. தமிழ் மக்களை வாக்களிக்காமல் தடுத்தது, ராஜபக்சர்களிடம் பணம் வாங்கியது போன்ற விடயங்களும் பேசப்படுகிறது.

இலங்கை அரசின் மோசமான இனவாத நடவடிக்கைகள் பற்றி நூலாசிரியர் பதிவு செய்யும் அதேவேளை புலிகள் வெறும் இராணுவவாதம், தலைவர் வழிபாடு போன்ற மிக மோசமான அம்சங்களே அவர்களின் தோல்விக்கான காரணம் என்கிறார்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்து புலிகள் இந்திய ராணுவத்துடன் யுத்தம் புரிந்தது பற்றிய அவரது கருத்துகளுடன் முழுமையாக உடன்பட முடியவில்லை. இந்திய அமைதிப்படை வரும்போது தமிழர்கள் ஆரவாரமாக வரவேற்றது உண்மை எனினும் இந்த ஒப்பந்தமானது மக்களின் மேல் மேலிருந்து திணிக்கப்பட்டதே. இந்தியா ஒரு மூத்த அண்ணன் சுபாவத்தில் நடந்து கொண்டது. இதனை சிங்கள இனவாத சக்திகள் மற்றும் ஜே வி பி யினர் இந்திய மேலாதிக்கம் எனக்கூறி பெரும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டதும் யதார்த்தம். 13 திருத்தச் சட்டத்தின் விடய தானங்களை தெற்கு வாழ் மக்களிடம் விளக்கி அது நாட்டை பிரிப்பதல்ல என ஏற்றுக்கொள்ளும் நிலை ஒன்றை உருவாக்கி இருக்க வேண்டும். ஒருபுறம் புலிகள் தமது தனித்தலைமைக்கு ஆபத்தென இந்திய ராணுவத்துடன் யுத்தத்தை தொடங்கி பின்னர் பிரேமதாசவுடன் ஒப்பந்தம் செய்து ஆயுதங்களையும் பணத்தையும் பெற்றனர்.

இன்னொரு புறம், விடுதலைப் புலிகள் இந்திய அமைதிப் படைக்கெதிரான தாக்குதலை தொடுக்கையில் விடுதலைப்புலிகள் மேலான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பதிலாக மக்கள் மேல் பாரிய மோசமான அழிவு நடவடிக்கைகளை மேற்கொண்டதன் விளைவாக தமிழ் மக்கள் மத்தியிலிருந்த ஆதரவை முற்றும் இழந்தது இந்திய ராணுவம்.

எனவே விடுதலைப்புலிகளை தனிமைப்படுத்தும் அரசியலை இந்திய அரசு செய்யத்தவறியது என்பதே சொல்லப்பட்டது.

2009 இறுதி யுத்தத்தில் நிகழ்ந்த அனர்த்தங்களையும், அரசபடைகள் மக்கள் மேலான கண்மூடித்தனமான தாக்குதல்களை யுத்தவெறியுடன் மேற்கொண்டதையும் அவர் பதிவு செய்கிறார். விடுதலைப்புலிகள் பல போர்முனைகளில் பெரும் தாக்குதலை மேற்கொண்டதையும் குறிக்கிறார். ஆனால் விடுதலைப்புலிகளின் அரசியல் அஞ்ஞானத்தின் விளைவே இறுதிக்காலங்களில் இந்திய தேர்தலில் பாஜக அரசு கட்டில் ஏறினால் தமக்கு சாதகமான நிலை ஏற்படும் என நினைக்க விளைந்த காரணம் என நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

புலிகளில் இணைந்தவர்கள் பலர் ஒடுக்கப்பட்ட விளிம்பு நிலை சமூகங்களை சேர்ந்தவர்கள். அதே வேளை புலம் பெயர் தமிழரின் தமிழீழக்கனவு நிறைவேற அவர்கள் புலிகளுக்கு பணத்தை வாரி வழங்கினர் என்பதையும் நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

இலங்கையின் இனவாத அரசியலை அவர் எங்கும் நியாயப் படுத்தவில்லை. மாறாக இனவாத அரசியலின் அழிவுப்போக்கை உவத்தல் காய்தல் இன்றி பதிவிட்டிருக்கின்றார். ஓரிடத்தில் 2008 இறுதிப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் லட்சக்கணக்கான இளைஞர்கள் கூடி நடிக நடிகைகளை வரவேற்றதாக கமால் குணரட்ன ரோட் டு நந்திக்கடல் எனும் நூலில் தெரிவித்ததாக சொல்கிறார். அதற்கான காரணம் விடுதலைப்புலிகள் மேலான அதிருப்தி என கமால் எழுதியதாக பதிவிட்டுள்ளார்.

ஒன்று லட்சக்கணக்காக மக்கள் கூடும் நிலை யாழ்ப்பாணத்தில் இருக்கவில்லை. அது ராணுவ கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசம். அத்துடன் அவ்வாறான கேளிக்கை நிகழ்ச்சி நடப்பதற்கான சாத்தியங்கள் அறவே இல்லை.

இன்னொரு இடத்தில் நெடுமாறனுடனான உரையாடல் பற்றி விவரிக்கையில் அமிர்தலிங்கத்தை நெடுமாறன் 84 இல் சந்தித்த போது அவருடன் அமிரின் மகன் காண்டீபன் இருந்ததாகவும், நெடுமாறன் புலிகளுடன் ஒற்றுமையாக போகலாமே என கேட்டபோது காண்டீபன் பரவருடன் என்ன ஒற்றுமை என கூறியதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

துவாரகா, பிரபாகரன் உயிருடன் உள்ளனர் என்று சொல்லும் நெடுமாறனின் கூற்று உண்மைத் தன்மையற்றது. காண்டீபன் திருமணம் செய்தது ஒரு பரவர் குலப்பெண்ணை. அத்துடன் மருத்துவக்கல்லூரியில் படித்த காண்டீபன் என குறிப்பிடப்பட்டுள்ளது. மதுரை மருத்துவக்கல்லூரியில் படித்தவர் பகீரதன். அத்துடன் அமிர்தலிங்கம் எல்லா இயக்கங்களும் ஒன்றுபட்டு இருக்க வேண்டுமென விரும்பியவர். பகீரதன் படிக்கும் காலத்தில் மதுரையில் அவருடன் சில சமயங்களில் பிரபாகரன் தங்கியிருந்தார். நானும் நின்றிருக்கிறேன். இந்த செய்தியின் உண்மைத்தன்மையை பரிசீலித்திருக்கலாம். வடக்கில் நிகழும் சாதிய அடக்குமுறைகள் பற்றியும் நூல் பேசுகிறது.

ஒட்டு மொத்தமாக இலங்கை அரசின் மேலான விமர்சனங்களும் விடுதலைப்புலிகள் மேலான விமர்சனங்களும் அடங்கிய நூல்.

இவ்வகையில் இது தமிழ் நாட்டு அரசியல் வாதிகளாலும் செயல்பாட்டாளர்களாலும் அவசியம் படிக்கப்பட வேண்டிய நூல். அ

# இந்த லட்சணத்தில்தான் வடக்கும் கிழக்கும் இணைந்த தாயகம் வேண்டுமோம்!



## விமல் குழந்தைவேல்

தன் பேரக் குழந்தையுடன் மகிழ்ந்து தவழ்ந்து திரிந்த விமல் குழந்தைவேல் அவர்களை இடைமறித்து ஒரு குறுக்கிடல்!

**கற்சுறா**

அண்மையில் விமல் குழந்தைவேல் அவர்கள் தான் எழுதிய வெள்ளாவி நாவலின் பெயரில் இன்னொரு நாவல் வெளிவந்திருக்கிறதென்பதனை தனது முகநூலில் பதிவிட்டிருந்தார். அது குறித்ததொரு உரையாடல் இது என்று மட்டும் நினைத்துவிடாதீர்கள். இது அதையும் தாண்டிப் பேச வேண்டியது. விமல் குழந்தைவேல் அவர்கள் இங்கே குறிப்பிடும் கிழக்குக் குறித்த கதைகளின் நீட்சியை தொடர்ந்தும் பேச வேண்டும் எழுத வேண்டும் என்பதே எனது விருப்பமும். இங்கே அவரிடம் கேட்ட இரண்டு கேள்விகள் இவை.  இந்த இரண்டு கேள்விகளினுடனான உரையாடல்களின் பின்னால் பல்வேறு விடயங்கள் பேசப்படாமலேயே மறைந்துள்ளன. அவற்றை ஒரு மறதி போலவே மறைத்து வருபவர்களுக்கு இனிவருங்காலங்கள் அவற்றை வெளிப்படையாகப் பேச பேசவேண்டிய காலங்களாக இருக்கவேண்டும். கண்மூடிய பூனைக்குட்டிகள் போல இந்த சமூகத்தில் தொடர்ந்தும் உலாவித் திரியமுடியாது. உள்பெட்டி உரையாடல்கள் ஒருநாள் வெளிப்பெட்டிக்கும் வரும்.

**கற்சுறா:** விஸ்பரூபம், பில்லா என்று ஏற்கனவே வெளிவந்த பெயர்களில் புதிய தமிழ்த் திரைப்படங்களுக்குப் பெயர் வைக்கும் செயல் தமிழ் நாட்டில் பிரபலமான செயலாக இருக்கிறது. அதே போல் அண்மையில் நமது புஸ்பராணி அக்கா எழுதிய அகாலம் என்ற பெயரை உருவி தனது நூலுக்கு ஒருவர் பெயரிட்டிருக்கிறார். தமிழ் நாட்டில் ஜெயமோகன் அவர்களது கொற்றவை பெயரை நமது இலக்கிய வேங்கை அ.இரவி அவர்கள் உருவிப் பெயரிட்டிருக்கிறார் எனக் கேள்விப்பட்டேன். இதற்குள் உங்கள் வெள்ளாவியின் பெயரையும் ஒருவர் உருவியிருக்கிறார் எனத் தெரிவித்திருக்கிறீர்கள். இந்தப் போக்குக் குறித்து ஒரு எழுத்தாளனாக உங்கள் மனது சொல்லும் கதைதான் என்ன?

**விமல் குழந்தைவேல்:** இலக்கிய படைப்பு திருட்டு போல இது படைப்புகளின் தலைப்பு திருட்டு. அசல் படைப்புகளின் வெற்றியே அந்த படைப்புகளின் தலைப்பை திருட செய்கிறதென்பதே என் கருத்து. இருந்தும் ஒரு தலைப்புக்கே வறுமைப்படும் எழுத்துக்களில், அந்தப் படைப்பில் இவர்களின் ஆக்கத் தரம் எந்தளவில் இருக்குமென்பதை நினைக்கும் போதுதான் நகைப்பாக இருக்கிறது. மற்றவர் தலை(ப்)யை திருடி தங்களுக்கு பொருத்திக் கொள்ளுமளவுக்குத் தானா இவர்களின் நிலையென நினைத்தாலும் இவர்களின் இந்த செயல்களாலும் அவர்கள் திருடி கொண்ட எங்கள் தலைப்புகளுக்கான அவர்களின் படைப்புகளாலும் எங்கள் படைப்பு தலைப்பு தரம் தாழ்ந்து விடப்போவதில்லை. இருந்தாலும் பொருளை பறிகொடுத்த உரிமையாளனின் மன நிலையிலேயே நானும்.

**கற்சுறா:** ஈழத்தமிழ்ச் சூழலில் வெள்ளாவி நாவல் வெளிவந்த போது உங்களுக்கு என்ன மனநிலை தோன்றியது? ஒரு யாழ்ப்பாணத்தான் நாவல் எழுதியவுடன் நமது சமூகத்தில் எழும் சலசலப்பிற்கும் மட்டக்களப்பான் எழுதும் போது எழுதும் போது எழும் சலசலப்பிற்கும்

**இலக்கிய படைப்பு திருட்டு போல இது படைப்புகளின் தலைப்பு திருட்டு.அசல் படைப்புகளின் வெற்றியே அந்த படைப்புகளின் தலைப்பை திருட செய்கிறதென்பதே என் கருத்து.**

**இருந்தும் ஒரு தலைப்புக்கே வறுமைப்படும் எழுத்துக்களில், அந்தப் படைப்பில் இவர்களின் ஆக்கத் தரம் எந்தளவில் இருக்குமென்பதை நினைக்கும் போதுதான் நகைப்பாக இருக்கிறது. மற்றவர் தலை(ப்)யை திருடி தங்களுக்கு பொருத்திக் கொள்ளுமளவுக்குத் தானா இவர்களின் நிலையென நினைத்தாலும் இவர்களின் இந்த செயல்களாலும் அவர்கள் திருடி கொண்ட எங்கள் தலைப்புகளுக்கான அவர்களின் படைப்புகளாலும் எங்கள் படைப்பு தலைப்பு தரம் தாழ்ந்து விடப்போவதில்லை.**

வித்தியாசம் இருக்கத்தான் செய்கிறது. அப்படித்தான் இந்த சமூகக் கட்டமைப்பு இருக்கிறது. உங்கள் வெள்ளாவி நாவல் அதில் என்ன நிலை அடைந்தது?

ஆம். வெளிப்படையாக இது ஒரு பிரதேசவாதக் கேள்விதான்.

யாழ்ப்பாணத்தில் சாதியக் கட்டமைப்பின் துயரம் சொல்லமுடியாத அளவு துயரமானதுதான். அனாலும் அங்கே வாழும் அத்தனை சாதிகளும் ஒன்றாக இணைந்து பிரதேசவாதம் பேசுவதையும், தங்களை விட மற்றய பிரதேசத்தவர்களை அவர்கள் அணுகும் போது யாழ்ப்பாணத்தவர்கள் அனைவரும் ஒரு சேரச் சேர்ந்து மற்றய கிழக்கு வன்னிப் பிரதேசத்தவர்களைப் புழுவிலும் கேவலமாக அணுகுவதை நீங்களும் உணர்ந்திருப்பீர்கள்தானே? இதற்கு உதாரணங்களைச் சொல்லத் தேவையில்லை. இதற்குள் உங்கள் நாவல், அதன் மொழி கவனிக்கப்பட்ட விதங்கள் எப்படியிருந்தது? அந்த மொழியை இந்த சமூகம் விளங்கிக் கொள்ள என்ன பாடுபட்டது?

**விமல் குழந்தைவேல்:** ஆம் ... வெள்ளாவி வெளிவந்த காலங்களில் அந்த நாவல் கிழக்கில் கொண்டாடப்பட்ட அளவுக்கென்று இல்லை, தமிழ் நாட்டில் பேசப்பட்ட அளவுக்குக்கூட வட பகுதியில் பேசப்படவில்லை என்பதுதான் உண்மை. அதற்காக அங்கு வாசிக்கப்படவில்லை என்றில்லை. வாசித்திருக்கிறார்கள். என்றாலும் தங்களின் பாராட்டுகளையோ விமர்சனங்களையோ வெளிப் படையாக சொல்ல திராணியற்று புற வாசல் வழியாகவே கூறியிருக்கிறார்கள். அதற்கான காரணங்கள் பல உண்டு.

குறிப்பாக வெள்ளாவி வெளிவந்த பின்நாட்களில் போராட்டத்தில் புலிகளிலிருந்து கருணா பிள்ளையான் பிரிவுக்குப் பின்பான காலத்தில் மட்டக்களப்பாரென்ற அதி தீவிர முத்திரை குத்தலால் பாதிக்கப்பட்டது என்னைப்போன்ற படைப்பாளிகளும்தான். இந்தக் கால கட்டத்தின் பின் படைப்பாளி என்பதற்கப்பால் மட்டக்களப்பான் என்ற தனியொருவனாக பட்ட உதாசீனங்களும் விமர்சனங்களும் தந்த வேதனை அதை அனுபவித்தவர்களால் மட்டுமே உணர முடியும்.

மேலும் வெள்ளாவியை வெறுத்தொதுக்குகிறேன் என்ற தங்களின் ஆதர்ஷ எழுத்தாளரை பகைக்க வேண்டி வருமோ என்ற நிலையிலும் பலர் வாய் திறக்காமலேயே இருந்தார்கள் இருக்கிறார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் வெள்ளாவியை வாசிக்காமலேயே ஆதர்ஷத்துக்கு ஆதரவாக வெள்ளாவிக்கு எதிராக குரல் கொடுத்ததுதான். குறிப்பாக புலம்பெயர் நாடுகளில் இத்தரப்பினரை அதிகம் அடையாளம் கண்டேன்.

வெள்ளாவியை ரசித்து தனிப்பட்ட முறையில் பாராட்டினாலும் அதை எழுத்திலோ வெளி மேடைகளிலோ சொல்ல தயங்கியவர்கள்.

வசிஷ்டரென நினைக்கும் தங்கள் வாயால் வெளிப்படையாக பாராட்டி பெயர் கொடுத்துவிட வேண்டியதில்லை என்பதற்கும் அந்த மையவாதமே காரணமாகவும் இருக்கலாம்.

இந்த இடத்தில் நான் நன்றியுடன் ஒன்று சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இந்த பிரதேசவாத, மையவாதத்துக் குள்ளும் கிழக்கு எழுத்தை கொண்டாடக்கூடிய முற்போக்கு சிந்தனை கொண்ட யாழ்ப்பாண இலக்கிய வாசகர்களும் ஆளுமைகளும் கூட இல்லாமலில்லை. அந்த விரல் விட்டு எண்ணக்கூடிய எண்ணிக்கையில் இருப்பவர்களில் பலர் என் கசகறணம், வெள்ளாவி, குறளிக்குஞ்சன் நூல்களை எழுதவும் வெளிவரவும் உந்துதலாகவும் உதவியாகவும் இருந்தார்களென்பதை நான் மறுக்கவோ மறக்கவோ மாட்டேன்.

நாவலின் மொழி பற்றி கேட்டிருந்தீர்கள். மொழிக்காகவே கிழக்கில் கொண்டாடப்பட்ட இந்நாவலின் மொழியை இதென்ன மொழி ஒன்றுமே புரிகிறதில்லையென வடக்கில் பலர் சொன்னபோது எனக்கு சிரிப்பதை தவிர வேறொன்றும் தோன்றவில்லை.

தமிழ் நாட்டின் எழுத்துக்களில் பல்வேறுபட்ட பிராந்திய பேச்சு வழக்கு மொழிகளில் பல ஆளுமைகள் எழுதியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் வாசித்து புரிந்து கொண்டு வாசித்தோமென்ற பெருமை பேசும் நம்மவருக்கு நமது இந்த சிறு தீவு நாட்டின் ஒரு பகுதியான கிழக்கின் பேச்சு மொழியொன்றை புரிந்து கொள்ள முடியாததை நினைத்தால் இவ்வளவுதான் ஈழத்தமிழர்களின் அறிதலும் உறவுமென நினைப்பதை தவிர வேறென்ன கூற முடியும் .

எங்கள் மொழியை அறியாத , எங்கள் மொழிக்கும் கலாச்சாரத்துக்கும் பழக்கப்படாத நிலையிலிருக்கும் இந்த லட்சணத்தில்தான் வடக்கும் கிழக்கும் இணைந்த தாயகம் வேண்டுமென்ற கோசங்களையும் கேட்கிறோம் .

**கதை மட்டுமல்ல மொழியும் உங்களால் அறிந்து கொள்ள முடியாதபடியும், புரிந்து கொள்ளமுடியாதபடியும் எல்லா இடங்களிலும் சொல்லப்பட்டுக் கொண்டுதானிருக்கும்.**

•••

2004ம் வருடம் 'கிழக்குப்பிளவு' ஏற்பட்ட போதில் ஈழத்திலும் சரி புலம்பெயர்ந்த சூழலிலும் சரி ஈழத்தின் வடபகுதியினரது மனநிலை எவ்வாறு இருந்தது என்பதை இத்தனை காலம் கழிந்த பின்னாலும் கூட ஓரிரு வார்த்தைகளில் சொல்லிவிட்டுப் போக முடியாதுள்ளது. 1986 காலப்பகுதியில் ஈழப்பிரதேசங்கள் எங்கும் இருந்த சுடுகாட்டு அச்ச மனநிலையே 2004 காலத்தில் புலம்பெயர் தேசங்களில் இருந்தது. கிழக்கு மாகாணத்தான் ஒருவனையாவது கொன்றுவிட வேண்டும் என்று இருந்த காலத்தின் அச்சம் வெறும் விளையாட்டாகக் கடந்து போய்விட முடியாத அச்சம்.

இந்த அச்சம் 1990ம் ஆண்டு முஸ்லீம் சமூகத்துக்கும் ஏற்பட்டிருந்தது. புலம்பெயர் சூழலில் கூட தான் ஒரு முஸ்லீம் என்றோ தான் ஒரு கிழக்கு மாகாணத்தவன் என்றோ சொல்லி அடையாளம் காட்ட முடியாத அளவிற்குத்தான் இருந்தன அந்தக் காலங்கள். இன்று தாங்கள் மனிதாபிமானமான போராட்டம் செய்தவர்கள் என்றும் தாங்கள் வன்முறையாளர்களல்ல என்றும் காட்ட எத்தனையோ குறுக்கு வழிகளைக் கையாண்டு சென்றாலும் கொண்டையிலுள்ள கோழியிறகை மறைக்க அவர்களால் முடியாதுதான் இருக்கிறது. கிழக்கு மாகாணத்தில் இந்த வடக்கின் கொடியவர்களால் கொல்லப்பட்ட எத்தனையோ இளைஞர்களது பெயர்கள் இவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அவர்கள் கொல்லப்பட வேண்டியவர்கள் என்பதுதான் அவர்களின் கணிப்பு. அந்தக் கிழக்குப் பிளவின் பிரச்சனைக்குள் மாண்டு தப்பித்தவர்களுக்கு கொழும்பில் வைத்து நஞ்சூட்டிக் கொன்ற போது ' கொட்டோவாவில் கொட்டம் அடங்கியது' என எழுதித் தங்களது இராட்சதப் பற்களைக் காட்டியவர்கள் இந்த வடக்கின் பத்திரிகையாளர்கள். இவையெல்லாம் கட்டுக்கதைகளல்ல. கண்முன்னால் பார்த்துக் கடந்தவை. இந்த இலட்சணத்தில் புலிகளை பாசிசவாதிகள் என்று கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று வியாக்கியானம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் நமது ஆய்வாளர்கள்.

இந்தப் பாசிசச் சிந்தனை கொண்டலைந்த உங்கள் 'பேரலை பிரதேசவாதம்' கொண்ட தமிழ்த் தேசியம் ஒன்றிற்காக எத்தனை உயிர்களைப் பலியெடுத்தீர்கள் என்றாவது கணக்கிட்டுக் கொள்ளுங்கள். அந்தக் கணக்கைப் பார்க்காது எந்தஅரசியலும் செய்யமுடியாது.

அதேபோல் இலக்கியம் என்றாலும் ஏதோ உங்கள் வீட்டு வளவிற்குள் இருந்துதான் தொடங்க வேண்டும் என்ற அடிமுட்டாள்த் தனத்தை இனியாவது நீங்கள் கைவிடுங்கள். கதை மட்டுமல்ல மொழியும் உங்களால் அறிந்து கொள்ள முடியாதபடியும் புரிந்து கொள்ளமுடியாதபடியும் எல்லா இடங்களிலும் சொல்லப்பட்டுக் கொண்டுதானிருக்கும். பழக்கப்பட்ட மொழிகளுக்குள்ளாலும் பழக்கப் பட்ட கதைகளுக்குள்ளாலும் மட்டும் நீங்கள் பயணம் செய்துகொண்டு அதுதான் உன்னதம் என்பது மோட்டுக் கதைதான். நமது சூழலில் பிரதேசவாதம் என்பது ஒருவனது உணவிலிருந்து படுக்கை வரை தனது நஞ்சை விதைத்துக் கொண்டு இருக்கிறது. அது இலக்கியத்திலும் இருக்கிறது. அரசியலிலும் இருக்கிறது. அதற்காகக் கொல்லப்பட்டவர்கள் எத்தனையோ ஆயிரம். இதனைக் கணக்கிடாமல் இதுகுறித்து விவாதிக்காமல் இருக்கும் இலக்கியமும் அரசியலும் ஒரு சாணும் அசையாது.

கற்சுறா

அ
















MASSEY - PERGUSON






கு. கந்தையா
MF MASSEY FERGUSON


பூபாலசிங்கம் புத்தகசாலை
POOBALASINGHAM BOOK DEPOT
පූබාලසිංහම් වෙළඳ සැල
NO: 04A, HOSPITAL ROAD,
BUS STAND, JAFFNA.
CEYLON TODAY









நீண்ட காலத்தின் பின் இலங்கைக்குச் சென்ற படப்பிடிப்பாளர் நண்பர் கிருபா கந்தையா பதிவு செய்த படங்கள் இவை. பல்வேறு இடங்களில் பல்வேறு வாழ்க்கை முறைகளை, பரிச்சயமான இடங்களை எல்லாம் பதிவு செய்திருக்கிறார். நன்றிகள் பல!

# ஒப்பரேஷன் துவாரகா!



## ஈழப் போர் 24 வரை ஓயாத அலைகள்!

ஜோர்ஜ் இ

துவாரகா வருகிறார்!
பராக்! பராக்!

ஒரு சமூகம் தன்னைக் கேவலப்படுத்திக் கொள்ள இனியும் என்ன மிச்சம் இருக்கிறது என்பது தெரியவில்லை. உலகிலேயே தன்னை மட்டுமே புத்திசாலியாக நினைத்துக் கொண்டிருக்கிற யாழ்ப்பாணிக்கு, தன்னுடைய கோமாளித்தனங்களை எல்லாம் உலகம் நம்பிக் கொண்டிருக்கிறது என்ற நினைப்புத் தான். தான் சொல்கிற பொய்யைத் தானே நம்பி, அதை நம்பாத மற்றவர்களைத் துரோகி என்று முத்திரை குத்தி, இந்தச் சமூகம் செய்து கொள்ளும் கோமாளித்தனங்களை அதற்கு எடுத்துச் சொல்ல, அந்தச் சமூகத்திற்குள் சமூக உணர்வு கொண்ட புத்தியுள்ளவர்கள் இல்லையா என்ற கேள்வி சாதாரண மனிதர்களுக்கு எழலாம்.

இந்த முட்டாள்தனத்தை வைத்து எப்போதும் பிழைப்பு நடத்தலாம் என்ற பூரணமான நம்பிக்கையோடு ஒரு அயோக்கியர் கூட்டம் இந்தச் சமூகத்திற்குள்ளேயே இருக்கிறது. அந்தக் கூட்டத்திற்கு இந்தச் சமூகம் அறிவு பெறுவதிலோ, உண்மைகளை அறிந்து கொள்வதிலோ எந்த விருப்பமும் அக்கறையும் இல்லை. இந்தச் சமூகத்திற்குத் தாங்கள் தலைவர்களாகவும், பிரமுகர்களாகவும் இருக்க வேண்டும் என்றால், இந்தச் சமூகம் முட்டாள்களை மட்டுமே கொண்டதாக இருக்க வேண்டும் என்பது தான் அவர்களின் நோக்கமும் விருப்பமும்.

அது புலி ஆதரவு முட்டாள்களின் வாக்குகளைப் பெற்று தங்கள் அரசியல் கனவுகளை வெளிநாடுகளில் நிறைவேற்ற முயல்வோர், தமிழ்ச் சமூகப் பிரதிநிதிகளாக தங்களைக் காட்டிக் கொண்டு இங்குள்ள அரசியல்வாதிகளோடு ஒட்டிக் கொண்டு தங்கள் நலன்களைப் பெற முனைவோர், அவர்களின் விளம்பரங்களை நம்பியிருக்கும் ஊடகவியலாளர்கள், தங்களைப் பூகோள அரசியல் நிபுணர்களாகப் படம் காட்டும் ஆய்வாளர்கள், சர்க்கஸ் புலியைக் காட்டிப் பிழைப்பு நடத்தலாம் என்று நம்புகிற உண்டியல் போராளிகள், இவர்களையும் விட, கிடைக்கிற வால்களில் தொங்கிக் கொண்டிருக்கும் கோமாளி அல்லக்கைகள் என்று ஒரு பெரும் கூட்டம் இந்தச் சமூகத்தின் நாடியை நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறது.

அந்தக் காலத்தில் மாவீரர் தின நாட்களில் பிரபாகரன் உரை நிகழ்த்தப் போகிறார் என்று, இந்தக் குளிருக்குள் அதிகாலை எழுந்து போய், கடவுளைக் காண்பது போல அருள் பெற்றுப் புல்லரித்து வந்த சமூகம் இது.

பாலசிங்கம் உட்கார்ந்த இடத்தில் எழுதிக் கொடுத்தது. தலைவர் வாசிப்பார்.

ஏதோ முழு உலகமும் அதற்காகத் தான் காத்திருக்கிறது என்பது போலவும், அந்த உரை தான் உலகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகிறது என்பது போலவும், 'தலைவர் பெரியதொரு அரசியல் நகர்வை மேற்கொள்ளப் போகிறார். இந்தியா இறங்கி வரப் போகிறது, சர்வதேசம் காலடியில் விழப் போகிறது, நம்புங்கள் நாளை தமிழீழம் மலரப் போகிறது' என்று ஊளையிடலாளர்களும், புல

**இன்றைக்கும் பிரபாகரனுக்கு பிறந்த நாளுக்கு கேக் வெட்டிக் கொண்டாடுகிற இந்தச் சமூகம், இறந்து போன ஆத்துமா அமைதியில் இளைப்பாறுவதற்கான மதக் கடமைகளைச் செய்யவோ, மாவீரர்களுக்குச் சாத்துகிற பூக்களையும், கொளுத்துகிற விளக்குகளையும் தங்கள் தேசியத் தலைவருக்கு வைக்கவோ தயாராக இல்லை என்பதிலிருந்தே, இந்த சமூகம் எவ்வாறான பொய்மையில் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளமுடியும்.**

**இப்படியான இந்தச் சமூகத்தை இன்னமும் இருளில் வைத்து, உண்டியலை நிரப்பலாம் என்ற அசையாத நம்பிக்கையோடு, தமிழ்த்தேசியச் செயற்பாட்டாளர்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள்.**

நாய்வாலர்களும் உருட்டுவார்கள்.

சமூகம் அதை நம்பி, விழுங்கி, வாந்தி எடுக்கும். எங்களுக்குக் கதை சொல்லும். நம்ப மறுக்கும் எங்களைத் துரோகிகள் ஆக்கும்.

அனுரதபுரம் விமானநிலையத் தாக்குதல் சிங்களப் பேரினவாதப் பூதத்தின் உச்சந்தலையில் ஆப்பாக இறங்கியிருக்கிறது என்ற தலைவரின் மாவீரர் தின உரை முடிந்து ஒரு வருடத்திற்குள் ஆப்பு தலையில் இறங்கியதை வீடியோவாகவே பார்க்க முடிந்தது.

பொய்மைக்குள் வாழுகிற சமூகம். அதைப் பெருமையாக நினைக்கிற சமூகம்.

ஒட்டுமொத்தமாக முழுச் சமூகமுமே, கண் முன்னால் நடந்த பிரபாகரனின் மரணத்தைத் தாங்கள் நம்பினாலும், மற்றவர்கள் அதை நம்பி விடக் கூடாது என்பதில் அவதானமாக இருந்தது.

நித்தியானந்தா பக்தர்கள் போல, போட்டோஷொப் கிராபிக்ஸ் என்ற அறிவாளிகள்.

இறப்பு அத்தாட்சிப் பத்திரம் எங்கே என்று கேட்ட புத்திஜீவிகள்.

வரவேண்டிய நேரத்தில் வருவார் என்ற ஊளையிடலாளர்கள்.

எரித்திரியாவில் ஐயாயிரம் பேரோடு இருக்கிறார் என்ற உண்டியல்காரர்கள்.

இருந்தால் தலைவன், இறந்தால் இறைவன் என்ற புல நாய்வாலர்கள்.

முழுச் சமூகமாகவே பொய்மையை வாழ்ந்து கொண்டிருந்தது. அது தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டிருந்தது என்பதை விட, மற்றவர்கள் நம்பி விடக் கூடாது என்பதில் முனைப்பாக இருந்தது.

யுத்தம் முடிந்த சில வருடங்கள், தலைவர் மாவீரர் தின உரை நிகழ்த்துவார் என்று கிளப்பப்பட்ட வதந்தியை நம்பி, அதிகாலைக் குளிரில் ஆஜரான கூட்டம் இது. இன்றைக்கும் அதே கதையைக் கிளப்பினால் திரும்பவும் கூடக் கூடிய கும்பல் இது.



குடும்பப் பிரச்சனைக்கு இருந்த உண்ணாவிரதத்தை, அதுவும் லண்டனில், இனப்பிரச்சனைக்கான தீர்வாக பேனர் கட்டி, தீர்வு கிடைக்கப் போகிறது எனக் கொண்டாடிய பெருமை கொள் சமூகம் இது.

இன்றைக்கும் பிரபாகரனுக்கு பிறந்த நாளுக்கு கேக் வெட்டிக் கொண்டாடுகிற இந்தச் சமூகம், இறந்து போன ஆத்துமா அமைதியில் இளைப்பாறுவதற்கான மதக் கடமைகளைச் செய்யவோ, மாவீரர்களுக்குச் சாத்துகிற பூக்களையும், கொளுத்துகிற விளக்குகளையும் தங்கள் தேசியத் தலைவருக்கு வைக்கவோ தயாராக இல்லை என்பதிலிருந்தே, இந்த சமூகம் எவ்வாறான பொய்மையில் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளமுடியும்.

இப்படியான இந்தச் சமூகத்தை இன்னமும் இருளில் வைத்து, உண்டியலை நிரப்பலாம் என்ற அசையாத நம்பிக்கையோடு, தமிழ்த்தேசியச் செயற்பாட்டாளர்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள்.

தலைவர் வருவார், வருவார் என்ற கதை கொஞ்சம் கொஞ்சமாக நம்பிக்கை இழக்கத் தொடங்க, அந்தக் கதையை வைத்துப் பிழைப்பு நடத்த முடியும் என்ற நம்பிக்கை அற்றுப் போனதும், புதிய தந்திரோபாயங்களுடன் இந்தத் தமிழ்த் தேசிய உணர்வாளர் கூட்டம் கிளம்பியிருந்தது.

சுவிட்சலாந்தில் புர்கா உடுத்திய மதிவதனியும் துவாரகாவும் பக்தர்களுக்குக் காட்சியளித்தார்கள். பிரபாகரனின் மனைவியின் சகோதரியார் திடீரென்று கிளம்பி, தான் அவர்களின் குடும்பத்தை

> **தங்களை ஒரு படித்த சமூகமாக, உலகத்தில் எல்லோரையும் விடப் புத்திசாலிகளாகச் சொல்லிக் கொண்டிருக்கிறவர்கள், முழு உலகமும் தங்களை உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது என்றும், தங்களுக்கான ஒரு தீர்வைப் பெற்றுத் தரவேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கிறது என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறவர்கள், பிரபாகரனும் குடும்பத்தினரும் யுத்தத்தில் கொல்லப்பட்டு விட்டார்கள் என்று முழுமையாகத் தெரிந்த பின்னாலும், இவ்வாறான ஒரு கட்டுக்கதையை இந்தச் சமூகத்திற்கு அவிழ்த்து விடலாம் என்று இன்றைக்கும் ஒரு அயோக்கியர் கூட்டம் நம்பும் அளவுக்கு இருக்கிறது என்றால், அதற்கான காரணம் என்ன?**


சேரமான்


கிருபாகரன்

நேரில் சந்தித்தேன் என்று வீடியோ போட்டிருந்தார்.

இதையெல்லாம் நம்பி பணம் கொடுக்க ஒரு கூட்டம் தயாராகத் தான் இருக்கிறது. பணம் திரட்டினார்கள். இதை விஸ்தரிப்பதற்கான திட்டத்துடன் தொடங்கியது தான் ஒப்பரேஷன் துவாரகா.

மாவீரர் தினத்திற்கு துவாரகா உரை நிகழ்த்துவார் என்று கதை கிளப்பியவர்களில் முக்கியமானவர்கள் லண்டனில் உள்ள சேரமான், பிரான்சில் உள்ள கிருபாகரன் எனப்படுவோர். இவர்கள் புலி வட்டங்களில் பிரபலமானவர்கள்.

இவர்களுக்குப் பின்னணியில் அப்துல்லா போன்ற சுவிஸ் நாட்டு உண்டியல்காரர்கள்.

தமிழ்நாட்டில் வழமை போல, நெடுமாறன், காசி ஆனந்தன். இவர்கள் இருவரும் அடிக்கடி கடவுளைக் கனவில் காண்கிறவர்கள். காலையில் எழுந்து அறிக்கை விடுகிறவர்கள்.

இப்போது சீமான், திருமுருகன் காந்தி போன்றோர் எல்லாம், வெளிநாட்டுப் புலிப் பிரமுகர்களின் பணத்தில் தங்கியிராமல் தாங்களாகவே களமிறங்கி நேரடியாக உண்டியல் தூக்குவோர். அவர்களைப் பயன்படுத்த முடியாது. தங்கள் உண்டியல் பிழைப்புக்குப் போட்டியாக துவாரகா வருவதை அவர்கள் விரும்பப் போவதும் இல்லை.

நெடுமாறன், காசி போன்றோர் கிடைத்த சில்லறைக்குக் குலைக்கிறவர்கள். இவர்களோடு இயக்குனர் கௌதமன்.


அவரும் இப்போது கடவுளைக் கண்டிருக்கிறார்.

எப்படி இவர் திடீரென்று களத்திற்குள்?

இவரை கொஞ்ச நாளுக்கு முன்னால் தான், சுவிஸ் புலிகள் மாவீரர் தினத்திற்கு விருந்தினராக அழைத்திருந்தார்கள்.

இவர்களோடு அவுஸ்திரேலிய இன்பத்தமிழ் வானொலிக்காரர்.

கடவுளைக் காட்டி இத்தனை ஆயிரம் ஆண்டுகளாகப் பணம் சம்பாதிக்கும் போது,





பிரபாகரனையும் துவாரகாவையும் காட்டி ஒரு பத்தாண்டுகளுக்கு ஏமாற்றுவது ஒன்றும் பெரிய விடயமில்லை.

தங்களை ஒரு படித்த சமூகமாக, உலகத்தில் எல்லோரையும் விடப் புத்திசாலிகளாகச் சொல்லிக் கொண்டிருக்கிறவர்கள், முழு உலகமும் தங்களை உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது என்றும், தங்களுக்கான ஒரு தீர்வைப் பெற்றுத் தரவேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கிறது என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறவர்கள், பிரபாகரனும் குடும்பத்தினரும் யுத்தத்தில் கொல்லப்பட்டு விட்டார்கள் என்று முழுமையாகத் தெரிந்த பின்னாலும், இவ்வாறான ஒரு கட்டுக்கதையை இந்தச் சமூகத்திற்கு அவிழ்த்து விடலாம் என்று இன்றைக்கும் ஒரு அயோக்கியர் கூட்டம் நம்பும் அளவுக்கு இருக்கிறது என்றால், அதற்கான காரணம் என்ன?

பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என்றபோது கூட, யாருமே அவர் உயிரோடு இருந்தால் தான் என்ன? அவரால் என்ன சாதிக்க முடியும்? என்று கேட்டதில்லை. சாதாரண மக்கள் மட்டுமன்றி, இந்தச் சமூகத்தில் படித்தவர்கள்,

ஊடகவியலாளர்கள், ஆய்வாளர்கள் என்று இந்தச் சமூகத்தை ஏமாற்றிக் கொண்டிருக்கிற எவரும் கேட்டதில்லை.


‘அவர் உயிரோடு இருக்கிறார் என்பதை நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. பொய்யாக இருந்து விடுமோ என்ற ஏக்கமாகவும் இருக்கிறது.’ என்று லாவகமான மொழிகளால் இந்தச் சமூகத்தை ஏமாற்றிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால், இந்தச் சமூகம் அதை நம்பிக் கொண்டிருக்கிறது என்பது தான் இந்தச் சமூகத்தின் பெரும் துயரம்.

துவாரகா வரப் போகிறார் என்றதுமே, இந்தச் சமூகம் காறித் துப்பியிருக்க வேண்டும். அதற்கு அது தயாரில்லை. அடிமனதில் அது உண்மையாக இருக்கக் கூடும் என்ற நம்பிக்கை இருந்திருக்கிறது.

அப்போதுகூட, தன்னை அடையாளம் காட்டாத துவாரகாவை நம்பி எந்தப் படையணி தயாராக இருக்கிறது என்ற கேள்வியைக் கூட இந்தச் சமூகம் கேட்கவில்லை. அவரால் என்ன செய்ய முடியும் என்றோ, மறைவிடங்களில் வைத்து என்றாலும் ஊடகங்களைச் சந்திக்கச் சொல்லுங்கள் என்றோ கேட்க முடியவில்லை.

ஒரு அறிவார்ந்த சமூகமாக இருந்திருந்தால் இந்தக் கேள்விகளைக் கேட்டிருக்கும். இப்போதும், ‘துவாரகாவின் வருகையைக் கண்டு சர்வதேசம் அதிர்ச்சி! கலங்கிய சிங்களம்!’



துன்பத் தமிழ் உருட்டு

என்று தலையங்கம் போடக் கூடிய ஊடகங்கள் ஊருக்குள் அதிகம். அந்த உருட்டுகளை எல்லாம் கேட்டுக் கேள்வி இல்லாமல் நம்பக் கூடிய சமூகம் இது.

தமிழ்நாட்டுச் சீமானும், திருமுருகன் காந்தியும் ஈழப் போராட்டத்தில் எந்தச் சிகையைப் புடுங்க முடியும் என்று கூட இந்தச் சமூகம் கேட்டதில்லை. அவர்களுக்குக் கூட ‘காசைக் குடுத்தால் சரி, அண்ணை அடிச்சுப் பறிப்பார்’ என்பதன் நீட்சியாகத் தான் பணத்தை அள்ளிக் கொடுத்தார்கள்.

ஏற்கனவே புலிகளின் பெயரால் சேர்க்கப்பட்ட பணத்தையும் சொத்துக்களையும் சுருட்டியவர்களை இந்த ஒட்டுமொத்த சமூகத்திற்கும் தெரியும். இத்தனைக்கும் இவர்கள் சுருட்டியது எங்களுடைய பணம் இல்லை. இவர்களுடைய பணம். யாருக்குப் பணம் கொடுத்தோம் என்பது கொடுத்த ஏமாளிகளுக்குத் தெரியும்.

தங்களுடைய பணத்தைப் போராட்டத்தின் பெயரால் சுருட்டி, தலைவர் வந்ததும் கணக்குக் காட்டுவோம் என்று சொல்கிறவர்களை, அயோக்கியர்கள் என்று அறிந்த பின்னாலும், எங்களைத் துரோகிகள் என்றும், அவர்களைத் தமிழ்த்தேசியச் செயற்பாட்டாளர்கள் என்றும் சொல்கிற சமூகம் இது.

இன்றைக்கு ‘தேசியச் சொத்துக்களை ஒப்படைக்க வேண்டும்’ என்று எழுதுகிற ஊடகவியலாளர்கள் மட்டுமன்றி, மொட்டை நோட்டீஸ் விடுகிறவர்கள் கூட இந்தத் தமிழ்த்தேசியச் செயற்பாட்டாளர்களை துரோகிகள் ஆக்கியதில்லை. அதே அயோக்கியர்கள் நடத்துகிற மாவீரர் தினங்களுக்குப் போய், அவர்கள் விற்கிற கார்த்திகைப்பூ, விளக்கு, பூ, கொத்துரொட்டி, மட்டன் றோல் எல்லாவற்றையும் பணம் கொடுத்து வாங்கி வருகிறவர்கள். அவர்கள் அவ்வாறு பணம் சம்பாதிப்பதற்காகத் தான் இந்தக் கல்லறைத் திருவிழாக்களைக் கோலாகலமாகக் கொண்டாடுகிறார்களே அன்றி,

**ஒரு அறிவார்ந்த சமூகமாக இருந்திருந்தால் இந்தக் கேள்விகளைக் கேட்டிருக்கும். இப்போதும், ‘துவாரகாவின் வருகையைக் கண்டு சர்வதேசம் அதிர்ச்சி! கலங்கிய சிங்களம்!’ என்று தலையங்கம் போடக் கூடிய ஊடகங்கள் ஊருக்குள் அதிகம். அந்த உருட்டுகளை எல்லாம் கேட்டுக் கேள்வி இல்லாமல் நம்பக் கூடிய சமூகம் இது.**

**தமிழ்நாட்டுச் சீமானும், திருமுருகன் காந்தியும் ஈழப் போராட்டத்தில் எந்தச் சிகையைப் புடுங்க முடியும் என்று கூட இந்தச் சமூகம் கேட்டதில்லை. அவர்களுக்குக் கூட ‘காசைக் குடுத்தால் சரி, அண்ணை அடிச்சுப் பறிப்பார்’ என்பதன் நீட்சியாகத் தான் பணத்தை அள்ளிக் கொடுத்தார்கள்.**

விடுதலை நோக்கமாகவோ, உண்மையாகவே வாழ்வைத் தியாகம் செய்தவர்களுக்கான அஞ்சலியாகவோ இல்லை என்பதைக் கூட இந்தச் சமூகம் விளங்கிக் கொள்ளவில்லை.

போராட்டத்திற்காக தன்னை அர்ப்பணித்த ஒரு தலைமுறை, முன்னாள் போராளிகள், வாழ்வைத் தொலைத்து வழியறியாமல் அல்லல்படுகிறது, அதற்கு ஒரு வாழ்வுக்கான வழியைக் காட்ட வேண்டும் என்று கூட இந்தச் சமூகம் நினைத்ததில்லை.

தேசியச் சொத்துக்களை மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று மொட்டை நோட்டீஸ் விடுகிறவர்கள் கூட, சொத்தைத் தங்களிடம் தரும்படி கேட்கிறார்களே ஒழிய, போராட்டத்திற்குச் சேர்த்த பணத்தைக் கொண்டு அந்தப் போராளிகளுக்கான மறுவாழ்வையாவது செய்யு}கள் என்று கேட்டதில்லை.

இவ்வாறான ஒரு சமூகத்தை வைத்துக் கொண்டு எப்படி ஒரு அரசியல் தீர்வுக்கு வழி காண முடியும்?

ஒரு காலத்தில் ‘ஊருக்கு வா, கவனிக்கிறம்’ என்று எங்களை

மிரட்டிய கூட்டம், பிறகு 'தலைவர் வரட்டும், கணக்கு காட்டிறம்' என்று இந்தச் சமூகத்தையெல்லாம் ஏமாற்றி முடிந்து, தற்போது 'தங்கச்சி வாறா, காசைக் குடுங்கோ' என்று அடுத்த உண்டியல் பெட்டியடித் தாக்குதலுக்குத் தயாராகக் களமிறங்கியிருக்கிறது.

ஏதோ நல்ல காலம். இந்த சமூக வலைத்தளங்கள் வந்து சேர்ந்தது.

எல்லாருமாகவே கழுவி ஊற்றியிருக்கிறார்கள். ஒப்பரேஷன் துவாரகா, கொஞ்சப் பேரின் உச்சிமண்டையில் ஆப்பாக இறங்கியிருக்கிறது. இருந்தாலும் இந்த விக்கிரமாதித்தன்கள் தங்கள் முயற்சியில் ஒருபோதும் சளைக்கப் போவதில்லை.

அவர்கள் புதிய கதைகளோடு வரத்தான் போகிறார்கள்.

இல்லாத துவாரகாவை வைத்து, அடுத்த கட்டப் போராட்டம் எப்படி நடக்கப் போகிறது? அதற்கான படையணிகள் எங்கே? என்று இந்தக் கதை சொல்வோரை எல்லாம் இந்தச் சமூகம் கேள்விக்குள்ளாக்காத வரைக்கும் இப்படித் தான் நடக்கும்.

ஆனால், இந்தச் சமூகம் அவ்வாறு கேட்கப் போவதில்லை.

பிரபாகரன் மண்டையில் போடப்பட்ட பின்னாலும், சீமான், அனந்தி, கஜேந்திரகுமார், விக்னேஸ்வரன் என்று எத்தனை பேரைக் களமிறக்கினார்கள்? அவர்கள் எல்லாம் எங்கே?

இவர்கள் எல்லாருக்கும் 'அடிச்சுப் பறிக்க' ஒரு தலைவர் தேவை.

பட்டுத் துகிலுக்கு ஆசைப்பட்டு, அடிச்சுப் பறிக்கப் போய், கோவணத்தோடு கிடந்த பின்னாலும், இப்போதும் அடிச்சுப் பறிக்கலாம் என்ற நம்பிக்கையோடு தான் இந்தச் சமூகம் இருக்கிறது. அதற்கான ஒரு ஆளைக் கொண்டு வந்தால், அள்ளிக் கொடுக்க இந்தச் சமூகம் தயாராகத்தான் இருக்கிறது.

இவர்கள் தேடிக் கொண்டிருப்பது, எல்லாரையும் காற்றில் மிதந்து பறந்து எதிரிகளைப் பந்தாடும் ஒரு தமிழ்ப்பட ஹீரோவைத் தான்!

**பட்டுத் துகிலுக்கு ஆசைப்பட்டு, அடிச்சுப் பறிக்கப் போய், கோவணத்தோடு கிடந்த பின்னாலும், இப்போதும் அடிச்சுப் பறிக்கலாம் என்ற நம்பிக்கையோடு தான் இந்தச் சமூகம் இருக்கிறது. அதற்கான ஒரு ஆளைக் கொண்டு வந்தால், அள்ளிக் கொடுக்க இந்தச் சமூகம் தயாராகத்தான் இருக்கிறது. இவர்கள் தேடிக் கொண்டிருப்பது, எல்லாரையும் காற்றில் மிதந்து பறந்து எதிரிகளைப் பந்தாடும் ஒரு தமிழ்ப்பட ஹீரோவைத் தான்!**

அதற்குப் புதிய உலக ஒழுங்கு என்பது கூட என்னவென்று தெரியாது.

இதனால் தான், சேரமான் இன்றைக்கு மதிவதனியின் சகோதரியைக் கூட்டி வந்து, அதுதான் உண்மையான துவாரகா தான் என்று சொல்ல வைக்கிறது.

இந்தச் சமூகத்திற்குப் போராட்டம் என்பது எவரோ பெற்ற பிள்ளைகள் தங்களைப் பலி கொடுப்பது மட்டும் தான். தன்னுடைய கடமை பணம் கொடுப்பதோடு முடிந்து விடும்.

கனடாவில் வீதியில் கொடியும் பிடிக்கலாம். நல்லூர் கொடியேற்றத்தில் போய் நின்று செல்பியும் போடலாம்.

முட்டாள்களுக்கு அயோக்கியர்களே தலைவர்கள், அதற்குக் கோமாளிகளே தரகர்கள் என்பது தான் தமிழ்ச்சமூகத்தின் தற்போதைய நிலை. அந்தக் கோமாளிகள் என்போர் தான் ஊடகவியலாளர்கள், ஆய்வாளர்கள் என்றெல்லாம் இந்தச் சமூகத்தில் உலவிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சமூகம் தனது இன்றைய நிலைக்கான காரணங்களை அறிந்து கொள்ள அதிகமாக அலையத் தேவையில்லை.

இந்த மண் உங்களுடையது.
விதை போட்டது நீங்கள்.
உரம் போட்டதும் நீங்கள்.
வளர்வதும், விளைவதும்
வேறு எதுவாக இருக்கும்?

இதனால் தான் நான் சொல்கிற அந்த சமூகத் தலைவர்களுக்கான தேவை இந்தச் சமூகத்தில் இன்னமும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இந்த அயோக்கியர்களை எல்லாம், 'வாயைப் பொத்துங்கடா!' என்று சொல்வதற்கு, இந்தச் சமூகத்திற்கு ஒரு தலைமை தேவை. அரசியலுக்கு அப்பாற்பட்டு, ஒரு சமூகத் தலைமையின் கட்டாயம் ஒன்று இன்றைக்கு அவசரமானதும் அவசியமானதும்.

அவ்வாறான ஒரு தலைமையால் மட்டுமே, தங்களது அரசியல் தலைமையைத் தெரிந்து கொள்வதற்கான தெளிவை இந்தச் சமூகத்திற்குக் கொடுக்க முடியும்.

தமிழ்நாட்டில் பெரியார் காட்டிய அந்தச் சமூக சிந்தனை எழுச்சி நூறாண்டு கண்டபின்பும் அந்தச் சமூகத்திற்கு ஓரளவேனும் சிந்திக்கிற தன்மையையும், ஒரு குறைந்த பட்ச அரசியல் தலைமையையும் கொடுத்திருக்கிறது.

அவ்வாறாக, இந்தச் சமூகத்தில் ஒரு சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு தலைமை இல்லாதவரைக்கும் இந்த யாழ்ப்பாணிச் சமூகத்தையும் இவ்வாறான அயோக்கியர்கள் ஏமாற்றிக் கொண்டு இருக்கத் தான் போகிறார்கள்.

இல்லாவிட்டால்,

'கருங்காலி மாலை!
துவாரகா!

நம்பிக்கை தானே வாழ்க்கை!' என்றபடி,
இப்படியெல்லாம் இந்தச் சமூகத்திற்கு அவ்வப்போது ஒவ்வொரு நம்பிக்கை நட்சத்திரங்கள் வந்தபடியே இருப்பார்கள்...
உண்டியலோடு!

இந்தச் சமூகத்திற்கும்...
கனடா ஏஜன்சிக்காரன் மாதிரி...
'காசைக் குடுத்தாச் சரி, மிச்சத்தை அண்ணை கவனிச்சுக் கொள்ளுவார்!'.

அ

# No Holds Barred, Nothing Held Back!



## பேராசிரியருடன் பாசாங்குகள் இல்லாத பகிர்வு 3

**ஜோர்ஜ்:** அங்கே தலித்தியச் சிந்தனைகளின் இன்றைய நிலை என்ன? சாதியம் சார்ந்து இயங்கும் அமைப்புக்கள் கூட தமது சுயசாதிப் பெருமை பேசும் அமைப்புக்களாகத்தானே இயங்குகின்றன. தலித் விடுதலை என்பது அல்லது சமூக நீதி என்பது குறித்த கரிசனை என்னவாக இன்று இருக்கிறது அங்கு?

**அ.ராமசாமி:** சுயசாதிப் பெருமை இருக்கத்தான் செய்யும். சாதியின் கட்டமைப்பே அதுதானே. அவரவருடைய சாதியின் அடையாளங்களைத் தவறவிடக் கூடாது என்பதுதானே அதனுடைய தன்மையாக இருக்கிறது. அதனதனுடைய அடையாளத்தை நீ காப்பாற்ற வேண்டும். அதைத்தானே சொல்கிறது சாதியமைப்பு. அதற்குள் சமவுரிமை என்பது இருக்கவே இருக்காது. சமவுரிமை இல்லை என்பதுதான் சாதி.

சமவுரிமை என்பது மக்களாட்சிக் காலத்தின் – ஜனநாயகத்தின் எண்ணம். சாதி அதற்கு எதிரானது. அதனை விடவும் தலித் என்பது ஒரு யூனிட்டியாகச் சில குழுக்கள் சேர்ந்தது. சில சாதிகளுக்குள்ளான ஒரு கூட்டு அது. தொடக்கத்தில் சாதி ஒழிப்பு சார்ந்த இயக்கமாகத் தோன்றி, இப்போது சாதியின் வழியாக அதிகாரம் நோக்கி நகரும் இயக்கமாக மாறியிருக்கிறது. மற்ற சாதிகள் அதனை முன்பே செய்யத் தொடங்கிவிடன. வன்னியர் சமூகம் என்று ஒன்றிருக்கிறது தமிழ் நாட்டில் அவர்கள் எல்லொரும் ஒரு சாதி என்று சொல்கிறார்கள். ஆனால் அது எங்கேயிருக்கிறது என்றால் அவர்களின் பிறப்புப் பத்திரத்தில் இருக்கிறது. அவர்கள் யாருமே தம்மை வன்னியர் என்று எழுதுவதில்லை. பா.ம.க. தலைவர் ராமதாஸ் வன்னியர் என்று எழுதுவதில்லை அன்புமணி வன்னியர் என்று எழுதுவதில்லை. படையாச்சி என்று எழுதுவார்கள். வன்னியர் அடையாளத்துக்குள் நாயகர் என்று ஒரு குழு இருக்கிறது. அதனைப்போல் நாலு சமூகம் சேர்ந்ததுதான் வன்னியர் சமூகம். தேவர் என்று ஒரு சமூகம் சான்றிதழ்களில் கிடையாது. தேவர் என்ற பெயரே தமிழ் நாட்டில் கிடையாது. அது கள்ளர் மறவர் அகமுடையார் என்றுதான் இருக்கும். முக்குலத்தோர் என்றும் கிடையாது. இவையெல்லாம் அரசியல் அடையாளங்கள். முக்குலத்தோர் என்று மூன்றை ஒன்றாகக் காட்டும்

**இந்திய சாதி அமைப்பு என்பது நமக்கு வெளியில் தெரிவது போல் இருப்பதில்லை. ஒவ்வொரு சாதியும் பல்வேறு பிரிவுகளடங்கிய சாதிகட்டமைப்புடையது. பறையர் சாதிக்குள்ளும் பல பிரிவுகள் உண்டு. பின்னாளில் ஜனநாயகப் பண்பாடு தோன்றிய பின், வேலை வாய்ப்புக்கள் தோன்றிய பின் சாதிமாறிய திருமணங்கள் நடை பெறுகின்றன. அவை கலப்புத் திருமணங்கள். சாதி மறுப்புத் திருமணங்களல்ல.**

**சாதி மறுப்பு என்பது வேறு. இவை கலப்புத் திருமணங்கள் என்பன வேறுதானே. பிராமணர்களுக்குள்ளும் கலப்புத் திருமணங்கள் நடைபெறுகின்றன. மற்ற சாதிகளுக்குள்ளும் நடைபெறுகின்றன. இப்படித்தான் இப்போது இருக்கிறது. இதனை எவ்வாறு கொண்டு நகர்த்துவது என்று எந்த தலித் அமைப்புக்களுக்கும் எந்தத் திட்டமும் இல்லை.**

**பெரியார் கூட, இப்படித்தான் இருக்குது என்று சொல்லித்தான் தொடர்ந்து தாக்கினார். மாற்ற வேணும் மாற்ற வேணும் என்று பேசினார். அவரும் கூட அதனை எப்படிச் செய்ய வேண்டும் என்று சொன்னதாகத் தெரியவில்லை.**

அரசியல் அடையாளம் அது.

**ஜோர்ஜ்:** அவர்கள் தங்களுக்கு ள்ளாவது திருமணம் செய்வார்களா?

**அ.ராமசாமி:** செய்யமாட்டார்கள். அதனை விடுங்கள். திருநெல்வேலிக் கள்ளர்களும் மதுரைக் கள்ளர்களும் தங்களுக்குள் திருமணம் செய்து கொள்ள மாட்டார்கள். அவர்களுக்குள் வித்தியாசம் இருக்கிறது. மதுரை மாவட்டத்திலேயே மேலூர் கள்ளர்கள் இருக்கிறார்கள். ஊசிலம்பட்டிக் கள்ளர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தங்களுக்குள் திருமணம் செய்து கொள்ள மாட்டார்கள்.

ஏனென்றால் மேலூரர் கள்ளர்கள் நிலம் வைத்திருப்பவர்கள். விவசாயம் செய்பவர்கள். ஊசிலம்பட்டிக் கள்ளர்கள் நிலமற்றவர்கள் கள்ளர் என்பதைத் திருட்டுத் தொழிலோடு சேர்த்து அடையாளம் காணப்பட்டவர்கள். அவர்கள் பிரிட்டானிய ஆட்சிக்காலத்தில் குற்றப் பரம்பரைக்குக் கீழே அடையாளப்படுத்தி வைத்திருந்தார்கள். ஆனால் இப்போது அப்படி இல்லை.

அதனால் இந்திய சாதி அமைப்பு என்பது நமக்கு வெளியில் தெரிவது போல் இருப்பதில்லை. ஒவ்வொரு சாதியும் பல்வேறு பிரிவுகளடங்கிய சாதிகட்டமைப்புடையது. பறையர் சாதிக்குள்ளும் பல பிரிவுகள் உண்டு. பின்னாளில் ஜனநாயகப் பண்பாடு தோன்றிய பின், வேலை வாய்ப்புக்கள் தோன்றிய பின் சாதிமாறிய திருமணங்கள் நடை பெறுகின்றன. அவை கலப்புத் திருமணங்கள். சாதி மறுப்புத் திருமணங்களல்ல. சாதி மறுப்பு என்பது வேறு. இவை கலப்புத் திருமணங்கள் என்பன வேறுதானே. பிராமணர்களுக்குள்ளும் கலப்புத் திருமணங்கள் நடைபெறுகின்றன. மற்ற சாதிகளுக்குள்ளும் நடைபெறுகின்றன. இப்படித்தான் இப்போது இருக்கிறது. இதனை எவ்வாறு கொண்டு நகர்த்துவது என்று எந்த தலித் அமைப்புக்களுக்கும் எந்தத் திட்டமும் இல்லை. பெரியார் கூட, இப்படித்தான் இருக்குது என்று சொல்லித்தான் தொடர்ந்து தாக்கினார். மாற்ற வேணும் மாற்ற வேணும் என்று பேசினார். அவரும் கூட அதனை எப்படிச் செய்ய வேண்டும் என்று சொன்னதாகத் தெரியவில்லை.

இந்தத் தலித் அமைப்பாக்கம் என்பது, அதனை கட்டும் போதே யார் அதற்குத் தலைமை தாங்குகிறார்களோ அவர்களது சாதியின் அடையாளமாக அது மாறிவிடுகிறது. இப்போது திருமாவளவன் வெளித்தெரியத் தொடங்கியபோது அது பறையர்களது அடையாளமாகக் கணிக்கப்பட்டு, பள்ளர்கள் எல்லோரும் தாம் அதற்குள் போகமுடியாது என ஒதுங்குகிறார்கள்.

இட ஒதுக்கீட்டினை முதன் முதலில் கொண்டுவந்த மாநிலம் சென்னை மாநிலம்- அதாவது மட்ராஸ் பிரசிடென்சி. பிறிட்டிஸ் காலத்திலேயே உருவாக்கப்பட்டது. பொதுவாக பிறிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் தொடங்கித் தமிழ்நாட்டில் இட ஒதுக்கீட்டின் மூலம் அதிகாரப் பதவிகளை அதிகம் பெற்றவர்கள் பறையர் சமூகத்தினர். அதனால் அரசுப் பதவிகளுக்குள் - அதன் நிர்வாகத்திற்குள் மேலே போனவர்கள் பறையர்கள். அதன் பிற்பாடு தி.மு.க. ஆட்சியில் வரும்போது, பள்ளர்களில் படித்தவர்கள் வருகிறார்கள். அவர்கள் அதிகாரிகளாக மாறுகிறார்கள். அதிமுகவில் அதிகமாகப் பள்ளர்கள் இருப்பார்கள். பறையர்கள் இருக்கமாட்டார்கள். ஏனென்றால் பறையர்கள் தமிழ் நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள பெருஞ்சாதி. முன்பு காங்கிரஸ் ஆதரவு சக்தியாக இருந்தனர்.

வன்னியர்கள் திமுகவின் பக்கம் இருந்தார்கள். பாட்டாளி மக்கள் கட்சி தோன்றி வன்னியர்கள் திரளாக அங்கே போனபோது, பறையர்கள் திமுக ஆதரவாளர்களாக மாறினார்கள். பா.ம.க.வைப்போல விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தனிக்கட்சியாக வடிவம் எடுத்துவிட்டது. தமிழ்நாட்டின் கூட்டணி அரசியலில் இரண்டு தரப்பும் ஒரே அணியில் இருக்க முடியாமல் போய்விட்டது. தமிழ்நாட்டின் தெற்கில் தேவர்களுக்கும் பள்ளர்களுக்கும் பகை முரண்பாடு உருவாக்கப்பட்டதும் ஆங்கிலேயர்கள் காலத்திலேயே நடந்தது. காங்கிரஸ் காலத்தில் பள்ளர்கள் அதன் ஆதரவு சக்தியாக இருந்தனர்.

இடைநிலை சாதிகளாக முக்குலத்தோர் திராவிட இயக்கத்தினராக – திமுகவிலும் அதிமுகவிலும் திரண்டனர். ஆனால் முத்துராமலிங்கத்தேவர் பார்வர்ட் பிளாக் மாதிரியில் பள்ளர்களுக்கு எனத் தனிக்கட்சி ஒன்று தேவைப்பட்டது. அங்கே டாக்டர் கிருஷ்ணசாமி புதிய தமிழகத்தை உருவாக்கினார். எம்ஜிஆர் ஆட்சிக்காலத்தில் இந்த சாதிகளுக்கு இடையே ஒருவிதச் சமநிலையை உருவாக்கினார். தேவர்களுக்கு ஒரு மந்திரி பதவி, பள்ளர்களுக்கு ஒரு மந்திரி பதவி கொடுப்பார். ஏனெனில் அங்கே முக்குலத்தோர்களையும் பள்ளர்களையும் சமநிலைப் படுத்த வேண்டும். அதற்காக அப்படிச் செய்வார். அவர் மாதிரி மற்றவர்கள் சமநிலைப்படுத்து அரசியலைச் செய்வது குறைவு.

அவருக்கு அரசியல் தெரியாது என்று பலர் சொல்வார்கள். உதாரணமாகத் திருநெல்வேலி மாவட்டத்தில எண்ணிக்கையில் ஆதிக்க சமூகம் என்றால் பள்ளர் நாடார் தேவர் என்ற மூன்று சமூகங்கள் தான். இந்த மூன்று சமூகத்தினரையும் மந்திரிப் பதவி கொடுப்பது, கட்சிப்பணி கொடுப்பது என சமநிலைப்படுத்தியபடியே இருப்பார். ஒரு காலத்தில் மாவட்டச் செயலாளராக நாடார் இருக்கிறார் என்றால் ஒரு மூன்று வருடத்தில் அவரைத் தூக்கிவிட்டு மற்ற சமூகத்தவரை அமர்த்துவார். ஜெயலலிதா கூட அதனைத் தொடரவே செய்வார். கவலையே படாமற் செய்வார்கள்.

ஆனால் தி.மு.க. அதனைச் செய்வதில்லை. திமுகவில் ஏன் திரும்பத் திரும்ப வாரிசு அரசியல் வருகிறதென்றால் மாவட்ட அளவிலேயே அதே குடும்பங்கள் தான் வந்துகொண்டிக்கின்றன. ஒரு இடத்தில் இன்று ஒருவர் மாவட்டச் செயலாளராக இருக்கிறார் என்றால். அவரது அப்பா அவனுக்கு முன்னால் அங்கே மாவட்டச் செயலாளராக இருந்திருப்பார்.

**ஜோர்ஜ்:** அது என்னவென்றால், அவர்களிடந்தான் சேர்க்கப்பட்ட சொத்து இருக்கிறது.

**அ.ராமசாமி:** உண்மை. சொத்து அவர்களிடம் இருக்கிறது என்பதே அதற்கான காரணம். திருச்சியில் கே.என்.நேரு குடும்பம் பலம் பொருந்தியவர்களாக இருக்கிறார்கள். அங்கே ஸ்ராலின் கூட அவரிடம் கேட்காமல் அங்கே எதுவும் பண்ண முடியாது என்று சொல்வார்கள். அங்கே திருச்சி சிவா பெரிய இன்டரலெக்சவல். ஆனால் அவரால் அங்கே ஒன்றும் பண்ணமுடியாது. ஏனெனில் பணம் நேருவிடம் இருக்கிறது.

**ஜோர்ஜ்:** திருச்சி சிவாவின் மகனுக்கு என்ன நடந்தது?

**அ.ராமசாமி:** அவர் பி.ஜே.பியில் இருந்தார் என்றும் இப்பொழுது பிரச்சனைப்பட்டு வெளியில் வந்துவிட்டார் என்றும் சொல்கிறார்கள். பி.ஜே.பி மற்றக்கட்சிக்குள் ஊடுருவுவதுபோல் இவர்களும் ஏதாவது முயற்சி செய்திருப்பார்கள், அது தப்பாகப் போய்விட்டது என எண்ணுகிறேன்.

**ஜோர்ஜ்:** இவற்றையெல்லாம் கடந்து நமது இலக்கியச் சூழலில் தலித்தியத்தின் இன்றைய பங்கு என்னவாக இருக்கிறது?

**அ.ராமசாமி:** இப்பொழுதும் நான் பரவலாக பலரையும் வாசிக்கிறேன். ஆனால் ஒரு பத்துவருடமாக தலித் பக்கமிருந்து புதிதாக யாருமே இலக்கியத்திற்குள் வரவில்லை. தொண்ணூறுகளில் நாங்கள் பேசினவையெல்லாமே தலித் எழுத்தாளர்கள் குறித்துத்தான். தொண்ணூறுகளில் வெளிவந்த சிறு பத்திரிகைகள்– இலக்கிய இடைநிலை இதழ்கள் என்று எதை நோக்கினாலும் தலித் அரசியல் குறித்து பேசாத பத்திரிகைகள்–சஞ்சிகைகள் வந்தது கிடையாது. இன்று அப்படி இல்லை. இன்று ஒன்றுமேயில்லை.

இன்று சினிமாவில் ரஞ்சித் படம் வந்தால் மட்டும் பேசப்படுகிறது. அறியப்பட்ட தலித் எழுத்தாளர்களே தாங்கள் தலித் எழுத்தாளர் இல்லை என்று சொல்லுபடியான நிலைதான் உருவாகியிருக்கிறது. இப்ப இமையம் நான் தலித் எழுத்தாளன் இல்லை என்கிறார். தர்மன் நான் தலித் எழுத்தாளர் இல்லை என்கிறார். எங்களை யாருமே தலித் எழுத்தாளர் என்று சொல்ல வேண்டாம் என்கிறார்கள். அந்த அடையாளம் வேண்டாம் என நினைக்கிறார்கள். 2010க்குப் பின் யாராவது தலித் எழுத்தாளர்கள் வந்திருக்கிறார்களா என்றால் இல்லை என்றுதான் பதில் இருக்கிறது. இப்பொழுது இணைய இதழ்களே பத்துப் பதினைந்து இதழ்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அவற்றில் கூட எந்தத் தலித் எழுத்தாளர்களையும் நாம் அடையாளம் காணமுடிவதில்லை. இல்லை இது ஒரு தலித் எழுத்து என எந்த இதழ்களும் அடையாளம் காட்டிப் பதிவு செய்வதும் இல்லை.

> **‘அறியப்பட்ட தலித் எழுத்தாளர்களே தாங்கள் தலித் எழுத்தாளர் இல்லை என்று சொல்லுபடியான நிலைதான் உருவாகியிருக்கிறது. இப்ப இமையம் நான் தலித் எழுத்தாளன் இல்லை என்கிறார். தர்மன் நான் தலித் எழுத்தாளர் இல்லை என்கிறார். எங்களை யாருமே தலித் எழுத்தாளர் என்று சொல்ல வேண்டாம் என்கிறார்கள். அந்த அடையாளம் வேண்டாம் என நினைக்கிறார்கள். 2010க்குப் பின் யாராவது தலித் எழுத்தாளர்கள் வந்திருக்கிறார்களா என்றால் இல்லை என்றுதான் பதில் இருக்கிறது. இப்பொழுது இணைய இதழ்களே பத்துப் பதினைந்து இதழ்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அவற்றில் கூட எந்தத் தலித் எழுத்தாளர்களையும் நாம் அடையாளம் காணமுடிவதில்லை. இல்லை இது ஒரு தலித் எழுத்து என எந்த இதழ்களும் அடையாளம் காட்டிப் பதிவு செய்வதும் இல்லை.’**
>
> **‘நான் தலித் என்று அடையாளப்படுத்தும் படியான எழுத்துக்கள் இல்லை. சோபாசக்தியைத் தவிர!’**

அனோஜனது அகழ் இணைய இதழ், மலேசியாவிலிருந்து

நவீன் கொண்டுவரும் வல்லினம் இதழ், கோகுல் பிரசாத்தினுடைய தமிழினி என்று எனக்குத் தெரிந்த இந்தமாதிரியான இதழ்களில் எழுதும் எழுத்தாளர்களில் யாராவது தலித் எழுத்தாளர்கள் என்று வருகிறதா எனக் கேட்டால் இல்லை

**ஜோர்ஜ்:** நான் தலித் என்று அடையாளப்படுத்தும் படியான எழுத்துக்கள் இல்லை. சோபாசக்தியைத் தவிர! (மிகப்பெரிய சிரிப்பு)

**அ.ராமசாமி:** ஆமா; இது ஒரு தலித் எழுத்து என்று சஞ்சிகைகள் கூட அடையாளம் காட்டும் பதிவுகளும் இல்லை.

**கற்சுறா:** இன்று சுகிர்தராணி மற்றும் மதி மணிவண்ணனது எழுத்துக்கள் குறித்து ஈழத்துச் சூழல் அதிகம் கவனிக்கிறது என்பதனை அறிந்திருப்பீர்கள். அவர்களது இடம் குறித்து நாம் பேச வேண்டும் என்றே நினைக்கிறேன்.

**அ.ராமசாமி:** சுகிர்தராணியின் இலக்கியப் பங்களிப்புகளும் களப்பணிகளும் தனித்த ஒன்றுதான். தன்னை பெண்ணாகவும் தலித்தாகவும் முன்வைப்பதில் தயக்கம் காட்டாமல் எழுதுவதை அவரது கவிதைகள் காட்டுகின்றன. மைய நீரோட்டத்தில் கலந்து விடுவதற்காகத் தனது தலித் அடையாளத்தைக் கைவிட்டாக வேண்டும் என்று அவர் நினைப்பதில்லை. அதேபோல் கல்வி, மனித உரிமை, அரசெதிர்ப்புப் போராட்டங்கள் போன்றவற்றிலும் தொடர்ந்து ஈடுபாடு காட்டுகிறார். ஓர் அரசுப்பள்ளி ஆசிரியர் என்ற நிலையிலும் கூடப் பின்வாங்காத போராட்ட குணத்தைக் கொண்டவராகத் தொடர்ந்து நிற்கிறார். அறியப்பட்ட தலித் கட்சிகளின் சார்பாக இல்லாமல், தலித் என்னும் கருத்தியலை – சாதி இருப்பைக் கேள்விக்குள்ளாக்கும் கருத்தியலை உள்வாங்கி வெளிப்படும் கவிதைகள் அவரது கவிதைகள். மதிவண்ணனின் ஆரம்ப எழுத்துகள் கவிதைகளாக வெளிப்பட்டன. தொடர்ந்து கவிதைகள், புனைவுகள் என்ற நிலையிலிருந்து விலகிக் கருத்துருவாக்கத்தை முன்வைக்கும் கட்டுரை எழுத்தை நோக்கி நகர்ந்துள்ளார். தலித் அடையாளத்திற்குள் தனது சாதியான சக்கிலியர் அல்லது அருந்ததியர் இல்லை என்பதைப் பள்ளர்கள் என அழைக்கப்படும் தேவேந்திர குல வேளாளர் தலைவர்கள் சொல்வது போலச் சொல்வதில்லை. தொடர்ந்து சக்கிலியர் வரலாற்றை எழுதுவதற்கான களப்பணி, தொன்மங்களைக் கட்டுடைத்தல், வரலாற்றுக் குறிப்புகளைத் தொகுத்தல் எனச் செயல்படுகிறார். 1990 களின் கடைசியில் வெளிப்பட்ட இவ்விருவரும் அந்நிலையிலேயே தொடர்ந்து பயணிக்கின்றனர் என்ற நிலையில் கவனிக்கப்பட வேண்டியவர்கள்

**புலம்பெயர்ந்த பரப்பில் இருந்தும் ஈழத்துப் பரப்பிலிருந்தும் ஒரு சூழல் உருவாகியது என்னவென்றால், வெறுமனே தமிழ்நாட்டு வாசகர்களுக்காக மட்டும் குறி வைத்து எழுதப்பட்டதாக இருக்கும் எழுத்துக்களின் நிலை. இதனை இன்றைய காலத்தில் ஆரம்பித்து வைத்தவர் சோபாசக்தி அவர்கள் தான். அவர் எழுதிய பல கதைகளை நான் அதற்கு உதாரணம் காட்டி எழுதியிருந்தேன். அவர் தமிழ் நாட்டில் மைக் முன் பேசும் மொழி வேறு புலம்பெயர் சூழலில் மைக்கின் முன் பேசும் மொழி வேறு. இதனை நீங்கள் அவரின் உரைகளைக் கேட்டால் புரிந்து கொள்ள முடியும். தமிழ்நாட்டுத் தேசிய உணர்வாளர்கள் சீமானைப் புரிந்து கொள்ளும் ஒரு கெட்ட நிலையைப் போலத்தான் தமிழ்நாட்டு இலக்கியச் சூழலும் சோபாசக்தியைப் புரிந்து கொண்டிருக்கிறது.**

”

**கற்சுறா:** இன்னுமொன்றையும் நாங்கள் மிக உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். புலம்பெயர்ந்த பரப்பில் இருந்தும் ஈழத்துப் பரப்பிலிருந்தும் ஒரு சூழல் உருவாகியது என்னவென்றால், வெறுமனே தமிழ்நாட்டு வாசகர்களுக்காக மட்டும் குறி வைத்து எழுதப்பட்டதாக இருக்கும் எழுத்துக்களின் நிலை. இதனை இன்றைய காலத்தில் ஆரம்பித்து வைத்தவர் சோபாசக்தி அவர்கள் தான். அவர் எழுதிய பல கதைகளை நான் அதற்கு உதாரணம் காட்டி எழுதியிருந்தேன். அவர் தமிழ் நாட்டில் மைக் முன் பேசும் மொழி வேறு புலம்பெயர் சூழலில் மைக்கின் முன் பேசும் மொழி வேறு. இதனை நீங்கள் அவரின் உரைகளைக் கேட்டால் புரிந்து கொள்ள முடியும். தமிழ்நாட்டுத் தேசிய உணர்வாளர்கள் சீமானைப் புரிந்து கொள்ளும் ஒரு கெட்ட நிலையைப் போலத்தான் தமிழ்நாட்டு இலக்கியச் சூழலும் சோபாசக்தியைப் புரிந்து கொண்டிருக்கிறது என்பதனை அண்மைய பதிவுகளும் எமக்கு வெளிப்படுத்துகின்றன. அவரை நம்பியிருக்கும் பதிப்பகங்களுக்கும் சஞ்சிகைகளுக்கும் அவரைத் தாண்டி ஒரு புதிய கருத்தைத் தேட வக்கற்றுப் போயிருக்கிறது என்பதுவும் கவலையான விடயம் தானே?

**அ.ராமசாமி:** இன்று தமிழ் நாட்டில் அவருக்கு என்ன மாதிரியான அடையாளம் இருக்கிறது என்றால், அவர் ஒரு நல்ல கதை சொல்லி என்ற அடையாளந்தான். கதை சொல்லும் நுட்பம் அவரிடம் இருக்கிறது எனப் பார்க்கிறார்கள். அதனை விடவும் இலங்கையின் பரப்புக்குள் - கதைப் பகுதிக்குள் சொல்லப்படாத பல விடயங்களைக் கண்டு பிடித்து அவர் சொல்கிறார். ஒரு கிறாப்ட் லெவலில்தான் அவருக்கு ஒரு மதிப்பிருக்கிறது. முன்னாடி புலிகளுடைய எதிர்ப்பாளர் என்பதற்காக அவருக்கு மதிப்பிருந்தது. எப்படிப் புலி ஆதரவாளர்களுக்கு ஒரு மதிப்பிருந்ததோ அதே போல் புலி எதிர்ப்பாளராக அவருக்கு ஒரு மதிப்பிருந்தது. இன்று அவர் கொஞ்சம் கொஞ்சமாக மாறுகிறார் புலி எதிர்ப்பைக் கைவிட்டுவிட்டார் என்று கூடச்

சொல்லலாம். நாவல்களை ஒருவித நிகழ்த்துப் பனுவல்களாகப் பரப்பிக் காட்டுகிறார். அதனைவிடவும், சிறுகதைகளில் புதுவகைத் தொன்மங்களை உருவாக்கிக் கொண்டே இருக்கிறார்.

**ஜோர்ஜ்:** அவர் மெல்லம் மெல்லமாகத் தமிழ்த் தேசியம் நோக்கி நகர்ந்து விட்டார்.

**அ.ராமசாமி:** ஆமா. இப்பொழுது ஏறத்தாழ அந்த நிலைதான். ஆனால் நகர்ந்திருக்கிறார் எனச் சொல்லவும் முடியாது. அதனை அவர் கொஞ்சம் மென்மையாக அணுகிகுறார் தற்போது.

**ஜோர்ஜ்:** அவருடைய பல கருத்துக்கள் யாழ்ப்பாணிய மனோநிலைக் கருத்துக்களாகவே இருக்கின்றன.

**கற்சுறா:** கருத்துக்களாய் இருப்பது ஒன்றும் சிக்கலில்லை. ஆனால் அவர் தன்னுடைய வாசகர்களை யார் என்று தெரிந்து அவர்களுக்குக் கதை சொல்ல முனைவதும், இன்று ஈழ விடுதலைக் கதைகளிற்குத் தமிழ்நாட்டில் எவ்வகைப் புரிதல் இருக்கிறது என அறிந்து அதற்கேற்றால் போல் கதை சொல்லத் தொடங்கியிருக்கிறார். தமிழ் நாட்டவர்களும் தங்கள் கைகளுக்குக் கிடைக்கும் கதைகளை விட வேறு கதைகளைத் தேடுவதேயில்லை. தெரிந்து கொள்ள விருப்பமும் இல்லை. அந்த நிலையை அவர் நன்றாக விளங்கி வைத்திருக்கிறார்.

**அ.ராமசாமி:** ஆமா. இப்பொழுது அவர் எழுதியிருக்கும் திலீபன் பற்றிய கதை குறித்துச் சொல்கிறீர்கள் என நினைக்கிறேன். அண்மையில் வந்து கருங்குயில் தொகுப்பில் ஒவ்வொரு கதையும் ஒருவிதத் தொன்மமாக்கத்தைச் செய்திருக்கிறது. எல்லாமே நவீனத்தொன்மங்கள் என்ற அளவில் வாசிப்பவர்களுக்குப் பெரும் ரகசியத்தை திறக்கின்றன. ஏற்கனவே பிரபலமான நிலையிலிருக்கும் பெயர்களான ஈழத்தில் திலீபன். சிலியில் நெருடா போன்றவர்கள் பற்றிய விம்பங்களின் செய்திகள் இருக்கின்றன. ஆனால் அந்த விம்பங்களுக்குள்ளான செய்திகளுக்குள் ஒரு கதை இருக்கிறது. அந்தக் கதையை வடிவமைப்பவராகத்தான் நான் பார்க்கிறேன்.

**ஜோர்ஜ்:** நான் இதனைப் பற்றி விபரமாக எழுத வேண்டும் என்று யோசிக்கிறேன். இந்தத் திலீபனைப் பற்றிய கதை முழுக்க முழுக்கத் தமிழ்நாட்டு வாசகர்களுக்காக வடிவமைக்கப்பட்ட கதை. திலீபன் என்னுடைய கிராமத்தைச் சேர்ந்தவர். அவரைச் சிறு வயது முதல் நான் நன்கு அறிவேன். திலீபன் ஊரெழுவில் பிறந்தவர் என்று சொல்லப்படும் போது மற்றய விவரணைகள் தவறாகத்தானே இருக்கின்றன.

**அ.ராமசாமி:** அதனைத்தான் நான் கேட்கிறேன். ஏன் அது சரியாக இருக்க வேண்டும்? இது திலீபன் பற்றிய வரலாறல்ல. வரலாறை எடுத்து அவர் கதையாக்குகிறார். அவ்வளவுதான். ஒரு கதாபாத்திரத்தை அவருடைய மரணத்தையும் மரணத்திற்கு பின்பும் இயக்கம் எப்படிப் பயன்படுத்தியது என்பதுதானே கதை?

**கற்சுறா:** சரி. இதைப் போன்ற செயலைத்தானே மணிரத்தினமும் தமிழ்ச்சினிமாவில் செய்து கொண்டிருக்கிறார்? 'பம்பாய்' திரைப்படம் குறித்து நாம் பேசுவது அதைத் தான். ஒரு வரலாறை, உண்மையாக நடந்த நிகழ்வைத் தனக்குரியதாக மாற்றி ஈழச் சமூக விம்பத்தின் இன்னொரு முகத்தைத் தமிழ் நாட்டவர்களுக்குத் தருவது அற்பத்தனந்தானே? அதன் பின்னிருக்கும் சிந்தனை குறித்த உரையாடலில் தமிழ்நாட்டவர்கள் இணைய வேண்டும். ஆனால் அது நடைபெறுவதில்லைத்தானே?

**ஜோர்ஜ்:** அதனைவிடவும் ஒரு உண்மைக் கதையைச் சொல்லத் தொடங்கும் பொழுது நிலவியல் அடையாளங்கள் சரியாக இருக்க வேண்டாமா?

**அ.ராமசாமி:** ஜியோக்கிரபிக்கல் லொக்கேசனப் ஃபிக்சன் ஆக்குறதுதான் நல்லதென்று சொல்வார்கள். ஏனெனில் அவ்வாறு எழுதிச் சட்டச்சிக்கல்களை எதிர் கொண்டவர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள். இப்போது உதாரணத்திற்கு ஒரு அலுவலகக் கதையை எழுதும் போது அந்தச் சிக்கல் இருக்கிறது.

**ஜோர்ஜ்:** அது சிக்கல்தான். ஆனால் ஒரு அலுவலகக் கதையை எழுதுவது மாதிரியல்ல இது. இதனால் ஒரு நபர் அடையாளம் காணப்படுவார் என்றோ, அல்லது அதனால் சட்டச் சிக்கலை எதிர் கொள்வார் என்றோ இங்கே இல்லை.

**அ.ராமசாமி:** இப்போது ஒருவர் வயல்மாதா என்று எழுதியிருக்கிறார் அல்லவா? அவருக்கு ஃபிக்சன் பண்ணத் தெரியவில்லை. அதுதான் பிரச்சனை.

**கற்சுறா:** இந்தப் புலம் பெயர் சூழலில் இன்று இருக்கிற பரிதாபம் என்னவென்றால், இங்கிருக்கின்ற வீதிகளின் பெயர்களையும் வேலையிடத்து விடயங்களையும் அல்லது தாம் சுற்றித்திரியும் நாடுகளின் சம்பவங்களையும் எழுதிவிட்டால் தமிழ் நாட்டில் இருக்கும் வாசகன் வாயைப் பிளந்து கொண்டு வாசிப்பான் என்ற மனோபாவம் வந்திருக்கிறது. இதுதான் மிகப்பெரிய நோய். ஆனாலும் இந்தப் பேர்வழிகளைப் போலானவரல்ல சோபா. ஆனால் அவரும் அந்த நிலையை அடைந்திருப்பதுவே எனது வருத்தம். அது குறித்து நான் தொடர்ந்து சொல்கிறேன். ஈழ அரசியலில் புலிகளின் பங்கு அவருக்கு நன்றாகவே தெரியும். ஆனாலும் அவர் கதை சொல்ல விளைவதும் அந்தக் கதையைக் கையேந்தி விற்பதும் தமிழ் நாட்டிற்கு என்பதால் அவரறிந்த பலதிற்கு தங்கமுலாம் பூச வேண்டியிருக்கிறது. அந்த நிலைக்கு அவர் தரம் இறங்கியிருக்கக் கூடாது என்பதே எனது கோபம்.

**அ.ராமசாமி:** நான் நேற்று நடந்த ஆ. சி. கந்தராசாவின் நூல் வெளியீட்டில் கூடப் பேசினேன். பொதுவாக ஈழம் புலம்பெயர் எழுத்தாளர்கள் எதிர் கொள்ள விளையும் வாசகர் வட்டம் என்பது தனித்த ஆட்கள்

கிடையாது. அது ஒரு பெரிய அளவிலானது. அவர்களின் இலக்கு என்பது தமிழ் நாடுதான். அது குணா கவியழகனாக இருக்கட்டும் தீபச் செல்வனாக இருக்கட்டும் சயந்தனாக இருக்கட்டும் அவர்களுடைய இலக்கு என்பது தமிழ்நாடுதான். பிறகு புலம் பெயர் நாடுகள். அதற்குப் பிறகுதான் ஈழ வாசகர்கள். அந்த இடத்தில் தான் நான் சொல்கிறேன். இதனைத் தாண்டி இன்னொரு இலக்கு வையுங்கள். இவற்றை ஆங்கிலத்திலோ அல்லது பிற மொழியிலோ மொழி பெயர்த்தால் நிற்குமா? என்பதுதான் அது. அப்படி மொழி பெயர்க்கும் போது இந்த உலக இலக்கியத்திற்குள் அதற்கு ஒரு அடையாளம் இருக்கிறதா? தீபச்செல்வன் அவர்களின் நாவலை அவர் சிங்களத்திற்குப் போக வேண்டும் என்பதனை மனதில் வைத்தே எழுதுகிறார். நடுகல் ஏற்கனவே சிங்களத்திற்குப் போய்விட்டது. இந்தப் பயங்கரவாதி நாவலும் சிங்களத்திற்குப் போனால் ஒரு சந்தை வாய்ப்பு இருக்கும். அதற்காகவே நாவலக்குள் சில பதிவுகளை வைத்திருக்கிறார். சிங்களச் சிப்பாய்க்கும் மனிதாபிமானம் இருப்பதாக ஒரு உத்தியை வைத்திருப்பார்.

**கற்சுறா:** இப்ப நான் கேட்கிறேன் என்னவென்றால், ஒரு கதை சொல்லிக்கு அதாவது ஒரு சிறுகதையாளனுக்கோ அல்லது நாவல் ஆசிரியனுக்கோ வாசகனின் இலக்கு இருக்க வேண்டும் என்று என்ன தேவை? வாசகனை அடையாளம் கண்டு தனது எழுத்தின் வடிவத்தை மாற்றமுனைபவன் வியாபாரிதானே? ஒரு வாசகன் கொண்டாடப்படக் கூடிய மனநிலையில் மட்டும் கதைகளைச் சொல்லத் துணிபவனை நாங்கள் எதற்குக் கொண்டாட வேண்டும்?

**அ.ராமசாமி:** இந்த மனநிலை எல்லாக்காலத்திலும் இருந்துள்ளது. இப்போது ஜெயகாந்தன் கதைகளை எடுத்துக் கொள்வோம். அவருடைய வாசகர்கள் யாரென்றால் இந்தக் குடும்ப அமைப்புக்குள் இருப்பவர்களும் அதற்குள் சமத்துவத்தை

**இப்பொழுது தமிழ்நதி எழுதிய பார்த்தனீயம் போல பல எழுத்து முறைமைகள் வருகின்றன. அது ஈஸியான எழுத்து முறை. அது ஈழத்திலும் விற்பனையாகும் புலம்பெயர் சூழலிலும் விற்பனையாகும். தமிழ் நாட்டிலும் விற்பனையாகும். இதே தீபச்செல்வன் தனது நாவலில் புலிகளும் சில தவறு செய்திருக்கிறார்கள் என்று சொல்லிப் போயிருந்தால் உங்களோடு விவாதம் செய்த சிவவதனி என்ற அந்தப் பெண் தீபச்செல்வனை அடித்தே கொன்றிருப்பார். முகநூலில் கூட அந்தப் பெண்ணின் துன்பம் தாங்கமுடியாது.**

நோக்கிப் பயணிப்பவர்களுந்தான் பெரும்பான்மையான வாசகர்கள். ஆனந்த விகடனையோ குமுதத்தையோ வாசிப்பவர்கள் அனைவரும் அவரது வாசகர்கள் கிடையாது. அவரை விவாதத்திற்கு எடுப்பவர்கள்தான் வாசகர்களாக இருக்கிறார்கள். அதேபோலத்தான் இந்தப் புலம்பெயர்ந்த எழுத்தாளர்களும். இவர்களை விவாதத்திற்கு எடுப்பவர்கள் தமிழ் நாட்டவர்களாக இருக்கிறார்கள். அதனால் தான் அவர்களை நம்பிப் பதிப்பகங்களும் செயற்படுகின்றன. சினிமா எடுக்கிறவனும் அப்படித்தானே எடுக்கிறான். இப்பொழுது பா.ரஞ்சித்தோ அல்லது மாரி செல்வராஜ் அவர்களோ தைரியமாக படம் எடுக்கிறார்கள். ஏனென்றால் இன்றுள்ள தமிழ் நாட்டில் தியேட்டருக்குப் போய் சினிமா பார்க்கிற கூட்டம் விளிம்பு நிலையினர். தலித் சமூகத்தினர் தான். மற்றவர்கள் எல்லோரும் ஓ.ரி.ரியில் பார்க்கிற கூட்டமாக மாறிவிட்டார்கள். ஏனென்றால் மாமன்னன் படம் பற்றி இப்போதுதான் விவாதிக்கிறார்கள். இப்போதுதான் ஓரிரியில் படம் பார்த்தபிறகு விவாதம் ஆரம்பிக்கிறது. சிலர் தான் விவாதிப்பதற்காகத் தியேட்டர் போகிறவர்களாக இருக்கிறார்கள். ஆனால் தொடர்ந்து காசு கொடுத்துத் தியேட்டருக்குப் போய்ப் படம் பார்ப்பவர்கள் அதிகமாகத் தலித் மக்கள் தான். அதனால் மார்க்கெட், சந்தையைக் குறிவைத்தல் என்பது எல்லாக் கலைகளுக்கும் இருக்கதான் செய்யும். யார் படிக்கிறார்கள், யார் பார்க்கிறார்கள் என்பது முக்கியம்.

**ஜோர்ஜ்:** மார்க்கெட் இருக்கவேண்டும் என்பது சரி. ஆனால் நான் என்ன எழுத வேண்டும் என்பதை வாசகர்களின் விருப்பத்திற்காகச் சமரசம் செய்யும் நிலை தேவையா?

**அ.ராமசாமி:** சமரசம் என்று நாங்கள் சொல்கிறோம். ஆனால் யார் விவாதிப்பார்களோ அவர்களை நோக்கி எழுதுகிறேன் என்கிறார்கள் அவர்கள்.

**ஜோர்ஜ்:** இப்பொழுது தமிழ்நதி எழுதிய பார்த்தனீயம் போல பல எழுத்து முறைமைகள் வருகின்றன. அது ஈஸியான எழுத்து முறை. அது ஈழத்திலும் விற்பனையாகும் புலம்பெயர் சூழலிலும் விற்பனையாகும். தமிழ் நாட்டிலும் விற்பனையாகும். இதே தீபச்செல்வன் தனது நாவலில் புலிகளும் சில தவறு செய்திருக்கிறார்கள் என்று சொல்லிப் போயிருந்தால் உங்களோடு விவாதம் செய்த சிவவதனி என்ற அந்தப் பெண் தீபச்செல்வனை அடித்தே கொன்றிருப்பார். முகநூலில் கூட அந்தப் பெண்ணின் துன்பம் தாங்கமுடியாது.

**அ.ராமசாமி:** தீபச்செல்வனுக்கு எல்லாமே தெரியும். அவர் எதுவும் அறியாதவரல்ல. ஆனால் அவர் ஏன் அப்படி எழுதுகிறார் என்றால் அவருடைய மார்க்கெட் இந்த சிவவதனி போன்ற சிந்தனையுள்ளவர்கள்தான்.

**ஜோர்ஜ்:** அதே நேரம் தமிழினிக்கு நடந்ததை யோசித்தீர்களா?

**அ.ராமசாமி:** தமிழினிக்கு இருந்ததெல்லாம் நடந்ததை தான் எழுதிவிட வேண்டும் என்ற விருப்பந்தான்.

**ஜோர்ஜ்:** அவை இலக்கியமா? இல்லையா என்ற விவாதத்தை

விடுவோம். ஆனால் அதிலிருக்கிற உண்மைத் தன்மைகளை ஏற்றுக் கொள்ள இங்கே யாருமே தயார் இல்லை. யுத்தகாலத்திலிருந்த தமிழினி சொல்கிற கதைகளை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் சம்பந்தமேயில்லாமல் ஓடிவந்த தீபச்செல்வனின் கதைகளை ஏற்றுக் கொள்ள முடிகிறது. ஏனென்றால் இவர் சொல்வது கதை. தமிழினி சொல்வது உண்மை.

**அ.ராமசாமி:** ஏற்கனவே இருக்கிற நம்பிக்கைகளுக்கு இன்னும் உறுதியை வழங்கும் போது பாராட்டத்தான் செய்வார்கள். அதனால்தான் இன்னும் கடவுள் வாழ்ந்து கொண்டிருக்கிறார். எல்லோருக்குள்ளும் இருக்கும் கடவுள் பற்றி ஒரு போதகர் சொல்லும் பொழுது நன்றாக ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் பெரியார் வந்து எங்கேயிருக்கிறார் கடவுள் என்று கேள்வி கேட்டால் யாரும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள்?

**கற்சுறா:** இப்போது நமக்குப் பெரியார் முக்கியமா? போதகர் முக்கியமா?

**அ.ராமசாமி:** இப்போதுள்ள சுமையும் வலியும் மாறாதா? என்று ஏங்கும் மனிதர்களுக்குப் பெரியாரும் போதகரும் வெவ்வேறு நிலையில் முக்கியமாக இருக்கிறார்கள். அந்த நேரத்தில் முதுகைத் தடவிக்கொடுத்து, கண்டுக்காமல் போய்க்கிட்டே இரு என்று சொல்லி அனுப்பும் போதகர் தற்காலிகத்தேவை. பரபரக்கும் கையை வைத்து மதிலையும் கதவையும் தட்டிக் கூச்சல் போடும் மனிதனுக்குப் பெரியார் முக்கியம்.

**ஜோர்ஜ்:** எங்களுடைய எழுத்துக்களுக்கும் தமிழ்நாட்டு எழுத்துக்களுக்கும் இடையில் இருக்கும் பாரிய வித்தியாசம் என்னவென்றால், எங்களுடைய இலக்கிய முயற்சிகள் உயிர்ப்பயம் சார்ந்தவை. வாழ்க்கையே உயிரைத் தற்காத்துக் கொள்ளும் போராட்டமாகத் தான் இருந்தது. அது புலிகளை ஆதரித்தாலும் சரி அல்லது எதிர்த்திருந்தாலும் சரி. இராணுவத்தாலும் புலிகளாலும் துரத்தப்பட்டாலும் அப்படித்தானிருந்தது. அந்த உயிர்ப்பயத்தால் தோன்றும் இலக்கியத்தில் உண்மை இருக்கவேண்டும் என்றுதான் நாங்கள் யோசிக்கிறோம். தமிழ்நாட்டில் உங்களுக்கு இலக்கியம் ஒரு 'லக்ஸறி' விடயம். நீங்கள் வேறு அலுவல்கள் எல்லாம் பார்த்துக் கொண்டு மிகுதி நேரத்தில் இலக்கியம் படைப்பவர்கள். எங்களுடைய வாழ்வு அப்படியில்லை. நாங்கள் உயிரைத் தக்கவைக்க இங்கு வந்து கதை சொல்கிறோம். அகதிக் கோரிக்கைக்காகப் பொய் சொல்கிறோம். அப்படி எங்களின் உயிரைக் காப்பதற்காகத்தான் வாழ்வே ஓடிக் கொண்டிருக்கிறது. அதற்குள் எழுகின்ற இலக்கியத்தில் உண்மை இருக்க வேண்டும்.

“

இங்கே எது உண்மை என்பது தீபச்செல்வனுக்கும் தெரியும். நேற்று உங்களுடன் உரையாடிய சிவவதனி என்கிற அந்தப் பெண்ணுக்கும் தெரியும். ஆனால் அவர்களுக்கு அதனைப் பகிரங்கமாகப் பேசக்கூடாது என்பதுதான். அதுதான் எங்களுடைய சிக்கல். ஒரு 30, 35 வருடங்களுக்கு மேலாக பகிரங்கமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம், ஏனென்றால் உண்மை தெரியவேண்டும் என்பதற்காகத்தான். நாங்களும் பொய்யைச் சொல்லிக் கொண்டிருக்கலாம். முத்துலிங்கம் மாதிரி, செல்வம் மாதிரி இவை எதுவுமே நடவாதது போல் நோகாத இலக்கியம் செய்து கொண்டிருக்கலாம். பப்லோ நெருடாவைப்பற்றிக் கட்டுரை எழுதிக் கொண்டிருக்கலாம். யாருக்கும் எந்தச் சிக்கலும் இல்லை. சிக்கல் என்னவென்றால் நம்மவர்களினது வாழ்க்கையும் உயிரும் சம்பந்தப்பட்ட விடயங்கள் இவை. அதனைவிடவும் முக்கியமானது நமது சமூகத்தின் எதிர்காலம் பற்றியது.

**அ.ராமசாமி:** அதுசரிதான் , ஆனால் அந்த உண்மை எது? என்பதனைத் தான் அவர்கள் கேட்பார்கள்.

**ஜோர்ஜ்:** இல்லையில்லை. இங்கே எது உண்மை என்பது தீபச்செல்வனுக்கும் தெரியும். நேற்று உங்களுடன் உரையாடிய சிவவதனி என்கிற அந்தப் பெண்ணுக்கும் தெரியும். ஆனால் அவர்களுக்கு அதனைப் பகிரங்கமாகப் பேசக்கூடாது என்பதுதான். அதுதான் எங்களுடைய சிக்கல். ஒரு 30, 35 வருடங்களுக்கு மேலாக பகிரங்கமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம், ஏனென்றால் உண்மை தெரியவேண்டும் என்பதற்காகத்தான். நாங்களும் பொய்யைச் சொல்லிக் கொண்டிருக்கலாம். முத்துலிங்கம் மாதிரி, செல்வம் மாதிரி இவை எதுவுமே நடவாதது போல் நோகாத இலக்கியம் செய்து கொண்டிருக்கலாம். பப்லோ நெருடாவைப்பற்றிக் கட்டுரை எழுதிக் கொண்டிருக்கலாம். யாருக்கும் எந்தச் சிக்கலும் இல்லை. சிக்கல் என்னவென்றால் நம்மவர்களினது வாழ்க்கையும் உயிரும் சம்பந்தப்பட்ட விடயங்கள் இவை. அதனைவிடவும் முக்கியமானது நமது சமூகத்தின் எதிர்காலம் பற்றியது. இன்றைக்குக் கூட இலங்கை அரசியலில் எந்தத் தீர்வுக்கும் வரமுடியாமல் இருப்பதற்கு ஒரே காரணம் இந்தப் புலி ஆதரவாளர்கள்தான். எந்தத் தீர்வு வந்தாலும் ஒரு சமஷ்டியோ அல்லது மாகாண சபையோ எது வந்தாலும் உடன வந்து 'எங்கட பொடியள் உயிரைக் கொடுத்தது இதுக்குத்தானோ' என்று சொல்லுவாங்கள். ஏனென்றால் இது இவங்களுக்குப் பிழைப்பு. இப்ப தீபச்செல்வன் வந்து கருணாகரனது கட்டுரையைத் தானே ரைப் செய்து வெளியிட்டு விட்ட பின்னால் கூட பகிரங்கமாக கருணாகரனைப் பார்த்துத் திட்ட முடிகிறதுதானே? இதுதான் சிக்கல். இவங்களிடம் யாழ்ப்பாணத்து நரேற்றிவ் ஒன்றிருக்கிறது. அதற்கு முரண்படாமல் இனிக்கக் கதை பேசிக்கொண்டு போகலாம் . இதைத்

தான் சோபாசக்தி செய்கிறார். இதைத்தான் தீபச்செல்வன் செய்கிறார். இதை நோக்கித்தான் நாங்கள் சண்டை பிடித்துக் கொண்டு இருக்கிறோம்.

**ஜோர்ஜ்:** இதையெல்லாம் தமிழ் நாட்டிலிருக்கும் நாங்கள் எல்லாம் சொல்லமுடியுமா என்று எனக்குத் தெரியவில்லை.

**கற்சுறா:** அப்படியில்லை. தமிழ்நாட்டில் இருப்பவர்கள் என்னமாதிரி நினைக்கிறார்கள் என்றால் இங்கிருந்து வந்து அங்கே கதை சொல்பவர்களை மட்டுமே நம்பிவிடுகிறார்கள். அதுதான் உண்மை என்று அதிகமானவர்கள் நம்புகிறார்கள். உங்களைப் போன்ற சிலர் இப்பொழுது பல விடயங்களைப் புரியத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால் கடந்த காலம் அப்படியிருக்கவில்லை. அண்மையில் நடந்த அண்ணா 100 புத்தகக் கண்காட்சியில் புலம்பெயர்ந்த சூழலிலருந்து பேச அழைக்கப்பட்ட சோபாசக்தியும் செல்வமும் தெய்வீகனும் என்ன பேசினார்கள் என்பதனைக் கவனித்தீர்கள் தானே? இதுதான் கடந்த காலம் முழுவதும் நிகழந்தது. இந்த வகைத் தற்குறிகளையே தமிழ் நாட்டவர்கள் நம்பினார்கள். ஆரம்பத்தில் சேரனும் ஜெயபாலனும் மெல்ல மெல்லச் செய்த விடயங்களை இவர்கள் வேகமாகச் செய்கிறார்கள். இந்தப் பாதிப்பினை நிவர்த்தி செய்ய தமிழ் நாட்டவர்களுக்கு இன்னும் நீண்ட காலம் தேவை. அங்கேயுள்ள பதிப்பகத்தைச் சேர்ந்தவர்கள், தமக்கு இவர்கள் தரும் வியாபாரத்திற்காக இவர்களை முன்வைத்துப் படம் காட்டுகிறார்கள். ஆனால் அது உண்மையில்லை என்று அறிந்து கொள்ளத் தமிழ் நாட்டவர்கள் அவர்களைத் தாண்டிப் போக வேண்டும். ஆனால் அதுவும் தமிழ் நாட்டில் நடைபெறுவதில்லை. நாங்கள் இவர்கள் மீது கோபப்படுகிறோம் என்றால் இந்த விதத் தற்குறித்தனச் செயற்பாட்டிற்காகவே மட்டுந்தான். மற்றப்படி இவர்கள் மீது எமக்கு எந்தத் தனிப்பட்ட முரண்பாடும் கிடையாது.

தமிழ்நாட்டில் இருப்பவர்கள் என்னமாதிரி நினைக்கிறார்கள் என்றால் இங்கிருந்து வந்து அங்கே கதை சொல்பவர்களை மட்டுமே நம்பிவிடுகிறார்கள். அதுதான் உண்மை என்று அதிகமானவர்கள் நம்புகிறார்கள். உங்களைப் போன்ற சிலர் இப்பொழுது பல விடயங்களைப் புரியத் தொடங்கியிருக்கிறார்கள்.

ஆனால் கடந்த காலம் அப்படியிருக்கவில்லை. அண்மையில் நடந்த அண்ணா 100 புத்தகக் கண்காட்சியில் புலம்பெயர்ந்த சூழலிலருந்து பேச அழைக்கப்பட்ட சோபாசக்தியும் செல்வமும் தெய்வீகனும் என்ன பேசினார்கள் என்பதனைக் கவனித்தீர்கள் தானே? இதுதான் கடந்த காலம் முழுவதும் நிகழந்தது. இந்த வகைத் தற்குறிகளையே தமிழ் நாட்டவர்கள் நம்பினார்கள்.

ஆரம்பத்தில் சேரனும் ஜெயபாலனும் மெல்ல மெல்லச் செய்த விடயங்களை இவர்கள் வேகமாகச் செய்கிறார்கள்.

**அ.ராமசாமி:** அது புரிகிறது எனக்கு.

**ஜோர்ஜ்:** இலங்கைத் தமிழர்களின் வாசிப்பு பெரும்பாலும் தமிழ்நாட்டு வணிக வார இதழ்கள் சார்ந்தது தான். நாங்களும் அதற்குள்ளால் தான் வந்தோம். அவற்றில் எழுதியவர்களை வாசித்ததன் மூலமாகத் தான் இலக்கியம் பற்றிய எங்கள் பார்வை விரிவடைந்தது. அதைப் பற்றிய தேடல் தான் எங்களை சிற்றிதழ்களையும், பொதுவெளிக்கு அப்பாற்பட்ட எழுத்துக்களையும் வாசிக்க வைத்தது. தமிழ்நாட்டு நடிகைகளைக் கூட்டி வந்து கலை வளர்த்து பணம் சம்பாதித்த வெளிநாடுகளில் தங்கள் பணத்தைச் செலவழித்து சாரு நிவேதிதாவைக் கூட்டி வந்து அல்லல்பட்டவர்கள் இருக்கிறார்கள்.

அந்தச் சிற்றிதழ்களோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டவர்கள், எழுதியவர்கள் எல்லாம் இருக்கிறார்கள்.

எனக்குக் கூட புதிய கலாசாரம், புதிய கோடாங்கி எல்லாம் முன்பு தாயகம் வெளியிட்ட காலங்களில் அனுப்பிக் கொண்டிருந்தார்கள். ஆனால், சாதாரண தமிழ்நாட்டு வாசகர்களை விடுவோம். இலக்கியத்தில் ஆர்வம் கொண்டவர்கள் இலங்கை இலக்கியம் பற்றிக் கொண்டிருக்கிற எண்ணப்பாடு என்ன? இது முழுக்க முழுக்க தங்கள் முன்னால் கடை விரிக்கப்பட்டவற்றை மட்டும் தெரிந்து கொண்டதாகத் தானே இருக்கிறது? எவருக்கும் தேடல் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை.

ஒரு காலத்தில் கைலாசபதி, சிவத்தம்பி, டானியல், எஸ்.பொ, டொமினிக் ஜீவா என்று அறிந்தவர்கள் எல்லாம் யுத்தம் முடிந்த பின்னால் தான் ஈழ இலக்கியம், புலம் பெயர் இலக்கியம் என்று அறிந்தார்களே அன்றி, யுத்தம் காரணமாக வெளியேறியவர்கள் யுத்தம் நடந்து கொண்டிருந்த இடைப்பட்ட காலத்தில் புலம் பெயர் நாடுகளில் நடத்திய இலக்கிய இயக்கம் பற்றி அறிந்தவர்களாகத் தெரியவில்லை.

இந்த நாடுகளில் நடந்த இலக்கியச் சந்திப்புகள், வெளிவந்த சிற்றிதழ்கள் பற்றி தமிழ்நாட்டில் எங்கும் பேசப்பட்டதாக நான் காணவில்லை.

இப்படி, தமிழ்நாட்டார் அறிந்தவைகள் கூட தேடலால் வந்ததாக இல்லாமல், தமிழ்நாட்டு அங்கீகாரத்தைத் தேடி, விஸ்கி, விருது மாதிரி இலவச இணைப்புகளோடு வந்து தரப்பட்டதை அறிந்ததால் தான் வந்திருக்கிறது.

ஜெயமோகனுக்குக் கூட, மேற்சொன்ன இடதுசாரிகளின் எதிர்ப்புறத்தில் இருந்த தளையசிங்கம் போன்றவர்களை மட்டும் தான் தெரிந்திருக்கிறது. இவரைப் போல, தங்களுக்குத் தரப்படும் தானங்களை வைத்துத்தான் அங்குள்ளவர்களுக்கு ஈழ, புலம் பெயர் இலக்கியம் பற்றிய மதிப்பீடு இருக்கிறது. புனித யுத்தம் என்று இவர்கள் கொண்டாடிய அதே யுத்தம் ஏற்படுத்திய அழிப்பையும் இழப்பையும் சொல்லி அழுது புலம்பி, பெயர் வாங்க முனைவோரை ஈழ இலக்கியத்தின் அடையாளமாகக்

கொண்டாடுகிறவர்கள், புலிகள் நடத்திய இந்த யுத்தத்திற்கு எதிராகவும், அது ஏற்படுத்தப் போகிற அழிவையும் எதிர்வு கூறிய குரல்களை அடையாளம் காண முடியாமல் போனதற்கான காரணம் என்ன?

இதை எல்லாம் நான் கேள்வியாக இல்லாமல், குற்றச்சாட்டாகத்தான் சொல்கிறேன்.

இப்போது நீங்கள் செய்கிற அளவுக்கு யாரும் செய்வதில்லைத் தான். ஆனாலும் குறை நினைக்கக் கூடாது. உங்களையும் நான் குற்றம் சாட்ட வேண்டியிருக்கிறது. அ. முத்துலிங்கத்தை மூத்த புலம் பெயர் எழுத்தாளர் என்று வகைப்படுத்துவது குறித்து. கிரிதரன் அ.முத்துலிங்கம் எப்போது வெளிநாடுகளில் இருந்து எழுதத் தொடங்கினார் என்பது பற்றி உங்கள் பதிவு குறித்து ஒரு பதிவு போட்டிருந்தார்.

தமிழ்நாட்டில் ஈழ, புலம் பெயர் இலக்கியம் என்றால், ‘எல்லாம் நாங்கள் தான்’ என்ற இந்த மூத்த முன்னோடிகள் ஓடி வந்து சொன்னதை மட்டும் வைத்துக் கொண்டு சொல்கிற, இந்தத் தேடல் இல்லாத முடிவுகளுக்கு என்ன நியாயத்தைச் சொல்லப் போகிறீர்கள்?

**அ.ராமசாமி:** ஈழத்தமிழ் இலக்கியவாதிகளுக்கும் தமிழ் இலக்கிய வாதிகளுக்குமான உறவும் ஊடாட்டமும் பற்றிப் பேசும் அளவுக்கு விரிவான தரவுகள் என்னிடம் இருப்பதாக நினைக்கவில்லை ஆனால் மாணவப்பருவம் தொடங்கி எனது வாசிப்புக்குள் கவனத்துக்குள் வந்த தரவுகளைக் கொண்டே சிலவற்றைச் சொல்கிறேன். ஈழம், இன்னொரு நாட்டுக்குள் இருக்கும் பரப்பு என்றாலும், பண்பாட்டு நிலையிலும் தமிழ் வியாபாரத்திற்கான நுகர்வு நிலையிலும் வேறு ஒரு பரப்பாக இருக்கவில்லை. தமிழ்நாட்டுக்குள் இருக்கும் ஒரு பகுதி போலவே கருதப்பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் வெவ்வேறு அடையாளங்கள் கொண்ட மண்டலங்கள் இருப்பது போல ஈழமும் ஒரு மண்டலம் என்றே நினைத்திருக்கிறார்கள். காவிரிக்கரை, தாமிரபரணிக்கரை,

**இந்திய விடுதலைக்குப் பின்னர் உருவான சிற்றிதழ் மரபும், இடதுசாரி இலக்கிய மரபும் தமிழ்நாட்டில் உருவாக்கிய அதே பார்வைகளோடும் இலக்கிய நோக்கத்தோடு ஈழத்திலும் தாக்கம் செய்துள்ளன.**

**இடதுசாரி இலக்கியமரபு கல்விப்புல ஆய்வாளர்களின் வழி தமிழ்நாட்டில் உருவாக்கிய தாக்கம் பெருந்தாக்கம். மேற்கத்தியப் பகுப்பாய்வையும் அணுகுமுறைகள் சார்ந்த கலை இலக்கியப் பார்வையையும் தமிழ்க் கல்விப்புலத்திற்கு அறிமுகம் செய்தவர்கள் ஈழத்தின் பேராசிரியர்கள். அவர்களின் நூல்கள் பெரும்பாலும் தமிழ்நாட்டுப் பதிப்பகங்கள் வழியாகவே அச்சாகின. அவற்றிற்குக் கல்விப்புலத்தில் குறிப்பாகச் சமூகவியல் பார்வையில் கலை, இலக்கியங்களை ஆய்வு செய்யவேண்டுமென நினைத்த ஆய்வாளர்களுக்கு வழிகாட்டும் நூல்களாக இருந்தன.**

வைகைக்கரை, நொய்யல் ஆற்றுப் பகுதி என ஆற்றங்கரை அடையாளத் தோடு அம்மண்டலங்கள் இருந்துள்ளன. இம்மண்டல அடையாளங்களுக்குள்ளும் தனி அடையாளப்பகுதி இருப்பதாக நினைத்தபோது வட்டார இலக்கியத்தின் அடையாளங்களாக மாறி இருக்கின்றன.

தனிநாடு கோரிக்கைக்கு முன்பு ஈழத் தமிழ் இலக்கியங்களோடு தமிழ்நாட்டுக்கு நான்குவிதமான தொடர்புகள் இருந்துள்ளன. தமிழ்நாட்டுச் சைவ மடங்களோடு, ஈழத்தமிழ்ச் சைவப்புலவர்களுக்கும் கல்வியாளர்களுக்கும் தொடர்புகள் இருந்துள்ளன. சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தின் வழியாக வந்த நூல்களில் – தொகை நூல்களில் பங்கேற்ற புலவர்களில் ஈழத்தமிழர்களும் கல்வியாளர்களும் இருந்திருக்கிறார்கள். அதற்கிணையாகவும் கூடுதலாகவும் வணிக எழுத்தைப் பரப்பும் நோக்கம் கொண்ட ஆனந்தவிகடன், கலைமகள், கல்கி இதழ்கள் ஈழத்தையும் உள்ளடக்கிய தமிழ்நிலத்தைத் தங்களின் வியாபாரப்பரப்பாகவே கருதின. அவ்வப்போது பயணக்கட்டுரைகள், கோயில்களை அடையாளப்படுத்தும் பக்திக் கட்டுரைகள், ஆளுமைகள் என ஈழத்தமிழ்ப்பரப்புக்கு இடமளித்து உள்ளன.

இதே தன்மையைத் தமிழ் வணிக சினிமாவின் வியாபாரத்திலும் பார்க்க முடியும். தமிழ்நாட்டில் வெளியாகும் சினிமாக்கள் அங்கும் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் பரவலாக அறிமுகம் பெற்ற நாயக நடிகர்களும் நடிகைகளும் திரைப்பாடல்கள் சார்ந்து இசையமைப்பாளர்களும் பாடகர்களும் அதிக அளவு எண்ணிக்கையில் ரசிகர்களோடு இருந்திருக்கிறார்கள். இந்திய விடுதலைக்குப் பின்னர் உருவான சிற்றிதழ் மரபும், இடதுசாரி இலக்கிய மரபும் தமிழ்நாட்டில் உருவாக்கிய அதே பார்வைகளோடும் இலக்கிய நோக்கத்தோடு ஈழத்திலும் தாக்கம் செய்துள்ளன. இடதுசாரி இலக்கியமரபு கல்விப்புல ஆய்வாளர்களின் வழி தமிழ்நாட்டில் உருவாக்கிய தாக்கம் பெருந்தாக்கம். மேற்கத்தியப் பகுப்பாய்வையும் அணுகுமுறைகள் சார்ந்த கலை இலக்கியப் பார்வையையும் தமிழ்க் கல்விப்புலத்திற்கு அறிமுகம் செய்தவர்கள் ஈழத்தின் பேராசிரியர்கள். அவர்களின் நூல்கள் பெரும்பாலும் தமிழ்நாட்டுப் பதிப்பகங்கள் வழியாகவே அச்சாகின. அவற்றிற்குக் கல்விப்புலத்தில் - குறிப்பாகச் சமூகவியல் பார்வையில் கலை, இலக்கியங்களை ஆய்வு செய்யவேண்டுமென நினைத்த ஆய்வாளர்களுக்கு - வழிகாட்டும் நூல்களாக இருந்தன. ரஷ்யச் சார்புப் பார்வை, சீனச்சார்புப் போக்கு என வேறுபாடுகள் இருந்தபோதிலும் கலை, இலக்கியப்பார்வையில் ஒருவிதமான இணைவுப்பார்வையை இலங்கையின் விமரிசகர்கள் வெளிப்படுத்தினார்கள். தமிழ் நாட்டில் சீனச்சார்புப் பார்வை கொண்டவர்கள் கல்விப்புலத்தில் குறைவு. எனது மாணவப்பருவத்தில் தாமரை, ஆராய்ச்சி, செம்மலர்

போன்ற இதழ்களில் வாசித்த ஈழ எழுத்துகளைக் கொண்டு இதனைச் சொல்கிறேன். இந்தியாவில் சீனச்சார்பு கட்சியாக அறியப்பட்ட இடது கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியும் அதன் கலை, இலக்கியவாதிகளும் ஈழத்தோடு தொடர்புகள் இல்லாதவர்களாகவே இருந்தார்கள். அதன் தொடர்ச்சியைப் போராட்ட காலத்தில் போர்க்காலத்தில் வெளிப்பட்ட ஒவ்வாமைத் தன்மையோடு இணைத்துப் பார்க்கமுடியும். அவர்கள் தேடிப்படிக்கவும் இல்லை.

தங்கள் இதழ்களில் எழுதும் வாய்ப்புகளையும் உருவாக்கவில்லை. அதற்கு மாறாக வலது கம்யூனிஸ்ட் கட்சியின் இதழ்கள் இலங்கைத் தமிழ் எழுத்துகளுக்கு இடமளித்துள்ளன. தாமரையில் கதைகளும் கட்டுரைகளும் வந்துள்ளதைக் கவனித்திருக்கிறேன். குறிப்பாக ஈழத்தமிழ்ப் பகுதிக்கிணையாக மலையக எழுத்துகளுக்கு வாய்ப்பளித்துள்ளன. இலங்கை யிலிருந்து வரும் திறனாய்வாளர்களை - எழுத்தாளர்களை வரவேற்று கூட்டம் நடத்தி, உரையாடி அனுப்பிவைத்த பதிவுகளை வாசித்திருக்கிறேன். இடதுசாரிப் பார்வைக்கு எதிராக இருந்தவர்களுக்குத் தமிழ்நாட்டில் நண்பராக - சந்திக்கக் கூடியவராக இருந்தவர் சுந்தர ராமசாமி. மு.தளையசிங்கம் போன்றவர்கள் சு. ரா. வழியாகவே தமிழ்நாட்டில் விவாதிக்கப் படுகிறவர்களாக ஆனார்கள். சுந்தர ராமசாமியை ஆசானாக நினைக்கும் தமிழ் நாட்டுத் தமிழ் எழுத்தாளர்கள் - ஜெயமோகன் வகையறாக்கள் அவரது பரிந்துரை எழுத்துகளையே முன்னர் வாசித்தார்கள்.

இதற்கு இடையில் பத்மநாப அய்யர் ஈழத்தின் அனைத்துத் தரப்பையும் தமிழ்நாட்டிற்கு அறிமுகம் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் பயணம் செய்தார் எழுத்தாளர்களைச் சந்தித்தார் பதிப்பகங்களை நாடினார் என்பதைக் கவனித்திருக்கிறேன். எனது ஆசிரியர்களான தி.சு. நடராசன், சி.கனகசபாபதி போன்றவர்களைச் சந்திக்க மதுரைப் பல்கலைக்கழகம் வந்தவரை நானும் சந்தித்திருக்கிறேன். அவரது முயற்சியால் முதலில் க்ரியாவும் பின்னர் காலச்சுவடுவும் ஈழத்தமிழ் இலக்கியங்களை அச்சிட்டுத் தமிழ்நாட்டுக்குள் அறிமுகம் செய்தன. அதே காலகட்ட த்தில் சென்னை புக்ஹவுஸ் வெளியீடுகளில் இலங்கைத் தமிழ் எழுத்துகளும் இருந்தன. தீவிர எழுத்துக்களுக்கான இத்தொடர்புகளைத் தலைகீழாகப் புரட்டிப் போட்ட நிகழ்வாக வெலிக்கடைச் சிறைத் தாக்குதல் இருந்தது. அத்தாக்குதல் பரபரப்பு நிகழ்வாக செய்தியாகத் தமிழ்நாட்டுத் தினசரிகளுக்கும் வார இதழ்களுக்கும் மாறின. குட்டிமணி, தங்கதுரை, ஜெகன் போன்ற பெயர்கள் வழியாக ஆயுதப்போராட்டம் என்பது தமிழ்நாட்டுக்கு அறிமுகம் ஆயின. அதன் பின்பு ஈழம், ஈழத்தமிழர், ஈழத்தமிழ் இலக்கியங்கள் என்பன போர்க்களப் பகுதியாக போராளிகளாக - போர்க்களக் கவிதைகளாக, கதைகளாக மாறிப்போயின. தமிழர்களுக்கென ஒரு தனிநாடு என்ற லட்சியத்தைக் கனவைப் பெரும்பத்திரிகைகள் வியாபாரப்பண்டமாக மாற்றித் தமிழ் வாசகப் பரப்புக்குள் ஊதிப் பெருக்கின. ஆயுதப்போராட்டம், கொரில்லா போர்முறை, தேசிய இனப்பிரச்சினை எனப் போராளிகளுக்கான நூல்களை உருவாக்கித் தரும் நோக்கத்தோடு தமிழ்நாட்டில் சில பதிப்பகங்கள் உருவாகின அச்சகங்கள் உருவாக்கப் பட்டன. அவற்றிற்கெல்லாம் இலங்கையின் போராளிக்குழுக்கள் நிதியுதவி செய்தார்கள் என்பது கேள்விப்பட்ட செய்திகள்.

திராவிட இயக்க ஆதரவாளர்களாகவும் இடதுசாரி ஆதரவாளர்களாகவும் இருந்த சில பதிப்பகங்கள் ஈழம் சார்ந்த எழுத்துகளை அச்சிட்டு விற்பனை செய்தன. ஈழப்போர்க்காலத்தில் – 1983-2009 காலகட்டத்தில் தமிழ்நாட்டில் அச்சிடப்பெற்ற நூல்களைத் தொகுத்துப் பார்த்தால் போர்க்கால இலக்கியங்கள் பெற்றிருந்த செல்வாக்கை சொல்ல முடியும். அவையெல்லாம் தொகுக்கப்பட வேண்டும். அப்படித் தொகுத்து வைத்திருக்கும் நூலகம் ஒன்றும் தமிழ்நாட்டில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் தனிநபர்கள் வசம் இப்போதும் இருக்கும். போர்க்கால இலக்கியங் களையும், போருக்குப் பிந்திய இலக்கியங்களையும் தமிழ்நாட்டுக்கு அறிமுகம் செய்து எழுதியவர்களாகச் சிலரது பெயர்களைச் சொல்லமுடியும். எழுத்தாக இல்லாமல் பேச்சாக அறிமுகம் செய்தவர்களாக அறிவுமதி, இன்குலாப் போன்ற கவிஞர்களின் பேச்சுகளில் ஈழத்தமிழ்க்கவிதைகள் இடம் பெற்றுக் கொண்டே இருந்ததைக் கேட்டிருக்கிறேன்.

கோவை ஞானியின் நிகழ் இதழும் வெளியீடுகளும் சில வகையானவற்றை அறிமுகம் செய்தன. சுந்தர ராமசாமி இருந்தவரை அவரது இலக்கியப் பார்வைக்கேற்ப அறிமுகக் குறிப்புகளையும் நேர்ப்பேச்சு உரையாடல்களையும் செய்து அறிமுகப்படுத்தினார். அவர் வழியாகவே ஜெயமோகனுக்குப் பல தொடர்புகள் ஏற்பட்டது. தமிழ்நாட்டில் தலித் இலக்கியம் தனி அடையாளம் பெற்ற நிலையில் முன்பே அறிமுகம் பெற்றிருந்த கே. டேனியல் திரும்பவும் அச்சில் கொண்டு வரப்பட்டார். பெரும்பாலான எழுத்துகளை அச்சிடும் தூண்டுதலை அ.மார்க்ஸ் மேற்கொண்டார். நான் பாண்டிச்

**சுந்தர ராமசாமி இருந்தவரை அவரது இலக்கியப் பார்வைக்கேற்ப அறிமுகக் குறிப்புகளையும் நேர்ப்பேச்சு உரையாடல்களையும் செய்து அறிமுகப்படுத்தினார். அவர் வழியாகவே ஜெயமோகனுக்குப் பல தொடர்புகள் ஏற்பட்டது. தமிழ்நாட்டில் தலித் இலக்கியம் தனி அடையாளம் பெற்ற நிலையில் முன்பே அறிமுகம் பெற்றிருந்த கே. டேனியல் திரும்பவும் அச்சில் கொண்டு வரப்பட்டார். பெரும்பாலான எழுத்துகளை அச்சிடும் தூண்டுதலை அ.மார்க்ஸ் மேற்கொண்டார்.**

சேரியில் இருந்தபோது நேரில் பார்த்த - கேட்ட வேலைகள் இவை.

1997 இல் புதுச்சேரி நாடகப்பள்ளியில் பார்த்த நிகழ்கலைப்பள்ளி விரிவுரையாளர் என்ற பணியை விட்டுவிட்டுத் தமிழ் இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியராகத் திருநெல்வேலிக்கு வந்தபோது, முழுவதும் சமகால இலக்கியத்தில் கவனம் செலுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு இருந்தேன். எல்லாத்தரப்பு எழுத்துகளையும் வாசித்து மாணவர்களுக்கு அறிமுகம் செய்யும் நோக்கம் இருந்தது.

நெல்லைக்கு வந்தவுடன் இரண்டாவது மாதத்தில் நான் நடத்திய கருத்தரங்கம் பின்னை நவீனத்துவம். தொடர்ந்து பெண்ணியம் குறித்து நடத்தினேன். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கெனத் தயாரிக் கப்பட்ட பாடத் திட்டத்தில் ஒவ்வொரு பருவத்திலும் ஒரு சமகால இலக்கியத்தாள்களை உருவாக்கினேன். கவிதை, நாடகம், நாவல்கள், சிறுகதைகள் எனச் சமகால இலக்கியவகைகள் கற்பிக்கப்பட்டன.

இந்த நான்கு தாள்களிலும் ஐந்தில் ஒரு அலகாக ஈழத்தமிழ் இலக்கியங்கள் இடம் பெற்றன. பெண்ணியத்தைத் தொடர்ந்து தலித்தியம், போரிலக்கியம் போன்றன குறித்துக் கருத்தரங்குகள் நடத்திட த்திட்டமிட்டிருந்தேன். ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தொ.பரமசிவன் தலைவர் ஆன தால் அவரது விருப்பங்கள் சார்ந்து கருத்தரங்குகள் திசைமாறின. திரும்பவும் எனது தலைமை ஏற்பட்ட போது ஈழத்தமிழ் இலக்கியங்கள், புலம்பெயர் இலக்கியங்கள் துறைக்குள் விவாதப்பொருள் களாக்கப்பட்டன. கனடாவில் யார்க் பல்கலைக்கழகக் கருத்தரங்களில் வாசிக்கப்பட்ட விரிவான கட்டுரைக்குப் பிறகு துறையின் ஆய்வுப் பொருண்மைகளில் போர்க்கால - புலம்பெயர் இலக்கியங்கள் மையமாக்கப்பட்டன.

முதலில் ஓராண்டு ஆய்வுப்படிப்பான எம்பில் பட்ட த்திற்குத் தனி ஆசிரியர்களின் எழுத்துகளை ஆய்வுப் பொருளாக்கினேன். ஷோபாசக்தி, சயந்தன், குணா கவியழகன், தமிழ்நதி போன்றவர்களை ஆய்வுக்கு எடுத்தார்கள். முத்துலிங்கம், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் வ.ந.கிரிதரன் போன்றவர்களை வாசித்திருந்தாலும் அவர்களை ஆய்வுக்குரிய எழுத்துகளை எழுதி யவர்களாக நான் நினைக்கவில்லை.

அதே நேரம் புலம்பெயர் எழுத்துக்களைத் தனியாக ஆய்வு செய்ய விரும்பிய மாணவர்களுக்கு வாசிக்க வேண்டியோர் பட்டியலில் இவர்களோடு கருணாகரமூர்த்தி, இளங்கோ, காலம் செல்வம் போன்றவர்களையும் அறிமுகப்படுத்தி இருக்கிறேன். துறையிலேயே இரண்டு பேர் முனைவர் பட்டங்களுக்கு ஈழத்தமிழ்– புலம்பெயர் எழுத்துகளை மையமிட்ட தலைப்புகளை எடுத்தார்கள். எனது கவனமும் வாசிப்பும் ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியரின் ஆர்வம் தான்.

சமகாலத்தமிழ் இலக்கியம் தமிழ்நாட்டைத் தாண்டி இலங்கையிலும் மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் எழுதப்படுகின்றன என்று நம்புபவன் நான். அதனைச் சொல்வதற்காகவே 2019 இல் உலகத்தமிழ் இலக்கிய வரைபடம் என்ற கருத்தரங்கினை – பன்னாட்டுக் கருத்தரங்கினை நடத்தினேன். அதில் பங்கேற்க இலங்கை, சிங்கப்பூர், மலேசியப் பல்கலைக் கழகங்களிலிருந்து ஆசிரியர்களும் ஆய்வாளர்களும் எழுத்தாளர்களும் வந்தார்கள். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தமிழ்த்துறையைப் போலவே சென்னையில் அரசு தலைமையில் தமிழ் இலக்கியத்துறையும், தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் அயலகத் தமிழ்த் துறையும் பங்களிப்பு செய்திருக்கின்றன. பொதுவாக ஒன்றை அறிமுகம் செய்வதிலும் விவாதப்படுத்துவதிலும் அவரவர் அரசியல் பார்வைகளும் சமூக நோக்கும் மட்டுமே இருக்கும் இருக்கவேண்டும் என எதிர்பார்க்கிறோம். ஆனால் தனிநபர்களுக்குத் தனக்கு என்ன கிடைக்கும் என்ற ஆதாயம் தேடும் நோக்கம் வந்துவிடும்போது குழப்பங்களும் வந்துவிடும்.

இலங்கைத் தமிழ் எழுத்துகளைத் தமிழ்நாட்டில் அறிமுகம் செய்த பதிப்பகங்கள். தனிநபர்கள் முழுமையும் தங்களின் கருத்தியல் நோக்கத்தோடு செயல்பட்டார்கள் என்று சொல்ல முடியாது. தமிழ்நாட்டு எழுத்துகளைப் பற்றிக் கறாராக விமரிசனம் செய்தவர்கள் பிறவற்றைப் பேசும்போது நீக்குப் போக்காகவே விமரிசிக்கிறார்கள்.

11 ஈழத்துக்கவிஞர்கள் தொகுப்பிலுள்ள கவிதைகளைத் தமிழ்நாட்டுக் கவிஞர்களிலிருந்து தொகுத்துத் தந்தால் அப்போதைய க்ரியா வெளியிட்டிருக்காது என்பது எனது கணிப்பு. காலச்சுவடு பதிப்பகமும் இதழும் வெளியிடும் புலம்பெயர் எழுத்துகளை ஒத்த தமிழ்நாட்டு எழுத்துகளை அச்சிடுவார்கள். புத்தகமாக்குவார்கள் என்று சொல்லமுடியாது. ஜெயமோகனின் கறாரான முன்வைப்புகளும் அப்படித்தான் இருக்கின்றன. தமிழ்நாட்டு இலக்கியத்துக்கு ஒரு இலக்கியப்பார்வை, அயல் தமிழ் எழுத்துகளுக்கு இன்னொரு பார்வை என்பது இருக்கவே செய்கிறது.

இதே நிலையை வெளியிலிருந்து வருகிறவர்களும் மேற்கொள்ளவே செய்கிறார்கள். எந்தப் பதிப்பகம் வழியாக – எந்த இலக்கியக்குழு வழியாகத் தமிழ்நாட்டுக்குள் அறிமுகம் ஆகவேண்டும் என்பதில் கவனமாக இருக்கிறார்கள். புலம்பெயர் எழுத்தாளர்கள் மட்டுமல்ல, மலேசிய எழுத்தாளர்கள், சிங்கப்பூர் எழுத்தாளர்கள் என அவரவர் எழுத்துகளுக்கான அங்கீகாரம்/ சந்தை போன்றவற்றில் கவனத்துடனேயே இருக்கிறார்கள். கொடுப்பதும் பெறுவதும் கருத்தாகவும் இலக்கியப் பார்வையாகவும் மட்டுமே இருக்கிறதா? பண்டமாக – விருதுகளாக – பொருளாக – பயணத்திட்டங்களாக இருக்கிறதா என்பதையெல்லாம் பேசிக் கொள்ளலாம். ஆனால் தடுத்து நிறுத்திவிட முடியாது என்றே நினைக்கிறேன். அ



# சொத்தெல்லாம் உனக்குத்தான்!

பூங்கோதை

'காந்தன், எடேய் மோன, இங்க ஓடி வாடா!' அம்மா வீரிட்டுக் கத்தியதைக் கேட்ட காந்தனுக்கு ஏற்கனவே இருந்த சினம் கடல் அலைகள் போல இன்னும் ஆர்ப்பரித்து மேல் எழுந்தது.

சினத்தின் உச்சியில் இருப்பதற்குக் காரணம் இருந்தது.

'என்னத்துக்கணை இப்பிடிக் கத்திறியள்?' அவன் சினந்தவாறே மேல் மாடியிலிருந்த தன் படுக்கை அறையிலிருந்து கீழே வந்தான்.

'இங்க பாரடா மோனை, இந்தக் கூத்தை.' அம்மா வாய் பிளந்தபடி, தன் தளர்ந்து போன கண்களை மிக அகல விரித்து, சாளரத்தினூடே தன் பார்வையை எறிந்திருந்தார்.

காந்தனும் அப்படி என்னதான் பிரளயம் ஏற்பட்டு விட்டது என வெளியே தாயின் பார்வையைப் போலவே தன் பார்வையை எறிந்தான்.

அங்கு அஷ்வதி ஒரு கருப்பு நிற, விலை உயர்ந்த கார் ஒன்றை மிக இலாகவமாக வெட்டி ஒடித்துத் திருப்பி வீட்டின் முன்னே நிறுத்திக் கொண்டிருந்தாள். அவர்கள் வீடு ஒரு சிறிய குடிமனைச் சந்தில் அமைந்திருந்தது. அவர்களது வீட்டிற்கு இடப்புறமும் வலப்புறமுமாக இவ்விரண்டு வீடுகள் மட்டுமாக ஒரு அரை வட்ட வடிவில் அந்தக் குடிமனை கட்டி எழுப்பப்பட்டிருந்தது. அங்கு வாழுகின்ற அயலவர்கள் அனைவரும் ஆங்கிலேயர்களாக இருந்ததில் இவர்களுக்கு சில பெரும் வசதிகள் இருந்தன. அவற்றில் ஒன்று அவர்கள் எவருக்கும் காந்தனுக்கும் அஷ்வதிக்கும் எப்படிப் பொருத்தமாயிற்று என்ற சந்தேகத்தை இவர்களிடம் அவர்கள் கேட்காமல் இருப்பது தான். ஒரு குட் மோர்னிங், குட் ஈவினிங் என்பதோடு இவர்கள் அவர்களோடு எதுவும் பேசப் போவதில்லை.

காந்தனும் இப்போது அவன் தாய் போலவே திறந்த வாயை மூடாதிருந்தான்.

இன்று காலையில், திருமணம் முடிந்த இந்த ஆறு மாதங்களின் பின், முதன் முறையாக அஷ்வதி, தன் கணவன் காந்தனுக்கோ அல்லது மாமியாருக்கோ எதுவும் சொல்லாது வீட்டிலிருந்து புறப்பட்டுப் போயிருந்தாள். அந்த அதிர்ச்சியும் சினமும் அடங்க முன்னரேயே இந்த சம்பவத்தைக் காந்தன் எதிர் பார்க்கவில்லை. அவனுக்குத் தாயைப் பார்க்கவே பிடிக்காது முகத்தைத் திருப்பியபடி தன் படுக்கை அறைக்குத் திரும்ப எத்தனித்தான்.

'இப்ப என்னத்துக்கு என்னோட மூஞ்சையை நீட்டிறாய்? நான் என்ன பிழை செய்தனான்? ஆருக்குத் தெரியும் இப்பிடி எல்லாம் கூத்தாடுவாள் எண்டு?'

அம்மா மூக்கைச் சிந்தலாமா என

யோசிக்கத் தொடங்க, அவன் அஷ்வதி வீட்டினுள்ளே வர முன் தன்னை அங்கிருந்து அகற்றும் நோக்கில் ஓடி மறைந்தான்.

அதன் பின் வந்த நாட்களில் அவர்கள் வீட்டில் அமைதியாக யுத்த மேகம் ஒன்று கருமையாய் சூல் கொள்ளத் தொடங்கியது.

'எங்க போறீங்கள்?'

'எங்க அடிக்கடி போய் வாறீங்கள்?'

'இண்டைக்கும் போறீங்களோ?'

'நானும் வரவோ?'

அவள் அடிக்கடி இப்படி எங்கு போகிறாள் என்பது தெரியாமல், இப்படிப் பலவிதமாகக் கேட்டும் அவள் பேசா மடந்தை ஆகியது அவனுக்கு வெறுப்பேத்தியது.

இது குறித்து யாருடனும் பேசவும் முடியவில்லை அவனுக்கு.

அம்மா மாத்திரம் தன் பங்கிற்கு அடிக்கடி, 'பிள்ளை, அஷ்வதி இந்த சொத்துகள் பத்துகள் எல்லாம் உனக்குத்தான்.' என்று கூறிய படி, தம் வீட்டில் இருக்கும் தளபாடங்கள், தொலைக்காட்சிப்பெட்டி, சமையல் அறைச் சாதனங்களையும் காட்டிக் கொண்டிருந்தார். அவற்றில் மயங்கி அவள் தம்முடன் பிரச்சனைகள் ஏதும் இல்லாமல் இருப்பாள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை அவருக்கு.

அவன் நண்பர்கள் அவனது திருமண நிச்சயதார்த்தம் செய்யப்பட்ட போது, தம் சந்தேகம் குறித்து அவனிடம் சொன்னதை அவன் கேட்டிருக்கலாமோ என மனம் அங்கலாய்க்கத் தொடங்கியது. என்னதான் நெருங்கிய நண்பர்களாக இருந்தாலும் பொறாமை, ஆதங்கம் என ஏதோ ஒன்று இருந்திருப்பதால் தான் அவர்கள் அவ்வாறு கூறுகிறார்கள் என அவன் அவர்கள் சொல்வதை எல்லாம் நிராகரித்திருந்தான்.

•••

காந்தன் அப்பா, அம்மாவுடன் இலண்டன் வந்த போது அவனுக்கு 23 வயதாகியிருந்தது. ஊரில் அப்பாவுடன் கடையில் வேலை பார்த்தவனுக்கு மேற்கொண்டு படித்துத் தான் உழைக்க வேண்டும் என்ற ஆசையும் வரவில்லை. அதற்கான சூழலும் கிடைக்கவில்லை.

அம்மா மிகப் பழைய காலத்துப் பெண் மட்டுமல்ல, அவர் அந்தக் காலத்திலேயே வாழ்ந்து கொண்டும் இருந்தார். அவனுடைய தந்தை காலமாகிய பின் வெளியே போய் வருவதும் நின்று போய் விட்டாலும், வீட்டில் இருந்தபடியே தொலைக்காட்சி நிகழ்வுகள், நாடகங்கள் எனப் பார்த்துத் தன்னை அதில் வந்து போகும் மாமியார்களில் ஒருவராக மாற்றியிருந்தார். அவனுக்கு ஒரு மனைவி அமையும் போது தான் எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதான ஆசைகள் கொடி கட்டிப் பறந்த போது தான், அவரது சகோதரி மூலமாக ஒரு திருமணத் தரகர் காந்தனின் அம்மாவின் கண்களில் தென்பட்டார்.

'காந்தன், தரகர் நாலு வடிவான பொம்பிளைப் பிள்ளைகளின்ர படங்களைக் கொண்டு வந்து தந்திட்டுப் போயிருக்கிறார். உனக்கு எது பிடிச்சுதோ சொல்லு. நான் மிச்சத்தைப் பேசி முடிச்சுப் போடுவன்.'

அம்மா இப்படி பலவிதமாக ஆரம்பித்த போதெல்லாம் இப்போதைக்கு என்ன அவசரம் என்று தட்டிக் கழித்து வந்தான் காந்தன். இன்னமும் உழைக்க, நண்பர்களுடன் பொழுதைக் கழிக்க, எந்தப் பொறுப்புகளும் இல்லாமல் ஊர் சுற்ற என அவனுக்கு நிறைய வேலைகள் இருந்தன.

நாட்கள், வாரங்கள், மாதங்கள் நகர்ந்த பின் ஒரு நாள் தன் கடையிலிருந்து வீடு வந்தவனுக்கு மேசை மேலிருந்த ஒரு புகைப்படம் கண்ணைச் சிமிட்டியது. காந்தனுக்கு ஆச்சர்யம் தாங்க முடியவில்லை. அத்தனை அழகும், இளமையும், நளினமும், நாகரீகமுமான தோற்றத்தில் ஒரு பெண்ணின் படம் எதற்காக இங்கு காத்திருக்கிறது என யோசித்து குழம்ப முன்னரே அவன் அம்மா அங்கு தென்பட்டார்.

'காந்தன், இங்க பார் மோன, இதைவிட நல்லதொரு பொம்பிளை இனி உனக்குக் கிடைக்க மாட்டாள். பிள்ளை ஃபிரான்சில தான் பிறந்து, வளர்ந்து, படிச்சதெல்லாம். தாய் தகப்பனின்ர கையை விட்டு இறங்காமல் வளர்த்திருக்கினமாம். ஒரு வார்த்தை எதிர்த்துக் கதைக்காளாம். '

அம்மா சொல்லி முடிக்க முதலே அவனுக்கு அந்தப் பெண்ணை அப்படிப் பிடித்துப் போயிற்று.

'பிள்ளைக்கு நல்லதொரு பெயரும் எல்லே, அஷ்வதி.' அம்மா மெதுவாகக் காதில் போட்டு வைத்தாள்.

அதன் பின் வந்த நாட்களில் அவனுக்கு தன்னுடைய அதிஸ்டத்தை நினைத்து நினைத்து மனம் குதூகலித்தது. இலங்கையில் பிறந்து வளர்ந்து, அப்பாவுடன் இங்கிலாந்தில் ஒரு வியாபாரத்தை ஆரம்பித்து, அப்பா இறந்த பின் அந்த வியாபாரத்தை நடத்திக் கொண்டிருக்கும் தனக்கு, ஃபிரான்சில் பிறந்து வளர்ந்து, அங்கு உயர்கல்வியை முடித்த ஒரு பெண், தமிழும் ஃபிரெஞ்சும் ஒரு சேரப் பேசக் கூடியவள் தன்னை விரும்பி, தன்னிடம் தன் படத்தை அனுப்ப சம்மதித்திருக்கிறாள் என்பது அவனுக்கு ஆனந்தத்தைத் தந்ததில் வியப்பில்லை.

'அம்மா, நான் அஷ்வதியுடன் பேசிப் பார்க்க வேணும், எப்ப பேசலாம் எண்டு கேட்டுச் சொல்லுங்கோ.'

அவனுடைய கேள்விகளுக்கெல்லாம் தயங்கித் தயங்கி ஒரு வித கொஞ்சும் தமிழில் அஷ்வதி பேசியது அவனுக்கு அவள் மேல் ஏற்பட்ட திடீர்க் காதலை தீராக்காதலாக்கியது. அவள் அதிகம் பேசினாள் இல்லை. தொலைபேசியில் பார்த்தும், பாராமலும் பேசிப் பார்த்தாயிற்று. பெற்றோருடைய கட்டாயத்தின் பேரில் திருமணம் செய்யச் சம்மதித்தவள் போல் இல்லை.

இருந்தாலும் காந்தனுடைய நெருங்கிய நண்பர்கள் இருவருக்கு ஏதோ ஒரு சந்தேகம் இருப்பதாக அவனுக்கு அடிக்கடி கூறிக் கொண்டிருந்தார்கள்.

'என்னடா, மச்சான் நீ ஏதோ ஊரில தட்டுத் தடுமாறி பத்தாம் வகுப்பை பாஸ் பண்ணியிருக்கிறாய், இங்க வந்து சேரேக்க உனக்கு 23 வயசாச்சுது. பிறகு ஒண்டும் படிக்க வாய்ப்பில்லாமல் போச்சு. அதைப் பற்றி நாங்கள் இனி ஒண்டும் செய்யேலாது. ஆனால் இந்தப் பிள்ளை தேசம் விட்டு தேசம் வரச் சம்மதிச்சிருக்கு. வடிவாய்க் கேட்டுப் பார்த்தனீயோ?' அவன் நண்பன் ராஜன் கேட்டான்.

'அதெல்லாம் ஒரு தரத்திற்கு பத்துத் தரம் கேட்டிட்டன். தன்னை ஒருத்தரும் கட்டாயப்படுத்தேல்ல. ஏதோ உங்கட படத்தைப் பார்த்தவுடன எனக்கும் உங்களில விருப்பம் வந்திட்டுது எண்டிட்டா.' ஏகப் பெருமையுடன் காந்தன் சொல்லிக் கொண்டான்.

திருமணம் கூட பெரும் தடல் புடலாக எல்லாம் வேண்டாம், மிக எளிமையாக முடிப்பது போதும் என்பது மட்டும் அஷ்வதியின் ஒரே ஒரு கோரிக்கையாக இருந்ததில் காந்தன் அதைத் தாய்க்கும் தெரியப்படுத்திய போது அதை அவர் பெரிதாக விரும்பவில்லை.

'எனக்குக் கன சொந்தக்காரர் தூரத்தூர இருக்கினம், அவை எல்லாரையும் உன்ர கலியாண வீட்டோட கூப்பிடுவம், சந்திப்பம் என்று இருக்க இப்ப இப்பிடிச் சொல்லிபோட்டியள்.' காந்தனின் தாய் அலுத்துக் கொண்டாள்.

'அவை அந்தக் காசை அப்பிடியே என்னட்டைத் தாறன் எண்டெல்லே சொல்லிப் போட்டினம்.' காந்தன் சொன்னவுடன் சிறிது சமாதானமாகி விட்டார் அம்மா.

அம்மாவும் காந்தனும் எதிர்பாராத அளவில் ஒரு பெரும் தொகை அவர்களுக்கு வந்து சேர்ந்ததில் அவர்கள் வாய் அடைத்துப் போனார்கள். காந்தன் அந்தத் தொகையை மாத்திரம் தன் நண்பர்களுக்குக் கூடத் தெரிவிக்க விரும்பவில்லை. அஷ்வதியின் பெற்றோர் அவ்வளவு தூ ரம் வசதியான வேலையில் இருப்பவர்களும் அல்ல.

'அவையள் அங்க ஏதும் சீட்டு போட்டிருப்பினம் மோன. எந்தக் காலம் வந்தவை?' காந்தனின் அம்மா தன் அறிவுக்கு எட்டியதை மகனுக்கும் கூறி விசயத்தை அப்படியே மறைத்து விட்டார்.

திருமணம் நல்லபடி நெருங்கிய உறவினர்களுடன் முடிந்தது.

அஷ்வதி மிக மிக அமைதியாக வளைய வந்தாள். கேட்டதற்கு மட்டும் பதில் தருவாள். முதலில் அவளுடைய அமைதியை அடக்கம் என மட்டும் எண்ணிய காந்தனுக்கு அதன் பின் வந்த நாட்கள் அந்த எண்ணத்தை மாற்றியமைத்தது. அவள் அடிக்கடி ஃபிரெஞ்சில் தொலைபேசலானாள். கேட்ட போது அது தன்னுடைய நட்பு வட்டாரம் என்பதோடு பேச்சை முடித்துக் கொண்டாள்.

ஃபிரெண்ட்ஸோடு என்ன பேசுகிறாய் என்று கேட்க அவனுக்கு வெட்கமாக இருந்தது மட்டுமன்றி ஐரோப்பிய நாடொன்றில் பிறந்து வளர்ந்த பெண்ணொருத்தி தன்னைப் பற்றி என்ன நினைப்பாள் என்ற யோசனையும் கூடவே வந்து போனதில் முகத்தை மட்டும் தூக்கி வைத்துக் கொண்டான்.

அவள் தொலைபேசியில் தன் நட்புகளுடன் ஃபிரெஞ்சில் பேசுகின்ற போது தான் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டால் மெல்ல மெல்ல அவள் தன் உணர்வுகளைப் புரிந்து கொள்வாள் எனக் காந்தன் தனது வாழ்கை வட்டத்திற்குள் நின்றபடியே நினைத்தது தான் பெரும் முட்டாள் தனமாகிற்று. அஷ்வதி தனக்கு ஃபோன் வருகின்ற போதெல்லாம் அவனைச் சட்டை செய்யாது அந்த தொலைபேசியில் மூழ்கிப் போனாள்.

தொலைபேசியில் கேட்கும் குரல்கள் சிலவேளைகளில் ஆண் குரல்களாகவும் சில வேளைகளில் பெண் குரல்களாகவும் இருந்தன. மொழி புரியாவிட்டாலும், அஷ்வதி கூறுவதுபோல அவை தோழமையோடு பேசுவது போலவும் அவனுக்குத் தெரியவில்லை. கட்டளைகள் போலவே அவன் காதிற்குக் கேட்டது. அவள் பேசுவதை விடவும் அவளோடு பேசுபவர்களுடைய உரையாடல்களே அதிகமாக இருந்தன. அவனுக்கும் அம்மாவிற்கும் பிடிக்காத விடயமாக அது வளரத் தொடங்கியது.

காந்தனுக்கு இது பெரிய அவஸ்தையாகப் போயிற்று.

நண்பர்களிடம் இது குறித்துப் பேசுவதென்பது பெரும் அவமானமாகி விடும் என காந்தன் அஞ்சினான். ஆனால் இரண்டு மாதங்கள் இப்படியான அவஸ்தையில் கழிந்ததும், மனத்தைத் தேற்றிக் கொண்டு நண்பன் ராஜனிடம் மெதுவாக தன் சஞ்சலத்தைக் கொட்டித் தீர்த்தான்.

'நான் உன்ர முகத்தைப் பார்த்தே யோசிச்சனான். ஏதோ சரியாய் இல்லை எண்டதை. நீயாகச் சொல்லுற வரைக்கும் கேட்கப் படாது எண்டு இருந்தனான். நீ ஒண்டுக்கும் யோசிக்காதை. அவள் ஒரு வித்தியாசமான பிள்ளை எண்டதை உன்ர கலியாணத்திற்குப் பிறகு பல தடவைகள் அவளைப் பார்க்கிற நேரம் எல்லாம் யோசிச்சனான்.' ராஜன் மெதுவாகக் கூறினான்.

'அவள் இப்ப அடிக்கடி காரில ஏறி சும்மா ஒரு வெட்டு வெட்டித் திருப்பிக் கொண்டு ஓடேக்க பார்க்கத் தான் இன்னும் பயமாயிருக்கடா. இவள் கார் ஓடுவாள் எண்டெதே எனக்குத் தெரியாது.' காந்தன் அப்பாவியாய்க் கூறினான்.

'ஏன் நீ உதெல்லாம் கேட்காமலே கலியாணம் கட்டினனீ?'

'ஏன்டா இதென்ன வேலை இன்டெர்வியூவே, கார் ஓடிவியோ எண்டு கேட்க? ஏதோ அப்பன்காரன் வாய்க்கு வாய் நான் தான் பிள்ளையை எல்லா இடங்களுக்கும் கொண்டு திரியிறானான் எண்டு சொன்னதைப் பார்த்து ஏதோ தாய் தகப்பன்ர காலுக்க நிண்ட பிள்ளை எண்டெல்லே நினைச்சிட்டன்.' காந்தன் தான் அஷ்வதியின் அழகிலும் நாகரிகத்திலும் மயங்கியதை வெளிக்காட்டாமல் பேசினான்.

•••

உயர்கல்விக்காக பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பம் செய்த போதே அஷ்வதியின் பெற்றோர்களுக்கும் அவளுக்கும் இடையே பெரும் இடைவெளி ஒன்று விழுந்து இரண்டு வருடங்க ளாகியிருந்தன. அவளுடைய சேர்க்கைகளும், அவளுடைய போக்குவரத்துகளும் அவள் பெற்றோருக்கு பெரும் துன்பமாகின.

'அஷ்வதி, இப்ப நாலு மணிக்கெல்லாம் இருட்டிப் போகுது. எத்தினை மணிக்கு வீட்டை வருவாய்?'

அவள் தந்தைக்குத் தெரியும் அவள் அதற்குப் பதில் எல்லாம் தரமாட்டாள் என்பது. இருந்தும் அவளைக் குழந்தையில் இருந்து வளர்த்தவர். அவர்களுக்கு ஒரே செல்ல மகள், மனசு கேட்காமல் அவ்வப்போது ஏதாவது கேட்டுக் கொள்ளுவார்.

அவள் எந்தப் பதிலும் தராமல் வீட்டை விட்டு இறங்குவாள். பாதி சாமத்தில் கதவு திறக்கும் ஓசை கேட்டு அவர் விழித்தெழும் போதெல்லாம் அவர் மகள் ஒரு இயந்திரம் போன்று வீட்டினுள்ளே நடந்து வருவாள். அவள் சாப்பிடும் விதத்தைப் பார்த்துப் பயந்து போய் அவர் சத்தம் எதுவும் போடாது, தன் அறைக்குப் போய் விடுவார். அவள் தாய்க்கும் தந்தைக்கும் இவளுடைய வெளி வாழ்வில் ஆதிக்கம் செலுத்தும் விடயங்கள் பற்றி அறிந்து கொள்ளும் அளவுக்கு சிந்தனை துணை புரியவில்லை.

இப்படியான ஒரு சூழலில் தான் திடீரென ஒரு திருமணத் தரகர் ஒருவர் வீடு தேடி வந்தார்.

'இலண்டனில மாப்பிள்ளை. ஆனால் பெரிசாய்த் தூரம் இல்லை. டோவர் எண்ட இடத்திலயிருந்து ஹை வேய் (highway) எடுத்தால் நேர அவை வீட்டை போய் இறங்கலாம். நீங்கள் இருக்கிறதும் கலாய்ஸ் (Calais) துறைமுகத்தோட தானே. அவையும் அப்பிடித்தான், டோவர் துறைமுகத்தோட அண்மையில தான் வீடு.'

'கடவுள் தான் இத்தனை நல்ல சம்பந்தம் ஒன்றைக் கொடுத்திருக்கிறார். இனி அவள் ஒருத்தி ஓம் எண்டு சொல்ல வேணுமே. அவளுக்கு ஊர் சுத்தவே நேரம் போதாது.' அஷ்வதியின் தந்தை யோசித்ததை அவள் பொய்க்கப் பண்ணினாள்.

'ஓம் அப்பா, எனக்கும் காந்தனைப் பிடிச்சிருக்கு.' என்ற ஒற்றை வாக்கியத்தில் தன் தந்தையை அதிர வைத்தாள் அஷ்வதி.

தரகரை அடிக்கடி, 'மாமா' என்று கூப்பிட்டு அவரோடு சினேகிதமானாள். தமிழ் உறவினர்களோடு பெரிதாக கதைக்காமல் தள்ளியே இருப்பவள் ஆதலால் அவள் பெற்றோருக்கு அது பெரும் அதிசயமாக இருந்தாலும் ஏதோ திருமணமாகி, கணவனோடு குடித்தனம் செய்தாலே போதும் என்ற நிலையில் அவர்கள் இருந்தார்கள். அவளது மேற்கத்தேய நடை, உடை பாவனைகளும், விசித்திரமான சில பழக்கவழக்கங்களும் அவர்களை நிலைகுலையைப் பண்ணியிருந்தன.

•••

அஷ்வதியின் திருமணப் பேச்சை தரகர் அவர்கள் வீட்டுக்கு எடுத்து வருவதற்கு ஒரு வருடம் முன்பு இப்படியாக அனைத்தும் திட்டமிடப்பட்டிருந்தன.

அவர்கள் ஃபிரெஞ்ச் மட்டுமே பேசினார்கள். ஒரு ஐந்து நட்சத்திர விடுதி ஒன்றின் மிகப் பிரத்தியேகமாகமான அறை ஒன்று எடுத்துக் கூடியிருந்தார்கள். வரைபடம் ஒன்று அவர்கள் முன்னே இருந்த மேசை ஒன்றில் விரித்து வைக்கப்பட்டிருந்தது. நெடுத்து வளர்ந்திருந்தவன் தன் தாடியை நீவி விட்ட படியே, அந்த வரைபடத்தை உற்று நோக்கினான். எல்லோருடைய கைகளிலும் தண்ணீர் குவளைகள் அல்லது மதுபானம் நிறைந்த குவளைகள் ஐஸ் கட்டிகள் மிதந்தபடி இருந்தன.

தாடியை நீவியபடியே அவன் தன் கைகளில் இருந்த ஒரு சிவப்பு பேனாவால் சில குற்றுகளை வைத்துக் கொண்டிருந்தான். யோசித்து யோசித்து அந்தக் குற்றுகளை வரைபடத்தில் வைத்துக் கொண்டிருந்தான்.

அந்த வரைபடத்தில் டோவர் துறைமுகத்தை அண்மித்த பகுதிகளிலுள்ள வீடுகளும். ஃ பிரான்ஸின் கலாய்ஸ் (Calais) பகுதிக்கு அண்மையில் உள்ள வீடுகளும் புள்ளிகள் வைக்கப்பட்டு, பின் சில வீடுகள் தெரிவு செய்யப்பட்டு, முடிவு செய்யப்பட்ட போது இப்படியாகப் பல தடவைகள் அவர்கள் அனைவரும் இரகசியமாகச் சந்தித்துக் கொண்டார்கள்.

அவனைச் சுற்றியிருந்தவர்களில் இருவர் மட்டும் தமிழும் பேசத் தெரிந்தவர்களாய் இருந்தனர் .

இறுதியில் திட்டமொன்று இலகுவாக வந்து வாய்த்த போது, அந்தக் கூட்டத்தில் இரண்டாவது தலைமையில் இருந்தவன் தரகர் மாமாவாக அஷ்வதி வீட்டில் கால் வைக்க, அவர்களோடு பழகி அவர்களோடு இருந்து போதை மருந்தை எடுத்துக் கொண்ட அஷ்வதி இங்கிலாந்தில் கடையும் வீடுமாக இருந்த காந்தனுக்கு மனைவியானாள்.

அவர்களது திட்டப்படி அஷ்வதி திருமணப் பேச்சு ஆரம்பிக்க முதல் இரண்டு மாதங்கள் காந்தன் வீட்டிற்கு அருகாமையில் இருந்து டோவர் துறைமுகத்திற்கு, பிரான்சிலிருந்து வந்து போய் தனது பயணத்தை சரிவர பார்த்துக் கொண்டாள்.

காரிலிருந்து அவளுக்குத் தேவையான சகலதும் மெல்ல மெல்ல வழங்கப்பட்டன. அவளும் திட்டத்திற்கு அமைய துறைமுகத்திற்கருகாமையில் போய் அவர்களைச் சந்தித்து, வந்து சேர்ந்த பொட்டலங்களைப் பாதுகாப்பாக போய்ச் சேர வேண்டிய இடங்களுக்கு வினியோகித்துக் கொண்டாள்.

•••

'பிள்ளை, அஷ்வதி இந்த சொத்துகள் பத்துகள் எல்லாம் உனக்குத்தான்.'

அம்மா கூறிக் கொண்டிருந்தார்.



கால சுப்ரமணியம்

# தமிழில் முன்னோடிப் பெண் எழுத்தாளர்கள்

*1934-ல் இருந்து தமிழ்ச்சிறுகதையின் மலர்ச்சிக்கு களம் அமைத்தது மணிக்கொடி பத்திரிகையாகும். இதில் புதுமைப்பித்தன், மௌனி, கு.ப.ராஜகோபாலன், ந. பிச்சமூர்த்தி போன்றவர்கள் சிறந்த சிறுகதைகளை எழுதினார்கள். உலகச் சிறுகதை இலக்கியத்தில் சிறுகதை வடிவத்தை நிலைநிறுத்திய முன்னோடிகள் என்று எட்கர் ஆலன் போ, ஓ.ஹென்றி, மாப்பசான், ஆண்டன் செகாவ் போன்றவர்களை முதன்மையாகக் குறிப்பிடுவதுபோல், தமிழ் சிறுகதையை நிலை நிறுத்திய முன்னோடிகள் என்று மேலே கூறிய புதுமைப்பித்தன் போன்றவர்களைக் குறிப்பிடலாம்*

தமிழில் சிறுகதை வடிவம் எவரால் முதலில் கொண்டுவரப்பட்டது என்பது குறித்து விவாதம் உள்ளது. இதுவரை 1917-இல் வ.வெ.சு. அய்யர் புதுச்சேரியில் இருந்து அவரது கம்ப நிலையம் என்னும் பதிப்பகம் வாயிலாக வெளியிட்ட மங்கையர்க்கரசியின் காதல் என்னும் தொகுதியில் உள்ள ‘குளத்தங்கரை அரசமரம்‘ என்னும் கதையே முதல் தமிழ்ச் சிறுகதை என்பதே இன்றைய இலக்கிய வரலாறு.

பாரதியாரின் ரயில்வே ஸ்தானம் என்ற சிறுகதையே முக்கியமான முன்னோடிச் சிறுகதை என்பார்கள். இதற்கு முன்பு பாரதி எழுதிப் பார்த்த துளஸீபாய், ஆறில் ஒரு பங்கு போன்ற கதைகள் பற்றியும் விசாரங்கள் எழுந்துள்ளன. பாரதிக்கு முன்பு செல்வகேசவராயர் பாரதியின் சக்ரவர்த்தினி பத்திரிகையில் நவீன சிறுகதை வடிவத்தைச் சரியாகவே கையாண்டுள்ளார் (அபிநவ கதைகள்). அதற்கு முன் அவர் விவேக சிந்தாமணியில் எழுதிய கதை கதாசரித்சாகரம் பாணியிலோ பண்டித நடேச சாஸ்திரி தொகுத்த திராவிட நாட்டுக் கதைகள் பாணியிலே அமைந்தது. பாரதி காலத்தவரும் தமிழின் இரண்டாவது நாவலை எழுதியவருமான அ.மாதவையா ஆங்கிலத்தில் தமிழ்க்கதைகளை எழுதியுள்ளார். அவற்றைப் பின்பே தமிழில் மறுபடைப்பாக்கினார். எனவே தாகூரைத் தழுவிய கதையாக இருந்தாலும் சிறுகதை வடிவம் சரியாக அமைந்தது வ. வெ.சு அய்யர் எழுதிய குளத்தங்கரை அரசமரம் என்ற சிறுகதையிலேயே என்று நிலைநிறுத்திவிட்டார்கள்.

ஆரம்பத்தில் முக்கியமான பத்திரிகையாக விளங்கிய விவேக சிந்தாமணி நிறுத்தப்பட்டவுடன் விவேக போதினி (1908-32) தோன்றியது. வ.வே.சு.ஐயரின் ‘குளத்தங்கரை அரசமரம்‘ கதையை முதன்முதலில் (1915) அறிமுகப்படுத்தியது விவேக போதினி ஆகும். இந்தக் கதை வ.வே.சு. ஐயரின் மனைவி பேரிலேயே வெளிவந்தது. அதை தமது கம்ப நிலையம் வெளியீடாக மங்கையற்கரசியின் காதல் என்ற கதைத்தொகுப்பு நூலில் தன் பெயரில் வெளியிட்டார் வ.வே.சு. ஐயர். இந்தத் தொகுப்பு நூலில் வெளியான ஆண்டு இல்லை. ஆனால் கம்பநிலையம் வெளியீடுகளாக இதற்கு முன்னும் பின்னும் வந்த பிற நூல்களின் வெளியீட்டு ஆண்டை வைத்துக்கொண்டு, இந்த நூல் 1917-ல் வெளிவந்திருக்கலாம் என்று தீர்மானிக்கிறார்கள். எனவே தமிழ்ச் சிறுகதை நூற்றாண்டும் தமிழக அரசு சார்பில் 2017ல் நடைபெற்றது.

ஆனால் 1879-1917 என்ற காலகட்டத்தில் தமிழ் நாவல் வரலாற்றிலும் சிறுகதை வரலாற்றிலும் சில பெண் எழுத்தாளர்கள்

**பொதுவாகவே பெண் எழுத்தாளர்களால், புதிய மாற்றம் கொண்டு வரப்பட்டதாகவோ, ஆண்களுக்கீடான, சக்தி வாய்ந்த எழுத்துக்களை வெளியிட்டு வந்ததாகவோ காணமுடியவில்லையே என்ற குற்றச்சாட்டு, இப்பொழுது, தேய்ந்து, மறைந்து விட்டது.**

**மதம் சார்ந்த நமது வாழ்க்கை மரபுகள், நாம் கொண்டிருக்கிற பாரம்பரிய மதிப்பீடுகள், சடங்காசார வழிமுறைகள் இவைகளை எல்லாம் மீறிய தனக்கான தனித்த அழகியலைக் கொண்ட,தெளிவான மாற்றம் எழுத்தில் பிரசன்னம் கொள்ளுமானால், நிச்சயம் அந்த எழுத்து வெற்றி பெற்று நிலைபேறு அடையும் என்று கூறலாம்.**

குறிப்பிடத்தகுந்த படைப்புகளை வெளியிட்டுள்ளார்கள் என்ற தகவல்கள் சரிவர இலக்கிய வரலாற்றில் பதிவு செய்யப்படவில்லை. சிறுகதையின் பொற்காலமாகக் கருதப்படும் மணிக்கொடி காலத்தில் அந்த மணிக்கொடி பத்திரிகையிலும் அந்தக் காலகட்டத்தைச் சேர்ந்த பிற பத்திரிகைகளிலும் எழுதிய பெண் எழுத்தாளர்களின் படைப்புகள் பற்றியும் முறையான தகவல்கள் முன்வைக்கப்படவில்லை.

அம்மணி அம்மாள் என்ற பெண் எழுத்தாளர், 'சிறுகதைப் பொருளிலும் உத்தியிலும் ஒரு புதுமையைப் புகுத்தினார்' என்று இன்றைக்குச் சிலர் சொல்ல ஆரம்பித்து இருக்கிறார்கள். அவரைப் பற்றிய வேறு தகவல்கள் தெரிவதில்லை. எனவே அவர் உண்மையில் பெண் எழுத்தாளர்தானா அல்லது அந்தக்கால வழக்கப்படி, குறிப்பாக விவேகபோதினி பத்திரிகையின் வழக்கப்படி, அந்தப் பெயரில் வேறு யாரும் எழுதினார்களா என்று உறுதிப்படுத்தக்கூட முடியவில்லை. அதுவும் ஒரு தழுவல் உருவகக் கதையாகத்தான் தோன்றுகிறது. அவரது பெயரில் கிடைக்கும் சில சிறுகதைகள் மூலமாகவும் ஊகித்து உறுதிப்படுத்த முடியவில்லை.

அம்மணியம்மாளின் இந்தப் பிற கதைகளில் வெளிப்படையாகவே அவை தழுவி எழுதப்பட்டவை என்று தெரியவருகிறது. அம்மணி அம்மாள் 1913-ல் விவேக போதினி மாத இதழில் 'ஸங்கல்பமும் ஸம்பவமும்' என்ற கதையை எழுதியுள்ளார். வடிவம், மொழி ஆகியவற்றைக்கொண்டு பார்த்தால் அவர்தான் தமிழின் முதல் சிறுகதையாசிரியர் என்று சொல்ல வேண்டும் என்றும் இன்று கூறப்படுகிறது. அக்காலப் பெண்படைப்பாளிகளைப் பற்றி வை.மு.கோதைநாயகி அம்மாளின் ஜகன்மோகினி பத்திரிகையில் வெளிவந்த தொடர் கட்டுரைகளில் அம்மணி அம்மாள் பெயர் இல்லை. அருத்தமா எழுபதுகளின் இறுதியில் எழுதிய பெண் படைப்பாளிகள் பற்றிய நா.பார்த்தசாரதியின் தீபம் இலக்கிய இதழ்க் கட்டுரை ஒன்றில் அம்மணியம்மாளின் இரு கதைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அதிலும் தவறாக, 'ஸங்கல்பமும் ஸம்பவமும்' சிறுகதையை நாவல் என்று கூறியுள்ளார். அம்மணி அம்மாளின் மற்றொரு குறுநாவல் பற்றியும் குறிப்பிடுகிறார். அது இன்று கிடைப்பதில்லை.

அம்மணி அம்மாளுக்கு முன்பே புனைகதை இலக்கியத்தில் கிருபை சத்தியநாதன், பண்டிதை விசாலாட்சி அம்மாள், மலைமகள் போன்ற நாவலாசிரியர்கள் இருக்கிறார்கள். இவர்களில் விசாலாட்சி 1910க்கு முன்பே பல நாவல்களையும் சில சிறுகதைகளையும் எழுதிவிட்டார். இவரைத்தான் முதல் பெண் சிறுகதை ஆசிரியர் என்று கூறவேண்டும். இவரது கல்பகம் என்ற சிறுகதைத்தொகுப்பு வெளிவந்திருக்கிறது. ஆனால் கிடைக்கவில்லை. தமது ஹிதகாரிணி பத்திரிகையில் அவர்தான் ஒரு ஹிந்து சகோதரி என்ற பெயரில் ஒரு கதையை எழுதியிருக்கவேண்டும் என்றே நான் நினைக்கிறேன். அடுத்து கல்பகம் என்ற கதையைத் தன் பெயரிலேயே பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார். அரசு ஆவணக்காப்பகத்திலிருந்த இரண்டு ஹிதஹாரணி தொகுப்புகளில் இவ்விரு கதைகளும் இருந்த முதல் தொகுப்பு இப்போது காணவில்லை. நானும் நண்பர்கள் மூலம் பிரிட்டிஷ் நூலகத்தில் தேடிப்பார்த்தும் அகப்படவில்லை. விசாலட்சியின் ஆரியகுமாரி முதலிய நான்கைந்து நாவல்களைமட்டும் தேடிப்பிடித்து பிரதி எடுக்கவைத்து சேகரித்திருக்கிறேன்.

அதேபோல 1920-ல் விசாலாட்சி அம்மாள் என்ற படைப்பாளி எழுதிய சிறுகதை 'மூன்றில் எது?' என்பது 'வடிவ அளவில் முக்கியமான ஒரு முன் உதாரணம் என்றும் சிறுகதைக்குரிய அன்றாடத்தன்மை, நேரடிச் சித்தரிப்பு முதலியவை கொண்ட நல்ல கதை இது' என்றும் (திலீப்குமார் தொகுத்து ஆங்கிலத்தில் மேலைநாட்டில் வெளிவந்த தமிழ்ச் சிறுகதை தொகுப்பில்) இப்போது கூறுகிறார்கள். ஆனால் இந்த விசாலாட்சி என்பவர் அத்தொகுப்பில் குறிப்பிடப்பட்டது போல் பண்டிதை விசாலாட்சி அல்ல என்று) தமிழில் அதன் ஆரம்ப காலத்தில் எழுதிய மூன்று விசாலாட்சிகளில் அ. மாதவையாவின் மகளான காசினி விசாலாட்சி என்பதை நான் இப்போது வெளிவரவுள்ள அதன் இரண்டாவது பதிப்பில் திலீப்பிடம் கூறி முறைப்படுத்தியுள்ளேன்.

எனவே பெண் எழுத்து, நூற்றாண்டுகால வரலாறு கொண்டது. விடுதலைக்கு முந்தைய காலத்தில் பண்டிதை விசாலாட்சி அம்மாள், வி. பாலாம்பாள், மீனாட்சிசுந்தரம்மாள், மூவலூர் ராமாமிர்தம் அம்மாள், வை.மு.கோதைநாயகி அம்மாள், செய்யூர் சாரநாயகி அம்மாள், டி. பி. இராஜலட்சுமி, குகப்பிரியை, வி. சரஸ்வதி அம்மாள், வி. சாவித்திரி அம்மாள், குமுதினி, வேங்கட லட்சுமி என்று பல பெண் படைப்பாளிகள் எழுதியிருக்கின்றனர். இவர்களில் திரில்லர் வகையில் எழுதிய செய்யூர் சாரநாயகி அம்மாள் என்பவர் வடுவூர் துரைஸ்வாமி ஐயங்காராக

இருக்கலாம் என்று தெரிகிறது. (தன் தந்தையின் இந்த அவதானத்தையும் ஊகத்தையும் முதலில் வெளியிட்டவர் அரவிந்த் சுவாமிநாதன். வை.மு. கோதைநாயகிக்கு போட்டியாக இப்படி வடுவூரார் செய்திருக்கலாம்). ஓரிரு சுமாரான படைப்புகளை மட்டுமே பிரசுரம் செய்து, தொடர்ந்த களத்தில் நிற்காத ஆர்.எஸ்.ருக்மணி, ஆர்.எஸ்.ஞானாம்பாள், தஞ்சம், கௌரி அம்மாள், மங்கை ஆசிரியர் விசாலாட்சி என்று உடனடியாக நினைவுக்கு வராத இன்னும் பல பெண் எழுத்தாளர்களும் இருக்கிறார்கள்.

இது எழுபதுகளில், பெண் எழுத்தாளர்கள் கூட்டம் திடீரென பத்திரிகை உலகில் படையென பிரவேசித்த காலம். எல்லா வெகு ஜனப் பத்திரிகைகளும் புதிதாக வந்த பெண் எழுத்தாளர்களுக்கு முதன்மையளித்தன.

எனவே முன்னோடிகளைத் தொடர்ந்தும் பிற்காலத்திலும் எழுதிய கு.ப.சேது அம்மாள், கமலா விருத்தாசலம், அநுத்தமா, கிருத்திகா, ஆர். சூடாமணி, ராஜம் கிருஷ்ணன் போன்றோரது சிறுகதைகள் இன்று குறிப்பிடத் தகுந்தவையாகக் கருதப்படுகின்றன. இவர்களில் கிருத்திகா நாவல்களில் சாதனைகளைப் படைத்தவர்.

இன்றுள்ள பெண்ணிய எழுத்தாளர்கள் அம்பை, காவேரி, சிவகாமி, பாமா, தமிழ்ச்செல்வி, குட்டி ரேவதி போன்ற புனைகதை எழுத்தாளர்களையும் மலர்ந்து வரும் மிக இளந்தலைமுறை எழுத்தாளர்களையும் பற்றி இன்று விரிவாகவும் விவரமாகவும் எல்லோருக்கும் தெரியும்.

பெண்ணியம், பெண்மை சார்ந்த கதைகள், கட்டுரைகள், ஆய்வுகள் பற்றிப் பரவலாக இன்று பேசப்படுகிறது. பின் நவீனத்துவப் பார்வையிலும் பெண் எழுத்துக்கள், பலரையும் இப்போது திரும்பிப் பார்த்து கவனம் கொள்ள வைத்துள்ளன.

பெண்ணியம் என்ற சொல் Feminism என்ற சொல்லின் இன்றைய தமிழாக்கம். பெண்ணின் முன்னேற்றத்திற்கும் மேம்பாட்டிற்கும் வெளிப் பாட்டுக்கும் வழி வகுக்கும் செயல்பாடுகள் அனைத்தையும் இது குறிக்கிறது. பெண்ணின் தாழ்வுற்ற நிலையை மாற்ற முயலும் அனைத்துப் போராட்ட முறைகளையும் உள்ளடக்கி, மனித சமூகத்தில் பெண்ணுக்கு மனித மதிப்பு கிடைக்கப் பாடுபடுவது, பெண் என்பதால் ஒருவர் எதிர்கொள்ள நேரும் துயரங்களையும் தடைகளையும் களையப் பாடுபடுவது, வாழ்வின் எல்லாத் தளங்களிலும் ஆண், பெண் இருபாலரும் இணையானவர்களே என்ற சமத்துவக் கருத்தை உருவாக்கப் போராடுவது பெண்ணியம் என்றெல்லாம் விளக்கலாம்.

பொதுவாகவே பெண் எழுத்தாளர்களால், புதிய மாற்றம் கொண்டு வரப்பட்டதாகவோ, ஆண்களுக்கீடான, சக்தி வாய்ந்த எழுத்துக்களை வெளியிட்டு வந்ததாகவோ காணமுடியவில்லையே என்ற குற்றச்சாட்டு, இப்பொழுது, தேய்ந்து, மறைந்து விட்டது. மதம் சார்ந்த நமது வாழ்க்கை மரபுகள், நாம் கொண்டிருக்கிற பாரம்பரிய மதிப்பீடுகள், சடங்காசார வழிமுறைகள் இவைகளை எல்லாம் மீறிய தனக்கான தனித்த அழகியலைக் கொண்ட,தெளிவான மாற்றம் எழுத்தில் பிரசன்னம் கொள்ளுமானால், நிச்சயம் அந்த எழுத்து வெற்றி பெற்று நிலைபேறு அடையும் என்று கூறலாம்.

**இன்றுள்ள பெண்ணிய எழுத்தாளர்கள் அம்பை, காவேரி, சிவகாமி, பாமா, தமிழ்ச்செல்வி, குட்டி ரேவதி போன்ற புனைகதை எழுத்தாளர்களையும் மலர்ந்து வரும் மிக இளந்தலைமுறை எழுத்தாளர்களையும் பற்றி இன்று விரிவாகவும் விவரமாகவும் எல்லோருக்கும் தெரியும்.**

**பெண்ணியம், பெண்மை சார்ந்த கதைகள், கட்டுரைகள், ஆய்வுகள் பற்றிப் பரவலாக இன்று பேசப்படுகிறது. பின் நவீனத்துவப் பார்வையிலும் பெண் எழுத்துக்கள், பலரையும் இப்போது திரும்பிப் பார்த்து கவனம் கொள்ள வைத்துள்ளன.**

பெண் கல்வி, பெண்ணுக்கு இழைக்கப்படும் வன்முறை, குழந்தை மணக் கொடுமை, பாலியல் பலாத்காரம், பெண்ணின் கைம்பெண் பிரச்சினை, பிள்ளைப்பேறும் அறியாமையும் தான் பெண்ணை அடிமைப்படுத்தும் காரணிகள் எனும் நிலையில் பெண் விடுதலைக்காக என்று அறிந்தும் அறியாமலும் எழுதப்பட்ட பெண்ணிய எழுத்துக்கள் நிரம்பவே முன்பு வந்தன.

இத்தொகுப்பில் பெண்ணியம் தோன்றியதற்கு முந்திய முன்னோடிப் பெண் எழுத்தாளர்களின் கதைகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

(இது கல்விப் பாடத்திட்ட நோக்கில் பெண்மைக் கதைகள் என்ற தலைப்பில் மாணவர்களுக்காகவும் ஆரம்ப வாசகர்களுக்காகவும் பதிப்பிக்கப்பட்ட முதல் பதிப்புக்கான அறிமுகக் கட்டுரை. புதுக்கப்பட்ட இந்த சிறுகதைத் தொகுதி விரைவில் விரிவாக வெளிவர உள்ளது. எனவே மாணவர்களுக்கு என, சிறுகதை பற்றித் தந்திருந்த அறிமுகம் இங்கு தேவையில்லை என்று நீக்கப்பட்டும் பெண்ணியம் பற்றிய அறிமுகம் சுருக்கப்பட்டும் இப்போது திருத்தப்பட்ட வடிவத்தில் இப்புத்தக முன்னுரை இங்கு அறிமுக அளவிலேயேல் தனிக் கட்டுரையாக்கப்பட்டுள்ளது.)

தொடர்புகளுக்கு

கால சுப்பிரமணியம்

Dr. K. Subramanian,

155, East Street, Nehru Nagar, Sathyamangalam - 638402. Erode (Dt.), Tamilnadu, India.

Email: kasu.layam@gmail.com
Ph. 6383675433 (+WhatsApp)
https://www.facebook.com/kaala.subramaniam

# முத்துக்குமார் என்கிற சுத்தமான சலவைத் தொழிலாளி

## அ.விஜயன்

மல்லாவி வாழ் மக்களுக்கு அப்போதிருந்த சலவைத்தொழிலாளி முத்துக்குமாரு அப்பா. மேவி இழுத்த நரைத்த சுருள் தலை, திருநீறு, சந்தனப் பொட்டு, வெற்றிலை சப்பிய வாய், வெறும் மேலில் ஒரு துவாய்த்துண்டு, மடித்துக் கட்டிய வெள்ளைச் சாரம், வயிறு வைக்காத நேர்த்தியான உடற்கட்டு, செருப்புப் போடாத கால்கள், தோய்த்து ஸ்திரி பண்ணிய உடுப்புக்களை நன்கு அடுக்கி வெள்ளைத் துணியால் கட்டிய பொட்டளி இதுதான் முத்துக்குமாரு அப்பாவின் தோற்றம்.

அவர் கொண்டுவரும் பொட்டளியை அவிழ்த்து ஒவ்வொரு உடுப்பிலும் கறுப்புநிறத்தால் போடப்பட்டிருக்கும் சிறிய குறியீடுகளைப் பார்த்து ஒவ்வொரு குடும்பத்தவர்களின் உடுப்புக்களையும் பக்குவமாக எடுத்துக் கொடுப்பார். அவர் வாங்கிச் சென்ற பழைய ஊத்தையான உடுப்புக்களைப் பளிச்சென்று கஞ்சிபோட்டு மினுக்கி மட மடப்பாகக் கொண்டுவந்து கையளிப்பதே அவரது தொழில் ரகசியம்.

அவர் சோரங்கொட்டை அல்லது சோராங்கொட்டை என்ற காயைப் பயன்படுத்தி அதன் சாற்றை எடுத்து உடுப்புக்குப் குறியீடுகள் போடுகிறார் என்று பின்னர் அறிந்தேன். அந்தக் குறியீடு உடுப்புக் கிழிந்து போனாலும் அழியாமல் இருக்கும். அதேவேளை அந்தக் காலத்தில் கொலை செய்தவர்கள், கொலையுண்டவர்கள், விபத்தில் இறந்தவர்கள் ஆகியவர்களை அடையாளம் காண்பதற்குக்கூட இந்த "வண்ணான் குறி" பயன்பட்டது என்று அறிந்தேன். இதுபற்றி இன்னோர் சலவைத் தொழிலாளியிடம் விளக்கம் கேட்டபோது, "சோராங்கொட்டையை ஊசியால் குத்தினால் கறுப்பு மைபோல ஒரு திரவம் வரும். அதை எடுத்து சிறிதாக ஒரு குறி போடுவோம். உதாரணத்துக்குத் தங்கராசா என்பவரின் உடுப்பு என்றால் ஆங்கிலத்தில் அதன் முதல் எழுத்தான T போடுவோம். வேறு சில ஆங்கில எழுத்துக்களையும் குறியாக வைப்போம். 1.00.?.x.H.i ஆகிய குறிகளை வைப்போம். அந்தக் குறியின் அடையாளம் யாருக்காகப் போடப்பட்டது என்பது எங்களுக்கு மாத்திரம் தான் ஞாபகத்தில் இருக்கும்" என்றார்.

வெள்ளாவி வைப்பது, வெளுப்பது, றைக்கிளீன் செய்வது ஆகிய சொற்பதங்கள்கூட அப்போதிருந்தன. தற்போது நடைமுறையில் அவற்றைக் கேட்பது அரிது. முத்துக்குமாரு



அப்பாவுக்கு மல்லாவிக் கொலனி வீட்டுத் திட்டத்தில் வீடொன்று கிடைக்கவில்லை என்பதைவிட வேளாளரின் வீடுகளுக்கு அயலில் வண்ணார சமூகத்தவன் ஒருவனுக்கு வீடும் காணியும் கிடைத்துவிடக்கூடாது என நினைத்ததால் அவருக்குக் கிடைக்கவில்லை என்பதே உண்மை.

மல்லாவிச் சந்தியிலிருந்து ஏறத்தாழ ஒரு கிலோமீட்டர் துரத்திருள்ள எம்.ஓ. குவாட்டர்ஸ் வரை வலப்புறமாகவிருந்த காணி மல்லாவி மருத்துவமனைக்குச் சொந்தமானது. அந்த வீதியின் இடது புறத்தில் மருத்துவமனை ஊழியர் விடுதிகள் அமைந்திருந்தன. அதையும் தாண்டிச் செல்லும்போது அனிஞ்சியன் குளம் கழிவு தண்ணீர் பாயும் ஒரு பள்ளமான பகுதி இருந்தது. மல்லாவிச் சந்தியிலிருந்து யோகபுரம் மகாவித்தியாலயம் வரை நில அமைப்பு உயர்ந்து செல்வதாக இருந்தது. அவ்வாறு இருக்கும்போது ஓரிடத்தில் மாத்திரம் பெரிய பள்ளமான நில அமைப்பு ஏன் ஏற்பட்டது என்ற கேள்வி நான் பாடசாலை மாணவனாக இருக்கும்போது எப்போதும் எழுவதுண்டு.

நான் தற்போது நம்புகிறேன் அந்தப் பகுதியில் கட்டப்பட்ட (3ஆம் யுனிற், ஒரு ஏக்கர் திட்ட வீடுகள், வைத்தியசாலைக் கட்டடங்கள்) கட்டடங்களுக்குத் தேவையான கிரவல் மண்ணை அங்கிருந்து வெட்டி ஏற்றியிருக்க வாய்ப்புண்டு. அந்தப் பகுதி நிலம் மல்லாவிப் பகுதியிலேயே ஒரு தரிசு நிலம்போல வளம் குன்றியதாக இருந்தது. முற்புதர்களும் ஆவரம் மரங்களும் பெரிய முள்ளுள்ள புதர்களும் இருந்தன.

மல்லாவிச் சந்தியிலிருந்து பள்ளிக்கூடம் செல்லும் வழியில் தரிசு நிலமாக இருந்த காணியில் வீதிக்கருகில் ஒரு சிறிய ஓலை வீடு கட்டி அதன் முன்பகுதியை சலவைத் தொழிற் கடையாக ஆக்கியிருந்தார் முத்துக்குமாரு அப்பா. உடுப்புக்களை ஸ்திரி பண்ணுவதற்கு அங்குதான் கொண்டுபோய்க் கொடுக்க



வேண்டும். மின்சாரம் இல்லாத அந்தக் காலத்தில் முத்துக்குமாரு அப்பாவின் சிரட்டைக் கரி ஸ்திரிப்பெட்டி ஒரு புதினப் பொருளாக இருந்தது.

அந்தப் பெட்டியின் அமைப்பு அதன் அடிப்பாகம் ஆமைபோல முன்னுக்குக் கூராக இருப்பது மேலே ஒரு புகைக் குழாய் இருப்பது பின்புறமாகச் சிறிய கதவு ஒன்று திறந்து மூடக்கூடியதாக இருப்பது, அந்தக் கதவு திறந்தால் பெட்டியின் சூடு அதிகரிக்கும் மூடினால் சூடு குறையும். உடுப்புக்களை விரித்து வைத்து அதன் மேல் தண்ணீர்ச் சீலை ஒன்றைத் தடவி அதன் மேல் பெட்டியை ஓட விடுவது முத்துக்குமாரு அப்பாவுக்கு ஒரு தனிக்கலை.

அங்கு போனால் முத்துக்குமாரு அப்பாவின் சுத்தமான கைகள் நேர்த்தியான வேலை, மக்களுடன் மரியாதையாகக் கதைக்கும் பண்பு எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பது என எல்லாவற்றையும் அவரது சிறிய வருமானத்தில் பெற்றிருந்தார். சலவைத் தொழிலில் நான் கண்ட முதல் மனிதன் அவர்தான். அவரை விஞ்சிய ஒரு சலவைத் தொழிலாளியை நான் இன்றுவரை சந்திக்கவில்லை என்பதும் சிறப்பாக நினைவுகூரத்தக்கது.

முத்துக்குமாரு அப்பா உடுப்புகளைத் தோய்த்து நிலத்தில் புற்தரையில் விரிப்பதை விரித்த உடுப்புக்களை எடுப்பதை பள்ளிக்கூடம் விட்டுச் செல்லும்போது பார்க்க முடியும். அதைவிடப் பெரிய கயிறுகளால் இடையிடையே தடியூண்றிக் கட்டப்பட்ட கொடிகளில் இரு கயிறுகளை முறுக்கி அந்த முறுக்குக்குள் உடுப்புக்களை விழாதவாறு தொங்கவிடுவார் (தற்போதுள்ளதுபோல கொடிக் கிளிப்புகள் அப்போதில்லை). இவ்வாறு செருகப்பட்ட உடுப்புக்கள் எந்தக் காற்றடித்தாலும் விழாமல் இருக்கும். அந்தக் கொடிகளில் பல வர்ணங்களில் விதம் விதமான உடுப்புகள் காய்வதை தற்போதைய திரைப்படங்களில் காட்டப்படும் காட்சிகளுக்கு இணையாக முத்துக்குமாரு அப்பாவின் கொடியில் தொங்கிய உடுப்புக்களைப் பார்த்து ரசித்திருக்கிறேன். அந்த வண்ண வண்ண உடைகளைக் காயவிட்ட அவரது தொழில் நேர்த்தி இப்போதும் பசுமையாக ஞாபகமிருக்கிறது.


அவரது தொழில் வரலாற்றில் ஒருவரின் உடுப்பைப் பழுதாக்கியதாகவோ ஸ்திரி பண்ணும்போது எரித்ததாகவோ நான் கேள்விப்பட்டதில்லை. அவரது வீட்டுக்கு அல்லது கடைக்கு போனபோது வேறு யாராவது அவரைக் கடிந்து கதைத்ததையும் நான் கண்டதில்லை. அந்தளவுக்கு அவர் ஒரு நேர்த்தியான மனிதர்.

அப்படி ஒரு சலவைத் தொழில் முன்னோடி மல்லாவியில் வாழ்ந்தார் என்பது தற்போதுள்ள மல்லாவி மக்கள் பலருக்கும் தெரிந்திருக்காத ஒரு சங்கதியே.

# வாசிப்பும் யோசிப்பும்



## வ.ந.கிரிதரன்




### வர்த்தமான மகாவீரனின் (மாரப்பன்) 'டி.எஸ்.எலியட்டின் பாழ்நிலம்'

அண்மையில் இளங்கோவின் 'சாம்பல் வானத்தில் மறையும் வைரவர்' நூல் வெளியீட்டு விழாவுக்குச் சென்றபோது நிகழ்வு முடியும் நிலையிலிருந்தது. வன்முறையும் எழுத்தும் பற்றிய கலந்துரையாடல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இளங்கோவின் நூலினை இன்னும் முழுமையாக வாசிக்கவில்லை. வாசித்து முடித்ததும் பின்னர் அதுபற்றி எழுதுவேன். ஆனால் வாசித்த அளவில் இளங்கோவின் கதைகள் கூறும் பொருள் முக்கியமானதென்று உணர்ந்தேன். புலம்பெயர்ந்த சூழலில் நிலவிய இளைஞர் குழுக்கள் பற்றிய பதிவுகளை அவரது சிறுகதைகள் பல செய்துள்ளன. இவ்விதமான ஆவணப்பதிவுகள் புலம் பெயர்ந்த தமிழர்கள் படைக்கும் இலக்கியத்தைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமானவை.

இது போல் அண்மையில் வடலி பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட கருணை ரவியின் 'கடவுளின் மரணம்' சிறுகதைத் தொகுப்பும், யோ.கர்ணனின் 'சேகுவேராவின் வீடு' தொகுப்பும் ஆவணப்படுத்தும் விடயங்கள் முக்கியமானவை. ஈழத்தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தின் இறுதிக் காலகட்டத்தில், சிறு துண்டு நிலத்தினுள் அடைந்து கிடக்கும் மக்கள் அடையும் துயர், அன்றாட அத்தியாவசியக் கடமைகளைச் செய்வதற்காக அவர்கள் (குறிப்பாகப் பெண்கள்) அடையும் சிரமங்கள் இவற்றையெல்லாம் கருணை ரவியின் சிறுகதைகள் ஆவணப்படுத்துகின்றன.

மேற்படி இளங்கோவின் நூல் வெளியீட்டில் 'காலம்' செல்வத்தின் 'வாழும் தமிழ்' புத்தகக் கண்காட்சியும், விற்பனையும் நடைபெற்றது. இம்முறை எனக்கொரு புதையல் அங்கு கிடைத்தது. வர்த்தமான மகாவீரன் (மாரப்பன்) எழுதி, தானே வெளியிட்ட 'டி.எஸ்.எலியட்டின் பாழ்நிலம்' நெடுங்கவிதையின் மொழி பெயர்ப்பும், அது பற்றிய விரிவான திறனாய்வும் அடங்கிய நூல். நீண்ட நாட்களாக யாரும் வாங்காமல் இருந்திருக்கவேண்டும், செல்வம் அதற்கு $5 என்று விலையிட்டிருந்தார். 516 பக்கங்களை உள்ளடக்கிய நூலின் விலை $5. அந்த நூலுக்காக, அந்த விலைக்காக, 'காலம்' செல்வத்தைப் பாராட்டுகின்றேன். அந்த நூலுக்கு அந்த விலை மிகவும் குறைவு. ஆனால் வாசகர்களின் தேவையினைப் பொறுத்தவரையில் (Demand) அது குறைவாகவிருந்த காரணத்தினால் அவர் அந்த விலையினை நிர்ணயித்திருக்கவேண்டும்போல படுகின்றது. ஏனெனில் பல அண்மைக் காலத்து நூல்களெல்லாம் மிக அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. அதனால்தான் அவ்விதம் கருதினேன்.

இன்னுமொரு விடயத்திற்காகவும் செல்வத்தைப் பாராட்டுகின்றேன். வர்த்தமான மகாவீரனை (மாரப்பன்) இந்த நூல் மூலமே அறிந்துகொண்டேன். வர்த்தமானன் மகாவீரனின் பரந்த அளவிலான வாசிப்பும், தனது எண்ணங்களை அவர் அடுக்கும் பாங்கும் என்னைக் கவர்ந்தன. அவரது பரந்து பட்ட வாசிப்பையும், அதன் விளைவாக கூறும் பொருளில் அவருக்கிருந்த தெளிந்த பார்வையையும் நூலை வாசிக்குமொருவர் உடனடியாகவே புரிந்து கொள்வார். அதிகமாக வடமொழிச் சொற்களை அவர் பாவித்தாலும் அது என் வாசிப்புக்கு இடையூறாக இருக்கவில்லை. தனித் தமிழ் என்பதில் எனக்கு உடன்பாடில்லை. ஒரு மொழியானது ஏனைய மொழிகளிலிருந்து காலத்துக்குக் காலம் சொற்கள் பலவற்றை உள்வாங்கியே வளர்வது வழக்கம். அதற்குத் தமிழ் மொழியும் விதிவிலக்கல்ல. இவ்விதமான தனது மொழி நடைக்காக அவர் தேவநேய பாவாணர் போன்றவர்களிடம் மன்னிப்பும் கேட்டுக்கொள்கின்றார்.

நூலாசிரியர் கவிஞர் தேவதேவனிடம் பெருமதிப்பு வைத்திருக்கிறார். அதற்குப் பிரதியுபகாரமாகக் கவிஞர் தேவதேவன் இந்நூல் பற்றி எழுதிய குறிப்பினை நூலின் பின் அட்டையில் பிரசுரித்திருக்கின்றார். அதிலவர் எலியட்டின் ‘பாழ்நிலம்‘ நெடுங்கவிதை பற்றிப் பின்வருமாறு கூறுவார்“ நோபல் பரிசு பெற்ற நவீன காவியம். மேற்கோள்களான ஓர் இசைக் கதம்பம். இந்நீள் கவிதை என்றும், அதை முழுமையாய் வாசித்து முடிக்க ஒருவர் ஆங்கில மொழி மரபு மற்றும் சமகால உலக இலக்கியங்களில் பெரும் புலவராய் இருக்க வேண்டியது அவசியமென்றும் கூறுகின்றன திறனாய்வுகள்‘ என்கின்றார். இக்கூற்றானது நூலாசிரியரின் இலக்கியத் தகுதியினை வெளிப்படுத்துகின்றது.

டி.எஸ்.எலியட்டின் ‘பாழ் நிலம்‘ நெடுங்கவிதையினை வாசிக்க விரும்பும் எவருக்கும் இந்நூல் மிகவும் உறுதுணையாகவிருக்கும். இவரைப் போன்ற படைப்பாளியொருவரை ஏன் இதுவரைகாலமும் எம்மால் அறிந்து கொள்ள முடியாமலிருந்தது. இவரது பல படைப்புகள் பதிப்பகங்களால் நிராகரிக்கப்பட்ட நிலையில் வெளிவரமுடியாமல் முடங்கிக் கிடப்பதையும் இந்நூல் மூலம் அறிந்துகொள்ள முடிந்தது. வாசகர்களைக் கவரும் வகையில் சுவையாக எழுதும் ‘இன்றைய வெகுசன‘ப் ப்டைப்பாளிகளின் படைப்புகளையெல்லாம் அதிக அளவில் வெளியிடும் பதிப்பகங்கள் இவரைப் போன்ற தீவிர வாசிப்பும், ஆய்வுக் கண்ணோட்டமும் மிக்க எழுத்தாளர்களின் படைப்புகளை வெளியிடுவதிலும் கவனம் செலுத்தலாமே.



# சீர்காழி தாஜின் ‘தங்ஙள் அமீர்‘!

அமரர் சீர்காழி தாஜ் என்னைப்பொறுத்தவரையில் மறக்க முடியாத ஓர் இலக்கிய ஆளுமை. அவர் இவ்வளவு விரைவாக எம்மை விட்டுப் போய் விடுவார் என்பதை நான் நினைத்தும் பார்த்ததில்லை. தொடர்ந்தும் எழுத்தில் பல உச்சங்களைத் தொடுவார் என்று நினைத்திருந்த வேளையில் அவர் மறைந்து விட்டார். 2019 இல் அவர் மறைந்த போது அவர் மறைவதற்கு முதல் நாளும் முகநூலில் எழுதிக்கொண்டிருந்தார். மறுநாள் அவர் மறைவுச் செய்தியை அறிந்தபோது நம்புவதற்கே முடியாமலிருந்தது. அவரை நான் ஒருபோதும் சந்திக்கவேயில்லை. அது இன்னும் துயரைத்தந்தது.

மீண்டுமொரு தடவை சிந்தனைக்குருவி தன் சிறகுகளை அடிக்கின்றது. நண்பர் தாஜை முதன் முதலில் அறிந்த காலகட்டம் நினைவுக்கு வருகின்றது. தமிழகத்தில் ஸ்நேகா பதிப்பக வெளியீடுகளாக வெளியான எனது ‘அமெரிக்கா (தொகுப்பு) மற்றும், மறும் நல்லூர் ராஜதானி நகர அமைப்பு நூல்களைத் தமிழக நூல் நிலையக் கிளையொன்றில் கண்டு, வாசித்துவிட்டுத் தன் கருத்துகளை ஆக்கபூர்வமான முறையில் நீண்ட இரு கடிதங்களாக எழுதி அனுப்பியிருந்தார். பின்னர் வைக்கம் முகம்மது பசீரின் ‘எங்கள் தாத்தாவுக்கு ஆனையொன்றிருந்தது‘ நூலினைக் கனடாவில் வசிக்கும் தனது நண்பர் ஒருவர் மூலம் அனுப்பிருந்தார்.

தமிழகத்தில் எனது நூல்கள் வெளியான தருணத்தில் நிச்சயமாக யாருக்கும் என்னை அங்கு தெரிந்திருக்காது. அந்நிலையில் என் நூல்களை வாசித்து எனக்கு எழுத வேண்டுமென்று அவருக்குத் தோன்றியிருக்கின்றது. அந்த அன்பு என்னை உண்மையிலேயே திக்குமுக்காட வைத்து விட்டது. பின்னர் எனக்குப் பிடித்த தேவையான நூலொன்றையும் தேடி எடுத்து அனுப்பி வைத்தார். அதை எப்படி மறக்க முடியும்?

கவிதைகள், கதைகள் என்று இவரது எழுத்துப்பங்களிப்பு பன்முகத்தன்மை வாய்ந்தது. இணைய இதழ்கள் (பதிவுகள் உட்பட), தமிழகத்து வெகுசன மற்றும் சிற்றிதழ்கள் எனப்பல ஊடகங்களில் இவரது பல படைப்புகள் வெளியாகியுள்ளன. ஆனந்த விகடனின் பவளவிழாப் போட்டிகளில் இவரது கவிதைகள் முத்திரைக் கவிதைகளாக வெளியாகியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. தாஜ் அவர்கள் ‘தமிழ்ப்பூக்கள்‘ என்னும் வலைப்பதிவினையும்நடாத்திவந்தார்: http://tamilpukkal/blogspot/ca/

நண்பர் தாஜின் சிறுகதைகள், குறுநாவல் ஆகியன உள்ளடங்கிய தொகுதியொன்றை ‘தங்ஙள் அமீர்‘ என்னும் பெயரில் அவரது மறைவுக்குப் பின்னர் காலச்சுவடு பதிப்பகத்தினர் வெளியிட்டிருந்தனர். தமிழ் இலக்கியத்துக்கு வளம் சேர்க்கும் தொகுதிகளிலொன்று அத்தொகுதி. ‘தங்ஙள் அமீர்‘ குறுநாவல் ‘பதிவுகள்‘ இணைய இதழில் (23.04.2014) வெளியான குறுநாவல் என்பதையும் இத்தருணத்தில் நினைவு கூர்கின்றேன். அக்குறுநாவல் பதிவுகள் இதழில் வெளியாகியபோது வெளியான எனது அறிமுகக் குறிப்பினையும் இங்கு பதிவு செய்கின்றேன்.

எழுத்தாளரின் தாஜ் எழுதிய தங்ஙள் அமீர் குறுநாவல் பற்றி ‘பதிவுகள்‘ இணைய இதழில் நான் எழுதியிருந்த அறிமுகக் குறிப்பு:

‘புலம் பெயர்ந்த தமிழர்கள் படைக்கும் இலக்கியம் என்றதும் உடனடியாக ஈழத்தமிழர்கள்தாம் நினைவுக்கு வருகின்றார்கள். உண்மையில் தமிழர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களென்றாலும் அவர்கள் புலம் பெயர்ந்த தம் அனுபவங்களைமையமாகக்கொண்டு படைக்கும்இலக்கியம் புலம் பெயர்ந்த தமிழர்களின் இலக்கியம்தான். இவ்விதம் புலம் பெயர்தல் சொந்த நாட்டினுள்ளாகவும் இருக்கலாம். அந்நிய மண் நாடியதாகவும் இருக்கலாம். எழுத்தாளர் தாஜின் ‘தங்ஙள் அமீர்‘ இரண்டாவது

வகையினைச் சேர்ந்தது. இந்தக் குறுநாவல் இரண்டு விடயங்களை மையமாகக் கொண்டது. மத்திய கிழக்கு நாடொன்றில் உணவுபொருட்களை இறக்குமதி செய்து மொத்த வியாபாரம் செய்யும் இந்திய இஸ்லாமிய சமூக வர்த்தகர்களின் செயற்பாடுகளை அதன் நெளிவு சுழிவுகளை மற்றும் மந்திர தந்திரங்கள் போன்ற மூட நம்பிக்கைகளின் தொடரும் ஆதிக்கத்தினை விபரிப்பது ஆகியவையே அவை. 'தங்கள் அமீர்' என்று குறு நாவலுக்குத் தலைப்பு வைத்திருந்தாலும், வாசித்து முடித்ததும் மனதில் நிற்பவை ரியாத்தில் நடைபெறும் வர்த்தகச் செயற்பாடுகளும், அங்குள்ள வர்த்தகர் இன்னொருவரைத் திருமணம் செய்து வாழ்ந்து வரும் தன் முதற் காதலியை மீண்டும் மணக்கத் துடிப்பதும், அதற்காக 'தங்கள் அமீரை'ப் பாவிப்பதும் தாம்.

இஸ்லாமிய சமூகத்தவர் மத்தியில் நிலவும் தலாக் கூறி விவாகரத்து செய்யும் செயற்பாட்டினை எவ்விதம் ஒருவர் தவறாகப் பாவிக்க முடியும் என்பதையும் அப்துல்லா அல்-ரவ் என்னும் பாத்திரம் மூலம் வெளிப்படுத்தும் குறுநாவலிது. உண்மையில் தங்கள் அமீர் நல்லதொரு பாத்திரப் படைப்பு. இக்குறுநாவலை இன்னும் விரிவாக்கி, தங்கள் அமீர் பாத்திரத்தை இன்னும் உயிரோட்டமுள்ளதாக்கி நல்லதொரு நாவலை இதே பெயரில் படைக்க தாஜுக்கு வாய்ப்பிருக்கிறது. அதனைப் பயன்படுத்துவாரானால் தமிழ் இலக்கிய உலகுக்குப் புலம் பெயர்ந்த தமிழ் இலக்கியத்தின் இன்னுமொரு முகத்தினைக் காட்டும் வாய்ப்பிருக்கிறது. அதே சமயம் குறுநாவலாக இருந்த போதிலும், மத்திய கிழக்கு நாடொன்றின் தமிழர் வர்த்தக வாழ்வை, அங்கும் மக்களின் மூட நம்பிக்கைகளை ஆதாரமாகக்கொண்டு தொடரும் பணம் பெருக்கும் வர்த்தகச் செயற்பாடுகளை விபரிக்கும் 'தங்கள் அமீர்' வித்தியாசமான, முக்கியமான படைப்பு. நாஞ்சில் நாடனின் 'மிதவை' (உள்ளூர் புலம் பெயர்தலை விபரிக்கும்), காஞ்சனா தாமோதரனின், ஜெயந்தி சங்கரின் , ப.சிங்காரத்தின் படைப்புகள் வரிசையில் தமிழக எழுத்தாளர் ஒருவரின் புலம் பெயர் அனுபவங்களின் பிரதிபலிப்பு சீர்காழி தாஜின் "தங்கள் அமீர்'. இக்குறுநாவலினைப் 'பதிவுகள்' வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள அனுப்பிய எழுத்தாளர் தாஜ் நன்றிக்குரியவர்.'

குறுநாவலை வாசிக்க - https://www/geotamil/com/index/php/2021-02-14-02-59-48/2075-2014-04-23-09-43-08

## மறக்க முடியாத காண்டேகர்!



என் பதின்ம வயதுகளில் வாசிப்பு வெறி பிடித்துத் தேடித் தேடி வாசித்த எழுத்தாளர்களில் காண்டேகருக்கு முக்கியமானதோர் இடமுண்டு. மராட்டிய எழுத்தாளரான காண்டேகர் தமிழில் மிகவும் புகழ்பெற்ற எழுத்தாளர்களில் ஒருவராக அறுபதுகளில், எழுபதுகளில் விளங்கிக் கொண்டிருந்தார். எழுத்தாளர் கா.சிறீ.சிறியின் சிறப்பான தமிழ் மொழிபெயர்ப்பில் வெளியான காண்டேகரின் நாவல்களைத் தமிழ் வாசகர்கள் விழுந்து விழுந்து படித்துக் கொண்டிருந்தார்கள். காண்டேகரின் பல படைப்புகள் பல தமிழில் வெளியான பின்னரே மராத்தியில் வெளியாகின என்று எழுத்தாளர் ஜெயமோகன் காண்டேகர் பற்றிய கட்டுரையொன்றில் குறிப்பிட்டிருந்தது நினைவுக்கு வருகின்றது. அவ்வளவுக்குக் காண்டேகரின் புகழ் தமிழ் இலக்கிய உலகில் பரவியிருந்தது.




'ராணிமுத்து' பிரசுரமாகக் காண்டேகரின் 'மனோரஞ்சிதம்'

காண்டேகரின் மீது அவ்வளவுக்குப் பற்று ஏற்படக் காரணங்களாக மானுடவாழ்க்கையின் சவால்களை மையமாக வைத்து அவர் உருவாக்கிய கதைக்களங்கள், அவரது படைப்புகளில் ஆங்காங்கே காணப்படும் வாசகர்தம் நெஞ்சங்களை எல்லாம் ஈர்க்கும் பொன்மொழிகள் ஆகியவற்றைக் கூறுவேன். அப்பொன் மொழிகளுக்காகவே வாசகர்கள் தேடித்தேடி அவரது படைப்புகளை வாசித்தார்கள். நானும் அவர்களிலொருவன். உதாரணத்துக்கு அவரது படைப்புகளில் காணப்பட்ட பொன்மொழிகள் சில॰

'வாழ்க்கை என்பது போர்க்களம் இதில் ரத்தமும் ரணங்களும் தவிர்க்க முடியாதவை் ஏனெனில் இவைதாம் வெற்றியைத் தீர்மானிக்கின்றன.

'வாழ்க்கை என்பது ஊஞ்சலில் உட்கார்ந்து ஊசலாடுவது அல்ல் புயலுக்கு நடுவே படகைச் செலுத்துவது போன்றது.

'விதி ஒரு போக்கிரிப் பையனை போன்றது் மனிதர்களின் அழகிய எண்ணங்களை அழித்து நாசம் செய்வதில்தான் அதற்கு ஆனந்தம்.

'வாழ்க்கை என்ற ஆற்றையோ, கடலையோ கடப்பதற்குப் பெண் என்ற படகோ, கப்பலோ அவசியம் தேவை

மனிதன் தனக்கு அநியாயம் இழைக்கும் முழு உலகத்தையும் எதிர்த்து நிற்க முடியும். ஆனால்,தான்

அநியாயமாக நடத்தும் ஒருவனின் எதிரில் நிமிர்ந்து நிற்கவே முடியாது.

காண்டேகரின் எழுத்துகளில் மிகுந்த மதிப்புக் கொண்டவர் அறிஞர் அண்ணா. அவர் காண்டேகரி பற்றிப் பின்வருமாறு கூறியிருப்பார்:

'சமூக அமைப்பு முறையிலே மிகப் புரட்சிகரமான மாறுதல் வேண்டும் என்பதற்கான போர் முரசு காண்டேகரின் கதைகள். வாழ்க்கையில் நாம் அனுபவிக்கும் முதல் காதல், அதுவும் அது நிறைவேறாத போது, காலம் முழுவதும் அந்த முதல் காதல் மனதில் நிறைந்துள்ளது. இதுபற்றிய காண்டேகரின் கருத்து அற்புதமானது. 'பஹிலே பிரேம்' என்ற நாவல் சார்ந்து காண்டேகர் எழுதியது, ' நாம் முதல் காதல் என்று கூறும் பொருள் உண்மையான காதலினின்றும் பெரிதும் வேறுபட்டது. சௌந்தர்யமே முதற் காதலின் உயிர். இளம் வயதில் ஆண், பெண் இருவரும் ஒருவரையொருவர் விரும்பி பின் எந்தக் காரணத்தாலோ பிரிந்தால், அவர்கள் உயிர்போகும் வரை அந்தக் காதல், அதன் நினைவு உள்ளத்தை விட்டு பிரிந்து அகலாது. பிறகு, இருவரும் வாழ்க்கையில் பிரிந்து வேறு மனிதர்களை மணம் புரிந்து கொண்டு இன்பமாகக் கூட வாழலாம். மன உறுத்தல் இல்லாமல் வாழலாம். ஆனால், முதன்முதலாக உள்ளத்தில் நிலைத்த காதல் அணையாது. அதை வேரறுத்துக் களைய முடியாது என்பதே இந்த நாவலின் நோக்கம்.' (நன்றி:தினமணி)

ராணிமுத்துப் பிரசுரமாக வெளியான காண்டேகரின் 'மனோரஞ்சிதம்' எனக்கு மிகவும் பிடித்த நாவல்களிலொன்றாக விளங்கியது. சாகித்திய அகாதெமி விருது. ஞானபீட விருது (யயாதி) உட்படப் பல்வேறு விருதுகளைப்பெற்றவை காண்டேகரின் படைப்புகள்.

இவரது முழுப்பெயர்: வி.ச. காண்டேகர் அல்லது வி. எஸ். காண்டேகர் (Vishnu Sakharam Khandekar)/ காண்டேகரின் நினைவு தினம் செப்டம்பர் 2. இவரைப்பற்றிய மேலதிகத்தகவல்களுக்கு : https://ta/wikipedia/org/s/2b8t



## பிரக்ஞை, பிரக்ஞையின்மை, நனவு மனம் மற்றும் நனவிலி மனம்!

நண்பர் மீராபாரதியின் 'பிரக்ஞை' வாசித்தேன். தமிழில் இதுபோன்ற நூல்களை எழுதுபவர்கள் ஆன்மிக அடிப்படையில் எழுதுவார்கள். அறிவியலை மறந்து விடுவார்கள் அல்லது தவிர்த்து விடுவார்கள். மீராபாரதி இந்தத் தவறினைச் செய்யவில்லை. மேற்படி நூலில் பிரக்ஞை பற்றிய மேலை நாட்டு அறிஞர்களின் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே மீரா பாரதி பிரக்ஞையினை அணுகி இருக்கின்றார். அவ்வப்போது பிரக்ஞை பற்றிய கீழை நாட்டுத தத்துவங்களையும் குறிப்பிட்டிருப்பார். எதிர் காலத்தில் பிரக்ஞை பற்றிய கீழை நாட்டுத்தத்துவங்களின் அடிப்படையிலான நூலொன்றினை எழுதவுள்ளதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார். மேற்படி நூலில் ஒரு விடயம் தான் எனக்குச் சிறிது நெருடலாக இருக்கிறது. சிந்திக்கும் மனதை, உணர்வுள்ள மனதை பிரக்ஞை என்போம். அதனை நனவு மனமென்றும் கூறுவர். உளவியல் அறிஞர்களின் ஆய்வுகளின்படி மனித மனமானது இரு தளங்களை உள்ளடக்கியுள்ளது. சிந்திக்கும் மனம் (Conscious Mind). சிந்தனைக்கும் அப்பாற்பட்ட ஆழ்மனம் (Unconscious Mind)/ இவ்விதமான மனதின் பிரிவுகளை மீராபாரதி முறையே பிரக்ஞை என்றும், பிரக்ஞையின்மை என்றும் குறிப்பிடுகின்றார். பிரக்ஞை என்பது சிந்திக்கும், உணரும் மனம் என்றால் (Conscious Mind). பிரக்ஞையின்மை என்பது சிந்திக்கும் மனம் அற்ற என்றுதான் பொருள்படும். அவ்விதம்தான் ஒரு சாதாரண மனிதர் புரிந்து கொள்வார். இதனை மீராபாரதியும் புரிந்து கொண்டிருக்கின்றார். அதனால்தான் அதுபற்றிய விளக்கமொன்றினையும் மேற்படி நூலின் பக்கம் 61இல் கீழ்வருமாறு தருகின்றார்:

' பிரக்ஞையின்மை தொடர்பாக எதிர்மறையான அல்லது தவறான கருத்தும் நிலவுகின்றது. அதாவது பிரக்ஞையின்மை என்பது பிரக்ஞை-அற்ற (Non - Consciousness) நிலை என்கின்ற நிலைப்பாடே அது. இது ஒரு தவறான புரிதலே. ஏனெனில் பிரக்ஞை அற்ற தன்மை என்பது பிரக்ஞை என்ற ஒன்று இல்லை என்பதைக் குறிப்பதாகும்.'

இவ்விதம் மீராபாரதி விளக்கம் தருவதற்கு நிர்ப்பந்தம் எதனால் ஏற்பட்டது? பிரக்ஞையின்மை என்று Unconsciousness என்னும் ஆங்கிலச் சொல்லை மொழி பெயர்த்திருப்பதால்தான். இதற்குப் பதில் மிகவும் இலகுவாக இன்னுமொரு அழகான தமிழ்ச் சொல்லை அவர் பாவித்திருக்கலாம். 'இவ்விதமாகப் பிரக்ஞையின்மை என்னும் சொல்லினை Unconsciousness என்னும் சொல்லின் தமிழ் மொழிபெயர்ப்பாகப் பாவிப்பதால் 'மனிதர்கள் பிரக்ஞையின்மையாகவே பெரும்பாலான நேரங்களில் வாழ்கின்றனர். (பக்கம் 2) போன்ற வசனங்கள் வாசிக்கும் ஒருவருக்குப் பொருள்மயக்கத்தை ஏற்படுத்திவிடுகின்றன. இதற்குப் பதில் 'மனிதர்கள் நனவிலிமனதின் ஆதிக்கத்தின் கீழேயே பெரும்பாலான நேரங்களில் வாழ்கின்றனர்' என்றிருந்தால் வாசிப்பவர் மிகவும் இலகுவாக விளங்கிக 'கொள்வாரல்லவா? ஈழத்து முற்போக்கு இலக்கியத்தின்

முன்னோடிகளில் ஒருவரான அறிஞர் அ.ந.கந்தசாமி மேற்படி இருவிதமான மனதின் பிரிவுகளையும் தனது 'வெற்றியின் இரகசியங்கள்' என்னும் உளவியல் நூலில் (தமிழகத்தில் பாரி பதிப்பக வெளியீடாக 1966இல் வெளியான நூல்) நனவு மனம் (Concious Mind) , நனவிலி மனம் (Unconscious Mind) என்று அழைத்திருப்பார். மேற்படி நனவு மனம், நனவிலி மனம் என்னும் சொற்களை வேறு யாராவது 1966ற்கு முன்னர் பாவித்திருக்கின்றார்களா என்று தெரியவில்லை. அது ஆய்வுக்குரிய விடயம். நூலாசிரியர் பிரக்ஞை மற்றும் பிரக்ஞையின்மை என்னும் சொற்களைப் பாவிப்பதன் மூலம் ஏற்படும் பொருட் குழப்பங்கள் நனவு மனம், நனவிலி மனம் போன்ற சொற்களைப் பாவிப்பதன் மூலம் தவிர்த்திருக்கலாம்.

நண்பர் பாரதிமோகனை சமூக, அரசியற் செயற்பாடுகளில் ஆர்வமுள்ள, தீவிரமாக ஈடுபட்ட ஒருவராகவே முதலில் அறிந்துகொண்டேன். தந்தையார் கரவை கந்தசாமியைப் போல் மிகுந்த தேடுதலும், வாசிப்பனுபவம் மிக்க அவர் தனது அனுபவங்களினூடு மீராபாரதியாக மலர்ந்துள்ளார். மேற்படி 'பிரக்ஞை' நூலின் முன்னுரையில் '..ஆனால் பிரக்ஞை தொடர்பான புதிய புரிதலானது, அரசியலில் இருந்து நான் ஒதுங்கிக் கொள்வதற்கான ஒரு காரணமாகியது.' என்று குறிப்பிடுகின்றார். அதனை என்னால் முற்றாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பிரக்ஞை பற்றிய புரிதலானது ஒருவரை எந்தத் தொழிலினைச் செய்தாலும், அதனை நன்கு செய்வதற்கு உதவுமொன்றாகவே நான் பார்க்கின்றேன். பிரக்ஞை பற்றிய அறிதலும், புரிதலும் ஒருவருக்கு அவர் செய்யும் தொழிலினைச் சிறப்பாகச் செய்வதற்கு நிச்சயமாக உதவுமொன்றாகவே நான் பார்க்கின்றேன். மீராபாரதியே பக்கம் 176இல் கூறுவதுபோல் 'ஆழமான அறிதல் அழகான ஆனந்தமான வாழ்க்கைக்கு அடித்தள'மல்லவா?



# எழுத்தாளர் அ.யேசுராசாவும், 'ஈழத்தின் முற்போக்குத்தமிழ் இலக்கியமும்', பிரச்சார எழுத்தும் பற்றி...

'மூகரம் 5' இலக்கிய மலரில் அட்டைப்பட ஆளுமையான எழுத்தாளர் அ.யேசுராசா அவர்களுடனான நேர்காணலொன்றும் வெளியாகியுள்ளது. அதிலவர் முற்போக்கு இலக்கியம் பற்றித்தெரிவித்துள்ள கருத்துகள் முக்கியமானவை.

அவர் முற்போக்கு இலக்கிய முகாமைச்சேர்ந்த எழுத்தாளர்களின் படைப்புகளை குறை, நிறைகளுடன் ஏற்றுக் கொள்கின்றார்.

பிரச்சாரமற்ற, கலைத் துவம் மிக்க படைப்புகளை வழங்கும் எழுத்தாளர்கள் என்று தான் கருதுபவர்களை அவர்தம் பங்களிப்புகளை அவர் ஏற்றுக்கொள்கின்றார்.

குறிப்பாக எழுத்தாளர் செ.கதிர்காமநாதன் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

'...எழுத்தாளர் செ. கதிர்காமநாதனின் எழுத்துகள் என்னைக் கவர்ந்துள்ளன. முற்போக்கு அணியினரின் படைப்புகளில் கலைத்துவத்தை மீறிப் பிரச்சாரம் தூக்கலாக உள்ளது என்ற குற்றச்சாட்டு உண்டு. செ. கதிர்காமநாதனின் பெரும்பாலான படைப்புகள் இக்குற்றச்சாட்டுக்குள் அகப்படாவென நினைக்கின்றேன். அவரது மொழிபெயர்ப்புப்பணியும் சிறப்பானது. அவர் இள வயதில் காலமாகாமல் இருந்திருந்தால், முற்போக்கு அணிக்கு மேலும் வளத்தைச் சேர்த்திருப்பார்.'

எழுத்தாளர் செ. யோகநாதனின் மொழி பெயர்ப்புகளை மேற்படி நேர்காணலில் அவர் சிலாகித்துள்ளார். அது பற்றி அவர் கூறியிருப்பதாவது:

'யோகநாதனின் கவிதை மொழிபெயர்ப்புகள் சிறப்பான தென்பேன். ஏனோ இதனைப் பலரும் கவனிப்பதில்லை. யோகன் என்ற பெயரில், எண்ணிக்கையில் குறைந்த, உயிர்த்துடிப்பு மிக்க கவிதை மொழிபெயர்ப்புகளைச் செய்துள்ளார். வசந்தம், அலை போன்ற இதழ்களில் அவை வெளிவந்துள்ளன..'

செம்பியன் செல்வன் பற்றிக் குறிப்பிடும்போது அவரது சிறுகதைகள் பலவற்றில் மிகை உணர்ச்சி வெளிப்பாடு பிசிறலாக இருக்கும், சொற்களைத் தேவைக்கு அதிகமாகவும் கையாள்வார் என்று விமர்சிக்கும் யேசுராசா அவர்கள் மேலும் பின்வருமாறு கூறுவார்:

'விமர்சன நோக்குடன் துணிந்து தனது கருத்துகளை வெளிப்படுத்திய கலகக்காரன் என்ற வகையில் முக்கியமானவர். அவரது இலக்கியப்பத்திகளும், கட்டுரைகளும் கவனிப்புக்குரியவை'.

தெளிவத்தை... பெனடிக்ற்பாலன் பற்றிக் குறிப்பிடுகையில் அவர் அதிக அளவில் எழுதினாலும், பெரும்பாலானவை பிரச்சாரப்படைப்புகளே. சில சிறுகதைகள் கவனிப்புக்குரியவை என்று கூறுகின்றார்.

பேராசிரியர் க. கைலாசபதி பற்றிக்குறிப்பிடுகையில் பின்வருமாறு கூறுகின்றார்:

'உயரதர வகுப்பில் படிக்கும் காலத்தில், பழந்தமிழ் இலக்கியம் பற்றிய க. கைலாசபதியின் கட்டுரைகளில் ஈடுபாடு கொண்டிருந்தேன். பழைய இலக்கியங்களைப் பற்றி எழுதும்போது பொருளாதார, அரசியல், சமூகச்சூழற் பின்னணியில் வைத்து அவற்றை அவர் விளக்கியது புதுமையாயிருந்தது. நவீன இலக்கியங்களில் சமூக, அரசியல்

பார்வைக்கு அழுத்தம் கொடுத்ததிலும் அவருக்கு முக்கிய பங்கு இருக்கிறது.'

அதே சமயம் கைலாசபதி அவர்களுடன் உடன்படாத விடயங்கள் பற்றியும் மேற்படி பதிலில் குறிப்பிட்டிருக்கின்றார். குறிப்பாகக் கலைத்துவம் முக்கியம் பெறாமை, தனி மனித அனுபவங்களை நிராகரித்தமை போன்ற கைலாசபதியின் கருத்துகளைத் தான் ஏற்கவில்லையென்று குறிப்பிடுகின்றார்.

மேற்படி நேர்காணலில் யேசுராசா அவர்கள் ஈழத்தமிழ் முற்போக்கு இலக்கியம் பற்றி, குறும்படங்கள் பற்றி, போரின் பின்னரான தமிழ் இலக்கியம் பற்றி, விடுதலைப்புலிகளின் காலத்துக் கலை, இலக்கிய முயற்சிகள் பற்றி, மாற்று சினிமா பற்றி, அலை சஞ்சிகை பற்றி, அவரது ஆரம்பகாலத்து இலக்கிய அனுபவங்கள் பற்றி, போர்க்கால மற்றும் தற்கால நாடக வளர்ச்சி பற்றி என்று பல்வேறு விடயங்களைப்பற்றித் தனது கருத்துகளைப் பகிர்ந்து கொண்ட இருக்கின்றார்.

இந்த நேர்காணலிலிருந்து ஒன்றைப்புரிந்து கொள்ள முடிகின்றது. அவர் ஈழத்தின் முற்போக்குத் தமிழ் இலக்கியத்தை நிராகரிக்கவில்லை என்பதுதான். முற்போக்குத்தமிழ் இலக்கியத்தினை அதன் குறை, நிறைகளுடன் ஏற்றுக் கொள்கின்றார் என்பதைத்தான். ஈழத்தின் முற்போக்குத்தமிழ் இலக்கியத்தினை ஒருபோதுமே நிராகரிக்க முடியாது. கலை, இலக்கியப் படைப்புகள் சமுதாயப்பிரக்ஞை மிக்கவையாக விளங்க வேண்டுமென்பதைப் புலப்படுத்தும் படைப்புகள் அவை. பிரச்சாரத்துக்காக அவர்களை படைப்புகளைப் பலர் நிராகரித்தாலும், பிரச்சாரம் என்பது முற்போக்கிலக்கியத்தின் தவர்க்க முடியாத அம்சங்களிலொன்று. ஏனென்றால் அமைப்பையே மாற்றி அமைப்பதற்காக , மக்கள் இலக்கியம் படைக்கப் புறப்பட்டவர்களுக்கு, மக்களை எழுச்சி பெற வைப்பதற்குப் பிரச்சாரமும் முக்கியமாகவிருந்தது. ஈழத்தமிழர்களின் தேசிய பிரச்சினையைக்கூட ஆரம்பத்தில் வர்க்கக் கண்ணோட்டத்தில் அவர்கள் அணுகினார்கள். அதனால்தான் ஈழத்து மக்கள் அனைவரினதும் ஒன்றுபட்ட வர்க்க ரீதியிலான புரட்சியே சரியான தீர்வு என்று வற்புறுத்தினார்கள். உண்மையில் அதுதான் சரியான தீர்வென்பதைத்தான் வரலாறு இன்று புலப்படுத்தியிருக்கின்றது. ஆனால் அவ்விதமானதொரு புரட்சி ஏற்படுவதைத் தடுப்பதற்காகவே சகல பிரிவினரும் தேசிய முரண்பாடுகளை ஊதிப்பற்ற வைப்பார்கள் என்பதையும் கவனத்திலெடுக்க வேண்டும்.


இதே சமயம் ஒரு கேள்வி பிரச்சாரம் என்பதற்காக ஒரு படைப்பினை நிராகரிக்க முடியுமா என்பதுதான் அது. பிரச்சாரம் கூட கலைத்துவம் மிக்கதொரு படைப்பாக விளங்க முடியும். உலக இலக்கியத்தில் இடம் பெற முடியும். இதற்கு முக்கிய உதாரணமாக புகழ்பெற்ற ருஷ்ய எழுத்தாளரான மிக்கயீல் ஷோலக்கவைக் குறிப்பிட முடியும். இவர் புரட்சிக்குப் பின்னரான உள்நாட்டுப் போரில், போல்ஷிவிக்குகளுடன் இணைந்துப் எதிர்ப்புரட்சிக்கு எதிராகப் போரிட்டவர். ருஷ்யப்படையில் பணி புரிந்தவர். இவரது நாவல்கள், சிறுகதைகள் பல இவரை உலகத்தின் சிறந்த எழுத்தாளர்கள் வரிசையில் வைக்கின்றன. இவரது மிஷா என்ற சிறுவனைப் பற்றிய சிறுகதை உண்மையில் கலைத்துவம் மிக்க அற்புதமானதொரு பிரச்சாரப் படைப்பே. ருஷ்யாவின் அக்டோபர் புரட்சியினை, அதன் நாயகர்களை முன்னிலைப்படுத்தும் ஒரு பிரச்சாரப் படைப்பாக இருந்த போதும், கதை கலைத்துவம் மிக்கதாகப் படைக்கப்பட்டுள்ளது. இவரது 'அமைதியாகப் பாய்கிறது டொன் ஆறு' மிகவும் புகழ்பெற்ற நாவல்களிலொன்று. மிக்கயீல் ஷோலக்காவ் இலக்கியத்துக்கான நோபல்பரிசு பெற்ற எழுத்தாளர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மிக்கயீல் ஷோலக்காவ் பற்றிய சோ.பத்மநாதனின் கட்டுரை எழுத்தாளர் யேசுராசா வெளியிடும் செய்திக்கடித வடிவமைப்பிலான 'தெரிதல்' இதழின் வைகாசி - ஆனி 2016 இதழில் வெளியாகியுள்ளது. அதில் மேற்படி மிக்கயீல் ஷோலக்காவின் சிறுகதை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

நன்றி: றஷ்மியின் அ.யேசுராசா ஓவியம் (கோமகன் வலைப்பதிவு)

## 'நிலக்கிளி' நாவல் பற்றிய சிந்தனைத்துளிகள்...

ஈழத்துத்தமிழ் நாவல்களில் அனைத்துக் குழுக்களாலும் தவிர்க்க முடியாததொரு படைப்பாகக் கருதக்கூடிய படைப்பு அ.பாலமனோரகனின் 'நிலக்கிளி'. அந்த ஒரு படைப்பின் மூலம் ஈழத்துத்தமிழ் இலக்கியத்தில் தனக்கென்றோர் இடத்தைப் பிடித்துக் கொண்டவர் அவர். வன்னி மண்ணின் மணம் கமழும் நல்லதொரு நாவல். நிலக்கிளி நல்லதொரு படிமம். நிலத்தில் பொந்துகள் அமைத்து கூடுகட்டி வாழும் அழகிய பறவைகள் நிலக்கிளிகள். இவை தாம் வசிக்கும் வளைகளை விட்டு அதிக உயரம் பறப்பதில்லை. இவ்விதம் நிலக்கிளிகளைப்பற்றிக் குறிப்பிடும் ஆசிரியர் பதஞ்சலியையும் அவ்விதமானதொரு நிலக்கிளியாக நாவலில் உருவகித்திருக்கின்றார்.



இந்த நாவல் என்னைக் கவர்ந்ததற்கு முக்கிய காரணங்கள்' வன்னி மண் வாசனை தவழும் எழுத்து மற்றும் பாத்திரப்படைப்பு (நாவலின் பாத்திரங்கள் அனைத்துமே உயிர்த் துடிப்புடன் படைக்கப்பட்டு இருக்கின்றன).

இந்த நிலக்கிளிகளைப்பற்றி நான் இந்நாவலைப் படிப்பதற்கு முன்னர் அறிந்திருக்கவில்லை. எனது பால்ய காலம் வன்னியின் ஒரு பகுதியாக வவுனியாவில் கழிந்திருந்தாலும் அங்கு நான் வாழ்ந்திருந்த காலத்தில் இவ்விதமானதொரு பறவையைப் பற்றிக் கேட்டதேயில்லை. நிலக்கிளி என்பது இன்னுமொரு பறவைக்கு பால மனோகரன் வைத்த பெயரா அல்லது உண்மையிலேயே அப்பெயரில் அழைக்கப்படுமொரு பறவை உள்ளதா? ஏனெனில் இன்று வரை எனக்கு 'நிலக்கிளி' என்னும் பறவை பற்றி 'நிலக்கிளி' நாவலில் வருவதை விட மேலதிகமான தகவல்களெதுவும் கிடைக்கவில்லை. 'நிலக்கிளி' பற்றி வன்னி நண்பர்கள் யாராவது மேலதிகத் தகவல்களிருப்பின் பகிர்ந்து கொள்ளவும்.

இந்த நாவலின் ஆரம்பம் முரலிப்பழம் பற்றிய வர்ணனையுடன் 'கார்த்திகை மாதத்தின் கடைசி நாட்கள்! அடிக்கடி பெய்த பெரு மழையில் குளித்த தண்ணிமுறிப்புக் காடுகள் பளிச்சென்றிருந்தன. ஈரலிப்பைச் சுமந்து வந்த காலையிளங் காற்றில் முரலிப் பழங்களின் இனிய மணம் தவழ்ந்து வந்தது' என்று ஆரம்பிக்கின்றது. நல்லதோர் ஆரம்பம். அந்த ஆரம்பமே நாவல் இயற்கை எழில் ததும்பும் வன்னி மண்ணின் மணம் கமழும் நாவலென்பதை எடுத்துக்காட்டி விடுகிறது. தொடர்ந்து வாசிக்க வேண்டுமென்ற ஆர்வத்தை ஏற்படுத்தி விடுகின்றது.

இந்த முரலிப்பழங்கள் எனக்கு வவுனியாவில் கழிந்த மாணவப்பருவத்தினை ஞாபகத்தில் எழச்செய்வது வழக்கம். வவுனியா மகா வித்தியாலயத்தின் வாசலுக்கு முன்பாகவிருந்த மரமொன்றின் கீழ் ஆச்சிமார்கள் சிலர் கடலை, பல்வகைப் பழங்களென கடகங்களில் கொண்டுவந்து விற்றுக் கொண்டிருப்பார்கள். பருவ மாறுதல்களுக்கேற்ப அவர்கள் கொண்டு வரும் பழங்களின் தன்மையும் மாறுவது வழக்கம். சில சமயங்களில் அவர்கள் 'முதலி'ப்பழம்தான் கொண்டு வருவார்கள். நிலக்கிளி நாவலை வாசிக்கும்மட்டும் அந்த முரலிப்பழங்கள் எனக்கு முதலிப்பழங்கள்தாம். அவ்விதம்தான் நாங்கள் அந்தப் பழங்களை அக்காலகட்டத்தில் குறிப்பிட்டுக் கொண்டிருந்தோம். அக்கால கட்டத்தில் 'முதலி'ப்பழங்கள் கரடிகளுக்கு மிகவும் பிடித்த பழங்களென்று கூறக் கேட்டிருக்கின்றோம். கரடிகளுக்கு மட்டுமல்ல மாணவர்களாகிய எங்களுக்கும் மிகவும் பிடித்த பழங்களாக அவை விளங்கினவென்றே கூறலாம்.

'நிலக்கிளி' நாவலில் வாசிப்பவர்களின் மனதையள்ளும் இயற்கை வர்ணனைகள் நிறையவே உள்ளன. அவற்றிலொன்று மாதிரிக்காக

'பதஞ்சலிக்கு தண்ணி முறிப்புக் கிராமத்தில் எல்லாமே மிகவும் பிடித்திருந்தன. அடர்ந்து கிடக்கும் இருண்ட காடுகள், அவற்றினூடாகச் சலசலத்தோடும் காட்டாறுகள், அவற்றின் கரையோரங்களில் கானமிசைக்கும் காட்டுப் பறவைகள் - இவையனைத்திலும் அவளுக்குக் கொள்ளை ஆசை! பருவத்தின் தலைவாசலில் அடியெடுத்து வைக்கத் தயாராய் இருக்கும் பதஞ்சலி, நடந்து திரிவது கிடையாது. சதா மான்குட்டியின் துள்ளலும் துடிப்புந்தான்! தண்ணிமுறிப்புக் காடுகளில் காணப்படும் மரைகள் நீலங் கலந்த கருநிறம் படைத்தவை. அழகிய கொம்புகளைத் தலையில் ஏந்தி, அவை கம்பீரமாக நடக்கையில் காண்பவர் நெஞ்சு ஒருதடவை நின்றுதான் பின் அடித்துக்கொள்ளும்! அத்தனை கம்பீரம்! '

எனக்கு அந்த நாவலில் பிடிக்காத முக்கியமானதொரு விடயம் நாவலின் நாயகியான பதஞ்சலி சந்தர்ப்ப சூழ்நிலைகளால் தன்னை இழந்ததற்குக் காரணமாகத் தன் அறிவுக்கண்ணைத் திறந்து விட்ட புத்தக வாசிப்பே காரணமென்றெண்ணி அவற்றைத் தீயிட்டு எரித்து விடுகின்றாள். அதனை என்னால் ஒரு போதுமே ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆனால் பதஞ்சலி நூல்களை எரிக்கும் காட்சியைப்பற்றி நூலாசிரியர் பின்வருமாறு விபரிப்பார்:' பிரசவப் படுக்கையால் எழுந்தவுடன் அவள் செய்த முதற் காரியம், தனக்கு உலக ரீதியான நாகரீகம், பண்பாடு என்ற பலவற்றைக் கூறிப் பலவீனமடையச் செய்த கதைப் புத்தகங்களை அடுப்பில் போட்டுக் கொளுத்தியதுதான்! அவை கொழுந்து விட்டெரிந்து சாம்பராவதற்கு முன்பே, அவள் அவற்றையும், அவை தனக்குக் காட்டிய புதிய உலகத்தையும், அதன் புதிய வாசல்களையும் அறவே மறந்து போனாள்.'

அவளுக்கு அறிவுக் கண்ணைக 'காட்டிய புத்தகங்கள் அவளைப் பலவீனமடையச் செய்து விட்டதாக ஆசிரியர் விபரிக்கின்றார். அவள் தன்னை மறந்து போனதற்குக் காரணம் புத்தகங்களல்ல. மானுடப் படைப்பின் பல பலவீனங்களே. அவள் புத்தகங்களைப் படித்திருக்கா விட்டாலும் அவள் அவ்விதம் தாம் அச்சூழலில் நடந்து கொண்டிருப்பாள். நாவலிலும் அதற்கான சூழலை ஆசிரியர் விரிவாகவே விபரித்திருப்பார். புயல் வீசுமிரவில் பதஞ்சலியும், ஆசிரியர் சுந்தரலிங்கமும் நிலை தடுமாறுவதை விரிவாகவே விபரித்திருப்பார். உண்மை இவ்விதமிருக்க எதற்காக எழுத்தாளரான ஆசிரியர் புத்தகங்கள் மீது இவ்வளவு வெறுப்பு கொண்டிருந்தாரோ தெரியவில்லை. புத்தகங்களைப் பற்றி வரும் அந்த வரிகளை நீக்கி விட்டாலும் அது நாவலில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை. எனவே எதிர்காலத்தில் வெளியாகும் 'நிலக்கிளி'யின் புதிய பதிப்புகளில் அவ்வரிகளை நீக்கி வெளியிட்டால் அது நாவலுக்கு இன்னும் வலுச்சேர்ப்பதாகவே அமையுமென்பதென் அபிப்பிராயம்.

'நிலக்கிளி'யுட்பட பல நாவல்கள் அக்காலகட்டத்தில்

நூலுருப் பெற்றதற்கு முக்கிய காரணங்களிலொன்று வீரகேசரி பதிப்பகம். அவ்விதம் அவர்கள் வெளியிடுவதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்றாக இருந்தது அக்காலகட்டத்தில் இலங்கையை ஆண்டு கொண்டிருந்த சிறிமா அம்மையாரின் பொருளாதாரக் கொள்கை. இறக்குமதிகளைக் குறைத்து அனைத்துத்துறைகளிலும் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் அமைந்திருந்தது அவரது பொருளாதாரக் கொள்கை. அதற்குக்காரணம் அவரது கட்சியினருடன் இலங்கையின் பிரபல இடதுசாரிக்கட்சிகளெல்லாம் கூட்டணி அமைத்திருந்ததுதான். விவசாயிகள் தொடக்கம், பதிப்பகங்கள், திரைப் படத் தயாரிப்பாளர்கள் எனப் பல்துறையினரும் இலாபம் அடைந்து கொண்டிருந்தார்கள். யாழ்ப்பாண விவசாயிகள் தொடக்கம், வன்னிக்குப் படையெடுத்து மிளகாய் வைத்து இலாபம் சம்பாதித்த விவசாயிகள் வரை விவசாயிகள் பலர் அக்காலகட்டத்தில் இலாபம் சம்பாதித்துக்கொண்டிருந்தார்கள். அது போல் அக்காலகட்டத்தில் இலங்கையில் பல தமிழ்த் திரைப்படங்கள் (கோமாளிகள், வாடைக்காற்று, நான் உங்கள் தோழன், புதிய காற்று என) வெளியாகி அவற்றில் சில (கோமாளிகள் போன்ற) நூறு நாள்களையும் கடந்து ஓடின.

வீரகேசரி பதிப்பகமும் அக்காலகட்டத்தில்தான் ஐம்பது நாவல்களை மாதாமாதம் வெளியிட்டு இலாபம் சம்பாதித்ததுடன், அதன் மூலம் ஈழத்துத்தமிழ் எழுத்தாளர்கள் பலரின் நூல்கள் வெளிவரவும் காரணமாக அமைந்தது. தமிழர்களுக்கெதிரான அரசியல் ரீதியான அடக்குமுறைகளைச் சிறிமா அரசாங்கம் கட்டவிழ்த்து விடாமலிருந்திருந்தால் உண்மையில் நாட்டின் பல்வேறு துறைகளுக்கும் மிகுந்த பயனுள்ளதொரு காலகட்டமாக அக்காலகட்டம் விளங்கியிருந்திருக்கும். 'நிலக்கிளி' நாவலைக்கீழுள்ள 'நூலகம்' இணையத்தள இணைப்பினில் வாசிக்கலாம்: http://noolaham/net/project/01/93/93/htm




## அஞ்சலி
## நவீன வானியற்பியல் அறிவியல் அறிஞர் ஸ்டீபன் ஹார்கிங் (1942-2018)

ஸ்டீபன் ஹார்கிங், அண்மைக்காலத்தில் எம்முடன் வாழ்ந்த தலைசிறந்த வானியற்பியற் துறை அறிஞர். தனது 76ஆவது வயதில் மார்ச் 14, 2018 தன்னியக்கத்தை நிறுத்தி விட்டார். இவரது அறிவு மட்டுமல்ல இவரது வாழ்க்கை கூட அனைவரையும், மருத்துவர்களையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கியதொன்று. இளமைப்பருவத்தில் தனது இருபத்தியிரண்டாவது வயதில் 'மோட்டார்நியூரோன்டிசீஸ்' என்னும் ஒருவகையான நரம்பு நோயால் உடல் நிலை பாதிக்கப்பட்டு, சக்கர நாற்காலியே வாழ்வாக அமைந்து விட்ட நிலையிலும், சிறிது காலமே வாழ்வார் என்று மருத்துவர்களால் காலக்கெடு விதிக்கப்பட்ட நிலையிலும் இவற்றையெல்லாம் மீறி இத்தனை ஆண்டுகள் இவர் வாழ்ந்திருக்கின்றார். கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சேர்.ஐசக் நியூட்டன் வகித்த பதவியினை வகித்திருக்கின்றார். திருமண வாழ்வில் ஈடுபட்டு தந்தையாக வாழ்ந்திருக்கின்றார். இவர் மூன்று குழந்தைகளுக்குத்தந்தை.

நவீன வானியற்பியற் துறைகளின் தந்தையான அல்பேர்ட் ஐன்ஸ்டைனின் சார்பியல் இயக்க மற்றும் கருந்துளைகள் பற்றிய ஆய்வில், சக்திச்சொட்டுப் பௌதிகத்தில் தன்னை ஈடுபடுத்தி மேலும் பல ஆய்வுகளைச் செய்திருக்கின்றார். அவற்றின் வாயிலாகப் பல முடிவுகளை, உண்மைகளை அறிய வைத்திருக்கின்றார். குறிப்பாகக் கருந்துளைகள் பற்றிய, நாம் வாழும் இப்பிரபஞ்சம் பற்றிய இவரது கோட்பாடுகள் நவீன வானியற்பியத்துறைக்கு வளம் சேர்ப்பவை. அறிவியல் அறிஞரான இவரால் பேச முடியாது. எழுத முடியாது. சக்கர நாற்காலியுடன் கூட இவருக்காக அமைக்கப்பட்ட இலத்திரனியல் மற்றும் கணினித்தொழில் நுட்பம் மூலமே இவரால் உரையாட முடிந்தது. எழுத முடிந்தது.

வானியற்பியற்றுறை பற்றிய சிறப்புச் சார்பியத்தத்துவம், பொதுச் சார்பியற் தத்துவம் மற்றும் சக்திச்சொட்டுப் பௌதிகம் (குவாண்டம் பிசிக்ஸ்) ஆகிய ஆல்பேர்ட் ஐன்ஸ்டைனின் கோட்பாடுகளை, ஏனைய நவீனக் கண்டுபிடிப்புகளை மற்றும் தனது கண்டுபிடிப்புகளை, ஆய்வுகளைச் சாதாரண மக்களுக்குப் புரியும் வகையில் இவர் எழுதிய 'காலத்தின் சுருக்கமான வரலாறு ' (A Brief History of Time) என்னும் நூல் மிகவும் புகழ் பெற்றது. எத்தனையோ பல பதிப்புகளைக் கண்டது. இன்றும் மீள்பதிப்புகளாக வெளியாகிக் கொண்டேயுள்ளது. இதுவரை பத்து மில்லியன் பிரதிகளுக்கும் அதிகமாக விற்பனையாகிச் சாதனை புரிந்துள்ளது. இது போல் இவர் மேலும் பல நூல்களை கருந்துளைகள் பற்றி, பிரபஞ்சத்தின் வடிவமைப்பு பற்றி எழுதியுள்ளார். இவரது பிரபஞ்சம் பற்றிய கோட்பாடுகள் ஆழமானவை. சிந்திக்க வைப்பவை. தனது கருத்துகளைச் சுவையாக, சில சமயங்களில் வேடிக்கையாகக் கூறுவதில் வல்லவர் இவர். இவரே முதலில் சார்பியற் தத்துவம் மற்றும் குவாண்டம் இயற்பியல் ஆகிய கோட்பாடுகள் இணைந்த கோட்பாடாக நவீன் வானியற்பியலை (Cosmology) வார்த்தெடுத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.




இவரது கருந்துளைகள் பற்றிய கோட்பாடுகளும் மிகுந்த புகழ் பெற்றவை. கருந்துளைகள் எதனையும் வெளிவிடாதவை என்று கருதப்பட்ட நிலையில் கருந்துளைகள் சக்தியை வெளிவிடுகின்றன என்றும், காலப்போக்கில் ஒன்றுமில்லாமலாகி மறைந்து விடுகின்றனவென்றும் கண்டறிந்தார். கருந்துளைகளின் இச்செயற்பாடே பின்னர் ஹார்கிங் கதிரியக்கம் என அறியப்படலாயிற்று.

கணிதவியல் அறிஞரான சேர் ரோயர் பென்ரோஸுடன் இணைந்து இவர் செய்த ஆய்வுகளின் விளைவாக ஐன்ஸ்டைனின் பொதுச்சார்பியற் கோட்பாடானது 'காலவெளி'யானது 'பெரு வெடிப்பில்' தொடக்கத்தையும், கருந்துளையில் முடிவினையும் கொண்டது என்பதை வெளிப்படுத்துகின்றது என்பதை எடுத்துக்காட்டினார்.

பல புகழ்பெற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தோன்றியுள்ள இவரது முதல் மனைவியான 'ஜேன் ஹார்கிங்'கின் (Jane Hawking) ஸ்டீபன் ஹார்கிங்குடனான அவரது வாழ்க்கையைப்பற்றி விபரிக்கும் நூலினை மையமாக வைத்து உருவான 'பிரிட்டிஷ்' திரைப்படமான The Theory of Everything சிறந்த நடிகருக்கான ஆஸ்கார் விருதினைப் பெற்றதும், மேலும் பலபிரிவுகளுக்குப் பரிந்து உரைக்கப்பட்டதும் குறிப்பிடத் தக்கது.

உடல் உபாதைகளுக்கு மத்தியில் இவரது நவீன வானியற்பியற் துறைக்கான பங்களிப்பானது மகத்தானது. இவரது வாழ்க்கையானது மானுடர்கள் வாழ்வின் வெற்றிக்கு மாதிரியாகக்கொள்ள வேண்டியதொரு வாழ்க்கை. நவீன இயற்பியலின், வானியற்பியலின் தந்தையான ஆல்பேர்ட் ஐன்ஸ்டைனின் பிறந்த நாளான மார்ச் பதினான்காம் திகதியில் அத்துறையில் ஐன்ஸ்டைனுக்குப் பின் மிகப்பெரிய அளவில் பங்களிப்பினை வழங்கிய ஸ்டீபன் ஹார்கிங்கின் மறைவு நிகழ்ந்தது தற்செயலானது, ஆனால் வியப்புக்குரியது.

## தமிழ்நதியின் 'பார்த்தீனியம்'

தமிழ்நதியின் 'பார்த்தீனியம்' நாவலின் முதற்கட்ட வாசிப்பின்போது அதன் வெளியீட்டு விழாவில் ஜான் மாஸ்ட்டர் கூறிய கருத்தொன்று ஞாபகத்துக்கு வந்தது. அவர் இதனை ஒரு கோணத்தில் பார்த்தால் ஒரு காதல் கதையாகவும் கொள்ளலாம் என்று குறிப்பிட்டிருந்தார். உண்மையில் எனக்கு வித்தியாசமான காதற் கதையாகத்தான் நாவலில் விபரிக்கப்பட்டிருந்த காதற்கதையும் தென்பட்டது.

நாவலின் பிரதான பாத்திரமான புலிகள் இயக்கத்தில் பரணி என்றழைக்கப்படும் போராளிக்கும், வானதி என்னும் பெண்ணுக்குமிடையிலான காதல் வாழ்வின் தொடக்கத்தில் அவன் இயக்கத்தில் சேர்ந்து , இந்தியாவுக்குப் பயிற்சிக்காகச் செல்கின்றான். செல்லும்போது 'எனக்காகக் காத்து




நிற்பீர்களா?’ என்று கேட்கின்றான். இவளும் அவனுக்காகக் காத்து நிற்பதாக உறுதியளிக்கின்றாள். அவ்விதமே நிற்கவும் செய்கின்றாள். இது உண்மையில் எனக்கு மிகுந்த வியப்பினைத் தந்தது. சொந்த பந்தங்களை, பந்த பாசங்களையெல்லாம் விட்டு விட்டு இயக்கத்துக்குச் செல்லும் ஒரு போராளி தான் விரும்பியவளிடம் தனக்காகக் காத்து நிற்க முடியுமா என்று கேட்கின்றான். போராட்ட வாழ்வில் என்னவெல்லாமோ நடக்கலாம், நிச்சயமற்ற இருப்பில் அமையப்போகும் வாழ்வில் இணையப் போகுமொருவன் தன் குடும்பத்தவர்களை விட்டுப் பிரிவதைப்போல, தன் காதலுக்குரியவளையும் விட்டுப் பிரிவதுதான் பொதுவான வழக்கம்.

ஆனால் இங்கு நாவலில் தன் வாழ்க்கையையே விடுதலைக்காக அர்ப்பணிக்கப்போகும் ஒருவன், ஏதோ வெளிநாட்டுக்கு வேலை பெற்றுச்செல்லும் ஒருவன் தான் விரும்பும் ஒருத்தியிடம் கேட்பதுபோல் கேட்டு உறுதிமொழி பெற்று விட்டுச் செல்கின்றான். இது நாவலின் புனைவுக்காக எழுதப்பட்டதாக இருக்க வேண்டும். உண்மையில் அவ்விதமான சூழலில் பிரியும் ஒருவன் தான் விரும்பும் ஒருத்தியைப் பார்த்து தன் எதிர்காலம் நிச்சயமற்றிருப்பதால், மீண்டும் வந்தால், இலட்சியக்கனவுகள் நிறைவேறினால், மீண்டும் இணையலாம் அல்லது அவள் தனக்காகக் காத்து நின்று வாழ்வினை வீணாக்கக் கூடாதென்று அறிவுரை செய்திருக்கத்தான் அதிகமான வாய்ப்புகளுள்ளன. போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொள்ளச் சென்றுவிட்ட அவனுக்காக அவளும் கனவுகளுடன் மீண்டும் இணைவதை எண்ணிக் காத்திருக்கின்றாள். இவ்விதமாக நகரும் வாழ்வில் அவள் யாழ் பல்கலைக்கழக அனுமதி பெற்றுச் செல்கின்றாள்.

நாட்டின் அரசியல் சூழல் மாறுகின்றது. அமைதி காக்கும் படையினர் என்ற போர்வையில் இந்தியா தன் படைகளை இலங்கைக்கு அனுப்புகின்றது. அக்காலகட்டத்தில் நிகழ்ந்த அமைதிப்படைக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையிலான மோதல்கள், அக்காலகட்டத்தில் நடைபெற்ற ஏனைய இயக்கங்களுக்கும், புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் (வடக்கில் நிகழ்ந்த ஈ.பி.ஆர்.எல்.எவ்வுடனான மோதல்கள், வன்னியில் நிகழ்ந்த தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்துடனான மோதல்கள்) விடுதலைப்புலிகளின் பார்வையில் விபரிக்கப்படுகின்றன. அக்காலகட்டத்தில் நடைபெற்ற இந்திய அமைதிப்படையினர் புரிந்த படுகொலைகள், பாலியல் வல்லுறவுகள் போன்றவற்றைப்பற்றி நாவல் எடுத்துரைக்கின்றது. மோதல்களினால், சிங்கள இனவாதிகளின் தாக்குதல்களினால் அடிக்கடி இடம் பெயர்ந்து செல்லும் வானதியின் குடும்பத்தினரின் நிலையும் நாவலில் விபரிக்கப்படுகின்றது.

தமிழ்நதி நாவலின் இறுதி வானதியின் காதல் எவ்விதம் முறிவடைக்கின்றது என்பதை விபரிப்பதுடன் முடிவுறுகின்றது. ஆரம்பத்தில் இயக்கத்தில் செல்லும்போது தனக்காகக் காத்திருக்க முடியுமா என்று வானதியிடம் கேட்டு, அவளது சம்மதத்தைப்பெறும் பரணி, இயக்கத்திலிருந்து விலகி அவளைத் தேடி வருகின்றான். அவனுக்காகவே அதுவரையில் காத்திருக்கும் வானதி அவனுடன்இணைந்துதன்வாழ்வினை ஆரம்பித்திருப்பாள் என்றுதான் பலர் எண்ணக்கூடும். ஆனால் நடந்தது வேறு. நாவலின் இடையில் ஒருமுறை பல சிரமங்களுக்கு உள்ளாகிப் போராளியாகச் செயற்படும் பரணியைச் சந்திக்கச் செல்லும் வானதியிடம் அவன் இனிமேல் இவ்விதம் தன்னை வந்து சந்திக்க வேண்டாமென்று கூறி அனுப்பி விடுகின்றான்.

மீண்டும் இயக்கத்தை விட்டு விலகி, அவளிடம் வந்து மீண்டும் அவள் மீதான தன் காதலைப் பரணி யாசிக்கும்போது, அவள் மறுத்து விடுகின்றாள். காரணம் அவன் மீண்டும் நிலைமை மாறினால், இயக்கத்துக்குத் திரும்பக்கூடும், தான் மிகுந்த சிரமங்களுடன் அவனைச் சந்திக்கச் சென்றபோது அவன் தன்னை மீண்டும் வந்து சந்திக்க வேண்டாமென்று கூறியது போன்ற காரணங்களினால் அவனது காதலை ஏற்க அவள் மறுத்து விடுகின்றாள். அவளது உணர்வுகளை நாவலாசிரியர் பின்வருமாறு விபரித்திருப்பார்:

‘நான் நாய்க்குட்டி போல உங்களைத் தேடி வர வர என்னிட்டை இருந்து நீங்கள் விலகி விலகிப்போனீங்கள். இனி இஞ்சை வரவேண்டாம் எண்டு கொஞ்சங்கூட இரக்கமில்லாமச் சொன்னீங்கள். கடைசியா ஈச்சங்குளத்திலை வைச்சு நீங்கள் சொன்னதும் அதைத்தான் ஒரு கட்டத்திலை ஏதோ மனசுக்குள்ள விட்டுப் போச்சு. இப்ப இயக்கத்தை விட்டிட்டு வந்து வாவெண்டு கூப்பிடுறீங்கள். பிறகு இயக்கம் உங்களை வாவெண்டு கூப்பிடேக்கை என்னை விட்டிட்டுப் போவீங்கள். விலகிப் போகவும் நெருங்கிவரவும் உங்களாலைமுடியிற மாதிரி என்னாலை முடியேல்லை’

வானதியின் உணர்வுகள் உண்மையிலேயே காதலா என்ற எண்ணத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருக்கின்றன நாவலின் இறுதியில் அவள் நடந்துகொள்ளும் முறை.

போராளியாகச் செயற்படும் ஒருவனைச் சந்திக்கச் செல்லும்போது அப்போராளி அவ்விதம் தன்னை


வந்து சந்திக்க வேண்டாம் என்பது இயல்பானது. ஆனால் அதே சமயம் போராடுவதற்காக அனைத்தையும் விட்டுச்செல்லும் போராளியொருவன், தனக்காகத் தான் விரும்பும், தன்னை விரும்பும் ஒருத்தியைக் காத்து நிற்கச்சொல்வதும் இயல்பானதா என்றால் சிறிது சந்தேகமே. பரணியின் மீதுள்ள காதலால் அவனுக்காகக் காத்து நிற்கும் வானதி, அவன் மிகவும் இலகுவாக அவளை நாடி வரும்போது அவனை நிராகரிக்கின்றாள். ஆனால் நாவலின் ஆரம்பத்தில் அவன் எல்லாவற்றையும் துறந்து போராடப் போகும்போது அவனுக்காகக் காத்து நிற்பதாக உறுதிமொழி அளிக்கின்றாள். உண்மையில் நாவலின் இறுதியில் அவனை அற்பக் காரணங்களுக்காக நிராகரிக்கும் வானதி, ஆரம்பத்தில் அவன் உறுதிமொழி கேட்கும்போது, 'நீங்களோ எல்லாவற்றையும் துறந்து போராடப் போகின்றீர்கள். உங்கள் வாழ்வோ நிரந்தரமற்றது. உங்களுக்காக நான் எவ்விதம் காத்து நிற்பது?' என்றல்லவா கேட்டிருக்க வேண்டும்.

சுருக்கமாகக் கூறப் போனால் பரணி, வானதி ஆகிய இருவருக்கிடையிலான நிறைவேறாத காதலை விபரிப்பதுதான் பார்த்தீனியத்தின் பிரதான கதை. அதனூடு, தமிழகத்தில் விடுதலைப்புலிகளின் இயக்கப்பயிற்சிகள் (ராதா, பொன்னம்மான் ஆகியோரிடம் பெறும் பயிற்சிகள்), அக்காலகட்டத்தில் பரணி விடுதலைப் புலிகளின் தலைவருடன் உரையாடுவது, தலைவரின் காதல் திருமணம், பின்னர் இந்தியப்படையினர் இலங்கையில் நடாத்திய மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள், அக்காலகட்டத்தில் பிற இயக்கங்களுடன் நடைபெற்ற மோதல்கள், பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள், இந்தியப்படையினர் அங்கு நடாத்திய மனித உரிமை அத்து மீறல்கள், படுகொலைகள் இவற்றையெல்லாம் விபரித்துச் செல்வதுதான் பார்த்தீனியம் நாவலின் பிரதான நோக்கம்.

அந்த இளைஞன் தீண்டாமைக் கொடுமைகளினால் அடைந்த உளவியல்ரீதியிலான பாதிப்புகளைப் போதிய அளவு விபரிக்காமல், அவனது உணர்வுகள் நாவலில் விபரிக்கப்பட்டிருப்பதாகவே தெரிகிறது. மேலும் இந்தப்பாத்திரமானது அதன் மீது நடத்தைப்படுகொலை செய்து விட்டு, அதனை நியாயப்படுத்தச் சுட்டுக்கொல்லப்படுவதைப் போன்று அமைக்கப் பட்டிருப்பதாகவே வாசிக்கும் ஒருவருக்குத் தெரியும்.

தமிழ் நதியின் பார்த்தீனியம் நாவலின் இறுதியில், இந்தியப்படையினர் நாட்டை விட்டுத் த ிரும்பிச் செல்கையில் தன் சார்பில் கட்டி அமைத்த 'தமிழ் தேசிய இராணுவ'த்துக்காக இளைஞர்களைச் சேர்ப்பதைப் பற்றியும் நாவல் விபரிக்கின்றது. அவ்விதம் சேர்க்கப்பட்ட தீண்டாமைக் கொடுமையினால் அதிகம் பாதிக்கப்பட்ட சமூகத்து இளைஞன் ஒருவனைப் பற்றியும் நாவல் விபரிக்கின்றது. தீண்டாமையினால் அவன் பாதிக்கப்பட்டபோது அவன் அடைந்த உணர்வுகளை விபரிப்பதற்குப் பதில், அவன் அதற்காகப் பழி வாங்குவதற்காக தமிழ்த் தேசிய இராணுவத்தில் சேர்வதாகவும், ஆனால் அவனது ஆசைகள் நிறைவேறுவதற்கு முன்னால், பிஸ்டல் குழுவினரால் சுட்டுக் கொல்லப்படுவதாகவும் நாவல் விபரிக்கின்றது.

இவ்விதம் தீண்டாமைக் கொடுமைகளினால் பாதிக்கப்பட்ட இளைஞனொருவனின் கதை கூறப்பட்டு அவன் முடிவு துரோகியாக முடிக்கப்பட்டிருப்பதை நாவல் தவிர்த்திருக்கலாம் என்ற உணர்வே வாசிக்கும்போது ஏற்பட்டது. அண்மையில் நடைபெற்ற நூல் வெளியீட்டிலும் ஜான் மாஸ்ட்டரும் இது பற்றிக் குறிப்பிடும்போது தாழ்த்தப்பட்ட இளைஞர் ஒருவராக வரும் பாத்திரம் இறுதியில் தீயவராகக் காட்டப்பட்டிருபதைத்




தவிர்த்திருக்கலாம் என்று குறிப்பிட்டிருந்தது ஞாபகத்துக்கு வந்தது. எனக்கும் அவரது கூற்றில் உடன்பாடே. ஏற்கனவே சமூகத்தில் பாதிப்புக்குள்ளாகிய சமூகமொன்றின் நிலை பற்றிய எதிர்மறையான எண்ணங்களுக்கு வலுச்சேர்ப்பதாக அவ்விதமான பாத்திரப்படைப்பு அமைந்து விடலாம். அந்த இளைஞன் தீண்டாமைக் கொடுமைகளினால் அடைந்த உளவியல்ரீதியிலான பாதிப்புகளைப் போதிய அளவு விபரிக்காமல், அவனது உணர்வுகள் நாவலில் விபரிக்கப்பட்டிருப்பதாகவே தெரிகிறது. மேலும் இந்தப்பாத்திரமானது அதன் மீது நடத்தைப்படுகொலை செய்து விட்டு, அதனை நியாயப்படுத்தச் சுட்டுக்கொல்லப்படுவதைப் போன்று அமைக்கப் பட்டிருப்பதாகவே வாசிக்கும் ஒருவருக்குத் தெரியும். எதிர்காலத்தில் இந்தப் பாத்திரப்படைப்பு மிகுந்த வாதப் பிரதிவாதங்களைக் கிளப்பப்போகின்றது. இதுபோல் நாவலில் இயக்க மோதல்கள் விபரிக்கப்படும் விதமும் வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தும் சாத்தியங்களுள்ளன. இவை 'பார்த்தீனியம்' மீதான என் முதற்கட்ட வாசிப்பின் எண்ணப்பதிவுகள். அ



நாவல் வாசிப்பனுபவம்

# ஆண்பால் உலகு




## நோயல் நடேசன்

நாவல் அல்லது சிறுகதைக்கு எது முக்கியமானது? எனக் கேட்டால், தொடர்ந்து வாசிக்கத் தூண்டும் தன்மையே என நான் சொல்வேன். அதாவது எடுத்த புத்தகத்தை முடிக்க வேண்டும் என்ற அவாவை வாசிப்பவர்களுக்கு அது மனதில் உருவாக்கவேண்டும்.

அறிவு, பொழுதுபோக்கு, மற்றும் ரசனை என பல காரணங்களோடு ஒரு புத்தகத்தை வாசிக்கும்போது, நான் கூறிய இக்கருத்து எக்காலத்திலும் பொருந்தும். ஆனால், திரைப்படம் தொலைக் காட்சியெனக் கவர்ச்சியான ஊடகங்களை பார்த்து ரசிக்கும் நம்காலத்தில் வாசிப்பவர்களுக்கு அவாவை உருவாக்குவது மிகவும் முக்கியமானது. பாடப்புத்தகம் ,மதப்புத்தமாக இருந்தால் மட்டுமே மனிதர்கள் இம்மையிலும் மறுமையிலும் முன்னேற்றம் அடைவதற்கு அவற்றை மனப்பாடம் செய்யும் தேவையிருக்கிறது. மேலும் நமது சமூகத்தில் புத்தகம் வாசிக்காததை பெருமையுடன் பலர் சொல்வார்கள்.

நல்ல புத்தகத்தை எப்படி தீர்மானிப்பது என்பது ஆளுக்கு ஆள் வித்தியாசப்படும். இதற்காக நான் வைத்திருக்கும் அஸ்திரமொன்று உண்டு. புத்தகத்தில் முதல் ஐம்பது பக்கங்களிலும் என்னைக் கவரும் தன்மை இல்லையென்றால் அதனை கீழே வைத்துவிடுவேன். ஒரு விதத்தில் கல்யாணத்திற்குப் பெண் பார்க்கப்போகும்போது முகம் பிடித்திருக்க வேண்டும் என்பது போன்றது. எனது இந்தப் பரீட்சையில் பல தமிழ் புத்தகங்கள் தேறாது விடும்.

இதனால் புதிய புத்தகங்களை படிக்காது விடுவது வழக்கம். தமிழிலும் ஆங்கிலத்திலும் சமமாக வாசிப்பவன் என்பதால் ஆங்கிலத்தில் பேசப்பட்ட செவ்வியல் நாவல்களே எனது கையில் வரும்.

எனது வாழ்நாள் சிறியது. அப்படியான காலத்தில் கஸ்டப்பட்டு தூக்கி முறிந்து வாசிப்பதற்கு என்ன தேவையுள்ளது என்ற நினைப்புடனே நான் செயல்படுவேன். பல தமிழ் எழுத்தாளர்கள், வாசகர்களை நினைத்து எழுதுவதில்லை என்பதால் பல புத்தகங்கள் எனது 50 பக்க பரீட்சையில் தோற்றுவிடும்.

பிரான்சில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எழுத்தாளர் அருந்ததியின் ‘ஆண்பால் உலகு‘ என்ற நாவல் எனது நண்பர் மூலம் கிடைத்தது. அருந்ததி பல காலமாக எனது முகநூலில் இருப்பவர். இதுவே அவரது முதலாவது நாவலாகும். இந்தப் புத்தகத்தை எடுத்தும் என்னால் கீழே வைக்க முடியாமல், இடைவெளியற்று வாசித்து முடித்தேன்.

கருப்பு பிரதியால் வெளியிடப்பட்ட 334 பக்கங்கள் கொண்ட இந்த நாவல் ஓட்டோபிக்சன் என்ற வகையைச் சேர்ந்தது. தான் சம்பந்தப்பட்ட விடயங்களை தன்னிலையிலும், சம்பந்தப்படாததை மூன்றாவது நபராகவும் இங்கு கதை சொல்லப்படுகிறது. யதார்த்தமான எளிய யாழ்பாணத்து பேச்சுத் தமிழ் நடையில் இந்த நாவல் செல்கிறது.

நாவலுக்கான பாத்திரங்கள் முழுமையாக உருவாகிப் பக்கங்களில் நடைபயின்று வருகின்றன. முக்கியமாக அம்மா, சின்னக்கா என்ற இரு பாத்திரங்களும் இந்த நாவலுக்கு இரு கால்கள் போன்றன. வாசித்து நாவலை மூடியவுடன் எங்களுடன் சேர்ந்து மனவெளியில் பலகாலம் உலாவும் தன்மையுள்ளன. அவர்கள் ஆண்களால் மற்றும் உறவினர்களால் நம்பவைக்கப்பட்டு, அல்லது இவர்களது அப்பாவித்தனத்தால் வஞ்சிக்கப்படுகிறார்கள். அந்த வஞ்சனையின் விளைவாக குடும்பத்தின் சிலுவைகளை பல வருடங்கள் சுமந்தபடியே மரணிக்கிறார்கள்.

நாவலின் கதாநாயகன் அரசரத்தினம், வில்லங்கமான பாத்திரம். நூறுவீதம் ஒரு கயவனாக ஒருவன் எப்படி வரமுடியுமோ அப்படி வருகிறது. அவனது கயமை சாதாரணமானதல்ல. தனது தவறுகளை பிற்காலத்திலாவது ஏற்று திருந்தும் தன்மையுள்ளவனுமல்ல. அல்லது ஏதாவது நியாயமான காரணத்தால் கயவனாகியவனுமல்ல. இவன்போன்று இலக்கியத்தில் அதிகம் கயவர்கள் இல்லை.

நான் படித்தவற்றில், பெற்ற பிள்ளைகளே அவர்களது தந்தையைகொல்ல விரும்பும் கயவனாக கரமசோவ் சகோதரர்கள் நாவலில் தந்தை பாத்திரத்தை தாஸ்தாவிஸ்கி சித்தரிக்கிறார். தனது மகனது காதலியை பெண்டாள

நினைப்பதுடன், அபலையான பெண்ணை பாலுறவுக்கு உள்ளாக்கி, பிறந்த பிள்ளையை வேலைக்காரனாக வீட்டில் வைத்திருப்பதுடன், மனைவியைக் கொடுமைப்படுத்தும் தந்தையாக வரும் (Fyodor Pavlovich Karamazov ) பாத்திரத்தை எவரும் மறக்கமுடியாது. ஆண்பால் உலகு நாவலில் வரும் அரசரத்தினம், அந்த பாத்திரத்தை எனக்கு நினைவு படுத்துகிறார். இப்படியான ஒரு பாத்திரத்தை நான் வாழ்ந்த யாழ்ப்பாண சமூகத்தில் உருவாக்க முடியுமா? என்ற வியப்பும் என்னுள்ளே ஏற்படுகிறது.

போர்க் காலத்தில் மட்டுமல்ல, போர்க்காலத்திற்கு முன்பும், போரின் பின்பாகவும் உள்ள யாழ்ப்பாண சமூகத்தின் குறுக்கு வெட்டு முகம் இந்த நாவலில் தரிசனமாவதுடன், பிரான்சில்வாழும் புலம் பெயர்ந்தவர்களும் இந்நாவலில் உலாவுகிறார்கள். ஒரு விதமான சமூகவியல் பண்பாட்டின் பதிவாக தோன்றும் இந்த நாவலைப் படிக்கும்போது, யாழ்ப்பாணத்தவரான என் போன்றவர்களுக்கு பெருமைப்பட எதுவுமில்லை என்று தோன்றுவதுடன், குயினையின் மருந்து நூனி நாக்கில் பட்டபோது ஏற்படும் கசப்புணர்வு ஏற்படுகிறது. மனிதகுலத்தில் அதுவும் ஆண்கள் மீது கசப்பை மட்டும் இங்கு வடித்துக் காட்டுகிறது.

இந்த நாவலில் போர், சாதியம், வர்க்கம் போன்ற பேதங்கள் பேசப்பட்ட போதும், அவற்றின் வட்டத்துக்குள் சுழலாது, மனித வாழ்வின் பிறழ்வுகள் கதையாக்கப்படுகிறது. நமது சமூகத்தின் கலாச்சாரம் பண்பாடு என்ற வெளித்தோற்றங்களை உரித்தெறியும் போது நிர்வாணமான தன்மை மட்டுமே தெரிகிறது. பல்லாண்டு கால கலாச்சாரம் என நாம் போற்றுவது வெறும் முகமூடியே என அழுத்தம் திருத்தமாக இந்த நாவல் அம்பலப்படுத்துகிறது.

இக்காலத்தைப்போன்று தெரபிஸ்ட், கவுன்சிலர் என மன அமைதிக்கு உதவுபவர்கள் இல்லாத அக்காலத்தில், மனிதர்கள் தங்கள் உள்ளத்துத் துயரத்தை மறைத்து கனத்த மனத்தோடு நடமாடுவார்கள். சந்தர்ப்பம் கிடைத்ததும் சுமையை இறக்குவதுபோல் வெளிக் கொணர்வார்கள். இறந்த வீட்டில் பல பெண்கள் அழுவதைப் பார்த்திருப்போம். அவர்கள் தங்களது சொந்த நெஞ்சுப் பாரத்தை மற்றவர்களது மரண வீட்டிற்குச் சென்று அங்கு இறக்கி வைக்கிறார்கள்.

இதேபோன்று எழுத்தாளனும் தொடர்ச்சியாக துன்பங்களை அனுபவித்து வரும்போது , தனக்கு கிடைக்கும் நேரத்தில் அதை எழுத்தின் மூலம் இறக்குவது இந்த வகையாகும்.

கற்பனையில்லாத விடயங்கள் எனத் தனது உரையில் அருந்ததி எழுதியிருப்பதால், இது தமிழினியின கூர்வாளின் நிழலில் அல்லது புஸ்பராணியின் அகாலம் போன்று மனதின் கசப்பை (Cathartic literature) வெளிக்கொணரும் இலக்கியங்களாகும்.

2500 வருடங்களுக்கு முன்பாக கிரேக்கர்கள் இந்தவகை எழுத்தை கதாரிக் எழுத்து என வகைப்படுத்தினார்கள்.

கூர்வாளின் நிழலில் மற்றும் அகாலம் என்பன அபுனைவானவை. இங்கு ‘ஆண்பால் உலகு’ புனைவாக வந்தாலும் பெரும்பகுதி உண்மையானவை என்பதை புரிந்து கொள்ளமுடிகிறது

இந்த நாவலில் நான் அவதானித்த முக்கியமான விடயம், போரை நடத்திச் செல்பவர்களால் சாதாரண மக்கள் படும் துன்பம். கதாசிரியர் சொல்லாது, அந்தப் பாத்திரங்களின் வார்த்தைகளில், அவர்களது வாழ்வின் மூலம் வெளியே வருகிறது. உதாரணமாக விடுதலைப்புலிகளால் விரட்டப்பட்ட பின்னர், யாழ்ப்பாணத்தில் தனது வீட்டை மலிவு விலைக்கு விற்க முன்வரும் இஸ்லாமிய இளைஞனும், விடுதலைப் போரில் இடுப்புக் கீழே கால் முறிந்த இளைஞனை ஒரு பெண் காதலிக்க முன் வந்த பின்பும் அவனை சமூகம் ஏளனமாக பார்த்து நகைப்பதால் அந்த ஜோடி ஒன்றாகத் தற்கொலை செய்வதும், இருபதினாயிரம் யூரோக்களை ஏப்பம் விட்ட நண்பனும் நமது சமூகத்தில் தொடர்ந்து நம்முடன் வாழும் அழியாத கோலங்கள்.

இந்த நாவலில் எனக்குக் குறையாகத் தெரிவது, மோசமான பாத்திரங்கள் எல்லாம் இறுதியிலும் பாதிப்படையவில்லை. நண்பனாக நடித்து சின்னக்காவை ஏமாற்றிய பாஸ்கரனும், கொலைக்கு காரணமான முக்கிய பாத்திரமான அரசரத்தினமும் மூன்று பெண்களை ஏமாற்றியதுடன் இறுதியில் அவுஸ்திரேலியாவுக்கு போய் நன்றாக வாழ்வதாகவும் சொல்லப்படுகிறது. பணத்தை ஏமாற்றியவர்கள் எந்த தண்டனையோ துன்பமோ அடைவதில்லை. அப்பாவிச் சிறுவனை கொலை செய்த விடுதலைப் புலிகள் அரசரட்ணத்தை தேடிவந்த போதும் அவன் இலகுவாக தப்புகிறான். யதார்த்தத்தில் கொடுமைகள் செய்பவர்கள் தப்புவது உண்மை என்றபோதும், குறைந்தபட்சம் இலக்கியத்தில் (Poetic justice) இவர்களுக்குத் தண்டனை கிடைக்கவேண்டுமென நான் விரும்புபவன்.

யாழ்ப்பாணம், சமூகம், விடுதலைப்புலிகள், ஆண்கள் எல்லாவற்றையும் நிறைவான (Positive)பாத்திரங்களாக பலர் தங்கள் நாவல்கள், சிறுகதைகளில் எழுதியுள்ளார்கள். ஆனால், அருந்ததி தனது எழுத்தின் உள்ளே கரிக்கோடுகளாக மட்டுமல்ல கோணல் மாணலான சித்திரங்களாக வரைந்துள்ளர். ஒரு விதத்தில் நமது உருவங்கள் உண்மையில் அப்படி இருப்பது நமக்குத் தெரியவில்லையா? யாராவது வரைந்து காட்டும்போது அதிர்ச்சிஏற்பட்டாலும், அதை மருந்தாக எமது சமூகம் விழுங்க வேண்டும் என்ற கட்டாயம் உள்ளது.

படிப்பவர்களுக்கு அதிர்வை கொடுக்கும் நாவலை படைத்த அருந்ததிக்கு எனது வாழ்த்துகள்.



# ‘ஒரு ஏதோ..!’

## அங்கும் இங்கும், எங்கும்
## ஒரு நீள் கதை

### ‘அதிகாரம் நான்கு’

சும்மா சொல்லி என்ன புண்ணியம்..??!!

எதையும் சும்மா சொல்ல முடியும். ‘இம்மா‘, சும்மா சொல்வதிலேதான்,- சூரன் மாதிரியும் சூரி மாதிரியும் வேளைகளில் சூரியன் மாதிரியும்;!!

சூர்யனின் புண்ணியத்தில் குளிர் காயும் ‘இந்தப்பூமி மனுஷம்‘, சும்மா; சும்மாவெல்லாம், உருட்டி, புரட்டி, அடித்து, உடைத்து விடுகிற பாவமான புண்ணியத்தைச் செய்வதும், ‘இம்மா‘ நாற்றத்தின் ஓரடி மூலம்.

இம்மாவில், பாவமான பாவம்,-சாஸ்வதமாய் ‘இருந்தது-இருக்கிறது-‘இருக்க‘ இருக்கிறது‘ என்பது போலத்தான், பாவமேயான புண்ணியமும் அமந்தறையாய் இருக்க இருக்கிறது;!

‘நான் மறந்து விட்டேன்,‘ என்று சொல்கையிலேயே துலாம்பரத்திலும் தெட்டமாக தெரிகிறதுதானே, மறக்கவில்லை, என்று. ‘நான் மறக்க முயல்கிறேன்,‘ என்-ற.று உண்மையைச் சொல்லாமல் விடக்காரணம்॰ பொய் சொல்ல முயலல் மட்டுமல்ல, உண்மை சொல்ல முயலாமையும் ஆகுமாம்.

‘நீ எனக்கு செய்த துரோகத்தை மறந்து விட்டேன்..!!‘ Seriously? இல்லை. மறக்கவில்லை. மனிதனாயிருப்பதும் மறப்பதும் ஒருசேர நடக்காது..!

அற-ளை.ழை பெயராப் பட்சத்தில், வயதுடன் நினைவு பிசிறும் தருண விதிவிலக்குகள் நீங்கலாய், இயல்பு-இயற்கை மறதிச்சுபாவர் தவிர்ந்து,- மறத்தல் என்பது, எப்படி முக்கினும் நிகழாது. அஃ தாவது, ‘மறந்து விட்டேன்,‘ என்று சொல்கையில், வாஸ்தவத்தில் மறந்து விட்டதென்றில்லை.

சரி. இதெல்லாம் போக, ‘மறந்தே விட்டேன்,‘ என்றான் இவண்.

சிறினோ சிறி சிறிசு

‘இல்லை,‘ என்று அதை மறுத்தான், குட்டிப்பீலா.

குட்டிப்பீலா, ‘குட்டிவிலா‘ அல்லன். ஆனால், பல விவகாரங்களில் கு. பீ., கு.வி. மாதிரித்தான். அவனது வண்டவாளங்கள், ‘தண்ட வளங்கள் ‘, ‘வில் புறிச்சான்‘ விளையாட்டுக்கள், ‘கிணிசு‘க்கதைகள், ஆட்ட பாட்டங்கள் என்கிற ஒரு தனி ஜாதியான விவகாரங்கள் பற்றியெல்லாம் ஒரு ஏழெட்டு மாதம் தொடர்ந்து விபரிக்க இடமுண்டு.

அம்மட்டுக்கு, Super-Interesting ஆன ஆள். படு முசுப்பாத்தியின் படு சேட்டையின் படு கட்டை. முட்டாள் மாதிரி அடிக்கடி ‘ஆநு; ஆநு..ஆங்;ஆநீ;.,‘ என கழுதை முக்கல் முக்கினாலும் அடிப்படையில் படு விவேகி என்று தான் சொல்ல வேண்டும். முசுப்பாத்தித்தரமும் விவேகத் தந்திரமும் அறிவுச்சுதந்திரமும் கொண்டவர் மிக்க சுவாரஸ்யமானமானவர், என இவண் என்றும் துணிவான்.

இவணுக்கும் இந்த ‘குட்டி‘ வகையறாக்களுக்கும் இடையான வாரப்பாடு ஏதோவொரு வகையில் கிலாரடிக்கும் சுவாரஸ்யம் கொண்டதுதான். இதை ‘குட்டி வாலாயம்‘ எனவும் அனுங்கலான தீர்க்கத்துடன் சொல்லலாம்.

இவண், இப்போது சம்பந்தப்பட்ட ‘இதில்‘ ‘இந்த ஏதோவொரு ஏதோவில்‘, அல்லது இப்போது இதில் சம்பந்தப்பட்ட ‘இவணின்‘ வாழ்வில், ‘குட்டிகள்‘ என்று கொஞ்சம் பலஹீனமாக, ஆனால், மரியாதைக்குறைவாக அல்ல,- குறிப்பிடப்படக்கூடிய மூவர் இருக்கிறார்கள் தான்.

அம்பிகை + சுசிவேணி + உஸோமி. இங்கு இவர்களைக் குறிப்பிடும்போது சக குறிதான் [+] இடப்பட வேண்டியிருக்கிறது; Backslash [/] அல்ல;.!!!

தவிரவும், ‘குட்டி‘யில் துவங்கும் விலா + பீலா + ஒலா என்று மூன்று வெடிவால்களும் ‘இதில்‘ இவணுக்கு உள்ளார்கள்;!!

குட்டிப்பீலா, தருணங்களில் கிளப்பும் வினாக்கள், உலகில் என்றுமே எவராலும் எழுப்பப்படாதவை- யே.யோ என எண்ணத் தோற்றும் உஸோமி நீங்க. அங்கு அது வருகிற விதம் அங்கதமாகவும் இருக்கும், வேளைகளில். திடுமென்று, ‘சும்மா hypothetically ஆகக்கேக்கிறன். உலகத்திலையுள்ள சகல மனிசரும் கடவுளை நம்பேல்லை, எண்டு வைச்சுக்கொள்ளுவம். அப்ப, கடவுள் என்ன செய்வார்;??!!‘ என்று கேட்டு- கேட்க,- இவண் ‘தெரியாது,‘ என்று சும்மா சொன்னால்,- தானாகவே, ‘ஒண்டுமே செய்யமாட்டார் ஒருவருமே நம்பாவிட்டால் இருக்க மாட்டார் தானே. பிறகென்னத்தைச் செய்யிறது..?!‘ என்று சொல்லி, தமாஸித்துச் சிரிப்பான். அது தமாஸ் அல்ல, தத்துவம் மாதிரியும் தோற்றும்.

ஒரு வகைச் சமன்பாட்டில், குட்டிப்பீலா உஸோமியின் ஆண் உரு மாதிரி. இன்னும் செம்மையாகச் சொல்லின், இருவரதும் வித்தியாஸமான உள்ளத்து உள்ளுள்ளுள்ள உள்ளர்த்தத்தில் உஸோமியே குட்டிப்பீலாவின் உருவேறிய, ஏறுருவான பெண் உரு ஆகவும் படும். இன்னும் உறுதியாகச் சொல்வதாயின், பின்னதே சரி, ஆகும். இன்னுமின்னும் சரியாகச் சொன்னால், எது சரி, எது பிழை, என்றதல்ல, இது. லோகத்தில் ஆண் பிள்ளையாய்ப் பிறந்த பெண்களும் பெண்பிள்ளையாய்ப் பிறந்த ஆண்களும் இருந்து, இறப்பதே நிஜம். எல்லோரும் மாறவென்ற, சத்திர சிகிச்சை செய்வதில்லை.

சரி. இதுவும் போக, ‘இல்லை. நீங்கள் மறக்கேல்லை பொய் சொல்லுறீங்கள்,‘ என்றான் குட்டிப்பீலா.

‘இல்லை, மறந்து விட்டன்,‘ என்று பொய் சொன்னான், இவண்.

‘எதை மறந்து விட்டீங்கள்..?!‘

‘நீ மறக்கேல்லை, எண்டு சொன்னதைத்தான்.‘

‘நான் எதை மறக்கேல்லை, எண்டு சொன்னேன்..?!‘

‘அம்பிகையை!‘

இவண் மாட்டுப்பட்டதை உணர்ந்தான். தான் அம்பிகையை மறந்ததாக தனது ‘வெளி மூளைக்கே‘ சொல்வது, உண்மையானதே அல்ல, என உணர்ந்தான். இருந்தாலும், அம்பிகையுடன், இப்போ எத்தொடர்பும் இல்லைத்தானே, என தன் ‘உள் மூளைக்கு‘ சால்ஜாப்பும் சொல்லிக் கொண்டான். வாழ்வில் தட்டுப்பட்ட, தடக்குப்பட்ட சிலரை மறக்கவே முடியாதென்பதை, நினைவு இடைக்கிடை வந்து ஞாபகமூட்டிச் செல்வதை உள் மூளையும் வெளி மூளையும் கிரஹிக்காமலும் போகலாம். தொடர்பும் நினைவும் ஒருமித்து இருக்கத் தேவையில்லை.

குட்டிப்பீலாவிடம் இவண் அடிக்கடி மாட்டுப்படுகிற தருணங்கள் அரிதானவை என்பதாலோ என்னவோ, ‘பீலா‘ இவணை விடுவதாக இல்லை.

‘மறந்ததெண்டு நினைச்சு மறக்காமல் மண்டைக்குள்ளை இருக்கிறவை, எத்தனை பேர்..?!‘

‘என்ன, எத்தனை பேரெண்டு கேட்டால்;??!!‘

‘எத்தனை பொம்பிளையள்..??!!‘

‘டேய்.., நீ சோலிக்கு வாறாய்..??!!‘

‘நான் சண்டைக்கு வரேல்லை. உள்ளதைச் சொல்லுங்கோ,‘

‘எந்த உள்ளதை, எங்கை உள்ளதை;??!!‘

‘உங்கடை உள்ளத்துக்கை உள்ளதை;!!‘

‘அப்பிடி ஆர்?? அங்கை ஒருத்தருமில்லை,‘

‘உது படு பொய்.‘

‘டேய்;.!! சரி. மூவாயிரம் பேர்;!! மூவாயிரத்தி எழுநூ ற்றி அறுவத்தெட்டு ஆக்கள் மண்டையுக்கை நிக்கினம். எல்லாம் பெட்டையள், பெண் புரசுகள் இப்ப உனக்கு சந்தோசமோ;.??!!‘

‘இல்லை. சந்தோசமில்லை. ஒரு விஷயத்தைப் பற்றின உண்மையை

சொல்லாமல் விட, சடார்ர்ர்ரெண்டு sarcastically ஆய் நளினம் விட்டு நெளிவெடுக்கிறது, ஒரு strategy/ அது momentarily ஆய் தப்பி ஓடத்தான் உதவும். உண்மை சொல்லாது. எனக்கு 3768 இல் மூவாயிரத்து எழுநூற்று அறுபத்தேழும் வேண்டாம். ஒண்டைப் பற்றித்தான் வேணும்' என்றேதோ - குழப்பத் தத்துவமேதோ கதைத்து இவணைக் குழப்பினான், குட்டிப்பீலா.

எரிச்சலில், 'shut up.' என்று பாய்ந்தான் இவண். குட்டிப்பீலா விடுவதாக இல்லை.

'சுசிவேணியையும் மறந்தாச்'சோ';??

;.ச்சோ(ஓ);.!!!!

அங்கு

சுசிவேணியை சாஸ்வதமும் மறக்க முடியாத வகைக்குத்தான் அது ஆரம்பித்தது. தூக்கை அம்மன் ஆலயத்தில் தான் அது வெடி கொண்டு வெடியுண்டது.

தேஸம் பூரா, ஊரான ஊரெல்லாம், இடமான இடமெல்லாம் சாமிகளுக்கு,- சிறிதாய், மத்திமமாய், பெரிதாய், ப்ரம்ம்மாண்ண்ண்டமாய் எல்லாம் 'வீடுகள்' இருப்பினும், அவற்றின் புகழ், அட்ட'ட்டட்ட'ஹாஸ ஆராதனை, ஆர்ப்பரிப்பு, ஆரவாரம், நிவேதிப்பு, பெரு-பெரு திருவிழா;., என்பன எல்லாமே அவை சின்னவீடா, பெரிய வீடா, என்பதைப் பொறுத்து அமைவது வேடிக்கையான யதார்த்தம்.

இதெல்லாம் மனித மண்டையை மட்டுமே பொறுத்தது போல் அது நம்புவதைப் பொறுத்தது. எதை நம்புகிறது என்பதிலும் எதை நம்பாமல் விடுகிறது, என்பதைப் பொறுத்தது. இது ஒரு குறிப்பிட்ட மார்க்கத்துக்கு மட்டுமே என்று கிடப்பதில்லை எல்லாவற்றிற்கும் கிடைப்பதும் எல்லாவற்றுள்ளும் கிடப்பதும்.

அந்த தூக்கை அம்மன் ஆலய வெடியையும் அதையண்டி கண்ட வெடியையும் உண்ட வெடியையும் உண்டான வெடியையும் இவண் இப்போதெல்லாம் மறந்து விட்டதாகத்தான் பொய்ச்சுயமாக நடித்துக் கொண்டான் அடிக்கடி. கூடுதலாக தனக்குத் 'தானே-தானே' தான் நடித்துக்கொண்டான். எப்படித்தான் மறக்க நடித்தாலும் நடிக்க மறுத்தாலும் மண்டையில் கீறியதை சுயமாக தன்னளவில் அழிக்க முடியாது. அது மண்டையின் கபாலத்துள், உள்ளோட்டில் கண்ணுக்கு தெரியா குறுணிச்சுவடாயும் மனத்துள், உள்ளிழையத்தில் இரத்த குறு குழாய் மச்சமாயும் எலும்பு ஆழத்தில் இரத்தக்கூறு மஜ்ஜையாயும் தவமிருக்கும்.

அம்பிகையை மறத்தல் மாதிரித்தான் சுசிவேணி மறத்தலும்.

செம்மையான உண்மை இன்னமும் எப்போதும் இருவரையும் மறந்து விடவில்லை, என்பதுவேயாம்.

சுசிவேணியுடனான ஆரம்பப் பரிச்சயமானது,- இவனது முதல்,- குதிரும் பராய அருட்டலுக்குள்ளான அக-புற உணர்வு-உறவு தூ ண்டலின் முதல்முதல் பொறி வெடிப்பான,- அம்பிகையுடனான பரிச்சயம் போல் இருக்கவில்லை. கொஞ்சம் வித்தியாசமானது. கூர்ந்த நோக்கில் நோக்கினால் படு வித்தியாசமானதாகவே படும்.

நெல்லிப்பளாய் தூக்கை அம்மனுக்கு படு(ஊ) தூக்கலான மவுசு இருந்தது. அறம்புறத்திலும் அறம் புறமானதும் 'புறத்தி'யானதும் ஆன படு(ஊ) தூ(ஊ)க்கலான மவுசு அது. அம்மன் சந்நிதிக்கு வருவோரில் எங்கச்சக்கமானவர், படு இளசுகள் தான். அதிகப்படியான, அவர்களது தரிசனமானது சாமிச்சிக்குப் படைக்கும் நைவேத்தியம், சாமிகள். சாமிச்சிகள் அருளும் பிரசாதம் என்ற குழப்பமான 'கொடுக்கல்-வாங்கலின்' பாற்பட்டது. கும்பிடலின் பாற்பட்டதல்ல. அஃதாவது, இறை எனப்படும் 'இன்னோர்' மட்டத்து பரம்.பரத்தி ஆகிய சாமிச்சியை கும்பிடல் சார்ந்ததல்ல. அது, 'இந்த லோக மட்டத்து', இருகால் கொண்ட, ஒருகால் ஆயினும், நாள் வாழ்வில் மனத்தவண்டை அடித்து, நாறிய 'சாமி-ச்சி'கள் சம்பந்தமானது. இதை படெளிமையாய்ச் சொன்னால், 'பொடியளுக்கு sight அடிக்க பொட்டைகளும் வாலைகளுக்கு சைற் அடிக்க வாலிபரும்' கோவில் பிரகாரத்தில் கும்பிடல் என்ற பாஸாங்கில் கூடுதல், என்று ஆகும்.

அன்றைய ஆரம்ப பரிச்சயத்தில், தூ க்கை அம்மன் கோவிலில், இருகால் சாமியனாக இருந்தவன், இவண் இருந்தவள், சுசிவேணி.

நெல்லிப்பளாய் தூக்கை அம்பிகை ஆலயத்தில், காலோகால ஊர் வழமைக்கு விரோதமாக, ஒரு மாதுவேதான் தலைச்சியாக இருந்தார். 'ஆம்பிளை' அதிகார லோகத்தில் இது ஆச்சர்யம். 'பொம்பிளை'களை பெரு விவகாரங்களிலிருந்து புறங்கட்டி, கரையின் கரையில் ஒதுக்கும் மனுஷ வகுப்பில் இந்த அங்கம்மா என்ற அம்மா தலையாரியானது, படாச்சர்யந்தான்.

அன்று, அங்கம்மாவின் முன்னெடுப்பில் சாமி புகழ் பாடும் இன்னோர் அங்கத்தைய, பிரபல இந்திய அம்மாவை நிறைய பணங்கட்டி, இந்த தூக்கை அம்பிகை கோவிலுக்கு பாட கூப்பிட்டிருந்தனர். ஊரூரெல்லாம், பாட்டு அம்மா பாட வருவதான செய்தி பறந்து பாட்டம்மா பாடுவதைப் பார்க்க-கேட்க, நாலு திசையிருந்தும் கொடி கட்டி வந்து குவிந்தது சனத்திரள்.

மதியத்திலிருந்தே நெல்லிப்ப ளாயிலும் சூழூர்களிலும், சூழல் கறுத்து, மரமெரி புகை போல வளி கனத்து, கண் காணா வகைக்கு சோர்ந்த நபுஞ்சக சூர்யனின் பாதி ஒளி ஈனமாய் பிசுறுண்டு, ஒன்றையொன்று துரத்திக் கலைத்து, கலவிக்கு முயன்று,- ஆனாலும், தோற்று, கடைசிவரை தொடவோ, கலக்கவோ சாத்தியமாகாமல் மெதுவாக கிழக்குக்கு நகர்ந்த சூல் மழை மேகங்கள் 'இந்தா கொட்டுவேன் அந்தா கொட்டுவேன்,' என்று வெருட்டியிருந்தும்,- நாலு திசையிருந்தும் சனம் கொடிகட்டி வந்து குவிந்தது, திரளாய். பாட்டம்மாவின் பாட்டாட்ட கொண்டாட்டத்தை மழை சோனாவாரித்து நாற்றும் என்பது போல மாலை மைம்மல் இராவிருட்டாய் உருவேறியும்

சனம் அதை அசட்டை செய்து, பாட்டம்மாவை நாடித்திரண்டது. இவனும் போனான். ஆவளைப்பிள்ளையார் கோவில் தெற்கு வீதியிலிருந்து புறப்பட்டு, பல் தொழில் செய்யக்கூடியதென்று பிரபலமான, சின்ன உழவு வாகனத்தின் பின்பெட்டி நீள் விளிம்பு குந்து பலகையில் குந்தியபடிக்கு பன்னிருபேர் பாட்டம்மாவாகிய பாட்டம்பாளைப் பார்க்க நெல்லிப்பளாய் தூ க்கை அம்மன் ஆலயத்துக்கு போயினர். பன்னிரண்டில் ஒராள் இவண். வீட்டுக்கூட்டத்துடன் போயிருந்தான்.

முதலேயே எல்லோருக்குமே தெரிந்ததுதான். வானப்படங்கு கிழிந்து மழைக்கணைகள் பூமியை குத்துமென்று. ஆவளைக் கோவிலடியிலிருந்து கிளம்பி, வெள்ளவாய்க்கால் பெரு ஒழுங்கையிலிருந்து கிழக்கே திரும்பி, சற்றேறிய இடச்சு வீதியில் நகர்ந்து அங்கானை-அல்லை வீதியிலேறி சூசையப்பர் தேவாலயத்தை அண்மிக்கமுன் படங்கு பிய்ந்து மழை வெக்கை மண்ணில் மோதியது. வாகனத்தில் குந்தியிருந்தவர்களும் முரண்டினர். ரொம்ப தீவிரமான விஷயம் கிடையாதெனினும் தமக்குள் முரண்டினர், அவர்கள். 'மழை கொட்டோ கொட்டொண்டு கொட்டப்போகுது் உங்கை போய் தெப்பமாய் தோயாமல் வீட்டுக்கு போவம்,' என்று ஐந்தாறு பேர் கொண்ட குழு சொல்ல, மிச்சம் பேர் அதற்கெதிராய் கருத்துச் சொல்லி, தமக்குள் சர்ச்சித்தனர். 'மினைக்கெட்டு வெளுக்கிட்டாச்சு. இனி, எந்தச் சென்மத்திலை பாட்டம்பாளின்ரை பாட்டை கேக்கிறது,' என்று கொடிச்சிவாலிக்கிழவி, அடாது அடைமழை பெய்தாலும் விடாது நெல்லியூர் அம்பிகாலய பாட்டுக் கச்சேரிக்கு போகவே வேண்டுமென்று நாண்டு கொண்டு நின்றது. இவணின் வீட்டார் அரை மனதுடன் போவதை ஆதரிக்க,, இவன் ஏதும் பறையாமல் வாயடை காத்தான். மனதுள் பாட்டுக்கேட்கும் ஆசை பலமாய் இருந்தது.

ஒரு சிறு குழு மனிதரிடை'யேயே' எப்படி எதிரெதிர் கருத்துகள் அடிபடுமென்பதற்கும் கருத்திருந்தும் அதைச்சொல்லாமல் கருத்தொழிய ஒளிவோரும் உளர், என்பதற்கும்,- இந்த சிற்றுழவு வாகனத்தில் குந்தியிருந்து, 'பாட்டுக்குப்போன' பன்னிருவர் உதாரணமாயினர்.

பெருந்தெருவிலிருந்து உள்ளற இருந்தது தூக்கையின் கோவில். கருஞ்சிலையாய் கருப்பக்கிரஹத்தில் நிலையெடுத்திருந்த அவளது சிங்க,. பலிபீட.துவஜத்தம்பம் முன்னான மண்டப முன், முன்றலில், எக்கச்சக்கமான சனம் வளையவர இருந்து, பார்க்கக்கூடிய மாதிரி, ஒரு Amphitheater வலைப்பில் பெரிய, உயர மேடை போட்டு, பாட்டுக்கு வகை செய்திருந்தனர்.

'பானப்பழத்தை நசித்து, பழ 'வைன்' மதுச்சாறுண்ணவும் கொடுத்த இறைவா(ஆ)..;! நீ திராட்சைப் பழத்தை நசித்து, பழ வைன் குடிச்சாறுண்வும் கொடுத்த நல்ல குருதூதன், உனக்கென்ன விதம் இக்'கணிகை'யை' என்ற பாட்டம்பாளின் மூன்றாவது பாட்டுடன், கொஞ்சம் அடங்கியிருந்த சூல் மேகம் சூழ் வானப்படலம் தெறியுண்டு, வெடியுண்டு சிதைந்து, மழை கடூரமாய்க் கொட்டியது. வியப்புகரமாக, எப்போதுமில்லாதவாறு கனத்த நிறை மழைத்துளிகள் பொழிந்தன. வெளியில் வேடிக்கை பார்த்த பக்த மஹாமக்கள், கும்பலாய் மழைக்கொதுங்க, முன் மண்டபத்திற்கு ஓடத்துவங்கினர். மனிதர் சுபாவபே 'தான் தப்ப;தான் தப்ப;.' தானே. 'தான் மட்டுமே முதலில் தப்ப;.தான் சார்ந்தாரே முதலில் தப்ப;.' என்ற 'தான்-நலம்' ஆன தன்னலம் தானே அது.

தாம் மழையிலிருந்து தப்பவென தடக்குப்பட்டு,- பாட்டுக் கேட்கவென வந்த சனக்கூட்டம் 'ஓண்டிமண்டியாய்' ஒரே நேரத்தில் கோவில் துவாரபாலகயக்கர் காவல் செய்த கட்டடத்துள்ளும் எரி எண்ணெய், குங்குலிய, கர்ப்பூர நெடி கலந்து பரவும் உள்வீதி உள்ளும் உள்ளிட ஓடிற்று. பாட்டு அம்பாளை கிட்ட நின்று பார்க்கவென்று 'சனம் விலத்தி' நுள்ளான் நகர்வதாய் 'பூந்தோடி' மேடையடியடைந்த இவணும் சனம் கோவிலில் புக ஓடியதைக்கண்டு, ஓடினான். அது மழையில் நனைவதைத் தவிர்க்கவென்பதிலும் செம்மறி மந்தை செய்வதை பின் தொடர்ந்து செய்வதாகவே இருந்தது. அதப்போ, அவனுக்கு தெரிந்திருக்கவில்லை. தன்பாட்டில் வருவது 'தான் தப்ப' என்றிருப்பினும், இது அவனுக்கு 'தான் செம்மறிகள் போகும் வழியில் போக' என்றே இருந்தது.

'பாட்டுப்பார்க்க' குவிந்த ஆயிரக்கணக்கிலான சனம் உள்ளிடுவதற்கு, ஆலய முன் மண்டபமோ அல்லது உட்பிரகாரமோ கொஞ்சமும் போதாது. 'தான்தப்ப' ச்சனங்கள் தள்ளுமுள்ளில் முண்டியடித்து இடிபட்டதில், ஆட்களிடையே சச்சரவும் கிளைத்தது° 'டேய்;ஏனடா இடிக்கிறாய்..?!'

'முன்னுக்குப் போவன்.'

'முன்னுக்கு எங்கை கிடக்கு, இடம் போறதுக்கு..?!'

'இடிச்சுக்கொண்டு போவன். இடம் தானாய் வரும்.'

'இஞ்சை வா. நீ வந்து இடிச்சுக்கொண்டு போ. நான் பின்னாலை வாறன்.' சும்மா ஒரு பாட்டுப்பார்க்க வந்து, கடைசியில், அடிபிடி-குடுமிபிடி சண்டையில் முடியும் தறுவாயாய் போயிற்று, இந்த மழைக்கொதுங்கும் சமாச்சாரம். மழைக்கொதுங்கவே போரென்றால், நிஜமான போரில் என்னவெல்லாம் நடக்கும்;?!

'குறுக்காலை போவாளே;!! ஏனெடியாத்தை காலை உழக்கிக்கொண்டு போறாய்;?!' என்று துவங்கி, படு(ஊ) கேவலமான வார்த்தைகளால் வசைத்த குரல், செவிக்கு பழக்கப்பட்ட குரலேயென்று திரும்பிப் பார்த்தான், இவண்.

கொடிச்சிவாலிக்கிழவி;!!!

மனுஷியின் கோரத்திட்டலை கேட்க மனமொவ்வாமல் எட்ட எட்டி

வைத்து முன் ஏறுகையில் தான், அந்த இடி. எதிர்பாரா வகைக்கு, திடுமென்றுதான் நடந்தது. நெருக்கமாய் முன் நகர்ந்த ஒரு கூட்டம் பெண்கள் மழைக்கு ஒதுங்க மண்டபத்துள் நுழைகையில் இவனும் நுழைய, அவர்கள் தட்டுத்தடுமாறி குவிய, இவன் இடிபடுவதைத் தவிர்க்கவென்று, 'இங்காறப்பக்கமாய் பாய்கிறேனென்று' அங்காறப்பக்கமாய் பாய்ந்து, இவர்களில் 'இங்காலும் அங்காலும்' மோத;;.'போச்சு';.!!!!

இடி. வெடி. இடி வெடி

இவன் நினையாப்பிரகாரமாய் இடித்த தடக்கலில் மூவர் தடுமாறி மண்டப சீமெனற் தளத்தில் வீழ்ந்தனர். மஞ்சல் சரிகைச்சேலை உடுத்தியிருந்த அம்மாக்காரி. வயல் பச்சை + கடல் பச்சை நிறங்களில், கிட்டமட்ட ஒரே கோலத்தில் அரைச்சேலை கட்டிய இருவரும் அக்கை தங்கைகள். இவனுக்கு 'ஒரு ஏதோ' வகையில் கோவில்களில் கன்னி ராசி வாலாயம் நேர்ந்து விட்டாற்போல்;.!!!! கோவில்களில் அபிஷேகம் நிகழுவது மாதிரி இவனுக்கு அங்கேயெல்லாம் அதிசயங்கள் நடந்து விடுகின்றன. அம்மா சுதாகரித்து எழுந்தாலும் அக்கை, தங்கையர் இரண்டு மூன்று கணங்கள் நிலத்தில் பரத்திய பின்னர்தான், நிலையையும் நிலமையையும் செம்மைப்படுத்தி, நாணப்பட்டு எழுந்தனர். எழமுன் அக்காக்காரி தரையில் வீழ்ந்திருந்த கோலம்,- அரைச்சேலையும் நீளப்பாவாடையும் வயல். கடல் பச்சை வர்ண வண்ணத்தில் ஒரு கோல மயில் தோகை விரித்தால் போலிருந்தது, இவனுக்கு. வீழ்த்திய இவனும் வீழ்ந்த அவளும் ஒருகணம் ஆளையாள் நோக்கிக் கொண்டனர். இது இவனுக்கு ஏலவே ஒரு தடவை நடந்துள்ளதுதான். ஆவளைப்பிள்ளையார் கோவிலில் இவனது 'முதலாளின்' 'அண்ணலும் நோக்கினாள் அவளும் நோக்கினாள்', இன் இரண்டாவது..!!!!

அது, ஒரு கணப்பார்வையெனினும், அதற்கு முன் இவனை அக்கையும் அவளை இவனும் தெரிந்திருந்தனர். ஆயினும், என்றும்

**இவன் கழுத்தை நிவட்டி குரல் வந்த திசையை திரும்பிப் பார்த்தான். 'தம்பி டேய்!!! ஏன்றாப்பா குமர்ப்பிள்ளையளையும் தாய்க்காறியையும் தள்ளி விழுத்திறாய்??!!' என்று திட்டியபடி வந்து Sofa இல் இவனருகில் குந்தியது, கொடிச்சிவாலிக்கிழவி.**

**கொடிச்சிவாலிக்கிழவி செத்து பதினைந்து வருஷங்களுக்கு மேல்!!**

பேசியிருக்கவில்லை. களவாய் கண்ணால் பேசியதைப்பற்றியும் இருவருக்கும் ஏற்கனவே தெரியாதிருந்தமை கூட களவியலின் ஒரு நுண் கூறாகலாம்.

அக்கையின் வயல் நீல, கடல் நீல கண்கள் மிக்க அழகாயிருந்ததாக, இவண் எண்ணிக்கொண்டான்.

இவண், இவண்தான். ஆனால், அக்கையான,- கடலின் பச்சை.நீல மயிற்றோகை வாலை॰ சுசிவேணி;..!!!!!

'தம்பி டேய்;, ஏன்றாப்பா குமர்ப் பிள்ளையளையும் தாய்க்காறியையும் தள்ளி விழுத்திறாய்;??!!' என்று அருகில் குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தான்.

கொ.வா.கிழவி;.!!!!

'சசிவாணிப்பிள்ளை;, நாரீக்கை கீரீக்கை நொந்து போச்சோ,' என்று கேட்டது, கொடிச்சிவாலிக்கிழவி.

'இல்லை,' என்றாள், சுசிவேணியின் தாய்க்காரி, சசிவாணி. அவளுக்கு பெரிய்ய்ய சரித்திரம் உண்டு.

அங்குமிங்கும்

(அங்கு)

அவசரப்பட்டு உடைந்ததால்,- ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று அங்கு பிரசவம் நிகழும் வழக்கத்தை மாற்றி வீட்டில் பிரசவிக்க வேண்டியதாய்ப் போயிற்று, சுசிவேணியை சசிவாணி. கொடிச்சிவாலிக் கிழவிதான் மருத்துவிச்சி. லோகத் துழாவாரமெல்லாம் மேய்ந்து, கொண்டு சென்று, செய்யுமாற்போல, அவசரப்பட்டு உலகில் இறங்கும் சிசுக்களுக்கு ஊரில் அங்கொன்றிங்கொன்றாக பிரசவம் பார்ப்பது கிழவிதான். முன்னோரூர் வாகட மரபுகளின்படிதான் பிரசவ வைத்தியம். கோழிக்குஞ்சு 'விறாத்துத்தண்ணி' குடிநீர், முட்டை மஞ்சல் கரு + நல்லெண்ணெய், 'அரைச்சு வைச்ச பத்தியம்', பாவட்டை இலை அவித்து கவட்டில் ஊற்றலென்று கொடிச்சி வா. கி. பெரிய்ய்ய பிரசவ பரிகார திருவிழாவெல்லாம் காட்டும்.

அவசரமுற்று, சசிவாணி கருப்பையிலிருந்து வெளிக்கு வெளி வந்த சுசிவேணியை, வழமைக்கும் மாறாக படு அக்கறையுடன் கையில் கொடிச்சிவாலிக்கிழவி தாங்கி, தொப்பூள் கொடியை அறுத்த அதே கணத்தில்!

இங்கு

Television இல் லோகம் பூராவான சீத்துவக்கேடுகள் பற்றி மாறி மாறி அலட்டுவதே வழமை போல் போயிற்று. மாறி மாறி Channel மாற்றித் தொலைத்தாலும் அதே சீத்துவக்கேடு. அக்கறையற்று அவசரமாய் தயாரித்து Coffee மேசையில் வைத்த குவளை Coffee இல் Coffee விகிதம் போதாது போல ருஸி குன்றியிருப்பதாய்ப் பட்டது.

திடுமென்று, இவண் குந்தியிருந்த Sofa இலிருந்து சற்றே தூரவாயிருந்த குளியலறையின் light எரிந்தது. எப்படி;??!!

யாரது;??!! யாரங்கே;??!

இவண் மட்டுமே வீட்டிலிருந்தான். அங்கே பேசிக்கேட்டது 'குறுக்காலை போவாளே;!!! ஏனெடியாத்தை காலை உழக்கிக் கொண்டு போறாய்..??!! இவன் கழுத்தை நிவட்டி குரல்வந்ததிசையைதிரும்பிப் பார்த்தான். 'தம்பி டேய்;!!! ஏன்றாப்பா குமர்ப்பிள்ளையளையும் தாய்க்காறியையும் தள்ளி விழுத்திறாய்;??!!' என்று திட்டியபடி வந்து Sofa இல் இவனருகில் குந்தியது, கொடிச்சிவாலிக்கிழவி.

கொடிச்சிவாலிக்கிழவி செத்து பதினைந்து வருஷங்களுக்கு மேல்;;!!

இன்னும் வர உண்டு.

# ‘சிதைப்பு’

## (அல்லது, குரலென்னும் ‘குறளி’யாகிய குரல் ‘இல்‘ குரல்)

# “RUIN”

## [Or, a voiceless voice that is a legerdemain.]

அதிகாரம் 06

1) பொதுவாக,

‘குரலில்லாதவர்களின் குரலாக
இருக்கிறோம் இருப்போம்,‘ என்றதொரு
போலிக்குரல் எழும்.

இருக்கும். கீழேயே.

உண்மையில்,

கிளராது அடங்கும் மது போல்,
கிளராதடங்குமது..!!

அநேகமான தருணங்களில்
குரலே இல்லாத குரல் அது.
தொண்டைக் குழியில் குரலெடுத்து
குளறியபின் குற்றுயிராயாய்ச் சாகும்,
கீழ்ச்சென்று, அத்தொனி.

வாஸ்தவத்தில், ‘குறளி‘ அது.!!!

தொண்டை முடிச்சினின்று
கண்ணறியா ஒரு புகைபோல் கீழிறங்கி
குகை மனதுள் புகுந்து
இருப்பொழிந்து மறையும்,!

இருட்குகை கரி மனதுள்
ரகஸ்யமாய கீழிறங்கும் புகாரில்
விழுந்தில்லாமல் போகும் கரிமழைத்துளி போல்.

மனக் கருங் குகைக் காற்றில் முகம் பூரா மறைய
மூடி கொழுவிக்கொண்டு, ‘குரலை‘ அமுக்கி, அழித்து,:
வெளியில் வேஷிப்பது வேசித்தனந்தான்(ஏ)!?

இக்குரலுடையோர் தாம்,
இடப்பக்கம் இருப்பவராம்.

காலாகாலமான லோகத்து வழக்கப்படி போல
இடதுசாரியெவரும் இலையிங்கு என்பதன்றி,
வலதுசாரிகள்:
இடம் மாறி இருந்து விட்டால்,
அவர்கள், இடதாகிப் போவாரோ(ஓ)?!

அர்த்தமுள்ள வகைக்கு
அர்த்த நாரீஸ்வரராவது
அர்த்தமில்லா ஆட்களுக்கு ஆகாது.

ஆதலினால்,
பொய்யுறை குகையில் புகுவதை விடுத்து,
கருமனத்தை வெளிர்விக்க வெளி வருக.

2) ‘வெளியில்‘ வந்த ‘இவண்)‘
‘குரலற்றவர்களின் குரலாகவே‘ இருக்க
விழைந்தான், என்றும்.

இவர்கள் உலகில் அது இயலுமானதொன்றல்ல..!!

ரொம்பவும் முக்கியும், முக்கியமாக ஏதுமே
வாராது எனினும் ‘இவண்‘
முக்கிக்கொண்டே இருப்பான். என்றும்!

பி(ற)கு ‘இவண்‘,:
இவன் அல்லன்.
இவனில் ஒரு துண்டு இவண் இருப்பதற்காய்
இவண் இவனே, என சொல்ல முடியாது.)

**Chapter: 06.**

1) Generally,
There is a fake voice that raises up,
saying,” we are/shall be the voice of the voiceless.

It stays underneath.

In fact, such as the non-sparkling booze,
it fizzles down without emerging.

Most of the time,
it is a voice without a voice.

That resonance goes down
and die as a feeble-life,
after screaming in top-tone at the throttle.

Truly, that’s a legerdemain.

As a black rain drop that descends secretly
on a ‘dark-cave—black-mind’ and loses its existence,
it fades away and vanishes
in the cave-mind, such as an invisible smoke.

It's whoredom..!! (Or not..??)
That is: pretending in public
(by) putting a mask, hiding the whole face,
suppressing the voice, destroying it
in the dark-cave-mind wind.

These voice-people say
that they are left-dwellers.

Apart from the time to time
norm of the world that
there are no leftists,
if right-wingers exchange their places,
would they become lefties…??!!

It's not possible for the meaningless people
in a meaningful way to be hermaphrodites..!

Therefore, instead of entering the lie-laden cave,
come out to whiten the black-mind.

2)“Ivann” who came out wished to be
the voice for the voiceless. Always.

In this world, it’s not something that is doable.

Nothing would come out,
even though ivann pushes hard,
he still would propel. always.

- N.B:

Ivann is not he”. Just because he has a piece of ivann,
it cannot be said: ivann is he.

எங்கே தான் போய் முட்ட...!

# எங்கேயும் எப்போதும்... இங்கேயும் அங்கேயும்...

ஜோர்ஜ் இ.

'இந்த ஆண்டில் நான் எழுதிய கவிதைகளின் மொழியில் மிகப்பெரிய மாற்றம் நிகழ்ந்திருப்பதை மொத்தமாக படிக்கும்போது வியப்புடன் காண்கிறேன். முக்கியமாக கவிதைகளின் இறுதிவரிகள் முற்றிலும் எதிர்பாராத, அதுவரையிலான விவரணை மொழியிலிருந்து விடுபட்டு ஒரு புத்தம்புது படிமத்துடன் அக்கவிதையின் மொத்தவண்ணமும் மாறுகிறது. இது ஒரு கவிதையில் அல்ல பெரும்பாலான கவிதைகளில் எந்தத் திட்டமும் இல்லாமல் தன்னிச்சையாக நிகழ்ந்திருக்கிறது. அது ஒரு சின்ன மேஜிக். அது மிகுந்த புத்துணர்சியை தருகிறது. இதைபற்றி கவிதை மொழிகுறித்து அறிதல் உள்ள யாருடனாவது விரிவாக உரையாடவேண்டும் போலிருக்கிறது.
இந்த ஆண்டின் கவிதைகள் தருவது முற்றிலும் வேறொரு அனுபம்.. என் மொழி வேறொரு தளத்திற்கு நகர்ந்துவிட்டது.'.

வேறொன்றுமில்லை. மனுஷ் தன்னுடைய கவிதைகளைப் பற்றி தானே எழுதியது.

தமிழில் படைப்பாளிகளே கலகக்காரர்களாக, அறச்சீற்ற அறங்காவலர்களாக மட்டுமன்றி, விமர்சகர்களாகவும், விருது வழங்குநர்களாகவும் இருக்கிறார்கள்.

ஆசான் தான் அ. முத்துலிங்கத்துடன் சேர்ந்து உருவாக்கியதாகச் சொல்லும் இயல் விருதை தனக்குத் தரவில்லை என்று குத்தி முறிந்து, பின்னர் தனக்கே வழங்கிக் கொள்ளவில்லையா?

மனுஷ் எழுதிற கவிதைகளே பெண் ரசிகைகளுக்கும், supposed காதலி களுக்குமானவை. அதுக்குள்ளே, 'இதைபற்றி கவிதை மொழிகுறித்து அறிதல் உள்ள யாருடனாவது விரிவாக உரையாடவேண்டும் போலிருக்கிறது.' என்று சொன்னால், 'எங்களுக்கு எல்லாம் என்ன, கவிதை மொழி குறித்த அறிதலும் புரிதலும் இல்லையா?' என்று, அந்தக் காதலிகள் எல்லாம் சங்கம் அமைத்துப் போர்க் கொடி தூக்க மாட்டாங்களா?

தமிழ் இலக்கிய உலகம் விசித்திரமானது. மற்றவர்கள் நம்மைப் பற்றிச் சொல்லா விட்டாலும் நாங்களே எங்களைக் கவிஞர்கள் என்று பெயர் சூட்டிக் கொள்ளலாம். எங்கள் கவிதைகளை நாங்களே சிலாகித்தும் கொள்ளலாம்.

தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்வது குறித்து இந்த நம்பர் வண்களுக்கும், இலக்கிய மேதகுக்கள், பெருந்தகைகள், தாதாக்கள், பேட்டை ரவுடிகள், சில்லறைகளுக்கு எல்லாம் வெட்கம் இல்லை என்பதை விட, மற்றவர்கள் எல்லாம் இதைக் குறித்து மலைப்பு அடையக் கூடும் என்ற நினைப்பு வேறு இருக்கிறது.

தேசிக்காய் தலையர், சூரிய தேவன் என்றெல்லாம் கண்டு வந்தவங்கடா நாங்கள்!

•••

சென்ற அபத்தம் இதழில், இலக்கிய உலகின் மலைப்பிரசங்கிகள் பற்றி எழுதியதில், தமிழ் இலக்கண கவிஞர் மகுடேஸ்வரன் பற்றியும் அவரது பெயர் பற்றி பேராசிரியர் அ. ராமசாமி எழுதியிருந்தது பற்றியும் எழுதியிருந்தேன்.

என்னுடைய அந்தக் கட்டுரை குறித்து, பேராசிரியர் கால சுப்ரமணியம் அவர்கள் பேஸ்புக்கில் பதிவிட்டிருந்தார்.

'சுவாரஸ்யம் என்று எல்லோரும் எழுதுவதை சுவாரஷ்யம் என்று நீங்கள் எழுதுவது சுவாரஸ்யமாக இருக்கிறது. (நவம்பர் 2023 அபத்தம் இதழ் இலக்கிய உலகின் மலைப்பிரசங்கிகள் கட்டுரையில்).

நல்லவேளை... சில நவீன எழுத்தாளர்கள் கூட சுவராஷ்யம் என்றே இன்றும் பேசும்போது கூறுவதுண்டு.

அதே போல விகாரப் புணர்ச்சி. புணர்ச்சி விகாரம் என்று அடிக்கடி குறிப்பிடுகிறீர்கள். அல்வழி, வேற்றுமை, இயல்பு, விகாரம் என்று நால்வகைப் புணர்ச்சி உண்டு. நீங்கள் ஒன்றையே எல்லாவற்றுக்கும் பொருத்துகிறீர்கள்.

சரி, இன்னொரு விடயம்.... அ.ரா. வாய் தவறுதலாக மகுடேசுவரனை மகுடஈஸ்வரன் என்று சொல்லிவிட்டார் என்பதற்கு

நீங்கள் சொன்ன வியாக்யானம்..... அதன் உள் ரகசியம் தெரிந்ததால் சுவாரஸ்மாக இருந்தது. (ஈசன் என்ற தமிழ்ச்சொல்லில் இருந்தே ஈஸ்வரன் என்ற வடசொல் பிறந்தது என்று இன்று எளிதாக விளக்கிவிடுவார்கள். எனவே மகுட இறைவன் அதிகபட்சம்...)

நிற்க. மகுடேஸ்வரன் என்று சொல்லாமல் மகுடீஸ்வரன் என்று கை தவறிச் சொன்னதுக்கு அப்செஸனான ஒரு காரணம் உண்டு. எனக்குப் பக்கத்தில் உள்ள நெருங்கிய நண்பர் பேராசிரியர் மகுடீஸ்வரன், அ.ரா,வின் மதுரைப் பல்கலைக்கழக மேற்படிப்புத் தோழர். இன்றும் அன்றைய பட்டப்பேர் இட்டு கிண்டல் செய்து வருவார். அவர் மனதில் பற்றியிருந்ததால் தான் வாய்தவறி மகுடேசுவரனை (மகுடேஸ்வரன் எனாமல்) மகுடீஸ்வரன் என்றது...

இதற்குச் சான்றாக, அதிகப் பழக்கமற்ற ஆரம்ப காலத்தில் என்னை சு.துரை என்ற நண்பராக நினைத்தே பேசுவார் என்பதைச் சொல்லலாம். அண்மையில் மறைந்த அவர் என்னைப் போலவே உருவ ஒற்றுமை கொண்டவர். எனது ஊரிலேயே பள்ளியாசிரியராக பணியாற்றிய நெருங்கிய நண்பர். கோவை அரசு கலைக் கல்லூரியிலும் என்னுடன் பணியாற்றியவர்... இந்தப் பெயர்க்குழுப்பம் பின்பு ஏதும் சரித்திரம் ஆகிவிடக்கூடாது என்றே இந்த விளக்கம்.... கட்டுரையில் சொல்லவேண்டிய எத்தனையோ பெத்த விஷயங்கள் இருக்கும் போது இந்த அற்ப விஷயங்களையா மெனக்கெட்டுச் சொல்லவேண்டும் என்ற விசாரம் வேண்டாமே...'

அதற்கு நான் எழுதியது..
'அற்ப விசயங்களும் பேசப்பட வேண்டியவை தானே!?. மனம் திறந்த உரையாடல் என்பது அவை மட்டுமன்றி, உடல் மொழி, சொற்தெரிவு என எல்லாவற்றையும் உள்ளடக்கியது அல்லவா!?

சுவாரஷ்ய. சுவாரஸ்ய வேறுபாடுகள் பொதுவெளியிலான வாசிப்பினால் வந்த பாதிப்பே. எங்கள் பக்கம் அதிகம் காண்பது ஷ என்பது மட்டுமன்றி, என் பெயரில் ஷ இருப்பதால் என்னை அறியாமலேயே வந்த நெருக்கமாயும் இருக்கக் கூடும்.

சிறுவயதில் படித்த ஆறுமுக நாவலரின் இலக்கணச் சுருக்கமும், பிரம்பினால் புகுத்தப்பட்ட பாடங்களும் தந்த நினைவுகளே பல. பின்னர் விஞ்ஞானப் பக்கத்தில் கற்கை தொடர்ந்ததால், இலக்கண நுண்விடயங்கள் எல்லாம் அதற்காக விசேடமாக தேடுகின்றவையே. எனவே பாண்டித்தியம் இல்லாத பரிச்சயமே அதிகம்.

ஆங்கிலத்தில் நான் கண்ட Practical English Grammar, High School English Grammar மாதிரியான definitive guides தமிழில் கண்டதில்லை. கண்டிருந்தால் அதையும் கரை கண்டிருக்க முடியும்.

இணையப் பண்டிதர்களும் தங்கள் வழக்குகளை விதிமுறை ஆக்குவது போலத்தான் தெரிகிறது. எதற்கும் நன்னூலில் இருந்து தான் தொடங்க வேண்டும் போலிருக்கிறது.

புணர்ச்சி விகாரம் ஒரு வெவகாரமான விடயம் தான் போலிருக்கிறது.
விகாரப் புணர்ச்சி என்றவுடன் சாரு நினைவுக்கு வந்தால், கம்பனி பொறுப்பேற்காது' என்று பதிலிறுத்திருந்தேன்.

அதற்கு பின்னூட்டம் விட்ட பேரா. அ.ராமசாமி அவர்கள்,
'1980 களின் நினைவைக் கொண்டுவந்துவிட்டார் கால. சுப்பிரமணியம். மகுடேஸ்வரன் என்ற பெயருக்குள் இருப்பவரையும் மகுடீஸ்வரனாகவே நினைவு கொள்கிறது எனது பழைய நினைவு. மகுடி என நாங்கள் அழைத்த மகுடீஸ்வரன் மதுரைப் பல்கலைக்கழகப் படிப்புக்கால நண்பர். நான் ஆய்வாளராக இருந்தபோது அவர் முதுகலை மாணவர். அப்போது நல்ல கவிதைகள் எழுதுவார். கவிதைகள் எழுதும் பத்துப்பேர் வரை பல்கலைக்கழகத்தமிழ்த்துறையில் இருந்தோம். கனா என்ற பெயரில் கையெழுத்துப் பத்திரிகை தொடங்கினோம்.

மகுடியின் கையெழுத்து அழகானது. இப்போது அமெரிக்கன் கல்லூரியில் பணியாற்றும் பிரபாகரின் கையெழுத்தும் அதேபோல் வித்தியாசமானது. எனது வகுப்புத்தோழன் ரவியும் கையெழுத்துக்காரன். கனாவின் ஆசிரியர் என எனது பெயர் இருந்தாலும் அவர்களது கையெழுத்திலேயே பக்கங்கள் உருவாகும். கனாவில் எல்லை துறைக்குள் என்றிருந்த நிலை பின்னர் மாறியது. அமெரிக்கன் கல்லூரி, சமூகவியல் பணிக்கல்லூரி, பாத்திமாக்கல்லூரி என நகல் இதழ்கள் உருவாக்கி அனுப்பினோம். அந்த இதழில் வந்த கவிதைகளை 'கனவைத் தொலைத்தவர்கள்' எனத் தொகை நூலாக்கினோம். கனாவில் அதிகம் எழுதிய பேர்களின் கவிதைகள் அடங்கிய தொகுப்பு அது.

எங்களைத் தொடர்ந்து அமெரிக்கன் கல்லூரியில் பல்வேறு துறைகளில் பயின்று கவிதை எழுதிய யுவன் சந்திரசேகர், சுந்தர்காளி போன்றவர்கள் 'நொடியின் உறைப்பில்' என்றொரு தொகைநூல் கொண்டுவந்தார்கள். அது ஒரு 'கனா'க்காலம்' என்று எழுதியிருந்தார்.

அதற்கு நான்...
'இந்த நினைவுகள் எல்லாம் வரலாறாக பதிவாக்க வேண்டியன அல்லவா? அதையெல்லாம் அபத்தத்தில் எழுதுவதற்கு என்ன தயக்கம்?' என்றிருந்தேன்.

மேலும் கருத்துத் தெரிவித்த கால சுப்பிரமணியம் அவர்கள்
'இன்னொரு இலக்கண விளக்கம்... அங்குச் சென்றான் என்பதைப்போல எழுதிப் பார்த்ததில்லையே என்று கூறியிருக்கிறீர்கள். ஆனால் இலக்கணம் அப்படித்தான்.... அ, இ என்பன சுட்டு எழுத்துகள் எ, யா என்பன வினா எழுத்துகள். இவற்றின் முன்னும், இவற்றின் அடியாகத் தோன்றிய அந்த, இந்த, எந்த, அங்கு, இங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, யாங்கு, அப்படி, இப்படி, எப்படி,ஆண்டு, ஈண்டு, யாண்டு அவ்வகை, இவ்வகை, எவ்வகை, அத்துணை, இத்துணை, எத்துணை என்னும் சொற்களின் முன் வரும் வல்லினம் மிகும்.

அ + காலம் = அக்காலம்
அந்த + பையன் = அந்தப் பையன்
அங்கு + கண்டான் = அங்குக் கண்டான்
எங்கு + போனான் = எங்குப் போனான் இப்படி.....

ஆனால் 'அங்கு சென்றான்' என்பதுதான் இன்றைய வழக்கு. எனவே அதையே பாவிப்போம்.

இன்னும் இதுபோல மரபிலக்கணவாதிகள் கால வழுவாகச் சொல்லும் பல வழுக்களை வழுவமைதிகளாகக் கொள்வோமாக.

திராவிட மொழித் தாக்கத்தால் சமஸ்கிருதம் தன் வாக்கிய அமைப்பை மாற்றிக்கொண்டது. ஆங்கிலத் தாக்கத்தால் இன்று தமிழில் பல வாக்கிய அமைப்புகள் மாறிவிட்டன.

நாவல் - ஓர் ஆய்வு, அரசு(க்) கலைக் கல்லூரி. பஞ்சாப் பல்கலைக்கழகம், அவைகள், கூறுகிறார்கள் (கூறுகின்றனர் அல்ல) என்பனபோல....

ஒரு மனிதன், ஒரு வீடு, ஒரு உலகம் என்ற நாவல் தலைப்பில் ஓர் உலகம் என்று வரவேண்டும் என்ற சிலர் எகிறியபோது, ஓர் உலகம் என்பதன் அர்த்தமும் ஒரு உலகம் என்பதன் அர்த்தமும் வேறுவேறு என்று ஜெயகாந்தன் தகர்க்கவில்லையா?

பழைய இலக்கணச் சொற்கள் எல்லாம் பெரிதும் செய்யுள் இலக்கியத்துக்காகச் சொல்லப்பட்டவை. இன்று உரைநடைக்காலம். வசனநடை கைவந்த ஆறுமுக நாவலர் நன்னூல் உரை எழுதியபோது, சில தனி வாக்கியங்களை உதாரணம் காட்டியது தவிர, வாக்கிய இலக்கணம் பழந்தமிழ் இலக்கியத்தில் இல்லை. அதற்கான கட்டாயம் இல்லை. ஆனால் இன்று இலக்கணத்தில் வளர்ச்சிகளைக் கொண்டு வரவேண்டியுள்ளது. இன்றுள்ள மேல்நாட்டிலும் வேறுதுறைகளிலும் புழங்கி ஓய்வு பெற்ற இன்றைய இணையம் புகழ் புதிய தமிழ் அறிஞர்கள் (சிறந்த இலக்கண அறிவு பெற்றவர்கள் என்றாலும்) எல்லாருமே பழைய தமிழுக்கு வக்காலத்து வாங்குகிறவர்களாகவே மொழியியலை வேப்பங்காயாகப் பார்ப்பவர்களாகவே இருக்கிறார்கள். அன்றிலிருந்து இன்றுவரை படைப்புத் தமிழ் பற்றி அறிமுகம் கூட அற்றவர்கள் இந்தவகைத் தமிழறிஞர்கள். (இது குறைகூறல் அல்ல, நிறை வேண்டல்.) விரித்து விளக்க வேண்டியதை சுருக்கிச் சொன்ன கட்டாயத்தால் மேலே கூறியவற்றில் சில விளக்கம் பெறாமல் இருக்கலாம்.' என்று எழுதியிருக்கிறார்.

இந்த புணர்ச்சி விவகாரம் குறித்து தனியாக எழுதத் தான் வேண்டும். வெயிட்டிங் லிஸ்ட் நீண்டு கொண்டே போகிறது.

•••

சிங்காரச் சென்னையில் சீறும் மழை.

தொடர்ச்சியான மழை பெய்து, வெள்ளம் வீடுகளுக்குள் நுழைந்து மக்கள் படும் துன்பம் போதாதென்று...

அதற்கு அரசாங்கத்தைத் திட்டுறவன் ஒருபுறம்.

ஓடி வந்து முட்டுக் கொடுக்கிறவன் மறுபுறம்.

வானம் பொழிகிறது. பூமி நிறைகிறது.

அதற்குள் இந்த வெள்ள அரசியல் துன்பத்தை மக்கள் எப்படித் தாங்குகிறார்களோ தெரியவில்லை.

பள்ளிநாட்களில் மழையும் வெள்ளமும் ஜாலியாகத் தான் இருக்கும். வேண்டுமென்றே நனைவதும், தேங்கிக் கிடந்த வெள்ளத்தில் விளையாடுவதும் முதிர்வயதிலும் அசை போடும் மகிழ்ச்சிகள்.

ஆனால், குடும்ப வாழ்க்கையில் ஒரு வெள்ளத்திற்குள் குழந்தைகள், வயோதிபர், நோயாளிகளோடு படும் அவலம் சொல்லி மாளாது.

கிராம வாசிகளால் வெள்ளத் துன்பத்தை ஓரளவேனும் சமாளிக்க முடியும்.

ஆனால், அடிப்படைத் தேவைகளான குடிதண்ணீர், மின்சாரம் என்பன இல்லாவிட்டால் நகரவாசிகளால் சமாளிக்க முடியாது.

இயற்கை எதையும் ஏனோ தானோவென்று உருவாக்குவதில்லை. மனிதன் அதற்குள் தலையை நுழைத்து

சிங்காரச் சென்னையில் சீறும் மழை.
தொடர்ச்சியான மழை பெய்து, வெள்ளம் வீடுகளுக்குள் நுழைந்து மக்கள் படும் துன்பம் போதாதென்று...
அதற்கு அரசாங்கத்தைத் திட்டுறவன் ஒருபுறம்.
ஓடி வந்து முட்டுக் கொடுக்கிறவன் மறுபுறம்.
வானம் பொழிகிறது. பூமி நிறைகிறது.
அதற்குள் இந்த வெள்ள அரசியல் துன்பத்தை மக்கள் எப்படித் தாங்குகிறார்களோ தெரியவில்லை.

சொதப்பும் வரைக்கும்!

சுற்றாடலை மனிதன் நாசப்படுத்தியதிலிருந்து, இயற்கையே மீளவும் உயிர்த்தெழ முடியாதபடிக்கு நிலைமை, மோசமாகிக் கொண்டிருக்கிறது. எரிபொருள் இயந்திர பாவனையில் வரும் காபனீர் ஒட்சைட் வளிமண்டலத்தில் அதிகரித்து, பூமி சூடாகி, பனிப்பாறைகள் உருகி, கடல் மட்டம் அதிகரித்து, காலநிலையே மாறிக் கொண்டிருக்கிறது.

இயற்கையில், விழும் மழைநீரை மண் உறுஞ்சும். முடியாதது பள்ளம் நாடி வழிந்தோடும். குளத்தில் தங்கும். கடலில் கலக்கும்.

நகர உருவாக்கம் paved paradise and put up a parking lot சேஷ்டைகளால் மண் உறுஞ்சிக் கொள்ள முடியாதபடிக்கு தடுத்து விடுகிறது. முடியாத நீர் வழிந்தோட முடியாதபடிக்கு வாய்க்கால்களும் நதிகளும் அதே மக்கள் எறிந்த குப்பைகளால் நிறைந்து கிடக்கிறது.

மொன்றியலில் ஒரு தடவை பெரும் வெள்ளம். எங்கோ ஒரு இடத்தில் தெருவில் நீர் கழிவு செல்லும் துளை அடைபட்டிருந்தது. அவ்வளவு தான்.

இலைகுழைகள், மனிதர்கள் வீசி எறியும் கழிவுகள் எல்லாமே எங்கோ ஒரு இடத்தில் அடைத்துக் கொண்டதும், நீர் என்ன செய்யும்?

தேங்கி நிற்கும் நீர்நிலைகளும்

பூமி வெப்பமாதலில் காய்ந்து போன பின்னால், ஆட்டையைப் போடப்பட்டு, நகரம் பெருக்கிறது.

ஏற்கனவே தாழ்நிலமாய் இருந்த ஏரி நிலம். அங்கே வீடு கட்டினால் என்ன நடக்கும்?

கடலில் போய் கலக்க வேண்டிய தண்ணீர் என்ன செய்யும்? கழிவுக்குழியை நிறைத்த பின்னால், அங்குள்ளவைகளையும் அள்ளி வந்து, சமையலறைக்குள் தான் நுழைய முடியும்.

பொறுப்புள்ள குடிமக்கள் தங்கள் பொறுப்புகளை உணராவிட்டால், சுற்றி வர நீர் சூழ்ந்திருக்கும்.
குடிக்க நீர் இருக்காது.

இதில் அரசு ஒன்றும் செய்யவில்லை என்றால், அரசு மக்கள் அரசு.
வோட்டுப் போட்டவங்களோட!

நாங்கள் அவங்களுக்குப் போடலியே என்றால், அவங்கள் இருந்திருந்தாலும், கிழிச்சிருப்பாங்க!

அவர்களும் இதையே தான் செய்திருப்பார்கள். பாதிக்கப்பட்டவர்கள் இப்படியே தான் திட்டியிருப்பார்கள். முட்டுக் கொடுத்திருப்பார்கள்.

ஊழல் கட்சி வேறுபாடின்றிப் பொதுவானது. அதே கட்சிகளுக்கு அந்த ஊழலையும் மறந்து வாக்களிப்பது இதே பெருமக்கள் தான்.

அதே மக்களின் ஆட்சி பின்னே வேறு எப்படித் தான் இருக்க முடியும்?

இயற்கையின் அனர்த்தங் களின் போது, பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய அக்கறையை விட, அரசைக் குற்றம் சாட்டவும், முட்டுக் கொடுக்கவும் ஓடி வருகிறவர்கள் தொல்லை தான் கடுப்பாக்குகிறது.

அரசு மீது பழிவந்து விடப் போகிறதே என்று, ஓடி வந்து முட்டுக் கொடுக்கிறார்கள்.

அரச ஆதரவாளர்கள் என்பதற்காக, அவர்கள் வீடுகளில் வெள்ளம் வராமலா விலகிப் போயிருக்கும்? அவர்களுடைய வீடுகளுக்குள்ளும் நீர் வந்திருக்குமே? அதையெல்லாம் வருக, வருக என வரவேற்றிருப்பார்களோ? அவர்களும் உள்ளூரத் திட்டிக் கொண்டே, வெளியில் முட்டுக் கொடுக்க வேண்டியது தான்.

'முகத்தைக் காத்துக் கொள்ளல் எல்லாம் இப்படித் தான்!

இதை வைத்து அரசைத் திட்டலாம், மக்கள் கோபத்தைத் திசை திருப்பலாம் என்று மற்றத் தரப்பு. இதேநேரம் எதிர்க்கட்சி அரசு இருந்திருந்தால், அவர்களும் நீரை வருக, வருக என....?

பேஸ்புக்கைத் தட்டினால், தி.மு.க அரசைத் திட்டுகிறவர்கள் அதிகமாகப் பார்ப்பனர்களாகவும் சங்கிகளாகவும், முட்டுக் கொடுக்கிறவர்கள் உடன் பிறப்புகளாகவும் இருக்கிறார்கள்.

அம்மா கட்சிக்கு ஐடி விங்க் கிடையாது. அம்மா கால ஆட்சியைப் புகழ்வது தினமலர் மட்டும் தான்.

'அம்மா காலத்தில் பாலும் தேனும் தான் ஓடியது. வெள்ளம் ஓடியதேயில்லை!'.

இதற்குள், எங்கள் இலக்கியச் செம்மல்கள் ஒருபுறம்.

கட்சி ஆதரவாளர்களாக இருப்பதில் தவறு ஒன்றும் இல்லை. தீக்குளிக்கப் பயந்த தொண்டர்களாக இருக்கக் கூடாது.

'கட்சிகளுக்காக சமூக ஊடகங்களில் களமாடுபவர்களை அடையாளம் காட்டிய பெருமழைக்கு நன்றி. அவர்களிடமிருந்து கொஞ்சம் விலகியிருப்பது மனநலத்திற்கு நல்லது எனத் தோன்றுகிறது.' என்று பேராசிரியர் அ.ராமசாமி பேஸ்புக்கில் பதிவிட்டிருந்தார்.

அதற்கு, 'அதை இலக்கிய மேலிடங்களில் இருந்து தொடங்க வேண்டியிருக்குமே, பேராசிரியரே!?' என்று பின்னூட்டம் விட்டிருந்தேன்.

இயற்கை எப்போதுமே சமநிலையைப் பேணத் தான் செய்கிறது.
வஞ்சகமில்லாமல் ஒரே ஆட்சியில் அனர்த்தங்களை உருவாக்காமல், அடுத்தடுத்த ஆட்சிகளில் அள்ளிக் கொட்டுகிறது.

இந்த முறை முட்டுக் கொடுத்தவன், அடுத்த முறை திட்டவும், இந்த முறை திட்டியவன் அடுத்த முறை முட்டுக் கொடுக்கவும் வசதியாக!

வெள்ளத்தில் மாட்டிக் கொண்ட எழுத்தாளர் இந்துமதி, முதல்வர் ஸ்டாலின் அவர்களின் துணைவியார் துர்க்கா அம்மையாருடன் தொடர்பு கொண்டு, பார்ப்பன ஹலால் உணவு வசதியுடன், ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டது பற்றிப் போட்ட பதிவு பெரும் களேபரமாகி விட்டது.

பார்ப்பனர்களின் sense of entitlement, அதிகாரத்தின் கால்களில் விழத் தயாராக இருக்கும் மனநிலை, சாதாரண மக்களை விட தாங்கள் மேலானவர்கள் என்ற நினைப்பு எல்லாமே எல்லோருக்கும் தெரிந்தது தான்.

அதைக் காதும் காதும் வைத்தது போலச் செய்து கொள்ளாமல், பேஸ்புக்கில் பீற்றிக் கொண்டதால் வந்த தலையிடி அது. சமீபத்தில் தன்னைத் தேடி வந்த துர்க்கா வாசல் திறக்காததால் திரும்பிப் போய், தான் தவறை உணர்ந்து திரும்பி அழைத்தபோது உடனடியாக வந்திருந்தார் என்று இந்துமதி சமீபத்தில் பதிவு போட்டிருந்த ஞாபகம்.

நெருக்கமான நண்பர்கள், தங்கள் நட்பைப் பயன்படுத்துவது ஏதும் பிரச்சனை இல்லை. ஆனால், இதை வைத்து ஒரு பிரளயம் கிளப்புவது கொஞ்சம் ஓவர்.

யாழ்ப்பாணத்தின் யுத்த காலங்களில் அகதிகளாகப் போனவர்கள் எதுவுமற்றுத் தங்கியிருந்த பொது இடங்களிலும் தங்கள் சாதியைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைத்ததெல்லாம் நாங்கள் கண்டு வந்தது தான்.

இராணுவத்திற்குக் குண்டு வைத்து அகதியாகப் போன இடத்தில் பஞ்சமர்ப் பெண்களைக் கிணற்றில் தண்ணீர் அள்ள விடாத பிரச்சனை குறித்து, நியாயம் கேட்கப் போன (அல்லது மிரட்ட!) நண்பர்களோடு நானும் ஒருவனாக இருந்திருக்கிறேன்.

பார்ப்பனர்கள் தாங்கள் அனுபவித்த நியாயப்படுத்த முடியாத சலுகைகளை உரிமைகளாக இன்றைக்கும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் தான்.

ஆனால், இதே

பார்ப்பனர்களுக்குள் தானே முரசொலி மாறனும் அவரது மகனும் திருமணம் செய்திருக்கிறார்கள் என நினைக்கிறேன். திருமண உறவுகளுக்குள் நட்புகள் இருந்திருக்க நியாயமுண்டே.

இந்துமதியின் தவறு அந்த மேட்டிமைத்தனத்தை பகிரங்கமாக உளறியது.

அனுகூல சத்துரு!

அதைப் போல, பேரிடரின் போது பொதுநலன்களுக்கு மட்டுமான அரிதான வளங்களை பயன்படுத்திய அரச அதிகாரத் துஷ்பிரயோகத்தில் முதல்வரின் மனைவிக்கு இருந்த பங்கைப் பற்றி யாரும் வாய் திறந்ததாகத் தெரியவில்லை.

அதிலும் பார்ப்பனர்கள் பற்றி அதிகமாக முக்குகிறவர்கள் பெரும்பாலும் சுயசாதிப் பற்றோடு இருப்பவர்கள் தான். இவர்கள் எல்லாம் குடும்ப ஆட்சியின் வழிவந்த துஷ்பிரயோகங்கள் பற்றி அறச்சீற்றம் கொள்வதேயில்லை.

உங்களில் பாவம் இல்லாதவர்கள் உங்கள் வீட்டுக்குள் இருக்கும் வெள்ளத்தில் ஒரு வாளியை இவர்கள் மேல் ஊற்றட்டும்.

அல்லது உங்கள் தலையிலும் ஊற்றிக் கொள்ளலாம்.

•••

நெய் உறிஞ்சிய தீபத்தின் ஒளி
பெருவெளிக்குத் திரும்புகின்றது.

புதைக்கப்பட்டவர் யார்?
காற்றில் கரைந்து போனவர் யார்?
புதரின் ஆழ் இடுக்குகளில்
சொருகப்பட்டிருக்கின்றன சாவுகள்.
இனி வரப்போவது யாருமில்லை.
ஆயினும் நினைவுகளின்
புதைவிடத்தில்
நான் இரண்டு பூக்களை
வைக்கின்றேன்.
நினைவு கூரக்கூடிய
நினைவு கூரமுடியாத
எல்லோருக்காகவும்.

சித்தாந்தன் எழுதிய இந்தக் கவிதை வருடாந்தம் இரண்டு முறை பேஸ்புக்கில் ரவுண்டு (கட்டி) அடிக்கும். முள்ளிவாய்க்கால் யுத்த முடிவு மே மாதத்திலும், மாவீரர் தின மாதத்திலும்.

ஒரு சவாலாகவே விடுக்கிறேன்.

முதலில், முடிந்தால் உங்கள் தேசியத் தலைவருக்கு ஒரு பூவை வைத்துப் பாருங்கள், பார்க்கலாம்.

உங்களையே துரோகிகள் ஆக்கி விடுவார்கள் என்ற பயம் தான் உங்களில் பலரை வாயை மூடிக் கொண்டிருக்கவும், புலிவாலில் தொங்கிக் கொண்டிருக்கவும் வைத்திருக்கிறது.

அதைப் பகிர்ந்து கொள்கிறவர்கள் எப்போதுமே புலிச் சிந்தனைக்குள் இருப்பவர்களாகத் தான் இருப்பார்கள்.

சாதாரணமாகப் பார்ப்போருக்கு, இது அழிந்து போன மக்களுக்கான அஞ்சலி என்பது போல இருக்கும். இதற்குள் புதைந்துள்ள 'நுண் அரசியல்' எல்லாராலும் விளங்கிக் கொள்ள முடியாத ஒன்று.

யாழ்ப்பாணிச் சிந்தனையில், புலிகளின் போராட்டம் புனிதப் போராட்டமாகத் தான் இருந்தது. அதன் பெயரால் நடத்தப்பட்ட சகல படுகொலைகளும், அந்தப் போராட்டத்தின் பெயரால் நடத்தப்பட்ட துரோகி ஒழிப்பு மட்டுமே. அவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்கள் எல்லாரும் தமிழர் என்பதும், அவர்களில் பலர் புலிகளைப்போல ஈழம் என்ற ஒரு தீர்வுக்காகத் தான் உயிரைப் பலி கொடுக்கத் தயாராகப் போராடப் போனார்கள் என்பதெல்லாம் புலி ஆதரவாளர்களுக்கு ஒரு பொருட்டாக இருப்பதேயில்லை.

இன்றைக்கும் தங்கள் போராட்டம் துரோகிகளின் சதியால் முடிவுக்கு வந்ததாகச் சொல்லிக் கொள்ளும் இவர்களால், அந்தத் துரோகி அழிப்புப் படுகொலைகளால் எதைச் சாதிக்க முடிந்தது என்ற கேள்வியைக் கேட்க முடிவதில்லை.

புலிகளை ஆதரிப்பதாலும், அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதாலும் தங்களை மேலானவர்களாகக் காட்டிக் கொள்வது மட்டும் தான் இவர்கள் நடத்தும் சகல கூத்துக்களின் நோக்கமும்.

வெளிநாடுகளில் எந்தக் கூட்டம் நடந்தாலும், மாவீரர்களுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி நடத்தாமல், கூட்டம் நடத்த முடியாது. ஒரு பாசாங்கு நடிப்பாகத் தான் இன்று வரைக்கும் அது நடந்து வருகிறது. அங்கு போராட்டத்தின் பெயரால் இறந்த மக்கள் இரண்டாம் பட்சமாகவும், மற்ற இயக்கப் போராளிகள் துரோகிகளாக மறக்கப்பட்டவர்களாகவும் தான் அந்த அஞ்சலிக் கூத்து நடக்கும்.

இப்போது புதிதாக, 'மற்றவர்கள் துரோகிகள் தான், ஆனால், அவர்கள் இறந்த காரணத்தால் பெருமனது பண்ணி அவர்களுக்கும் நாங்கள் அஞ்சலி செலுத்துகிறோமாம்!' என்று சீன் காட்டும் முயற்சியாகத் தான் இந்தக் கவிதை இப்போது சுற்றிச் சுற்றி உருட்டப்படுகிறது.

இந்தக் கேவலம் இன்னும் பல வருடங்களுக்குத் தொடரும்.

துரோகிகளுக்கு எல்லாம் இன்னொரு பூவை போகிற போக்கில் வைக்கிறதெல்லாம் இருக்கட்டும்.

ஒரு சவாலாகவே விடுக்கிறேன்.

முதலில், முடிந்தால் உங்கள் தேசியத் தலைவருக்கு ஒரு பூவை வைத்துப் பாருங்கள், பார்க்கலாம்.

உங்களையே துரோகிகள் ஆக்கி விடுவார்கள் என்ற பயம் தான் உங்களில் பலரை வாயை மூடிக் கொண்டிருக்கவும், புலிவாலில் தொங்கிக் கொண்டிருக்கவும் வைத்திருக்கிறது.

பொய்யையே வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகத்தில் பொய்யைச் சொல்லி நடிக்கும் அயோக்கியன் தான் பிழைப்பு நடத்த முடியும்.

ஒரு அழிந்த இனத்தின் இரத்தத்தில் பிழைப்பு நடத்தலாம் என்றான பின்னால், யாரை நோவது?

•••

தமிழரசுக் கட்சித் தலைமைக்குப் போட்டியாம்.

75 வோட்டுச் சிறிதரனும், பயிர் உழவு சுமந்திரனும்.

தலைவர் சம்பந்தன் ஐயா incapacitated நிலைமையில்.

கதிரையில் ஒட்டிக் கொண்டிருப்பதில் தமிழனுக்கு நிகர் வேறேது? அவரும் பதவியை விடுவதாக இல்லை, எலிசபெத் மகாராணியார் மாதிரி. அரச மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்படும் ஆசையாக இருக்கக் கூடும்.

எல்லாரையும் கடந்து சம்பந்தன் ஐயாவே கொண்டு வந்து இறக்கிய சுமந்திரனே, ஐயா பதவி விலக வேண்டும் என்று பகிரங்கமாக அறிக்கை விட்டு விட்டார். ஆனால், தீபாவளிக்கு முன்பா? பொங்கலுக்கு முன்பா? என்பதைச் சொல்லவில்லை.

இப்போது பதவிப் போட்டி. சிறிதரன் களத்தில் குதித்திருக்கிறார். ஆனால் சேனாதியர் ஏன் குதிக்கவில்லை என்பது மர்மமாக இருக்கிறது.

கூட்டமைப்பு என்பதே புலிகள் நடத்திய gunshot wedding.

அதில் தமிழரசு ஒரு கட்சி மட்டுமே. ஆனால், சம்பந்தன் செய்த நல்ல விடயம் ஒன்று, இந்த ஆயுதக் குழுக்களை எட்ட வைத்தது. தந்திரமாகக் கூட்டமைப்பை கட்சியாகவும் பதியாமல், அந்தக் கால யாழ்ப்பாணிகள் இப்போதும் வீட்டுச் சின்னத்தை மறந்திருக்க மாட்டார்கள் என்று யாழ்ப்பாணிகள் மேல் கொண்டிருந்த அதீத நம்பிக்கையால் இப்போதும் தமிழரசுக் கட்சியைச் சேடம் இழுத்தபடியே, தன்னைப் போல, இழுபட வைத்திருக்கிறார்.

தமிழரசுக் கட்சி என்பதே யாழ்ப்பாணிகளுக்கு காதில் பூ வைக்க வைத்த பெயர். கொழும்பு சிங்கள அரசியல்வாதிகளை தாஜா பண்ண ஆங்கிலத்தில் Federal Party என்று பெயர் வைத்துக் கொண்ட கட்சி.

அது தனது expiry date ஐயும் கடந்து இழுபடுகிறது. அது இந்தக் காலத்துக்கு உகந்ததான அரசியலைச் செய்யவோ, அதற்கான தலைமையைக் கொண்டிருக்கவோ இல்லை. அந்த வீட்டுச் சின்னத்துக்கு இந்த இழிச்சவாய் யாழ்ப்பாணிகள் வோட்டுப் போடுவார்கள் என்ற நம்பிக்கை தவிர்ந்து, அந்தக் கட்சிக்கு எஞ்சியிருக்கும் அரசியல் முதலீடு எதுவும் இல்லை.'எண்டாலும் நாங்கள் ஆயுதம் எடுத்து எல்லாத்தையும் அழிக்கேலை' என்பது தான் அவர்கள் கொண்டிருக்கும் நியாயம்.

இதற்குள் புலம் பெயர் புலிவால் லூசுக் கூட்டத்திற்கு 75 கள்ள வோட்டுப் போட்ட சிறிதரன் தான் தற்போதைய தேசிக்காய் தலையர். புலிகள் பிள்ளைகளைப் பிடிக்க உதவி செய்து விட்டு, யுத்த முடிவில் தான் தப்பித்துக் கொண்ட சிறிதரன் மாவீரர் தினத்திற்கு மர்ம உறுப்பை மறைத்தபடி தேசிக்காய் தலையர் போஸ் கொடுத்தபடி தீபத்திற்கு அஞ்சலி செலுத்திய படம் கொஞ்ச நாள் ஓடித்திரிந்தது.

சுமந்திரன் இந்தத் தமிழ்த் தேசிய உணர்வாளர்களால் ஏற்கனவே துரோகி பட்டம் சூட்டப்பட்டிருக்கிறார். அதனால் தான், அவரை அந்த அம்மணி, மர்ம உறுப்பைக் காட்டியபடி 'அம்மணமா வெளியால வாடா!' என்று அன்போடு அழைத்தார்.

இருந்தாலும், கனடாவில் புலிவால் பிரமுகர் அமைப்பு சுமந்திரனோடு தான். அவர்கள் சுமந்திரனுக்கு நிதியுதவி செய்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

'பெரிய படத்தைப் பார்த்தால் கதை வேறு.

தற்போதைய இந்துத்துவ எழுச்சியை யாழ்ப்பாணியின் மண்டைக்குள் புகுத்தும் முயற்சியில் மறவன்புலவு முதல் சங்கிப் புலமைப்பரிசில் பெற்று இந்தியா போய் வந்து பேஸ்புக்கில் சைவப் பெருமை பேசும் ஒரு கூட்டம் வரை தலையால் மண் கிண்டிக் கொண்டிருக்கிறது. ஏற்கனவே நாறிப் போய் இருக்கிற இனத்தை மேலும் பிளவுபடுத்த, 'இந்துக்களாய் ஒன்று திரள்வோம்' என்று சில கோமாளி அல்லக்கைகள் வேறு, காசு கிடைக்காமலேயே கூவத் தொடங்கியிருக்கிறார்கள். இனத்தை ஒற்றுமைப்படுத்துகிறோம் பேர்வழி என்று மதங்களின் அடிப்படையில் மற்ற மதங்கள் மீது வெறுப்பை உமிழும் யாழ்ப்பாணியச் சிந்தனையின் வெளிவடிவம் இது. கோயிலுக்குள் சக தமிழனை விடாமல், சிங்களச் சிப்பாய்களைக் கொண்டு தேர் இழுக்கிற யாழ்ப்பாணி, முள்ளுக்கம்பி அடிச்சு கடவுளைக் காக்கிற யாழ்ப்பாணி, 'இந்துக்களாய் அணிதிரள்வோம்!' என்கிறான்.

இப்படி தலையால் மண் கிண்டுகிறவர்கள், ஆறுமுகத்தையும் கிண்டி எடுத்து, 'எளிய சாதியார் இடத்தில் போஜனம் பண்ணக் கூடாது, வடக்கு திக்கு நோக்கி மலம் கழிக்க வேண்டும்' என்று சைவ எழுச்சியைத் தொடங்கவும் கூடும்.

இந்தச் சிந்தனையின் அடிப்படையில், கிறிஸ்தவரான சுமந்திரனை விட்டு, சிறிதரனுக்கு முடி சூடும் முயற்சி ஒருபுறம் நடக்கிறது. இதன் அடிப்படையில் தான் தற்போது பிரேமானந்த சீடர் விக்னேஸ்வரனும், சிறிதரனும் புதுடெல்லிக்கு விஜயம் மேற்கொண்டிருக்கிறார்கள். சிறிதரன் போனது, தானும் வீரசைவர் என்று அங்கீகாரம் வாங்கி வர.

விக்னேஸ்வரன் போனது, சிறிதரனைத் தலைவர் ஆக்குவதன் மூலம், தமிழ் தரப்பில் புலிச் சிந்தனை மறையவில்லை என்ற படத்தை சிங்களப் பகுதியில் பரப்ப. அவர் சம்பந்த பகுதியின் நலன்களுக்காகச் செயற்படுகிறவர்.

ஆக சிறிதரன் இந்திய ஆசீர்வாதம் பெற்றவராக களத்தில் இறங்குவார். அவருக்கு புலன் பெயர்ந்த புலிவால்கூட்டம் வாரி வழங்கும்.

ஆங்கிலம் தெரிந்தவரான சுமந்திரன் அமெரிக்க ஆசீர்வாதம் பெற்றவராகக் களம் இறங்குவார். அவருக்கு கனடிய பிரமுகர்ஸ் fund raising செய்து, அதில் ஒரு பகுதியை அனுப்புவார்கள். மீதிப் பணத்திற்கான கணக்கு தலைவர் திரும்பி வந்த பின்னால் காட்டப்படும்.

சுமந்திரனா? சிறிதரனா? சபாஷ், பலே! சரியான போட்டி!

யாழ்ப்பாணிகளின் தகுதிக்கு இவர்களே அதிகம்!

அ



# கையெழுத்து

## கற்சுறா

மிகவும் பணிவன்புடனும் பெரும் மரியாதையுடனும் நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், நான் எழுதும் எழுத்தும் என்னுடைய கருத்தும் உங்களுடைய செயற்பாடுகளாலும் நீங்கள் செயற்பட முனையும் கருத்துக்களாலும் உங்கள் மீது முரண்பட வைக்கிறதே அல்லாமல் உங்கள் மீது வீண்பழி சுமத்த வேண்டும் என்றோ அல்லது இந்த சமூகத்தின் மீதாக இயங்கும் செயற்பாட்டிலிருந்து உங்களை அப்புறப்படுத்த வேண்டுமென்ற ஆசையினாலும் ஏற்பட்டதல்ல என்பதனை தெள்ளத் தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன்.

ஆனாலும் உங்களில் பலர் நான் உங்கள் மீது கொண்ட பொறாமையினாலும் உங்கள் மீது கொண்ட வெறுப்பினாலும் தொடர்ந்தும் உங்கள் மீது எனது வசைமாரியையும் வக்கிரத்தையும் கொட்டுகிறேன் எனச் சொல்லி வருவதாக அறிந்து வருகிறேன். அதனால் உங்கள் மீது தனிப்பட்டவகையில் முரண்படுகிறேன் எனவும் சொல்வதனை அறிகிறேன். ஆனால் அதில் ஒரு துளி உண்மையும் இல்லை. அவ்வாறு உங்கள் மீது வசைமாரியையும் வக்கிரத்தையும் கொட்டும் மனநிலை உள்ளவனாக இருந்தால், ஒரு ஒன்று கூடல் நிகழ்விலோ அல்லது ஒரு கொண்டாட்ட நிகழ்விலோ உங்கள் அருகில் இல்லாது எங்கேயோ தூர விலகி நின்று மற்றவர்கள் செய்வது போல உங்களைப் பற்றிய வசைமாரியையும் வக்கிரத்தையும் கொட்டிக்கொண்டு இருந்து விடமுடியும். ஆனால் எனது மனநிலை அதுவல்ல. மாறாக அந்த இடங்களை நான் உங்களுடன் சேர்ந்து குடிக்கவும் - உண்ணவும் - உரையாடவும் கிடைத்த இடங்களாகத்தான் கணித்து வருகிறேன். எனது குடும்ப நிகழ்வுகளில் கூட முடியுமானவரை உங்கள் அனைவருடனும் இணைந்து கொள்ளவே விரும்பியிருக்கிறேன். இந்த இடங்களில் உங்களுடன் முடியுமானவரை சந்தோசமாகவே இருந்திருக்கிறேன்.

ஆக, நான் உங்களுடன் முரண்படுவது உங்கள் மீதான தனிப்பட்ட கோபம் அல்ல. உங்கள் குறித்து எழுதுவதும் உங்கள் மீதான தனிப்பட்ட தாக்குதல் அல்ல. உங்கள் மீது தனிப்பட்ட முறையில் முரண்படுவதற்கு எனக்கு உங்களுடன் எந்தவிதமான தனிப்பட்ட கொடுக்கல் வாங்கல் சிக்கல்களுமல்ல என்பதனையும் நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

ஆனாலும் நீங்கள் கொண்டியங்கும் கருத்தியல் நமது சமூகத்தில் எத்தனையோ தனிப்பட்ட குடும்பங்களினதும் தனிப்பட்ட மனிதர்களினதும், அவர்களின் தனிப்பட்ட குழந்தைகளினதும் அன்றாட வாழ்வையும் அவர்களின் எதிர்காலத்தையும் பாழாக்குகின்றது என நான் கருதுகிறேன். நம்புகிறேன்.

ஏற்கனவே ஈழவிடுதலையின் பெயரில் எத்தனையோ தனிப்பட்ட குடும்பங்களின் வாழ்வையும் அவர்களின் நிம்மதியையும் குலைத்துப் போட்டதோடு நிற்காமல், அந்தப் பாழ்பட்டுப் போன யுத்தம் முடிந்து போன பின்னாலும், நீங்கள் அவர்களை விடாது துரத்துவதும் அவர்களின் வாழ்வைக் குழிதோண்டிப் புதைப்பதுமாகத் தொடர்ந்தும் செயற்படுவது என்னை மிகுந்த எரிச்சலடைய வைக்கிறது.

அதற்கான எந்தத் தார்மீக நிலைப்பாடும் அற்று மேலும் ஒரு தடவை அவர்களைப் புதைகுழியில் தள்ள உங்கள் செயற்பாடுகளும் எழுத்துக்களும் துணை போவதாக நான் நினைக்கிறேன். யுத்தகாலத்தில் என்னவெல்லாம் பொய் சொல்லி இந்த மக்களை ஏமாற்றினீர்களோ, அல்லது அவ்வாறு ஏமாற்றியவர்கள் குறித்து மவுனம் காத்து ஆதரித்து நின்றீர்களோ அதே போன்றதொரு செயலை இப்பொழுதும் செய்து வருகிறீர்கள். சமூகநீதி என்றும் மக்கள் நலன் என்றும்

நீங்கள் சொல்லிவரும் எந்தக் கருத்திற்கும் நேர்மையாக நீங்கள் செயற்படவில்லை என்ற கோபம் எனக்கு இருக்கிறன்றது. அது ஒன்று குறித்தே உங்களிடம்நான் சண்டை செய்கிறேன். உங்களின் இரட்டை மனநிலை குறித்து நீங்களே அறியாததுபோல் இருக்கும் சந்தர்ப்பங்களைச் சுட்டிக்காட்டித் தோலுரித்துத் தொங்க விடுகிறேன்.

உங்களைப் போல் நான் அதிகம் படித்தவனுமல்ல. உங்களைப் போல் இருமொழிப் புலமையாளனுமல்ல. உங்களைப் போல் உலக இலக்கியங்களையோ உலக அரசியல் நடப்புக்களையோ புரிந்து கொண்டவனுமல்ல. நான் வாழ்ந்த சமூகத்தில் என்னைச் சுற்றியுள்ள சூழலில் அந்த சமூகத்திற்குள் நடக்கின்ற அயோக்கியத்தனங்களைக் கண்டுகொள்ளும் அறிவு மட்டுமிருக்கிறது எனக்கு. உங்களைப் போன்றவர்களது செயற்பாட்டால் எனது மக்களுக்கும் அவர்களது எதிர்காலத்திற்கும் என்ன பாதிப்பு ஏற்படுகின்றது எனப் புரிந்து கொள்ளும் அறிவு இருக்கின்றது எனக்கு. அந்த அறிவினைக் கொண்டு மட்டுமே உங்களுடன் சண்டை செய்கிறேன்.

ஈழத்தில் ஒரு சந்ததி மட்டுமல்ல தொடர்ச்சியாய் மூன்று சந்ததிகளைப் பாழாக்கிவிட்டுப் போன யுத்தத்தின் எச்சங்களாய் நீங்கள் இருப்பதாக நான் அஞ்சுகிறேன். புலம்பெயர்ந்த சூழலிலும் கல்வி கற்கும் இன்றைய இளைஞர்கள் உங்கள் தேசியத்தின் பெயரில் மண்டை கழுவப்பட்டுக் காயவிடப்படுகிறார்கள் என்று நான் உணருகிறேன். இதன் எதிர்கால விளைவு சிறியதல்ல என்றும், இந்த சமூகத்தின் எதிர்காலம் இன்னும் பாழ்பட்டுப் போவதற்கு நீங்களும் உங்களைப் போன்றவர்களும் காரணமாக இருக்கிறீர்கள் என அஞ்சுகிறேன். அதனாலேயே உங்களுடன் நான் நேரெதிராக முரண்பட வேண்டியிருக்கிறது. இந்த முரண் முடிந்த முடிவாய் நட்பு முரணேயல்ல. இது வெளிப்படையான முரண்பாடு. இந்த முரண்பாட்டில் நான் பின்நிற்கப் போவதில்லை. அதனை வெளிப்படையாகப் பேசவும், அது சார்ந்தவர்களை வெளிப்படையாக அடையாளம் கட்டவும் எனக்கு எந்த விதத் தயக்கமேதுமில்லை.

கடந்த காலம் முழுவதும், ஒரு யுத்தத்தை ஆதரித்த நீங்கள் திடீரென எழுந்து இன்னொரு யுத்தத்தை எதிர்க்கிறீர்கள். ஒரு கொலையை மவுனமாக ஆதரிக்கும் நீங்கள் இன்னொரு கொலையைக் கண்டு கொந்தளிக்கிறீர்கள். ஒரு தளத்தில் குழந்தைகள் காவு கொள்ளப்படும் போது கள்ளமவுனமாக இருந்த நீங்கள், இன்னொரு தளத்தில் குழந்தைகள் காவு கொள்ளப்படும் போது பொங்கி எழுகிறீர்கள். இதனைத்தான் உங்களுக்கு உங்கள் மவுனத்திலிருந்தே உதாரணங்களை எடுத்துக் காட்டுகிறேன். அப்படிக் காட்டும்போது அது உங்களுக்கு ஏன் தனிப்பட்ட முரண்பாடாகத் தெரிய வேண்டும்?

ஈழச் சூழலில் மட்டுமென்றாலும், காணாமற் போனவர்கள் குறித்து அக்கறை கொள்வதாகச் சொல்லும் நீங்கள் தனியே முள்ளிவாய்க்காலுக்குள் இருந்து காணமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றி மட்டுமே குறியாய் இருக்கிறீர்கள். அவர்களைத் தேடுவதாகவும் அவர்களுக்காக இரங்குவதாகவும் ஒரு போக்கினைப் பதிவு செய்ய முனைகிறீர்கள். அது கூட உண்மையான உங்கள் நிலைப்பாடல்ல. ஆனாலும் இதனைப் பொதுவான பரப்புரையாக்க நீங்கள் படும் பாடு கொஞ்சமல்ல. உண்மையில் முள்ளிவாய்க்காலுக்குள் இருந்து காணமால் ஆக்கப்பட்டவர்கள் குறித்து நீங்கள் பேசமுற்படுபவராக இருந்தால், அதற்குள் முடிக்கப்பட்ட யுத்தம் தொடங்கப்பட்ட இடத்திலிருந்து நீங்கள் யுத்த மறுப்பினைப் பேசத் தொடங்கியிருக்க வேண்டும். ஆனால் உங்களில் யாருமே அந்த யுத்தத்தை ஆரம்பத்திலிருந்து மறுத்தவர்களல்ல. அந்த இறுதி யுத்தம் எத்தனை சனங்களைக் கொன்றாவது, எத்தனை குழந்தைகளைக் கொன்றாவது உங்களுக்குத் தேசம் தரும் என்ற கொலைக் கனவிலிருந்தவர்கள் நீங்கள். அதற்காகவே மவுனமாக அத்தனை மாதங்கள் கடந்து வந்தவர்கள். ஆனால் அவை குறித்தெல்லாம் இன்று நீங்கள் காட்டும் வேடம் உண்மையானதேயல்ல.

2004ம் ஆண்டு காலப்பகுதியில் உங்கள் தேசியத்தின் பெயரில் கிழக்கில் அத்தனை இளைஞர்கள் கொல்லப்படும் போது அவையெல்லாம் உங்கள் தேசியத்திற்குத் தேவையான கொலைகள் என்ற அறிவில் அந்தக் கொலைகளுக்கெல்லாம் ஒரு சிறு எதிர்ப்பினையும் தெரிவிக்காது மவுனம் காத்தவர்கள் தானே நீங்கள். இதனையெல்லாம் வரலாறு மறந்து விடப்போவதில்லை. ஆனால் இன்று கொலைகளை நீங்கள் மறுத்து நிற்பதாக வேடந்தரிக்கிறீர்கள், இது எவ்வளவு பெரிய பித்தலாட்டம்?

ஆனாபடியால்தான், இது நீதியானதல்ல என்றும், இந்தச் செய்கை முறை ஒரு காலத்திலும் உங்கள் நோக்கத்தையும் கூட நிறைவேற்றாது என்றும் இது ஒரு தற்குறி மனநிலை என்றும் நான் கருதிப் பதிவு செய்கிறேன். ஆதலினால் நீங்கள் எல்லோரும் யார்? உங்கள் பெயர் என்ன? நீங்கள் ஏன் இவ்வாறு எழுதவும் இரட்டை வேடம் போடவும் வேண்டியிருக்கிறது? என்று விபரமாக எழுதுவதுடன் அதனை என்பெயரிலும் தொடர்ந்து எழுதுகிறேன். ஆனால் நான் எழுதுவதெல்லாம் தனிப்பட்ட தாக்குதல் என்ற பரப்புரைக்குள் ஒழிந்து கொண்டு நீங்கள் அதற்குப் பதில் சொல்லத் தேவையில்லை என்பது போல் மவுனமாகக் கடந்து போக எத்தனிக்கிறீர்கள். நீங்கள் சொல்லவேண்டிய பதில், அது எனக்குரிய பதில் இல்லை. அது இந்த சமூகத்திற்கு நீங்கள் கட்டாயம் சொல்ல வேண்டிய பதில்.

அது சொல்லப்படாவிட்டால் உங்கள் மரணம் வரை உங்களை வரலாறு பாதுகாப்பதாக நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பீர்கள்,

ஆனால் அதன் பிற்பாடு...?

# The Great Impostor

# இலக்கிய சீமானின் ‘தலித் இலக்கிய’ பிராடு!

அந்த நாட்களில் யாழ்ப்பாணத்தில், நகரத்தின் பல பகுதிகளில் சண்டியர்கள் (பேட்டை ரவுடிகள்!) ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தார்கள். இவர்கள் சமூகத்தில் பிரபலமானவர்களாகவும் இருந்தார்கள்...

துப்பாக்கிகள் தாங்கிய சண்டியர்கள் ஆதிக்கம் பெற்று, அவர்களை மின்கம்பங்களில் கட்டி மண்டையில் போடும் வரைக்கும்!

இந்தச் ‘சமூக விரோதிகளை’ அழித்தல் என்பது போராட்டத்தின் அத்தியாவசிய நடவடிக்கைகளில் ஒன்று எனத் தான், அவர்களின் கழுத்தில் தொங்க விடப்பட்டிருந்த அட்டைகள் சொல்லியிருந்தன.

தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரனாகும் சமூகத்தில், துப்பாக்கி தூக்கியவன் தேசியத் தலைவன் தான்!

இப்படியாக, ‘தேடப் படுகிறார்கள்’ என்று சுவர்களில் சிரித்துக் கொண்டிருந்த வங்கிக் கொள்ளையர்கள், கோழிக் கள்ளர்களை மின் கம்பங்களில் கட்டி ‘மண்டையில் போட்டுக்’ கொண்டிருந்தார்கள்.

வயிற்றுப் பாட்டுக்கும் வாழ்வாதாரத்திற்குமான களவை சமூக விரோதச் செயலாக கருதிய அதே சமூகம் அடைவு வைத்த நகைகளை வங்கிகளில் கொள்ளையடிப்பது போராட்டமாக குற்றநீக்கம் செய்யப்படுகிறது.

தெருவில் சங்கிலி அறுத்தல் களவாகவும், அதே சங்கிலியை எல்லைச் சோதனை முகாமில் வரியாக பறித்தல் போராட்டத்திற்கு அவசியமான வழிமுறையாகவும் வளர்ச்சி அடைகிறது.

எவருமே இப்படி சட்டத்திற்குப் புறம்பான முறையில் ‘மண்டையில் போடும்’ உரிமையை உங்களுக்கு யார் தந்தது என்று கேட்டதும் இல்லை.

வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அதே கும்பல், பிறகு அதே போராட்டத்திற்குப் போனவர்களை எரியும் டயர்களில்

ஜோர்ஜ் இ.

உயிரோடு எறிந்த போதும் வேடிக்கை பார்த்துக் கொண்டு தான் இருந்தது.

இம்முறை கொக்கோ கோலாவும் கொடுத்தது!

இப்படி, அந்தச் சண்டியர்களும் கைகளையும், கிறிஸ் கத்திகளையும், வாள்களையும் மட்டும் நம்பியிராது, துப்பாக்கிகளைக் கொண்டு மண்டையில் போடத் தொடங்கியிருந்தால், எங்களுக்கும் ஏகதலைவர்கள் இல்லாமல், சந்திக்குச் சந்தி ஏகப்பட்ட தேசியத்தலைவர்கள் இருந்திருப்பார்கள்.

இன்றைய ஹாய்த்தியில் போல! ஜனாதிபதி படுகொலை செய்யப்பட்ட பின்னால், சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட முடியாதபடிக்கு, வன்முறைக்குழுக்கள் அங்கு ஆதிக்கம் பெற்றிருக்கின்றன.

யாழ்ப்பாணத்திலும் அந்த நிலை தான் இருந்தது... புலி காலத்தில்!

அதற்கு சமாந்தர அரசு என்று புலன் பெயர்ந்தவர்கள் பெயரும் வைத்திருந்தார்கள்.

அப்படியான சண்டியர்களில் ஒருவர் கரையூர் மணியம்.

சென்ற அபத்தம் இதழில், ஆயுதம் தாங்கியிருந்தால், எங்களுக்குத் தேசியத் தலைவராகியிருக்கக் கூடியவர் என்று நான் குறிப்பிட்டிருந்த ஆரியகுளம் பொன்ராசா இன்னொருவர்.

இவர்கள் எல்லாம் அந்தக் காலத்து யாழ்ப்பாணத்தின் சந்தனக்கடத்தல் வீரப்பனார்கள்!

வழமை போன்று, இவர்கள் பற்றிய உண்மைகள் தவிர்ந்து, ஊதிப் பெருப்பிக்கப்பட்ட கற்பனைக் கதைகள் அதிகம். கிடங்குக்குள் பதுங்கிக் கிடந்தாலும், உலகமே பார்த்து அதிர்ந்து நடுங்குவதான கற்பனைக் கதைகள் நாங்கள் பார்த்து வந்தவை தானே. இவ்வாறான urban myths களால், இவர்கள் mythical legend களாகத் தான் எங்கள் வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறார்கள்.

தன்னை எங்கோ வைத்து முறியடித்த ஒருவனைப் பழிவாங்குவதற்காக, அவனோடு திரும்பவும் எல்லாவற்றையும் மறந்ததாக நடித்து, நண்பனாகி, நம்பிக்கைக்குரியவனாகி, அவனைத் தனியே சைக்கிளில் அழைத்துச் சென்று, சைக்கிள் முன் பாரில் இருந்தவனை இந்த கரையூர் மணி வாளால் கழுத்தை அறுத்துக் கொன்றதாக ஒரு கதை உண்டு.


இப்படியாகப்பட்ட மணியத்தை, குருநகர் எனப்படும் கரையூரில் உள்ள சந்தியில் வைத்து, ஒரு சண்டியன் அல்லாத அப்பாவி ஒருவன் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றான்.

இப்படி, வாள் எடுத்தவன் துப்பாக்கியால் மடிவதும், துப்பாக்கி தூக்கியவன் கோடாலியால் மடிவதும் எங்கள் வாழ்நாளிலேயே கண்டு சாட்சி பகரும் பேறுபெற்றவர்கள் நாங்கள்.

அந்தக் கொலை நடந்த இடத்திலிருந்து ஒரு கல்லெறி தூரத்தில் யாழ்ப்பாணக் கத்தோலிக்க சேமக்காலை. அந்தப் பக்கம் இருந்த கல்லூரி மைதானத்தில் இருந்து, ஒரு கிரிக்கட் பந்து எறிந்து, ஒரு சிக்ஸர் அடித்தால், நான் படித்த எட்டாம் வகுப்பு. அதில் இருந்து ஒரு கல்லெறி தூரம் அந்தக் கொலை நடந்த போது நான் உயர்வகுப்பு படித்துக் கொண்டிருந்த வகுப்பறை.

எங்கள் வகுப்பில் அந்தக் காலத்தில், அதெல்லாம் ஒரு பரப்பரப்பான கதை.

பிறகு யாழ்ப்பாணத்தில் கொலை நடக்கா விட்டால் தான், அது பரபரப்பான கதை!




நான் சொல்ல வந்த கதை, கரையூர் மணியத்தின் இறுதி ஊர்வலம் பற்றியது.

ஊர்வலம் பெரும் கோலாகலமாக, ஏ போர்ட்டி காரில் ஒலிபெருக்கி பூட்டி, அவர் தம் வாழ்நாள் பெருமைகளை இயம்பியபடியே நகர்ந்து கொண்டிருந்தது.

'ஆபிரகாம் லிங்கன், கென்னடி, நேரு, காந்தி, அல்பிரட் துரையப்பா போன்ற பெரியார்களின் வரிசையில், கோழைகளின் சதியால் துப்பாக்கிக் குண்டுக்கு பலியாகிய மாவீரன் கரையூர் மணி'.

இப்படித் தான் யாழ்ப்பாணச் சமூகத்தில் மாவீரர்களின் கதை ஆரம்பமாகியது.

ஆனால், மாவீரன் பட்டமளித்து, மதிற் சுவர்களில் லெப்டினன்ட் ஆகும் வரம் கரையூர் மணிக்குக் கிடைக்க, அன்றைக்கு ஒரு தேசியத் தலைவர் அங்கு இருக்கவில்லை.

அபூர்வமான அந்த ஏ போர்ட்டி காருக்குள் குஷியோடு ஏறி உட்கார்ந்த, கிடைத்த மைக்கை திரும்பிக் கொடுக்காத யாழ்ப்பாணப் பாரம்பரியத்தில் வந்த, யாரோ ஒரு முன் பின் தெரியாத 'மைக் மோகனின்' புண்ணியத்தில், கரையூர் மணியும் விளக்குக் கொளுத்தி உண்டியல் வைக்காத மாவீரனார் ஆனார்.

•••

வழமையாக மாற்றுக் கருத்துத் தோழர்கள் நடத்தும் நிகழ்வு நடைபெறும் சனசமூக நிலையம் ஒன்றில் நடந்த நிகழ்வு ஒன்றுக்குப் போயிருந்தேன். அங்கே கார் பார்க்கிங்கில் காரை நிறுத்தி விட்டு இறங்க, லண்டன் ஓவியர் கிருஷ்ணராஜா அண்ணனும், ரொறன்ரோ சண்முகதாஸ் அண்ணனும் இன்னொருவரோடு வந்து கொண்டிருந்தார்கள். வந்த சண்முகதாஸ் அண்ணன் என்னை அடையாளம் கண்டு சொல்லியிருக்க வேண்டும். கிருஷ்ணராஜா அண்ணன் என்னைக் கண்டதும், வந்தவரைக் காட்டி 'ஆர் தெரியுமோ, ஜோர்ஜ்?' என்றார்.

சிரித்துக் கொண்டே

சொன்னேன்.
“தெரியும். ‘ஐயா’.”.

‘புத்தகங்களின் காதலர்’ பத்மநாப ஐயர்!

•••

‘தலித்’ அடையாளம் பற்றி எனக்கு உடன்பாடுகள் இருப்பதில்லை. என் நண்பர்கள் பலர் என்னுடைய இந்தக் கருத்தோடு உடன்படவும் மாட்டார்கள்.

அதை நான் எப்போதாவது ஒரு தடவை விலாவாரியாக எழுத வேண்டும்.

அதிகாரமும், தன் குழுப் பிறப்பும் இன்னொருவர் மீதான அடக்குமுறைக்கும், இழிவுகூறலுக்கும் உரிமை தரும் என்று எவர் நினைத்தாலும், அதை எதிர்ப்பது எனக்கு இயல்பானது. அதற்கு நூறு வீதம், இருநூறு வீதம் என்றெல்லாம், வீதக் கணக்கு நான் போடுவதில்லை.

அந்த தன்குழுப்பிறப்பு அடையாளம் பெருமைக் குரியதாகவோ, இன்னொருவர் மீது வன்மத்தைக் கக்குவதற்கான அங்கீகாரமாகவோ நான் ஏற்றுக் கொள்வதில்லை.

சில நேரம் நான் உலகக்குடிமகனாக இருப்பது காரணமாக இருக்கலாம்.

என்னுடைய பிறப்பு நான் பெருமை கொள்வதற்கோ, ஏன், வெட்கப்படுவதற்கோ உரியதல்ல. அது நான் திட்டமிட்டு வந்ததும் இல்லை. அடுத்த பிறவி என்று இருந்தாலும், அதிலும் ஒரு அடக்கப்பட்ட சமூகத்திற்குள் தான் பிறக்க வேண்டும் என்று தான் நினைப்பேன்.

அதிகாரத்தையும்... ஆயுதத் தையும் தான், எந்த முட்டாளும் வைத்துக் கொண்டு ஆடலாம். போராட்டம் செய்வதற்கு அசாத்திய துணிச்சலும் திறமையும் பொறுப்புணர்வும் வேண்டும்.

என்னைப் பற்றிப் பெருமைப்பட வேண்டியதெல்லாம், ஒரு மனிதனாக நான் யார் என்பது பற்றியது தான்.

பிறப்பால் மட்டுமே தன்னை மேலானவனாக நினைப்பது மனநோய். அந்தப் படிமுறையில் உச்சத்தில் எவரும் இல்லை. எல்லா மேலானவர்களுக்கும் மேலாக தாங்கள் தான் மேலானவர்கள் என்று சொல்ல யாரோ இருக்கிறார்கள்.

பார்ப்பனர்களும் யாழ்ப்பாணிகளும் வெள்ளை நிறவெறியர்களுக்கு ‘பாக்கி’கள் தான்! வெள்ளையர்கள் தங்கள் சேரிக்குள் வந்தால் கல்லால் அடித்துக் கொலை செய்யும் கறுப்பினத்தவர்கள் ஆபிரிக்காவில் இருக்கிறார்கள்.

யாழ்ப்பாண மனுதர்மப்படி, நான் பஞ்சமர்களுக்குள் அடங்கினாலும், அதை வைத்து என்னைக் கணிப்பிடுகிறவர்களுக்கு நடுவிரலைக் காட்டக் கூடிய அளவுக்கு எனக்குத் திமிர் இருக்கிறது.

என்னை இழிந்த சாதி என்பது என்னுடைய பிரச்சனை இல்லை.
அது சொல்கிறவனுடைய பிரச்சனை.

அவனுடைய கடவுள் என்னிடமோ, என் முன்னோரிடமோ வந்து, ‘அவங்கள் தான் என்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம், நீங்கள் எல்லாம் அவங்களுக்குச் சேவகம் செய்ய வேண்டும்’ என்று சொல்லியதும் இல்லை.

‘எண்டாலும், உங்கள் எல்லாரையும் நான் சமனாத் தான் படைச்சிருக்கிறன்’ என்று பின்னூட்டமும் விட்டதில்லை.

பில்லியன் டொலர் கம்பனி CEO வுக்கு முன்னால், காலுக்கு மேல் கால் போட்டுக் கொண்டு தொழிலாளர் போராட்டம் பற்றி வகுப்பு எடுத்த எனக்கு, கனடாவில் பெப்பெப்பே ஆங்கிலம் பேசிக் கொண்டு, ‘நாங்கள் ஊரில பெரிய சாதி, நாங்கள் உவையைக் கோயிலுக்குள்ளயோ, வீட்டுக்குள்ளயோ விடுறேலை’ என்கிற முட்டாளைப் பார்த்து, பரிதாபம் கொள்வதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்?

என் அனுபவங்கள் பற்றி எழுத நிறைய இருக்கின்றன. ஆனால், அதெல்லாம் தலித் அடையாள முத்திரை பொறிக்கப்பட வேண்டும் என்பதில் எனக்கு எந்த உடன்பாடும் இல்லை.

என்னை ஒரு தலித் எழுத்தாளனாகவோ, நான் எழுதுவது தலித் இலக்கியம் என்றோ நான் பிரகடனப்படுத்தியதும் இல்லை. என்னை ஒரு தலித் (எழுத்தாளன்) என்று சொல்லிக் கொண்டு, அதை வைத்து ஏதாவது பயன் பெற முடியும் என்று, அவ்வாறான அடையாளங்களைக் கொண்டிருப்போருடன் ஒட்டிக் கொள்ள வேண்டும் என்று நினைத்ததும் இல்லை.

பார்ப்பனர்கள் சூத்திரர்கள் பற்றியோ, சூத்திரர்கள் சேரிக்காரர்கள் குறித்தோ கொண்டிருக்கிற வன்மத்தை விட, பறையர்களுக்கு அருந்ததியர்கள் மீது இருக்கும் வன்மம் எந்த விதத்திலும் குறைவானதோ, நியாயப்படுத்தக் கூடியதோ இல்லை.

அதைப் போல, தலித் என்று சொல்லிக் கொண்டே, உயர்சாதி என்று தங்களைச் சொல்லிக் கொள்கிறவர்களை அவர்களின் பிறப்பை வைத்து கூட்டாக வெறுப்பதும் என் இயல்பு இல்லை.

பார்ப்பனீய சிந்தனைக்கும், பார்ப்பனராகப் பிறப்பதற்குமான வித்தியாசத்தை தெரிந்து கொள்ளாமல், எல்லாப் பார்ப்பனர்கள் மீதும் அவர்களது பிறப்பையும் பெயரையும் வைத்து, வெறுப்பும் வன்மமும் காட்டுவது எந்த வகையில் சமத்துவம் நோக்கியது?

என்னுடைய அளவீடுகள் எல்லாம் தனிமனிதனாக ஒரு மனிதனின் பண்புகள் பற்றியதே. என்னுடையவன் என்பதற்காக ஆதரிப்பதோ, நியாயப்படுத்துவதோ என் இயல்பாக இருப்பதில்லை.

தான் அடக்கப்படுவதாகப் புலம்பிக் கொண்டே, இன்னொரு குழுவை அடக்க முயல்கிற, அதை வைத்து கொலை செய்யலாம் என்று நியாயப்படுத்த முனைகிற எவனும் மானிட விரோதி.

அது சாதியாக இருந்தால் என்ன! இனமாக இருந்தால் என்ன! மதமாக இருந்தால் என்ன! தத்துவமாக இருந்தால் என்ன! விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் இருந்த கொலைவெறியாக இருந்தால் தான் என்ன!?

•••

யாழ்ப்பாணத்தில் சண்டியர்கள் என்பவர்களுக்கான சமூகப் பின்னணிகள் உண்டு.

நகரத்திற்குள் சேரிகள்

ஆங்காங்கே இருந்தன. அவை ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்கானவை. அங்கே தான் இந்தச் சண்டியர்கள் இருந்தார்கள்.

இதைப் போல, ஆங்காங்கே உள்ள ஊர்களிலும் சந்தைச் சந்திகளிலும் பேட்டை ரவுடிகள் போன்ற சண்டியர்கள் இருந்தார்கள். அவர்கள் கப்பம் வாங்குவதிலும் ஈடுபட்டார்கள்.

இப்படிச் சண்டியர்கள் பலர், உயர்சாதியினரால், வேலிச் சண்டைப் பிரச்சனைகள் முதல், அடக்கப்பட்ட சமூகத்தினருடனான பிரச்சனை வரையும் சமாளிக்க, கூலிப்படையாகவும் பயன்படுத்தப் பட்டார்கள்.

அவர்களின் அட்டகாசம் கைமீறிப் போனால், அதன் ஆபத்துக்களை உயர்சாதிச் சமூகம் உணராமலா இருந்திருக்கும்?

குற்றச் செயல்களுக்கான பின்னணியாக வறுமையும் ஒரு காரணமாக இருந்திருக்கிறது. அவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் சமூக, பொருளாதார, கல்வி ஏற்றத்தாழ்வுகளில் பின்தங்கிய நிலைகளில் இருப்போராகவும் இருந்தனர்.

அவர்களை மின்கம்பங்களில் சமூகவிரோதிகளாக மண்டையில் போட்டுத் தொங்க விட்ட போது, சமூகம் 'மண்டையில் போடும் உரிமையை உனக்கு யார் தந்தது?' என்று கேட்கவில்லை. அதற்கு, அவ்வாறு மண்டையில் போடப்பட்டவர்கள் சமூகத்தில் கீழ்நிலையில் இருந்தவர்கள் என்பதும் ஒரு காரணம்.

யாழ்ப்பாணத்தில் பகிரங்கமாக மின்கம்பங்களில் கட்டி, மரண தண்டனைகள் வழங்கப்பட்டவர்களில் உயர் சாதியினர் எவரும் இருந்ததாக நினைவில்லை. உயர்சாதியினர் பெரும்பாலும் அரசியல் காரணங்களுக்காக, துரோகி என்ற குற்றச் சாட்டுடன் கொல்லப் பட்டவர்களாக இருந்தார்களே அன்றி, சமூக விரோதிகளாக கொல்லப்பட்டதாக நினைவில்லை.

சமூகத்தில் மோசடிகள், லஞ்சம், ஏமாற்றுகள் செய்த, பல்கலைக்கழகத்தில் பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டவர்கள் உட்பட, உயர்சாதியினர் புலிகளுடைய ஆதரவாளர்களாகவே இருந்தனர். இவர்கள் எவருமே சமூக விரோதிகளாகத் தண்டிக்கப்பட்டதில்லை. அரசியல் ரீதியாக முரண்பட்ட உயர்சாதியினர் மட்டுமே 'மண்டையில் போடப்பட்டார்கள்'.

கோழித் திருடர்களும் தெருச் சண்டியர்களும் சமூக விரோதிகளாக மின் கம்பத்தில் கட்டப்பட்ட போது, சமூகம் உள்ளூர அதை ரசிக்கத் தான் செய்தது. ஆனால், அதை ஒரு போராட்ட வடிவமாக, விடுதலைக்கு தடைக்கல்லாக இருக்கிறார்கள், களையெடுக்கப்பட வேண்டியவர்கள் என்று, தத்துவார்த்த விளக்கம் சொன்ன சாதாரண மக்கள் எவரையும் நான் கண்டதில்லை.

திருநெல்வேலிச் சந்தியில் அப்படி ஒருவர் மின்கம்பத்தில் கட்டி மண்டையில் வெடி வைத்துக் கொல்லப்பட்டிருந்த போது, எட்டிப் பார்க்க முயன்ற எனக்கு அதைப் பார்க்க முடியாதபடிக்கு, இலையான்கள் மொய்த்தது போல, 'அப்பாவிப் பொதுமகன்கள்' சுற்றி வளைத்து விடுப்பு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பிறகு எரியும் டயர்களுக்குள் தூக்கி எறிந்த போது, கேட்க முடியாதபடிக்கு துப்பாக்கிகளும் தெருக்களில் நிறைந்து விட்டன என்பது மட்டுமன்றி, அவ்வாறு எறியப்பட்டவர்கள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களாக, யாழ்ப்பாணிகளால் இழிவு செய்யப்படுகிறவர்களாக இருந்ததும் இன்னொரு காரணம்.

•••

ஈழப் போராட்டத்தில் புலிகள் உயர்சாதியினரின் செல்லப் பிள்ளைகளாகவே இருந்தனர். யாழ்ப்பாணி நலன்களையும், மேலாதிக்கத்தையும், சாதியச் சிந்தனைகளையும் அப்படியே தொடர்வதற்கு எந்தத் தடையுமில்லாத வகையில் தான் புலிகள் நடந்து கொண்டனர்.

இடதுசாரிச் சிந்தனையுடன் சமத்துவம் பற்றிப் பேசிய மற்ற இயக்கங்கள் சாதிப்படிநிலையில் கீழே இருந்த சாதிச் சமூகங்களோடு தான் அடையாளப்படுத்தார்கள் என்பது மட்டுமன்றி, அதை இழிவாகச் சொல்லி, ஏதோ பெரிய நகைச்சுவையாகச் சிரித்துக் கொள்வதும் யாழ்ப்பாணிகளுக்கு வழக்கமானதாக இருந்தது.

புலிகள் சாதியை ஒழித்தார்கள் என்று சொல்கிற யாழ்ப்பாணிகள் தான், அந்தப் புலிகளே அடையாளம் இல்லாமல் ஒழிக்கப்பட்டார்கள் என்ற கண் முன்னால் கண்ட உண்மையை இன்னமும் நம்பாதது போல நடிக்கிறவர்கள்.

புலிகள் சாதியை ஒழிக்கவில்லை. சாதிக்கு வரி போட்டார்கள். சாதியில் பணம் சம்பாதித்தவர்கள்.

குடும்ப நிகழ்வுகளில் பஞ்சமரைக் கொண்டு நடத்த வேண்டிய நிகழ்வுகளைத் தடுத்து நிறுத்தாமல், தண்டம் விதித்தால், யாழ்ப்பாணிக்கு அது ஐயருக்குக் கொடுப்பது போன்ற ஒரு செலவு மட்டும் தான்.

யாழ்ப்பாணிக்கும் பிரச்சனை முடிந்தது, புலிக்கும் பிழைப்பு நடந்தது!

யாழ்ப்பாணக் சாதிப்படி முறையில் கீழ் நிலையில் கருதப்பட்ட, ஆனால் பொருளாதார ரீதியில் உயர்நிலையில் இருந்த, கரையோர சமூகத்தைச் சேர்ந்த பிரபாகரனைக் கூட, யாழ்ப்பாணிகள் ஒரு சண்டியன் ரேஞ்சில் தான் கருதிக் கொண்டார்கள்.

'தம்பி பிரபாகரன் தமிழ் ஈழத்தைப் பெற்று அண்ணன் அமிர்தலிங்கத்தின் காலடியில் ஒப்படைப்பார்' என்று பேசிய கோவை மகேசன் பின்னர் பிரபாகரனுக்குப் புகழ்பாடி, பல வர்ணப் பத்திரிகை வெளியிட்டுக் கொண்டிருந்தார்... புலிகளின் நிதி உதவியில்!

தங்களுக்கு ஈழத்தைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய ஒரு சண்டியனாகத் தான் யாழ்ப்பாணிச் சமூகம் பிரபாகரனைக் கருதிக் கொண்டிருந்தது.

பின்னர் பிரபாகரன் தேசியத் தலைவர், சூரியதேவன் என்றெல்லாம் பப்பாளி மரத்தில் ஏற்றப்பட்டதற்கான காரணம், பிரபாகரன் கையிலிருந்த

துப்பாக்கியும், வாயைத் திறந்தால் கேட்டுக் கேள்வியில்லாமல் மண்டையில் போடும் மோட்டுத்தனமும் தான்.

பகுத்தறிவு இல்லாத மிருக சாதி மண்டையில் போட்டு விடும் என்ற அந்த மரண பயம் மட்டும் தான் வாயை மூட வைத்தது. புகழ்ந்தேத்த வைத்தது. அதையே ஆதரவு என்று மொழிபெயர்க்க வைத்தது.

சிங்களப் பகுதிகளில் பல்கலைக்கழகங்களில் கல்வி பெற்றுக் கொண்டிருந்த போது, இனக்கலவரம் காரணமாக இடம் பெயர்ந்து, திரும்பவும் அங்கு போக மறுத்து, வடக்கிலேயே தங்களுக்கான கல்வியைத் தொடர வழி செய்ய வேண்டி, தென் பகுதியில் கற்றுக் கொண்டிருந்த மாணவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் உண்ணா விரதம் இருந்தார்கள். அதில் திரும்பிப் போய் கல்வி கற்றதால், துரோகிகள் என்று ஆஸ்பத்திரி வீதிப் பின்சுவரில், சுவரொட்டியில் பதினைந்து நிமிடப் புகழ் பெற்ற ஐவரில் என்னோடு படித்த மருத்துவ மாணவனான நண்பனும் ஒருவன். அந்தப் போராட்டம் நீண்டு, அதனால் இராணுவம் பல்கலைக்கழகத்துக்குள் புகுந்து விடும் என்று காரணம் சொல்லி, புலிகள் அந்த மாணவர்களை ஆயுத முனையில் கடத்தியபோது...

தலைவர் கவர்ந்து சென்று கடிமணம் புரிந்த மதிவதனி, புங்குடுதீவைச் சேர்ந்தவர் என்பதால், அது பொன் கொடு தீவு அல்ல, பெண் கொடு தீவு என்று பெருமை பேச வைத்தது.

துப்பாக்கி இல்லாத பிரபாகரனால் தேசியத் தலைவராக முடிந்திருக்குமா?

இப்படி, பிரபாகரன் யாழ்ப்பாணத்தின் ஒரு துப்பாக்கி வைத்திருந்த, glorified சண்டியன் மட்டுமே!



•••

எங்கள் ஊர், உரும்பிராய்க்கு வடக்குப் புறமாக, ஊரெழு, கரந்தன் என்ற இரண்டு சிற்றூர்கள் உண்டு. ஊரெழு உரும்பிராயோடு சேர்ந்து பட்டினசபை நிர்வாகத்தில் அடங்கியது. கரந்தன் கிழக்கே உள்ள நீர்வேலிக்குள் அடங்கியது.

அந்தப் பகுதியில் ஊரெழுவிலிருந்து நீர்வேலிப் பக்கமாகப் போகும் வீதியில், கரந்தனும் ஊரெழுவும் சந்திக்கும் பகுதியில் பூசாரி பொன்னு ஒரு கோயில் வைத்திருந்தார். அந்த வீதி கிழக்கே போய், இராச பாதையைச் சந்திக்கும் பகுதியில் உள்ள பனை நிறைந்த கூடலுக்குள் தான், புலோலி வங்கிக் கொள்ளையின் பின்னர் ஈழ விடுதலைப் போராளிகள் கடத்திய அரசாங்க பஸ் எரிக்கப்பட்டிருந்தது. அதன் சுவடுகளாக உடைந்து கிடந்த கண்ணாடித் துண்டுகள் கருகிய எச்சங்களுடன் அங்கு நீண்ட காலமாக இருந்தன. ஒவ்வொரு முறையும் அதைக் கடந்து போகும் போது நான் அதை குறிப்பாக பார்ப்பதுண்டு.

இராச பாதை பெரும் ஆழமானதும் புகழ் பெற்றதுமான கிணறு இருக்கும் நிலாவரையில் முடிகிறது. யாழ்ப்பாண மன்னன் நல்லூர் ராஜதானியில் இருந்து அங்கே குளிக்கப் போவதால் தான் அந்தப் பாதைக்கு ராசபாதை என்ற பெயர் வந்தது என்ற கதை உண்டு.

பூசாரி பொன்னுவின் கோயிலின் God-in-Chief யார் என்று எனக்கு நினைவில்லை. சில நேரம் அண்ணமாராகவும் (அனுமார்!?) இருக்கலாம்.

அது பூசாரி பொன்னரின் கோயில், அவ்வளவுதான்!

கிழக்கு நோக்கிய அந்தக் கொட்டில் கோயிலில் சூலமும், மறக்காமல் உண்டியலும், இலவச போனஸ் இணைப்பாக விபூதியும் இருந்தன.

அவரது கோயிலுக்கு, நம்ம பக்கத்து மேசன் (கொத்தனார்!) வேலை செய்த யோவார் அப்பு என்று நாங்கள் அழைக்கும் யோவான், முருகன் சிலை செய்யும் சிற்பாசாரியராக வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தார்.

யேசுக்கிறிஸ்துவுக்கு ஞானஸ் நானம் கொடுத்த யோவானின் பெயரைக் கொண்டவர், குழைத்த சீமெந்தை, முருகனாக ஞானஸ்நானம் செய்து கொண்டு இருக்கும் புதுமையை கேள்விப்பட்டு, அந்தத் திருக்காட்சியை நானும் பள்ளிக்கூட ‘லீசர்’ (leisure) விட்ட நேரம் போய், காணும் பாக்கியம் பெற்றதற்கு, என்னோடு படித்துக் கொண்டிருந்த யோவாரின் பேரன் ராசனும் காரணமாக இருக்க வேண்டும்.

சில நேரம், எங்கள் பள்ளிக்கூட டீச்சர்மார் மண்ணில் விளையாட்டுப் பொருட்கள் செய்யப் பழக்கிய நாட்களில், நான் அதை விட அழகான முருகனை செய்திருக்கக் கூடும். குரங்கு பிடிக்கப் போய் முருகனாக முடிந்திருக்கவும் சாத்தியம் உண்டு.

அந்த சுட்ட மண்ணை தெய்வம் என்று நாலு புட்பம் சாத்தி சுற்றி வந்து அடியவர்கள் வணங்கி இருக்கவும், என்னால் உண்டியல் நிறைந்ததைக் கண்டு முப்பாட்டன் எனக்கு அருள் பாலித்திருக்கவும் கூடும். இப்படி வாழ்நாள் பூராவும் சனி பகவான் அருள் பெற்று நான் துன்பத்தில் வாழ்ந்திருக்கத் தேவையில்லை.

பல வர்ணப் பெயின்ட் அடித்த அந்த crude-looking ஈஸ்ட்மன் கலர் சீமெந்து முருகனை எங்கள் கோயில் பகுதிக்கு ஊடாக ஊர்வலமாக எடுத்துச் செல்ல முயன்ற போது, நம்ம உத்தம கத்தோலிக்கர்கள் குழம்பியதும் சிறுவயதில் எனக்கு நினைவில் உண்டு. வெவ்வேறு மதங்களாக இருந்தாலும், கத்தோலிக்க மதத்தினர் மூன்று தலைமுறைக்கு முன்னால் சைவர்களாக இருந்ததாலும், ஒரே சாதி சனம் என்பதாலும், இந்தக் குழப்பங்கள் கலவரங்களாகியதில்லை.

இன்றைக்கு பேஸ்புக்கில் உலவும் சங்கிகளின் சம்பளப்பட்டியல் கும்பல் அன்றைக்கு இருந்திருந்தால்,

இதை வைத்தே கலவரம் வெடித்திருக்கும்.

பூசாரி பொன்னர் திடீரென்று ஒரு நாள் இரவு கடவுளைக் கண்டு, அதிகாலையில் வெள்ளை வேட்டியை மஞ்சளில் தோய்த்து சாமியான கதையை என்னை வளர்த்த அப்பா எனக்குச் சொல்லுவார்.

வழமை போல, மற்றவர்களுக்குத் தெரியாமல் இரவில் வந்து இவர்களை எல்லாம் தமது தூதுவர்களாக்கும் கடவுள்களும், இந்தத் துறவிகளை லௌகீக வாழ்வையோ, ஏன், மணவாழ்வையோ துறக்கும்படி சொல்வதுமில்லை. (சிவமூலிகையால் இறையும் பிறையும் கண்டவர்கள் தான் விசயம் தெரியாமல் குடும்பம் துறந்து, சாம்பல் தரித்து கௌபீனதாரிகளாக திருவோட்டுடன் அலைகிறவர்கள்.)

Keep out the change என்று மாற்றங்களையும், Keep the change என்று உண்டியல் சில்லறைகளையும் வைத்துக் கொள்ள அனுமதிக்கும் பெரிய மனதுக் கடவுளர் அவர்கள்!

பொன்னரின் மகளின் கணவர், அப்புத்துரை அந்தக் கோயிலுக்குப் பக்கத்தில் கடை வைத்திருந்தார். அவரது கடைக்கு சிறுவயதில் சாமான்கள் வாங்க என் சகோதரிகள் அனுப்பி வைப்பதுண்டு.

அப்புத்துரையும், பொன்னரும், 'ராசு அண்ணையின்ரை கடைக்குட்டி கெட்டிக்காரன்' என்று சின்னப் பொடியனான என்னில் மிகவும் பட்சமாக நடந்து கொள்வர்.

சாமிக்கோலத்தில் விபூதிப் பூச்சுக்களோடும், கருங்காலி மாலையின் மாண்பு தெரிந்திராத அந்தக்காலத்தில் செங்காலி மாலைகள் சகிதம், காரைக்கால் அம்மையார் ரஸ்தாபாரிய கொண்டை முடியோடு, பல அலங்காரங்கள் செய்த சைக்கிளில் பூசாரி பொன்னரை நான் அடிக்கடி காண்பேன். பொன்னர் வழியில் கண்டால், பட்டன் பிய்ந்து கழன்று இறுக்கிக் கட்டப்பட்ட காற்சட்டையோடு திரியும் என்னைப் பார்த்து சிரிக்கவும் செய்வார். முரசு தெரியும் அவரது சிரிப்பு எனக்கு இன்றைக்கும் கண்ணுக்குள் நிற்கும்.

ஊருக்குள்ளே என்பதால், அவரும் நானும் சேர்ட் போட்டிருப்பதில்லை.

வழியில் காண்போருக்கு விபூதி அருள்பாலிக்கும் அவர், உத்தம கத்தோலிக்கனான எனக்கு ஒரு போதும் அதை அருளியதில்லை.

பொன்னர் உரு வந்து ஆடுவதும், குறி சொல்வதும் பற்றி யாரோ சொல்லக் கேட்டிருக்கிறேன். பொன்னர் கோயிலில் நடக்கும் தீமிதிப்பை என் அண்ணன்மார் போய் பார்த்தாலும், நான் சின்னப்பெடியன் என்பதால் போய் பார்த்ததுமில்லை.

பொன்னர் கோயிலில், அவர் வளர்த்த ஒரு மயில் இருந்தது!

•••

பத்மநாப ஐயர் ஒரு தடவை என்னோடு தொடர்பு கொண்டிருந்தார். நண்பர் கலாமோகனோடு நெருக்கமானவர். கலாமோகன் தாயகம் இணைய இதழில் ஐயர் பற்றியதொரு கட்டுரையையும் எழுதியிருந்தார். தாயகம் இதழ்களை அவர் பொறுப்பாக இருக்கும் நூலகம் இணையத் தளத்தில் பதிவேற்றுவதற்காக, அதன் பழைய இதழ்களை அனுப்பி வைக்கும்படி கேட்டிருந்தார். அதுபற்றி சில தடவைகள் தொலைபேசியில் பேசியிருக்கிறோம்.

எல்லாமே கட்டித் தயாராகத் தான் இருக்கிறது. நானோ பல சோலிக்காரன். கிடைக்கிற நேரமெல்லாம் அபத்தம் இதழ் மாதிரி பயன் இல்லாத வேலைகளில் முடிந்து விடுகிறது. அல்லது கோடை காலத் தோட்ட வேலை.

அப்படியே கிடப்பில் போட்டு மறந்தே விட்டது.

அதை விட, இதையெல்லாம் ஆவணப்படுத்தி இந்தச் சமூகத்திற்கு என்ன பயன் வந்து விடப் போகிறது என்ற எண்ணம் வேறு. நான் போய்ச் சேர்ந்த பின்னால், வரலாறு என்னைப் பற்றி என்ன சொல்கிறது என்பது பற்றி எனக்கு எந்தக் கவலையும் இல்லை. பேஸ்புக்கில் புலிவால்கள் என்ன எழுதித் தொலைப்பார்களோ என்பது தான் எனக்குள்ள ஒரே பயம். ('கர்மா!?')

தமிழ் விக்கிபீடியாவிலே வரலாறு எழுதியவர்கள் தாயகம் பற்றி எழுதியது பற்றியே சிரித்து முடியவில்லை.

நான் எழுதியவற்றை புத்தகமாக்க வேண்டும் என்று முனைந்த நண்பர்களே களைத்து ஓய்ந்து விட்டார்கள்.

இப்படி, பத்மநாப ஐயரும் என்னிடம் கேட்டுக் களைத்து விட்டார்.

•••

கரந்தனுக்கு மேற்குப் பக்கம் இருந்த ஊரெழுவில் ஒரு அம்மன் கோவில் இருந்தது.

எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் பொதுமலசல கூடமாகப் பயன்படுத்தப்பட்ட பெரிய பனம் கூடலுக்குள், பற்றைகளால் சூழப்பட்ட ஒரு பாழ்ங்கிணறு இருந்தது. அந்த பனங்கூடலுக்குள்ளேயே, பக்கத்தில் இருந்தவர் அங்கு தோட்டம் செய்ய நினைத்து, அந்தக் கிணறைக் கழுவி இறைக்க முயன்ற போது, அதற்குள் இருந்து வெண்கலச் சிலைகள் இரண்டு வெளிக்கிட்டன. பின்பு தான் தெரியவந்தது, அந்த அம்மன் கோயிலில் இருந்து திருடப்பட்டவையே அவை என்று.

கனவில் வந்து அந்தத் திருடர்களை மிரட்டிய கடவுளர்கள் அவர்களை ஏன் சாமியார்கள் ஆக்கவில்லை என்பது தெரியவில்லை.

காலையில் எழுந்து வெள்ளை வேட்டிக்கு மஞ்சள் பிடித்து, ஒரு கொட்டில் கோயிலை எழுப்பி, யோவார் அப்புவின் துணை தேவைப்படாமல், அந்த வெண்கலச் சிலைகளை தெய்வம் என்று நாலு புட்பம் சாத்தி சுற்றி வந்து, உண்டியலை நிரப்பும், சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோ, அம்மனுக்குப் போட்டிருந்த நகைகளை எடைக்குறைப்பு செய்யவோ, வெளிநாட்டுச் சிலை சேகரிப்பாளருக்கு விற்று விட்டு, டுப்பிளிக்கேட் கடவுளை பிரதிஷ்டை செய்யவோ தெரியாமல்...? எடுக்கிறானுகளாம் களவு! இவர்களுக்கு எல்லாம் திருட்டு ஒரு கேடா?

இப்படி, அந்தச் சிலைகளும் உத்தம கத்தோலிக்கர்களின் ஆட்சேபனை எதுவும் இல்லாதபடிக்கு அவர்களின் குடியிருப்புகளுக்கு

அப்பால் இருந்த பலாலி வீதி வழியாக, மேளதாளங்களோடு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டு, பிரதிஷ்டை செய்யப்பட்டு கர்ப்பக்கிருகத்திற்குள் குடிபுகுந்தன.

பொதுமலசல கூடத்தில் பல வருடங்களாகக் கிடந்த தீட்டை அகற்ற, மந்திரங்கள் இல்லாமலா இருந்திருக்கும்...
சீரடி பாபாவுக்கும், பார்ப்பனர்கள் தாங்கள் நம்பாத முருகனுக்கும் சொல்வதற்கே மந்திரங்கள் இருக்கும்போது!?

மலகூடங்களுக்குள் கிடந்த சிலைகளுக்கு தீட்டை அகற்ற இருக்கும் வசதியும், மந்திரங்களும் மலம் அள்ளும் மனிதர்களுக்கு இன்றைக்கும் இல்லை.

அந்த தீட்டு மனிதர்கள் தட்டில் போடும் பணத்திற்குத் தீட்டுக்கழிக்க, மந்திரங்களுக்கான தேவை என்றைக்கும் இல்லை.

காசே தான் கடவுள். உண்டியல் இல்லாவிட்டால் பல கடவுள்கள் எந்த நாயும் தேடாமல் அனாதரவாகத் தான் இருந்திருப்பார்கள்.

ஊரெழுவில் இருந்து என்னோடு பாடசாலை பஸ்ஸில் பயணித்த நண்பர்கள் இருந்தார்கள். என்னுடைய நகைச்சுவையைக் கேட்டுச் சிரிக்க, பலாலி முதல் பல நண்பர்கள் காத்திருந்து வருவார்கள். நெரிசலில் இருக்க இடம் இருக்காது. மேலே கூரையில் பொருத்தப்பட்டிருந்த அலுமினியக் குழாயிலோ, அதில் தொங்கியிருந்த தோல் வாரையோ பிடிப்பதற்கான உயரமும் அப்போது இல்லை. யேசுநாதருக்கு பக்கத்தில் கட்டப்பட்டிருந்த கள்வர்கள் மாதிரி, முதுகைச் சாய்த்து, நடுவில் பொருத்தப்பட்டிருந்த வேலி மாதிரியான குழல்களில், பின்புறமாக கையைக் கொழுவி வைத்துக் கொண்டு நிற்க வேண்டியது தான்.

கையில் உள்ள புத்தகக் கட்டையும், கொம்பாசுப் பெட்டியையும், ஆச்சி வாழையிலையில் கட்டி, பேப்பரால் சுற்றித் தந்த மதிய உணவான புட்டுப் பார்சலையோ, பஸ் ஏறும் இடத்தில் இருந்த இலங்கையர் கடையில் வாங்கிய இடியப்பத்தையோ, அவர்கள் வாங்கி வைத்துக் கொள்வார்கள்.

இதில் ஒரு நண்பன் பெயர் பிரபாகரன். அவனுக்கு ஒரு கையில் ஆறு விரல்கள். என்னை விட ஒரு வகுப்பு குறைவு.

மற்ற நண்பன் தேவகுமார். என்னுடைய வகுப்பு. இருவரும் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி கற்றவர்கள்.

இந்த பிரபாகரன் லண்டனில் இருந்தார். பேஸ்புக் மூலமாக அறிந்த ஒரு நண்பரோடு பேசியபோது, லண்டனில் புகையிரதத்தின் முன்னால் பாய்ந்து இறந்த செய்தி கேட்டுத் துயரம் அடைந்தேன்.

தேவகுமார் எறும்புக்குக் கூட தீங்கிழைக்காத வெள்ளை உள்ளம் படைத்தவர். யாழ். பல்கலைக்கழகத்தில் படித்து, அங்கு instructor ஆக இருந்தவர். அவரது வீட்டுக்கு அருகில் உள்ள இடத்தில் டெலா என்ற இயக்கம் இராணுவ வண்டித் தொடருக்குக் குண்டு வைத்த போது, எல்லோரும் விடயம் தெரிந்து தப்பியோடியிருந்தபோது, தங்களை ஒன்றும் செய்ய மாட்டார்கள் என்று நம்பியிருந்த தேவகுமாரின் தந்தையின் செயலால் வீட்டில் இருந்தபோது, உள்நுழைந்த இராணுவம் தேவகுமாரையும் தந்தையையும் தம்பியையும் சுட்டுக் கொன்றது. இது நான் அங்கே இருந்தபோது நடந்தது.

தேவகுமாரின் தம்பி சந்திரகுமாரை மொன்றியலில் கண்டேன். பின்னர் அவர் ரொறன்ரோவில் இருப்பதாக என் நண்பர் மூலமாக அறிந்தேன்.

இந்த ஊரெழுவைச் சேர்ந்த யாழ்ப்பாண வம்சாவளியினர் என்று தான் சிங்கப்பூர் ஜனாதிபதி தர்மன் கொஞ்ச நாள் 'தமிழேன்டா!' என்று யாழ்ப்பாணிகளால் விதந்தோதப்பட்டிருந்தார்.

பொக்கணை எனப்படும், எங்கள் வீட்டிலிருந்து பார்க்கும்போது தெரிகிற காற்றாலை மூலமாக நீர்வினியோகம் செய்த நீர்நிலைக்குப் போகும் பாதை மூலையில் ஒரு பழங்கால வீடு பாசி பிடித்த உயரமான மதிலோடும் பெரும் இரும்பு கேட்டோடும் இருந்தது.

**அந்தப் பொக்கணை, இராமன் வில்லால் குத்தி கிளம்பிய நீரூற்று என்று ஊரில் கதைகள் இருந்தன.**

**அம்மன் கோயிலுக்கு மூலைப் பக்கமாக வீதிக்கு எதிர்ப்பக்கத்தில் இருந்த அந்த பாழடைந்த தோற்ற வீட்டுக்கும் தேவகுமாரின் வீட்டுக்கும் இடையில் தான் தியாகி திலீபனின் வீடும் இருந்தது.**

உள்ளே வாழைத்தோட்டமும் இருந்தது.

அது தர்மனின் பூர்வீக வீடாகவும் இருக்கலாம். அங்கு ஒரு வயதான சிங்கப்பூர் பென்சனியர் இருந்த ஞாபகம்.

அந்தப் பொக்கணை, இராமன் வில்லால் குத்தி கிளம்பிய நீரூற்று என்று ஊரில் கதைகள் இருந்தன.

அம்மன் கோயிலுக்கு மூலைப் பக்கமாக வீதிக்கு எதிர்ப்பக்கத்தில் இருந்த அந்த பாழடைந்த தோற்ற வீட்டுக்கும் தேவகுமாரின் வீட்டுக்கும் இடையில் தான் தியாகி திலீபனின் வீடும் இருந்தது.

•••

தமிழ்நாட்டைப் போலன்றி, எங்களுக்கு பெயர்களுக்குப் பின்னால் சாதிப் பெயர்கள் இருந்ததில்லை. இருந்தாலும், செட்டியார், நாடார் என்று இந்திய வம்சாவளியினர் தங்கள் சாதிப் பெயர்களையும் சுமந்து வந்து, கொழும்புப் பக்கம் வர்த்தகர்களாக இருந்தனர்.

பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் பிள்ளைமாராகவோ, பிள்ளைவாளாகவோ இருக்க வேண்டிய கட்டாயம் இல்லாமலும் இருந்தது.

இருந்தாலும், கந்தசாமிக்கும் கந்தனுக்குமான, பொன்னனுக்கும் பொன்னம்பலத்துக்குமான, கணபதிப்பிள்ளைக்கும், கணவதிக்குமான சாதி வித்தியாசம் எல்லாருக்கும் தெரிந்ததாகத் தான் இருந்தது. அந்தக் காலத்தில் பதிவாளர்கள் உயர்சாதியினராக இருந்ததால், 'எளிய சாதியினர்' உயர்சாதிப் பெயர்களை வைப்பதை விரும்பாதவர்களாக இருந்து,

சொல்லப்பட்ட பெயர்களை வேண்டுமென்றே மாற்றிப் பதிவு செய்த கதைகள் ஊருக்குள் நிறைய உண்டு.

'பிள்ளைக்கு என்னடா பேர் வைச்சிருக்கிறாய்?' என்று கேட்டதற்கு, 'தம்பி, ஐயா!' என்றதால், பெயரையே தம்பிஐயா என்று வைத்த கதை கூட உண்டு.

இப்படி எங்கள் பக்கம் சாதி என்பது பெயர்களில் பின்னிணைப்பாக இல்லாமல், மனதில் தான் இருந்தது.

தமிழ்நாட்டில், பெயரோடு சாதியை இணைத்திருப்பது அதன் தொடர்ச்சிக்கு வழிவகுக்கும் என்பதால், திராவிட சிந்தனை அதையெல்லாம் மாற்றியிருக்கிறது. ஆனால் பெயரின் பின்னால் சாதிப் பெயரை வைப்பதைச் சட்டரீதியாகத் தடுத்ததால் சாதிய சிந்தனையை அழிக்க முடிந்ததா?

எங்கள் பக்க பிராமணர்களில் தங்களின் பெயருக்குப் பின்னால், ஐயர்களை வைத்துக் கொண்டுள்ளவர்கள் பெரும்பாலும் பூசை செய்வோர் மட்டும் தான்.

பூசை செய்கிறவர்கள் பெயரில் வைக்கிறார்களோ என்னவோ, ஊருக்குள் ஐயாவாகத் தான் அழைக்கப்பட்டார்கள்.

ஆனால், பூசை செய்யாத படித்த பிராமணர்கள் அவ்வாறான பெயர்களை வைத்துக் கொள்வதில் பெரும் ஆர்வம் காட்டியதாக இல்லை.

சலாம் பொம்பே, மிசிசிப்பி மசாலா போன்ற மீரா நாயரின் படங்களுக்கு இசையமைத்த எல். சுப்பிரமணியமும் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பிராமணர் தான். அவர் ஐயர் பின்னிணைப்பைக் கொண்டிருப்பதில்லை.

நான் ஆங்கிலம் கற்றுப் பாண்டியத்தியம் பெறக் காரணமாக இருந்த, கெட்டிக்காரன் என்று என் மீது மிகவும் பட்சமாக இருந்த, நல்லூர் ஐயர் மாஸ்டர் எனப்பட்ட பாலசுப்பிரமணியம், ஐயர் என்று பெயர் வைத்திருந்ததாக ஞாபகமில்லை.

பின்னர் என் மூத்த அண்ணன் தான் உயர்தர ஆங்கிலம் கற்கும்போது, என்னையும் அழைத்துச் சென்ற முத்துலிங்கம் மாஸ்டர் ஐயராக இருந்தாலும், இடதுசாரியாக இந்த சாதி முறைகளைக் கடந்தவராக இருந்து, எனது அக்காவின் திருமணத்திற்கு வந்து விருந்துண்டு போயிருந்தார். அவர் கூட ஐயர் பின்னிணைப்பைத் துறந்தவர்.

**சாதி வெறி என்பது சூடிக் கொண்ட பெயரில் இல்லை. மனதில் ஆழப் பதிந்து இருப்பது. பெற்றோரால் சூட்டப்பட்ட பெயர் என்பதால், அவர்களின் மனதில் சாதிய உணர்வு இருக்கும் என்று முடிவாகச் சொல்ல முடியுமா? யாழ்ப்பாணிகளுக்குப் பெயரின் பின்னால் சாதி இல்லை என்பதால், அவர்களின் மனதில் சாதியே இல்லை என்று ஆகி விடுமா?**

இவ்வாறான பெயர்களைக் கொண்டிருப்போரின் பெயரை கட்டாயமாகவோ, அல்லது சுயமாகவோ நீக்கம் செய்ய வேண்டும் என்ற குரல் இடைக்கிடை எழுந்து கொண்டு தான் இருக்கிறது. ஆனால், ஏற்கனவே எங்களுக்குப் பரிச்சயமான பல்வேறு பெயர்களைக் கொண்டோருக்கு சாதிப் பின்னிணைப்பு வால் நறுக்கம் செய்தால், பலரை அடையாளமே தெரியாது. வரலாற்றில் பலர் பற்றிய குழப்பமே மிஞ்சும். ஐயர் போல, ராவ், ரெட்டி, நாயுடு, மேனன், பட்டேலை நீக்கி விட்டால், இந்தியாவில் பல மாநிலங்கள் ஸ்தம்பித்து விடவும் கூடும்.

எனக்கு அதெல்லாம் பெ்ய்ரிய பிரச்சனையாகத் தோன்றுவதில்லை. என்னுடைய பிரச்சனை மனதில் இருக்கும் சாதிய மனநிலை பற்றியதே.

சாதி வெறி என்பது சூடிக் கொண்ட பெயரில் இல்லை. மனதில் ஆழப் பதிந்து இருப்பது. பெற்றோரால் சூட்டப்பட்ட பெயர் என்பதால், அவர்களின் மனதில் சாதிய உணர்வு இருக்கும் என்று முடிவாகச் சொல்ல முடியுமா? யாழ்ப்பாணிகளுக்குப் பெயரின் பின்னால் சாதி இல்லை என்பதால், அவர்களின் மனதில் சாதியே இல்லை என்று ஆகி விடுமா?

யாழ்ப்பாணிகளின் 'இப்ப ஆர் சாதி பாக்கினம்?' என்பதிலும், 'நாங்கள் சாதி பாக்கிறேலை!' என்பதிலும் பொதிந்திருக்கிற சாதி வெறியை 'முற்போக்குச் சிந்தனை' என்று பாராட்ட முடியுமா? புலிகள் சாதியை ஒழித்தார்கள் என்ற முட்டாள்கதையை நம்பி நடிக்க முடியுமா?

பறையர்கள் தான் உண்மையான பார்ப்பனர்கள் என்பதில் உள்ள 'நாங்கள் தான் உயர்ந்தவர்கள்' என்ற சாதிவெறிச் சிந்தனையைக் கடக்க முடிந்தவர்கள் எத்தனை பேர்? தங்கள் தலித் அடையாளத்தில் கொண்டிருக்கும் பெருமையைத் துறக்க விரும்புகிறர்கள் எத்தனை பேர்?

எல்லோரும் சமம் என்ற சிந்தனையைக் கடந்து, இந்த அடையாளங்களுடன், ஒட்டிக் கொள்ள நினைப்பவர்கள் அதிகம். இவ்வாறான சிந்தனைக்குப் பெரும்பாலும் சாதிவேறுபாடு இருப்பதில்லை.

எல்லோரும் சாதிப் படிமுறையில் தாங்கள் உயர்வாகக் கருதப்பட வேண்டும் என்று நினைக்கிறார்களே அன்றி, அந்தப் படிமுறையைத் தகர்த்து, எல்லோரும் மனிதர்களே என்ற நினைப்புக்குத் தயாராக இல்லை.

பண்டிதர் ஐயா என்ற மரியாதை கருதிய அழைப்பும், தன்னை ஐயா என்றே அழைக்க வேண்டுகின்ற ஆண்டையின் நிர்ப்பந்தமும் சமமாகி விடுமா?

இந்தச் சூழ்நிலைகளுக்குள், ஐயர் என்ற பெயரை, மிரட்டும் தொனியில், இந்தப் பெயர் வைத்திருப்பதால் 'நீ ஒரு சாதிவெறியன்' என்று முத்திரை குத்தி, தார் பூசி அழிக்க முயலும் வன்முறைச் சிந்தனையின் பின்னால் என்ன இருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை.

பெயரை அழித்து விட்டால், சிந்தனை மாறி விடுமா?

அடையாளங்களை அழிப்பது என்பது புலி யாழ்ப்பாணக் கோட்டையை உடைத்த மாதிரித் தான்.

தியாகி திலீபன் கோட்டையை 'இது எங்களின் அடிமைச் சின்னம்,

என்றைக்கு இது தகர்க்கப்படுகிறதோ அன்றைக்குத் தான் எங்களுக்கு விடிவு என்று உணர்ச்சி பொங்கப் பேசிய வீடியோ ஒன்றை என்றோ கேட்ட நினைவு.

வரலாறுகளும் உண்மைகளும் அடையாளங்களை அழிப்பதால் அழிந்து போவதில்லை.

பெயரில் பின்னால், ஐயர் இருக்கிறதோ இல்லையோ, எனக்கு பத்மநாப ஐயர், ஐயா தான்!

•••

இன்றைக்கு நல்லூர் முருகனை விட, யாழ்ப்பாணிகளால் அதிகம் கும்பிடப்படுவது திலீபன் தான்.

தேங்காய் உடைத்து தேர் இழுப்பது இல்லாவிட்டாலும், பறவைக் காவடி எல்லாம் உண்டு. அங்கே, ஐயரை அர்ச்சனை செய்யக் கூப்பிட்டிருந்தால், தீபாராதனை செய்ய அவரிடம் அதற்கும் மந்திரம் இருக்கும்.

உண்ணாவிரதம் இருப்பது தான் காந்தி ஆவதற்கான ஒரே தகுதி என்று நம்பிக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணிகளுக்கு, காந்தி தேசத்திற்கே அகிம்சை கற்பித்தவன் திலீபன்.

இந்த அகிம்சைக் காந்தி திலீபன் எங்கள் உரும்பிராய்ச் சந்தியில் ஒரு ‘சமூக விரோதியை’ மின்கம்பத்தில் கட்டி மண்டையில் போட்ட மாவீரன் என்பதும், டெலோ இயக்கப் போராளிகளை உயிரோடு எரியும் டயர்களுக்குள் தூக்கி எறிந்து புலிகள் வெறியாட்டம் ஆடியபோது, அதில் முக்கிய பங்கு வகித்தவர் என்பதும் யாழ்ப்பாணிகள் வசதி கருதி மறந்த உண்மைகள்.

யாழ்ப்பாணித் தமிழ்த் தேசியம் திலீபன் குற்றுயிராகக் கிடந்து அணுஅணுவாக உயிர் போவதை, பாண் கியூவில் நின்றது போல, வரிசையில் நின்று வேடிக்கை பார்த்தது. என்ன நம்பிக்கையோடு அந்த உயிர்ப்பலியை கண் முன்னால் பார்த்துக் கொண்டிருந்தது என்பது இன்று வரையும் கேட்கப்படாத கேள்வி.

பட்டினி கிடந்து தண்ணீர் கேட்டவனுக்கு தண்ணீர் கொடுக்காமல் இருந்த அதே யாழ்ப்பாணிகள் இன்றைக்கு பேஸ்புக்கில் பார்த்திபன் பசித்திருக்கிறான் என்று பதிவு போடுகிறார்கள்.

என்னைப் பொறுத்த வரைக்கும், ஒரு சமூகமாகச் செய்த கூட்டுக்கொலை அது! ஒருவனைத் தற்கொலை செய்ய வைத்துப் பலி கொடுப்பதன் மூலம் ஈழத்தைப் பெற முடியும், அல்லது இந்தியாவை இறங்கி வர வைக்க முடியும் என்று யாழ்ப்பாணிகளை விட வேறெந்த முட்டாள்களும் நம்பியிருக்க மாட்டார்கள்.

இன்றைக்கு திலீபனைக் கொண்டாடுவதன் மூலம் யாழ்ப்பாணிகள் பறை சாற்ற விரும்புவது தாங்கள் புனிதமானவர்கள் என்பதைத் தான். அது தனியாக, விரிவாக எழுதப்பட வேண்டியது.

•••

திலீபன் மரணம் பற்றி நீண்ட நாட்களுக்கு முன்னர் நான் பேஸ்புக்கில் எழுதியது இது.

ஒரு அனாவசியமான உயிரிழப்பு.

அவன் பாடசாலை பஸ்ஸில் எங்களோடு வருபவன்.

எங்கள் ஊர் எல்லையில் உள்ள கிராமம். இரு கிராமங்களையும் சேர்த்து பட்டினசபை ஆக்கியிருந்தார்களே தவிர, நம் கிராமங்களுக்கும் பட்டினத்துக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.

அவன் படித்தது யாழ்.இந்து கல்லூரி.

நான் யாழ்.கத்தோலிக்க கல்லூரி!

என்னை விட ஒரு வகுப்பு குறைந்தவன்.

அவனை எங்களுக்கு பார்த்திபன் என்றே தெரியும்.

பஸ்ஸில் நான் ஏறினால் கலகலப்பாக இருக்கும் என்று நண்பர்கள் நம் வருகைக்காக காத்திருப்பார்கள்.

பலாலி, வசாவிளான், மயிலிட்டி நண்பர்களோடு, அவனது ஊரைச் சேர்ந்த பிரபா, தேவகுமார் எல்லாம் எனது குறும்புக் கதைகளுக்கு சிரிப்பதற்காய் காத்திருப்பார்கள்.

நமது பஸ்ஸில் நான் தமிழ்ப் பட ஹீரோ மாதிரியான கலாட்டாப் பேர்வழி இல்லை.

கூச்ச சுபாவம், ஆனால் நண்பர்களோடு மட்டும் வள வளா!

இந்த லட்சணத்துக்குள் ஏதாவது கசமுசா நடந்து விடும் என்று அஞ்சியோ என்னவோ, பெண்களுக்கு என தனியான பாடசாலை பஸ் இருந்தது.

ஆண்களுக்கான எங்கள் பாடசாலை பஸ்ஸில் பெரும் கலாட்டா பண்ணியது என்றால், அது நம்ம ஈஸ்ட்ஹாம் கவுன்சிலர் சத்தியநேசன் தான். அது தனியான பெருங்கதை.

அப்பாவியான தேவகுமார் வீட்டுக்கு முன்னால் டெலா என்றொரு இயக்கம் தனது இருப்பைக் காட்ட குண்டு வைக்கப் போக, ஏற்கனவே குண்டு வைத்தது தெரிந்தவர்கள் எல்லாம் உயிரைக் காத்துக் கொள்ள ஓடித் தப்ப, தங்களை இராணுவம் ஒன்றும் செய்யாது என்று நம்பிய தந்தை வீட்டில் பிள்ளைகளோடு காத்திருக்க, குண்டு வெடித்த பின்னால், இராணுவம் வீட்டுக்குள் புகுந்து தேவகுமார், தந்தையைச் சுட்டுக் கொன்றது.

தாயும் சகோதரனும் உயிர் தப்பியிருந்தார்கள்.

அப்போது தேவகுமார் யாழ். பல்கலைக் கழகத்தில் கற்பித்துக் கொண்டிருந்தார்.

இந்த பஸ்ஸில் அவனும் வருவான். அவனது மட்டப் பையன்களுடன் கதைத்ததைத் தவிர, என்னோடு ஒரு நாளும் கதைத்ததில்லை.

பஸ்ஸின் பின் புறத்தில் ஆட்கள் நிற்பதற்கான இடத்தில், நாய்க்குட்டிகள் காருக்குள் இருந்து தலையை நீட்டுவது போல, பின் ஜன்னலைத் திறந்து தலையை நீட்ட முண்டியடிப்பவர்களில் அவனும் ஒருவனாக இருந்தான்.

அவனுடைய தந்தையார் இராசையா வாத்தியார். ஒரு ஸ்கூட்டர் வைத்திருந்தார்.

எனது அப்பு தோட்டம் செய்த இடத்திற்கு அருகில் அவரும் தோட்டம் செய்திருந்தார். அப்பு சேட் போட்டிருந்ததைக் கண்ட ஞாபகம்

மிகவும் அரிதானது. வெயிலில் கறுத்த வெறும் உடம்புடன் இடுப்பில் வேட்டியில் புகையிலையைச் சொருகிக் கொண்டு தோட்டம் செய்த அப்பு, தோட்டத்திற்கு அருகில் இருந்த வெறும் தரையில் புடலங்கன்று நாட்டி, பந்தல் போட்டிருந்தார்.

அதிலிருந்து நாலு கவடு தூரத்தில் இராசையா வாத்தியாரும் வேளாண்மை செய்து கொண்டிருந்தார். வாத்தியார் தோட்டத்தில் இறங்கி கொத்தியதையோ, நீர் இறைத்து தண்ணீர் கட்டியதையோ கண்டதில்லை. ஸ்கூட்டரில் வெள்ளை வேட்டியோடு வந்து வரம்பில் கூட கால் வைக்காமல் வெளியோ நின்று இன்ஸ்ட்ரக்சன் வழங்குவதோடு அவரது வெள்ளை வேட்டி வேளாண்மை நடந்து கொண்டிருந்தது.

தோட்ட வேலைக்கு அந்த ஏரியாவில் தோட்ட வேலை செய்த நம்ம இன சனத்தை வேலைக்கு அமர்த்தாமல் வேறு யாரையோ தான் கொண்டு செய்வித்திருந்தார்.

அவரது தோட்டச் செய்கை நீண்ட நாள் நீடித்த ஞாபகம் இல்லை.

மேல் வகுப்புகளுக்குப் போகப் போக, என்னவோ எனக்கு அவனுடைய பார்வை பிடிக்கவேயில்லை.

யாழ்ப்பாணத் தமிழில் செடில் பார்வை என்று சொல்லும் பார்வை.

நானோ கிறுக்கன்.

சும்மா போடா என்னும் ரகம்.

நட்பு நாடிய சிரிப்புகள் கூட எங்களுக்கு இடையில் இருந்ததில்லை.

பின்னர் அடிக்கடி தனியே சைக்கிளில் யாழ்ப்பாணம் நோக்கிப் போகும் போது கண்டிருக்கிறேன்.

ஊரில் கண்டு பழகாமல் இங்கே வந்து பரிச்சயமாகி, அடிக்கடி உறவினர் வீட்டில் சந்திக்கும் தம்பி ஒருவன் சொல்வான்...

தான் பலாலி வீதியில் சைக்கிளில் போகும் என்னைக் காணும் போதெல்லாம் எனக்கு பின்னால் கொஞ்ச நேரத்தில் அவனும் அதே போல சைக்கிளில் வருவான் என்று!

இப்படியாக இரண்டு பேருக்கும் நகரத்துக்குள் சோலிகள் இருந்தன.

பல தடவைகளில் எதிரெதிரே சந்தித்தாலும், பரஸ்பரம் கண்டு கொண்டதாகவே காட்டிக் கொள்ளாத சகவாசம்.

பிறகு இயக்கத்தில் பெரும் புள்ளியான பின்னர், செடில் பார்வையின் செறிவு கூடியிருந்தது.

அந்த தம்பி சொன்னான்...

'அண்ணை அவன் இயக்கத்துக்கு போனது விருப்பத்தில இல்ல. அவனும் அவனுடைய தந்தையின் நண்பரான இன்னொரு ஆசிரியரின் மகனும் மோட்டார் சைக்கிளில் போய்க் கொண்டிருந்த போது, அவன் எங்கோ சைக்கிளை மோதி அந்தப் பையன் இறந்து போனான். அதன் பின்னர் தான் அவன் இயக்கத்துக்கு போனான்'

இந்தக் கதை முன்பு நான் கேள்விப்பட்டதேயில்லை.

பின்னாளில் யாழ்ப்பாண கல்வி நிலையம் ஒன்றில் நான் ஆங்கிலம் கற்பித்துக் கொண்டிருந்த போது, யாருமில்லாத பகல் நேரங்களில் அங்கே நிற்பதுண்டு. அந்த நேரங்களில் அறிமுகமில்லாத பலர் ஏதோ 'வகுப்புகளுக்கு' வருவார்கள். ஆண்களும் பெண்களுமாய்!

அவர்களுக்கு இவன் வகுப்பு எடுத்துக் கொண்டிருந்தான்.

அப்போது கண்டாலும் அதே செடில் பார்வை! தன்னை ஒரு பெரும்புள்ளி என்ற எண்ணத்தோடு பார்க்கும் அற்ப பார்வை!

இராணுவம் அடிக்கடி தேடுதல்கள் மேற்கொள்ளத் தொடங்கிய போது, ஒரு தடவை இராணுவ வண்டித் தொடர் அந்த பாதையில் திருப்ப, என்னோடு கதைத்துக் கொண்டிருந்த மாணவர்களோடு வேலிப் பொட்டுக்குள்ளால் பாய்ந்தோட வேண்டியிருந்தது.

இதனால், கல்வி நிலையத்தாருக்குச் சொல்லி, 'நான் தனியே நிற்கும் இடத்தில் இது அனாவசியமான பிரச்சனை' என்று சொல்ல, அவர்களும் எனக்கு விசயம் தெரிந்ததையிட்டு பயந்தோ என்னவோ, அந்த வகுப்புகளை நிறுத்தி விட்டார்கள்.

இப்படியே இவன் இயக்கத்தின் அரசியலில் பெரும் புள்ளியாகி விட்டிருந்தான்.

பிறகு நான் வெளிநாட்டுக்கு வந்து விட்டேன்.

உண்ணாவிரதத்தில் இருத்தி அவனை காந்தி ரேஞ்சுக்கு கொண்டு போய் விட்டிருந்தார்கள்.

இயக்கத்தில் இருந்த போது, நம்ம ஊர்ச் சந்தியில் மனநோயாளி ஒருவனை மின்கம்பத்தில் கட்டிச் சுட்டது, கூட்டத்தில் கேள்வி கேட்டவர்களை துப்பாக்கியால் மிரட்டியது என அவன் இயக்கத்தில் ஞானஸ்நானம் பெற்று மனம் திரும்பியிருந்தான்.

உண்ணாவிரதத்தோடு அவன் பாவங்களும் கழுவப்பட்டு இன்று கொண்டாடப்படும் புனிதர்களில் ஒருவனாகி விட்டான்.

அவனுடைய உண்ணா விரதத்தில் தலைவர் வந்து 'நீ முன்னால போ, நான் பின்னால வாறன்' என்று சொன்னதாக புராணங்கள் சொல்கின்றன.

என்னைக் கேட்டால், இந்திய எதிரிக்கு சகுனம் பிழைக்க, அறுக்கப்பட்ட மூக்கு அவன்!

அவன் பலியாடு ஆக்கப்பட்டதற்கு எனக்கு ஒரு விளக்கம் உண்டு.

கிட்டு அப்போது பெரும் புள்ளி. கிட்டு என்றால் இயக்கம், இயக்கம் என்றால் கிட்டு என்ற நிலைமை.

ஒரு கட்டத்தில் கிட்டுவின் விசுவாசிகள் பலர் இயக்கத்திலிருந்து கழட்டப்பட்டார்கள்.

அவனும் கிட்டு காலத்தில் அரசியலில் பெரும் புள்ளியாக இருந்ததால், அவனை கழட்டுவதற்கு பதிலாக காவு கொடுப்பது ஒரே கல்லில் இரண்டு மாங்காயாகத் தலைவருக்கு தெரிந்திருக்கும்.

ஏற்கனவே அரசியல் தலைமை, ஆலோசனைக் கனவுகளுடன் இருந்தவர்களுக்கு, இவனை அகற்றுவது சாதகமான ஒன்று. தலைவருக்கு தகடு கொடுத்து அள்ளி வைத்திருப்பார்கள்.

அப்படி அரசியலைக் கரைத்துக் குடித்த ஹீரோ

ஸ்டேட்டஸில் அவன் இருந்தான், உள்ளுக்கும் வெளியேயும் கனவுகளோடு இருந்தவர்கள் பொறாமைப்பட்டு மனம் புழுங்கும் அளவுக்கு!

உண்ணாவிரதம் இருந்தவர்களை கவர்ந்து சென்று கடிமணம் புரிந்த ஒருவர், இன்னொருவரை உண்ணாவிரதம் இருந்து சாகும் வரை பார்த்துக் கொண்டிருந்ததற்கு எந்த நியாயமும் இல்லை.

உண்ணாவிரதம் இருந்து உயிரிழந்தால், இராணுவம் நுழைந்து விடும் என்று காரணம் காட்டி பல்கலைக்கழக மாணவர்களை கடத்திச் சென்ற அதே தலைவர், இராணுவத்தை வரவழைப்பதற்காகவே இந்த உண்ணாவிரதத்தை அரங்கேற்றியதன் முரண்நகையை என்னவென்பது?

தன்னுடைய அரசியல் இலாபத்துக்கும், கிட்டு விசுவாசியை கழட்டி விடுவதற்குமான ஒரு கல், இரண்டு மாங்காய் கதை தான் இது!

அவன் இறக்கும் தறுவாயில் தண்ணீர் கேட்டதாகவும், அது மறுக்கப்பட்டதாகவும் சூழ இருந்தவர்கள் சொல்கிறார்கள்.

சுலபமாகவே இந்தியாவின் கொடிய முகத்தைக் காட்டவே உண்ணாவிரதம் செய்தோம் என்று விட்டு, ஜகா வாங்கியிருக்கலாம். எந்தப் பெரிய மாற்றமும் நிகழ்ந்திருக்கப் போவதில்லை.

அந்த மரணத்தால் சாதித்தது எதுவும் இல்லை, இன்றைக்கு பேஸ்புக்கில் புனிதராக லைக் போடுவதைத் தவிர!

சிறுவர்களை எரியும் டயரில் தூக்கி எறிந்து கொன்றதை களையெடுப்பு என்று கொண்டாடிவர்கள் எல்லாம் அவனுடைய மரணத்தை கொண்டாடுவதன் மூலம் அகிம்சாவாதியாகி விட்டார்கள்.

அந்த டயர் எரிப்புக் கொலைகளில் அவனுக்கும் சம்பந்தம் இருந்திருக்கிறது.

எங்கோ வாசித்த ஞாபகம், அதன் சாராம்சம் இது தான்.

பெரிய ஹீரோக்கள் எல்லாம் ஒரு கட்டம் வரை சுற்ற உள்ளவர்களால் பப்பா மரத்தில் ஏற்றப்பட்டு, அதன் பின்னால் விரும்பினாலும் திரும்பி வர முடியாதபடி மேலே சென்றவர்கள்.

அவனுக்கு அதே நிலை தான்.

அவனைச் சாகடித்தவருக்கும் அதே நிலை தான்!

•••

சோபா சக்தி உயிர்மையில் திலீபனின் மரணமும், அவரது 'உடலமும்' பற்றி எழுதிய 'மெய்யெழுத்து' கதை பற்றி பேஸ்புக்கில் பார்த்தேன்.

'அட, நம்ம பார்த்திபன் திலீபன்!?'.

படிக்க வேண்டும் போல இருந்தது.

ஆசான் ஜெயமோகனால் விதந்துரைக்கப்படுகிற ஒரு கதைசொல்லியின் கதையில் உள்ள 'இலக்கியத் தரம்' பற்றி, அதே ஆசானால் 'அற்பர்கள்' என்று வகைப்படுத்தப் படுகிறவர்களில் ஒருவனான எனக்கு, அளவிடுவதற்கான தகுதி இருக்கிறதோ, தெரியாது. அதை விட, எதையாவது சொல்லப் போனாலும், அ.முத்துலிங்கத்தை தனது தந்தை போன்றவர் என்ற மாதிரி, அண்ணன் தம்பி உறவு முறைகளை வேறு அடுத்த கனடா ஆன்மீகச் சொற்பொழிவு விஜயத்தின் போது பிரஸ்தாபித்து விடவும் கூடும்.

'ஷேக்ஸ்பியர், கம்பன், அ.முத்துலிங்கம், ஜெயமோகன் போன்ற பெரியார்களின் வரிசையில், அற்பர்களின் சதியால்....!'

குடும்பமாகவே சண்டைக்கு வந்தால், இந்த ஒண்டிவீரனால் சமாளிக்கவும் முடியாது.

எனவே, இலக்கியத் தரம் பற்றி அளவீடு செய்வதையே முழுநேரத் தொழிலாகக் கொண்டு அளவுகோலோடு அலைகிறவர்களுக்கு, அது அவர்கள் மேல் திணிக்கப்பட்ட சமூகக் கடமை. (என்று அவர்கள் கருதுகிறார்கள்!).

அதை அவர்களிடமே விட்டு விடுகிறேன்.

அவிய்ங்களும் என்ன சொல்றாங்கன்னா....

சோபா சக்தியின் எழுத்துகள் பற்றி புல்லரிக்கிற, இலக்கிய 'சாமான்யர்களின்' 'செமண்ணே!'க்களை, அவர் கிரமம் தவறாமல் பகிரும் போதும், அவரது பதிவுகளின் பின்னூட்டங்களில் அவரது பதிப்பாளர் விடும் 'பின்னீட்டீங்க, தலைவரே!'க்களையும் மட்டுமன்றி, அவரது எழுத்துக்களில் பிரமித்து, மெய்யுருகி, உடலும் உள்ளமும் பதைபதைக்கிற எம்.டி. முத்துக்குமாரசாமி முதல், பிரித்து மேய்ந்து, கழுவி ஊத்திக் காறித் துப்புகிற விமர்சனங்களுக்கு ஓடி வந்து, 'செமண்ணே!' பின்னூட்டம் போடுகிற இணைய மின்இதழ் ஆசிரியர்கள் வரைக்கும் வாசித்துக் கொண்டு தான் இருக்கிறேன்.

இதை விட, அவரது மர்ம அங்கலாவண்யங்கள் வரை வர்ணிக்கிற, hell hath no fury like scorned பெண் எழுத்தாளர்களை வேறு வாசித்துத் தொலைக்கும்படி பேஸ்புக் முகத்தில் அறையும்.

யேசுவின் பெயரால் ஞானஸ்நானம் பெற்ற கத்தோலிக்கன் நான். மறுகன்னத்தையும் காட்டித் தொலைக்க வேண்டும்.

கதையை வாசித்து முடிந்ததும், முடிவாகத் தெரிந்தது, beyond reasonable doubt,
சிறந்த கதை சொல்லி தான்.

அடித்தும், அவிழ்த்தும்... அவித்தும் கதை விடுகிற!

எம்.ஜி.ஆர் கதை இலாகா, பாகிஸ்தான் இந்தியா எல்லை என்று தமிழில் எழுதிய இரு பக்க அம்புக்குறி போர்ட் மாதிரி!

ஏமாந்த தமிழ்நாட்டுச் சோணகிரிகளுக்கு காது குத்திப் பூ வைத்துச் சொல்லப்பட்ட கதை!

இடையில், புலி பிராண்ட் தமிழ்த்தேசிய யாழ்ப்பாணிகளைக் குஷிப்படுத்தும் முயற்சியோடு!

(எப்படி முக்கினாலும், தமிழ்த்தேசியத்திற்கு இதெல்லாம் மன்னிக்க முடியாத துரோகம்! குப்பி கடிக்காத ஒரிஜினல் புலி இலக்கியர்களாலேயே முடியவில்லை. 'துண்டு கொடுக்காமல்', இந்திய இராணுவத்தைக் கண்டதும் துப்பாக்கியை பக்கத்தில் நின்றவனிடம் கொடுத்து விட்டு ஓடிப் போன குழந்தைப் போராளியை மன்னிப்பார்களா?).

'மயில் எலும்புகளுக்கும், மனித எலும்புகளுக்கும் வித்தியாசம் தெரியாத மோட்டுச் சிங்களவர்கள்' பற்றி யாழ்ப்பாணிகள், இடதுசாரி இயக்கங்களை சாதியோடு சேர்த்துச் சிரித்த மாதிரி, சிரிப்பதற்காக காமெடி ட்ராக் வேறு!

யாரோ ஒரு பேய்வெட்டி வேலை மினக்கெட்டு, ஒரு காட்டு மயிலை, மாபியாக் கொலைகாரார்கள் மாதிரி shallow graves இல் புதைக்காமல், ஒன்றரை அடி மயிலுக்கு ஆறடிக் கிடங்கு வெட்டி ஆழப் புதைத்திருக்கிறான், பிணங்களைக் கூட புதைக்க முடியாமல் இருந்த இந்தக் கொடிய யுத்தத்திற்குள்ளே! (ஒருவேளை 'முருகனின் அவதாரமான' பிரபாகரன் கோயில் மயிலாக இருக்கக் கூடும்!)

முன்பின் நவீனத்துவ இலக்கிய, கலாவிமர்சகர்கள் கதைக்குள் படிமங்களைத் தோண்டி எடுத்தால் கம்பனி கணக்கில் எடுக்காது!

பொன்னியின் செல்வன் மாதிரியான வரலாற்று நாவல்களில் நினைத்த மாதிரி அடிச்சு விடலாம். கேட்கப் பேர் இருக்காது.

அந்தத் துணிச்சல் தானே ஆசானுக்கும் இருந்திருக்கும்.

கோட்டை கட்டிப் பாதுகாப்புத் தேடத் தெரியாமல், பார்ப்பானின் கதை கேட்டுக் கோயில் கட்டிய முட்டாள் மன்னர்களின் அடுக்குமாடிக் கோட்டைகள் பற்றி அடுக்குமொழி வசனங்களில் முழக்கி விடலாம்!

கிரேக்கத்து வீதிகளில் தமிழ் மன்னன் வீரநடை போட, சாளரங்களுக்குள்ளால் அவனைப் பார்த்துக் காதல் கொண்ட பேரழகு நங்கையர் பற்றி அவிழ்த்து விடலாம்.

வாசித்தவர்கள் film adaptation க்காய் தவம் இருப்பார்கள்.

சமகால வரலாற்றுக் கதைகள் அப்படியானவை அல்ல. சம்பவங்கள் வரலாற்று உண்மைகளாக இருக்க வேண்டியதில்லை. படுக்கையறைக்குள் விளக்குப் பிடித்த சாண்டில்யன் கற்பனைகளாகக் கூட இருக்கலாம். ஆனால், புவியியல் முதலான வரலாற்று உண்மைகள் உண்மைகளாகத் தானே இருக்க வேண்டும்.

ஒரு வரலாற்றுக் காவியத்தைப் படைப்பதற்கு முன்னால், இங்கே அந்தக் கால வரலாறு பற்றிய உண்மைகளைத் தெரிந்து கொள்கிறார்கள். அதை ஒரு ஆராய்ச்சி என்ற அளவில் தீவிரமாக ஆராய்கிறார்கள். இல்லை என்றால் உண்டு, இல்லை என்று ஆக்கி விடுவார்கள்.

கருங்காலிச் சோழன் கொத்துரொட்டி சாப்பிடுவதாகக் காட்டினால், தென்னமெரிக்காவில் இருந்து ஐரோப்பியர்கள் கொண்டு வந்த மிளகாய் எப்படி வந்தது என்றென்ன, மட்டக்களப்புக் கொத்துரொட்டி எப்படிடா வந்தது என்று கூட நம்ம யூடியூப் விமர்சகர்கள் கேட்க மாட்டார்கள் என்பது என்னவோ உண்மை தான்.

ரோமன் கால கிளேடியேட்டர் படங்களில், தக்காளியையும் பாஸ்ராவையும் காட்டினால், கொலம்பஸ் போன பின்னால் தென்னமெரிக்காவில் இருந்த வந்த தக்காளியும், மார்க்கோ போலோ சீனாவில் இருந்து கொண்டு வந்த பாஸ்ராவும் எப்படி வந்தன என்று இங்கே கேட்பார்கள்.

அந்தக் குறைந்த பட்ச ஆராய்ச்சி கூட இல்லாமல், உட்கார்ந்த இடத்தில் வரலாறு எழுதுகிற கல்கி அவதாரம் இவர்!

'தெற்கு' உரும்பிராய்க்குப் பக்கத்து ஊரான ஊரெழுவில், முருகன் கோவில். அதில் மயில்!

அங்கு, 'முன் பல் துருத்திக் கொண்டிருந்த' திலீபன்.

அவரைத் தேடி டாக்டர் போன வழியில் தான் நான் சொன்ன அந்த, அம்மன் கோயில் சிலைகளைக் கண்டெடுத்த கிணறு இருந்த, பொதுமலசலகூட பனங்கூடல்.

அம்மன் கோவில் வளவுக்குள் கூட பனை மரங்களைக் கண்ட ஞாபகம் இல்லை.

'யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அவர் படித்துக் கொண்டிருந்த காலத்தில் தான், இலங்கை அரசுக்கு கோரிக்கை வைத்து, பல்கலைக்கழக வளாகத்தில் உண்ணாவிரதமிருந்து அறப்போராட்டம் நடத்திய மதிவதனி, படிகலிங்கம், வனஜா உள்ளிட்ட ஒன்பது மாணவர்களும் பட்டினி மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்த போது, அந்த உயிர்களைப் பாதுகாப்பதற்காக புலிகள் வலுகட்டாயமாக துப்பாக்கி முனையில் அந்த மாணவர்களைக் கடத்திச் சென்றிருந்தார்கள். அந்த நடவடிக்கையை முன்னின்று செய்தவர்களில் திலீபனும் ஒருவர். அவர் அப்போது ஒரு சிறிய ஏரியாவுக்குப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளராக இருந்தார்.'.



இவ்வாறான வரலாற்று 'உண்மை'களோடு, புனையப்பட்ட கதை அது. சமூக விரோதி என்று

மின்கம்பத்தில் கட்டி மண்டையில் போட்ட பேட்டை ரவுடி ரேஞ்ச் 'சிறிய ஏரியா' 'அரசியல்' பொறுப்பாளரை, டாக்டரே 'உடலத்தை' சுற்றி வந்து காலில் விழுந்து வணங்கும் ஈழத்து காந்தியாக்கும் யாழ்ப்பாணித் தமிழ்த்தேசியம் அடித்து விடுகிற அதே கதையை, தமிழ்நாட்டு நுகர்வாளருக்காக சரியான முறையில் யாழ்ப்பாண முறைப்படி உப்பு, புளி, பலசரக்குச் சேர்த்து சொல்லப்பட்ட கதை.

யாழ்ப்பாணிகளுக்காக எழுதியிருந்தால், 'ஊரெழுவில் எங்கே இருக்கிறது முருகன் கோயில்? என்று கேட்டிருக்க மாட்டார்களா?

'அதென்னண்ணே, ... பட்டினி மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்த போது, அந்த உயிர்களைப் பாதுகாப்பதற்காக... வலுக்கட்டாயமாக துப்பாக்கி முனையில் கடத்திச் சென்ற நடவடிக்கையை முன்னின்று செய்தவர்... அவரே உண்ணாவிரதமிருந்து அறப்போராட்டம் நடத்திய போது, அவருக்கு கேட்ட தண்ணி கூடக் கொடுக்காம, முழு டவுனுமே, முதல் நாள் முதல் ஷோ தமிழ்ச்சினிமாவுக்கு மாதிரி, வரிசையில நின்னு பாத்துக்கிட்டு இருந்துதாமே, அவிங்களுக்குக் கூட அவரோட உயிரைப் பாதுகாக்க வலுக்கட்டாயமாக எதையாவது செய்யணும்னு தோணலியா?' என்று தமிழ்நாட்டு அறிவுக் கொழுந்துகளும் கேட்க மாட்டார்கள் என்ற நினைப்பில் அடிச்சு விட வேண்டியது தான்!

இந்த முன்னாள் குழந்தைப்போராளியின் அந்தக் கதைக்கு, தமிழ்நாட்டில் நன்கு அறியப்பட்ட, இயக்கத்தை விட்டு இறுதி யுத்தக் கடைசி வரை ஓடாமல் இருந்து, 'குப்பி கடிக்காமல்', இலங்கை அரசிடம் சரணடைந்து புனர்வாழ்வு பெற்ற முன்னாள் புலியான தமிழ்க்கவி விட்ட பின்னூட்டம்...

'ஈரை பேனாக்கி, பேனை பெருமாளாக்கி, பெரீய்ய்ய பொய்யை புனையிறதெல்லாம்... ச்சைக். உன்னைக் கேட்டுத் தான்.

அபாரம். பலே வெள்ளையத் தேவா!'

கரடியே காறித் துப்பிய மோமன்ட் அது!

பிறகு அதற்குள், நான் எதற்கு?

•••

புலன் பெயர் தமிழ்ப் படைப்பாளிகளுக்குள் மட்டு மன்றி, இந்தியாவையும் உள்ளடக்கிய தமிழ்நாட்டுப் படைப்பாளிகளுக்குள்ளும், பலரும் கனவு காண்கிற, அல்லது நினைத்துப் பார்த்திராத உச்சங்களை எட்டியவர் சோபா சக்தி. தமிழ் இலக்கிய உலகின் நம்பர் வண்கள் முதல், மூத்த எழுத்தாளர்கள் வரை பொறாமையால் மனம் புழுங்கக் கூடிய அளவில் அறியப்பட்டவராக இருக்கும் ஒருவர். அவர்களைப் போல, விருதுகள் பெற்றுக் கொள்ளாவிட்டாலும், அவரது படைப்புகள் சர்வதேச மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்படும் அளவில், அவை விருதுகளுக்காகப் பரிந்துரைக்கப்படும் அளவில் புகழ் பெற்றிருக்கிறார்... 'குழந்தைப் போராளி' என்ற அடைமொழியோடு!

எழுத்து மட்டுமில்லாமல், சினிமா, நாடக நடிகராகக் கூட தன்னை அடையாளம் காட்டிக் கொண்டிருக்கிறவர். பலரும் கனவு காண்கிற lime light களிலும், Red carpet களிலும் வலம் வருகிற ஸ்டார் அந்தஸ்தில் இருக்கிறவர்.

தமிழ்நாடு போனால், வணிக சஞ்சிகைகளால் நேர்காணலுக்கான most sought-after ஈழத்து இலக்கியவாதியாக இருக்கிறார். தன்னை ஒரு புத்திஜீவி ரேஞ்சில் தோஸ்தோயேவ்ஸ்கி முதல் அம்பேத்கார் வரைக்கும், வோல்டேர் முதல் பெரியார் வரைக்கும் மேற்கோள்கள் காட்டுகிறவராக மட்டுமல்லாமல், ஆழ்ந்த வாசிப்புக் கொண்டவராக வியப்புக்குள்ளாக வைக்கிறவர். (தமிழ்நாட்டினரைத் தான்!)

இவர் மார்க்சிசம், பெரியாரியம், அம்பேத்காரியம் எல்லாம் fusion செய்ததோ, கூழாம்பாணி சாம்பார் ஆக்கியதோவான ஒன்றின் பாண்டித்தியராக, முற்போக்குச் சிந்தனை கொண்ட எல்லாருக்கும் (தோழர்களுக்கும்!?) எல்லாமும் ஆனதொரு அவதாரமாகத் தான் உருவெடுத்திருக்கிறார்.

அவற்றுக்கு சம்பந்த மேயில்லாத இந்துத்துவ ஆசான், நித்தியானந்த 'ஆவி எழுத்தாளர்' சாரு, குளோசட் தமிழ்த்தேசிய அ.முத்துலிங்கம் வகையறாக்கள் உட்பட, யாவருக்கும் யாதுமாகி!

அவரது நாவல் பற்றி அகழ் மின்னிதழில் அருண் அம்பலவாணர் எழுதிய கட்டுரையை அகற்றும்படி, இவருக்காக தமிழ்நாட்டு இலக்கிய தாதாக்களும் பேட்டை ரவுடிகளும் மிரட்டல் விடுக்கும் அளவுக்கு அவர்களோடு நெருக்கமான ஒரு ஈழ புலன் பெயர் இலக்கியச் சண்டியர்!

இந்த நேர்காணல் வகையறாக்களில் ஈடுபாடு இல்லாத நான் அகழ் மின்னிதழுக்கு நேர்காணல் வழங்கச் சம்மதித்ததன் காரணங்களில் ஒன்று, இந்த தாதாக்களினதும் ரவுடிகளினதும் இந்தக் கருத்துச் சுதந்திர மறுப்புச் சேஷ்டைகள். மற்றது, காலம் செல்வம் என்னைப் பற்றிச் சொல்லித் திரிகிற அவதூறுகள்!. (இந்தச் சேஷ்டைகளை எல்லாம் என்னைப் போன்ற 'அற்ப' 'சாமான்யனோடு' வைத்துக் கொள்ள மாட்டார்கள் என்பதெல்லாம் வேறுகதை!)

அந்தப் புகழும் பெருமையும் அவரைச்சிறந்த கதைசொல்லியாகவே ஆக்கி விட்டிருக்கிறது.

அடிச்சும், அவிழ்த்தும், அவித்தும் கதை விடுகிற!

ஜுனியர் விகடன் இதழில் தமிழர் கூட்டணியின் அப்பாபிள்ளை அமிர்தலிங்கத்தின் அன்புக்குரியவரான சட்டத்தரணி கரிகாலன் நவரத்தினம் இலங்கை அரசியல் பற்றிக் கட்டுரைத் தொடர் ஒன்று எழுதுகிறார். அதில் குட்டிமணி, தங்கத்துரை ஆகியோர் கைது செய்யப்பட்டது பற்றி எழுதியபோது, (அவர்கள் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரானவர்களில் அவரும் ஒருவர்) அவர்களைக் காட்டிக் கொடுத்தது பிரபாகரன் தான் என்பதை சூட்சுமமாக எழுதுகிறார்.

நான் ஆசிரியராக இருந்து வெளியிட்ட தாயகம் இதழில், சின்னத்தம்பி வேலாயுதம் எழுதிய

'ஈழம் ஒரு தொடர்கதை'யில், அந்தக் கைது பற்றி எழுதியபோது, பிரான்சில் இருந்த, பிரபாகரனுக்கு ஒரு தடவை அடைக்கலம் கொடுத்த சபாலிங்கம் எழுதிய வாசகர் கடிதத்தில் ஜுனியர் விகடன் கட்டுரைத் தொடரை மேற்கோள் காட்டி, 'அந்தக் கறுப்பு ஆடு யார்?' என்று குறிப்பிட்டதை எழுதியிருந்தார்.

அதுவெளிவந்த பின்னால், கொஞ்ச நாட்களின் பின், சபாலிங்கம் பாரிஸில் வைத்துப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அந்தக் கொலை பற்றி இலங்கையில் இருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகையான தி ஐலண்டில், தராக்கி சிவராம் எழுதியபோது, என்னைப் பற்றியும், தாயகம் பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கொலை நடந்த போது, சோபா சக்தி எழுத்துலகுக்குள் இல்லை.

தமிழ்நாட்டில் புத்தகத் திருவிழா காலத்தில், நிகழ்ச்சி ஒன்றில் பேசும்போது, 'பாரிஸில் வைத்து எனது நண்பரான சபாலிங்கம் புலிகளால் கொல்லப்பட்டார்' என்கிறார்.

சீமான் மாதிரி!

செத்துப் போன சபாலிங்கத்திடம் கேட்கவா முடியும்?

எனது புத்தகங்களை பாரிஸில் நடுரோட்டில் வைத்து எரித்தார்கள் என்றார். இது நாங்கள் ஒருவருமே கேட்டிராத புதிய கதை.

சமீபத்தில் புலன் பெயர்ந்த சூழலில் நடைபெற்ற புத்தக எரிப்பு சம்பந்தமாக, புத்தகத்தைப் பணம் கொடுத்து வாங்கி எரிக்கும் சுதந்திரம் பற்றி அருண்மொழிவர்மன் எழுதிய பதிவு பற்றிய தனது பதிவு ஒன்றில் பல்வேறு புத்தக எரிப்புகள் பற்றி எல்லாம் காலச்சுவடு கண்ணன், பெருமாள் முருகன் என இலக்கிய உலகப் பிரபலங்கள் பலரையும் குறிப்பிட்டு எழுதியபோது, தான் அடிச்சு விட்ட, புலிகள் பணம் கொடுக்காமல் கடைக்குள்ளிருந்த தனது புத்தகங்களை எடுத்து வந்து ரோட்டில் போட்டு எரித்த கதை பற்றி சொல்லவேயில்லை.

தமிழ்நாட்டு இளிச்சவாய் சோணகிரிகளுக்கு காதில் பூ வைத்துச் சுற்றலாம் என்ற தளராத நம்பிக்கையில் போகிற போக்கிலோ, போதையிலோ அடித்து விட்டது.

நினைவில் இருந்திருக்க நியாயமில்லை.

இப்படி இந்த இலக்கிய உலகின் சீமான், முன்பின் முரணாக அடிச்சு விட்டுக் கொண்டே இருக்கிறார்... கேட்கிற தமிழ்நாட்டுக் கேனயர்களுக்கு!

•••

சோபா சக்தியின் எழுத்து நடை, எங்கள் தமிழ் இலக்கிய உலகத்தில் தனித்துவமானது என்று நான் கருதும் சிலவற்றில் ஒன்று. அதை நான் அவருக்கு நேரிலும் சொல்லியிருக்கிறேன்.

அவருடைய ஆரம்பப் படைப்புகளை நான் மிகவும் ஆர்வத்துடன் வாசித்தும் இருக்கிறேன்.

சோபா சக்தியும், அவரது படைப்புகளும் தங்கள் ஆன்மாக்களை இழந்து நீண்ட காலம். அவரும் தன்னுடைய படைப்புகளை குடிசைக் கைத்தொழிலில் இருந்து, தமிழ்நாட்டுச் சந்தை வரவேற்புக் கருதி, mass production க்காக, சீனாவுக்கு அனுப்பிக் கன காலம்.

ஒரே மாதத்திலேயே ஐந்து இதழ்களில் அவரது கதைகள் வெளிவரும் அளவுக்கு, உட்கார்ந்த இடத்தில் எழுதித் தள்ளும் முழுநேர எழுதுவினைஞர் ஆகி விட்டார்.

அவரது புகழை வைத்து அதன் நிழலில் குளிர் காய நினைக்கும் இதழ் இலக்கியச்செம்மல்களின் அழுத்தம் காரணமாகவும் இருக்கலாம்.

ஆராய்ச்சி எல்லாம் பண்ணிக் கொண்டிருக்க முடியாது. தமிழ்சினிமா ஹீரோவுக்கு கதை எழுதின மாதிரிடு

அடிச்சு விட வேண்டியது தான்! இறுதித் துளி இரத்தம் வரும் வரைக்கும் கறக்கத் தான் இருக்கிறதே, புலிகள் நடத்திய புனிதப் போராட்டம்!

•••

புலன் பெயர் இலக்கியச் சூழலில் தன்னை ஒரு கலகக்காரனாக, புலிகளை நூறு வீதமும், இலங்கை அரசை இருநூறு வீதமும் எதிர்க்கிற ஒருவராகத் தான் அவர் தன்னைக் கூறிக் கொண்டிருந்தார்.

இந்தக் கலகக்காரன் இலக்கிய உலகில் செய்த கலகங்கள் பல. ஆசான், சாரு போன்ற இலக்கிய நம்பர் வண்கள் பற்றி மட்டுமன்றி, அ.முத்துலிங்கம் பற்றி 'மூடுலிங்க' கதை கூட எழுதியிருக்கிறார். பாவம், யமுனா ராஜேந்திரனையும் விட்டு வைக்கவில்லை.

கலாமோகன் மீதான துண்டுப்பிரசுர வெளியீடு, வினியோகம் பற்றி நண்பர் சொல்வார், தமிழ்நாட்டில் அறியப்பட்ட கலாமோகன் இருந்தால், தான் அங்கே கதை சொல்ல முடியாது என்பதற்காக, அவரை இலக்கியச் சூழலில் இருந்து வெளியேற்றத் திட்டமிட்டுச் செய்த வேலை அது என்று. 'தமிழ்நாட்டில் எங்கேயும் கலாமோகன் பற்றிக் குறிப்பிட்டிருக்கவே மாட்டார். கலாமோகன் இருந்தால் தன் இருப்புக்குச் சிக்கல், தன்னைப் பெரிய ஆளாகக் காட்ட முடியாது என்று தெரியும்'.

இப்படி சில இடங்களில் இவரின் partner in crime ஆக இருந்த சுகன் கூட இப்போது இவரோடு இல்லை.

அதையெல்லாம் நானே தேடி வாசிக்கச் சிரமம் இல்லாமல், தாங்களாகவே தோண்டியெடுத்து அடிக்கடி பகிர்கிற இலக்கிய ஆர்வலர்களின் புண்ணியத்தில் அவையும் என் கண்ணில் பட்டபடி தான் இருக்கின்றன.

இன்றைக்கும் இவரது அன்றைய புலி ஆதரவுக் கவிதையை தமிழ்நாட்டுப் பிரபல, ஈழத்துச் சயந்தன் தன் பேஸ்புக்கில் பதிவிட்டிருந்ததைத் தேடிப் பிடிக்கலாம், பொறுமை இருந்தால்!

இந்தக் கலகக்காரன் சமீபத்தில் நீலம் இதழில் எழுதிய 'பல்லிராஜா' கதையை நான் வாசிக்கவில்லை. ஆனால், அந்த நேரத்தில் அந்த தலைப்பு வெளியானது குறித்து எனக்கு ஒரு ஊகம் உண்டு. இதுவும் ஒரு 'மூடுலிங்க' போன்ற விவகாரம் தான்.

பல்லிராஜா, லைக்கா அல்லிராஜா பற்றியதாகத் தானே இருக்கும்?

பொன்னியின் செல்வன் பரபரப்பு நேரம் அது. அதன் நடிகர் பட்டாளத்துக்குள், இந்த

இன்டர்நாஷனல் ஸ்டார் மகாநடிகர் இடம் பெற முனைந்து தோற்றுப் போனதால் வந்த கோபத்தால் எழுதியதாகத் தான் அந்தத் தலைப்பு இருக்க வேண்டும் என்பது என் அனுமானம்.

•••

இலக்கியத்தில் இவருடைய அவதாரங்கள் மூன்று.

முதலாவது, புலிகள் இயக்கத்திலிருந்து இவர் வெளியேறி வெளிநாடு வந்து, யாழ்ப்பாணித் தேசியத்தின் புலி ஆதரவு நிலைப்பாட்டோடு எழுதியவை.

அடுத்து, மாற்றுக் கருத்துத் தோழர்களோடு சேர்ந்திருந்த புலி எதிர்ப்பு எழுத்து.

மூன்றாவது, தற்போது எடுத்திருக்கும் தலித் அவதாரம்.

‘சனநாயகப் படுகொலை செய்தவர்களையோ நியாயப்படுத்தி இலக்கியம் எழுதுவதும் போர்க்குற்றத்தின் ஒரு பகுதியே.

போரை எதிர்த்து இலக்கியத் தரத்தோடு பிரதிகளை உருவாக்கிய ஏராளமானவர்கள் நம்மிடையே உள்ளனர். சனநாயகத்துக்காகக் குரல் கொடுத்ததற்காகச் சில எழுத்தாளர்கள் தமது உயிரையும் எங்கள் மத்தியில்தான் இழந்தார்கள். யுத்தத்தை மறுத்தும் சனநாயகத்துக்காகக் குரல் கொடுத்தும் எழுதப்பட்ட பிரதிகளே அறம் சார்ந்த பிரதிகள். சனநாயகத்தின் குரல்வளையை அறுத்துப் போட்டவர்களைக் கடவுளாகக் கொண்டாடியும், சிறார்களைப் போரில் கட்டாயமாக இணைத்ததை மழுப்பியும், சகோதர இனத்தவர்கள் மீதான படுகொலைகளை நியாயப்படுத்தியும் எழுதப்பட்ட பிரதிகள் வெறும் காகிதக்குப்பைகள். நான்கூட என்னுடைய இருபத்தைந்து வயதுக்கு முன்னால், இப்படிச் சில குப்பைகளை எழுதியிருந்தேன் என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அதற்காக மன்னிப்பெல்லாம் கேட்க மாட்டேன். ஏனெனில் இதற்கெல்லாம் மன்னிப்பே கிடையாது.’

சோபா சக்தி எழுதியதை பேஸ்புக்கில் ஒருவர் பகிர்ந்திருந்தார்.

**ஆனால், சிக்கல் என்னவெனில், இவர் தன்னை புலிகளின் பாசிசச் சிந்தனைக்கு எதிரானவராகக் கட்டமைத்துக் கொண்டிருந்தாலும், ‘பைக்குள் உள்ள புலி’ வெளியே வந்து இவர் அடிப்படையிலேயே, யாழ்ப்பாணத் தமிழ்த் தேசியச் சிந்தனைக்குள் ஊறிப் போனவர் என்று இவருடைய முகமூடிகளை உரித்துக் காட்டி விடுகிறது.**

இந்தக் ‘குப்பைகளை’ எல்லாம் எழுதியவர், எடுத்த metamorphosis அவதாரங்களின் பின்னால், என்ன சிந்தனை மாற்றங்கள் இருந்திருக்கும், அதற்கு ஊக்கிகளாக இருந்த சம்பவங்கள் என்ன என்பதற்கு புத்திஜீவித்தனமான விளக்கங்கள் எதுவும் கண்ணில் பட்டதில்லை.

பொன்னுச்சாமி இரவில் கடவுளைக் கண்டு, காலையில் எழுந்து வெள்ளை வேட்டியை மஞ்சளில் தோய்த்து சாமியார் ஆன மாதிரி, இவரும் இரவுகளில் கடவுளைக் கண்டு காலையில் மனம் திருந்தி ‘தண்ணீரால்’ ஞானஸ்நானம் பெற்றிருக்கக் கூடும் தானே என்றோ, சிவமூலிகை மூலமாக இறையைக் கண்டவர் மாதிரித் தானே இருக்கிறார் என்றோ நீங்கள் நினைக்கக் கூடும்.

ஆனால், இதற்கான ஊகங்களும் விளக்கங்களும் உண்டு.

இவர் பாங்கொக்கில் இருந்தபோது இவரைத் தெரிந்த ஒருவர் இவரது மாற்றமும் வளர்ச்சியும் பற்றி ஆச்சரியம் கொள்கிறவர். அங்கு இவரது வரலாறு, இவர் பேச விரும்பாத பகுதிகள். அவர் சொல்வதன்படி, அப்போது ‘தான் எப்படி புகழ் அடைவது’ என்பது தான் இவரது ஒரே தேடலாக, நோக்கமாக இருந்திருக்கிறது.

அதன் அடிப்படையில் தான் இந்த அவதாரங்களைப் பார்க்க முடிகிறது.

புலிக்கு ஆதரவாக எழுதிக் கொண்டிருந்தால், எங்கேயும் மேலே போக முடியாது. அந்தக் கூட்டமும் சன நெருக்கடி நிறைந்த ஆய்வாளர்கள், ஊடகவியலாளர்கள், கவிஞர்கள் என்ற புலி ஆதரவுக் குடிசைக் கைத்தொழில் அரசியல், இலக்கிய முயற்சியாளர்கள். அந்தக் குடிசைக் கைத்தொழிலாளர் கூட்டத்திற்குள் தான் இவரது நண்பர் நிலாந்தனும் இருக்கிறார்.

எப்படி முக்கினாலும், புதுவையைமீறி இலக்கியவாதியாகவும் முடியாது. அங்கே இருந்து எதுவும் ஆகப் போவதில்லை.

தமிழ்நாட்டில் புலி ஆதரவு இலக்கியம் இன்று போல அன்று வேர் ஊன்றியும் இருக்கவில்லை. தமிழ்நாட்டிற்கான நுழைவாயில், மாற்று இலக்கியம் தான். அதன் மூலமாகத் தான் தமிழ்நாட்டின் தீவிர இலக்கியர்களை நெருங்க முடியும். அதற்காக நடந்த உருமாற்றம் தான் புலி எதிர்ப்பு.

கருத்தியல் ரீதியாக மானிட விரோதப் புலிகளின் ஆதரவுத் தளத்திலிருந்து, பாசிசத் தனத்தைக் கண்டடைந்த தெளிவு எப்படி நிகழ்ந்தது என்ற விளக்கங்களைக் கண்டதில்லை. இவரது ‘துரோகத்தால்’ சினம் கொண்ட புலி ஆதரவாளர்கள் அவ்வப்போது இவரது பழைய எழுத்துக்களை தேடிக் கண்டுபிடித்து, இவர் பழைய புலிதான் என்று அடையாளம் காட்ட முயன்று கொண்டே இருக்கிறார்கள்.

ஆனால், சிக்கல் என்னவெனில், இவர் தன்னை புலிகளின் பாசிசச் சிந்தனைக்கு எதிரானவராகக் கட்டமைத்துக் கொண்டிருந்தாலும், ‘பைக்குள் உள்ள புலி’ வெளியே வந்து இவர் அடிப்படையிலேயே, யாழ்ப்பாணத் தமிழ்த் தேசியச் சிந்தனைக்குள் ஊறிப் போனவர் என்று இவருடைய முகமூடிகளை உரித்துக் காட்டி விடுகிறது.

இவர் திலீபனின் கதையில் பயன்படுத்தும் ‘உடலம்’ என்பதே, புலிகள் நடத்திய மொழிச்சீர்திருத்தத் திருக்கூத்தின் விளைபயன். வேறு எங்கும் அது பயன்படுத்தப்படுவதில்லை.

கனடாவில் புலிகளின் முகவர் அமைப்பாக இருக்கும் தமிழ் காங்கிரஸ், காரண காரியம் இல்லாமல், இவரது வெளிநாட்டுச் சினிமாப் புகழுக்காகவோ என்னவோ, கொடுத்த விருதை, எந்த விமர்சனமும் இல்லாமல் இந்தக் கலகக்காரன் விமானம் ஏறி

வந்து வாங்கிப் போயிருக்கிறார்.

ராஜீவ் கொலை என்பது, ஈழப் போராட்டத்தின் பாதையை மாற்றியமைத்த சம்பவம். போராட்டத்திற்கான இந்திய, தமிழக ஆதரவுத் தளங்களை அடியோடு தகர்த்த புலிகளின் படுகொலை அரசியல் தான் இன்றைக்குத் தமிழ் மக்களின் எதிர்காலத்தைச் சூனியமாக்கி, முள்ளிவாய்க்காலில் கொண்டு வந்து வழித்துத் துடைத்து அழித்து விட்டிருக்கிறது. அந்தக் கொலை சம்பந்தமாக கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்படாமல் இருந்தவர்கள் விடுதலை செய்யப்பட்ட போது, அதை ஒரு விடுதலை வீரர்களின் கொண்டாட்டமாக, தோஸ்தோயேவ்ஸ்கியின் பிறந்த தினத்தில் விடுதலை செய்யப்பட்ட பெருமையைக் கொண்டாடிய புத்திஜீவித மகிழ்ச்சி, ஒரு சமூக அக்கறை கொண்ட மனிதனின் மகிழ்ச்சியாக இல்லாமல், ஒரு சாதாரண யாழ்ப்பாணியின் மகிழ்ச்சியாக இருந்ததற்கான காரணம் வேறெதுவாக இருக்க முடியும்?

•••

இதற்குள் இந்த தலித் மறுபிறப்பு எப்படி நிகழ்கிறது?

பத்மநாப ஐயர் தனது பெயரில் உள்ள ஐயர் என்ற பெயர் சாதி அடையாளம், அதை நீக்க வேண்டும் என்ற வன்மமான குரல் எழுப்பியவர்களில் இவர் முதன்மையானவர். ஐயா தமிழ் இலக்கியச் சூழலில் கருத்துக்களால் அறியப்பட்ட ஒருவரும் அல்லர். அவர் கருத்துக்கள் பரவலாகச் செல்ல வேண்டும் என்பதற்காக புத்தகங்களை பலரிடத்திலும் கொண்டு சேர்ப்பவராகவும், ஒரு ஆவணத் தொகுப்பாளராகவும் தான் இருந்தார்.

இப்போதும், திருவள்ளுவர் காகிதத்தில் எழுதிய திருக்குறளை, அண்டாட்டிக்காவில் கண்டுபிடித்து, நாசா அதை அழிக்க முயன்றதை முறியடித்த தமிழ் விஞ்ஞானி பற்றிய கதையை வட்சப்பில் பார்த்து பேஸ்புக்கில் பெருமையோடு பகிர்கிற வெள்ளை உள்ள மனிதர் அவர்.

அவர் தனது கருத்துக்களால் ஆதிக்கம் செலுத்தாத ஒரு நிலையில், அவர் தனது ஐயர் பட்டத்தைத் துறக்க வேண்டும் என்று வரிந்து கட்டிக் கொண்டிருந்ததன் காரணம் எதுவாக இருக்கும்? ஐயா அந்தப் பட்டத்தைத் துறப்பது, யாழ்ப்பாணத் தமிழ்ச் சூழலில் என்ன முன்மாதிரியை, மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கக் கூடும்?

நான் சொன்னபடி, யாழ்ப்பாணப் பிராமணர்களில் படித்தவர்களில் ஐயர் பெயர்களைச் சுமந்திருந்தவர்கள் அரிது. புலி இயக்கத்திலேயே ஐயர் பெயரோடு இருந்தவர் உண்டு. எனக்குச் சிறுவயதில் தெரிந்த, என் அண்ணனின் வகுப்பு மாணவனான ஈரோஸ் இயக்க ஆரம்ப உறுப்பினர்களில் ஒருவரான பால.நடராஜா, கூட்டணி மேடைகளில் முழங்கிய தமிழரசுக் கட்சிச் சுதந்திரன் பத்திரிகை ஆசிரியர் கோவை மகேசன், ஈழநாடு பத்திரிகையின் முன்நாள் ஆசிரியர் கே.பி.ஹரன் (ஆசான் மாதிரி ஆன்மீகச் சொற்பொழிவாளர்) போன்றோர் எல்லாம் ஐயர் பெயர் கொண்டிராத பிராமணர்கள்.

பூசை செய்வோர், பஞ்சாங்கம் வெளியிடுவோர், வெள்ளைக்காரன் காலத்தில் புத்தகம் எழுதிய தமிழ்ப் பண்டிதப் புலவர்கள் தான் பெரும்பாலும் ஐயர் பெயர்களோடு இருந்தவர்கள்.

யாழ்ப்பாணச் சூழலில் சாதிப் பெயர் பின்னிணைப்புகளும் இல்லை. இதற்குள், சமூக ரீதியாக எந்தச் சலசலப்பையும் ஏற்படுத்தாத ஒரு விடயம் குறித்து, தனிமனிதரான ஐயரைக் குறித்த வைத்த காரணம் எதுவாக இருக்கும்? ஐயர் மீதான தனிப்பட்ட கோபம் கொள்வதற்கு அவரது பணிவும் சாந்தமுமான, எவர் பற்றியும் அவதூறு செய்யாத தனிப்பட்ட இயல்புகளும் காரணமாக இருக்கச் சாத்தியமில்லை.

அடுத்த தலித் transformation க்கான அடியெடுப்புத்தான் அது.

யாழ்ப்பாணத்தைப் போலன்றி, தமிழ்நாட்டில் தான் பார்ப்பன எதிர்ப்பு என்பது இலக்கிய, அரசியல் தளங்களில் முக்கியமானதாக முன்வைக்கப்படும் ஒன்று. ஆனால், பார்ப்பனர்களை விட, தலித்துக்கள் மீதான வன்முறைகள் முழுக்க முழுக்க சூத்திர சாதியினரால் தான் மேற்கொள்ளப்படுகின்றன. பார்ப்பனீயம் மீதான எதிர்ப்பு என்பது சூத்திர மட்டங்களில் இருந்து எழுகின்ற ஒன்றே. தலித் மட்டங்களில் பார்ப்பனீய எதிர்ப்பை விட, சூத்திர சாதிகளின் மீதான எதிர்ப்புத் தான் அதிகம்.

பகிரங்க பார்ப்பன எதிர்ப்பு மூலம் தமிழ்நாட்டுக் கவனத்தை ஈர்ப்பதற்குச் செய்யப்பட்டதாக அன்றி, அப்பாவி ஐயர் மீதான தனிமனிதத் தாக்குதலுக்கான காரணம் வேறு எதுவாக இருக்கக் கூடும்?

தமிழ்நாட்டில் ஈழத்து இலக்கியச் சூழலில் இருந்து கைலாசபதி, சிவத்தம்பிக்கு அப்பால், அதிகளவில் அறியப்பட்டது, டானியல், ஜீவா, எஸ்.பொ போன்ற பஞ்சமர் சாதியினர் தான். அது தமிழ்நாட்டு இடதுசாரியச் சிந்தனையுள்ளவர்களுக்குள்ளால் வந்தது.

இப்படித் தன்னைத் தலித்தாகக் காட்டிக் கொள்வதன் மூலம், தனக்கும் அங்கீகாரம் கிடைக்கும் என்பதும், தான் தலித் என்பதால் தான் தனக்குக் கிடைக்க வேண்டிய அங்கீகாரத்தைக் கிடைக்க விடாமல் செய்கிறார்கள் என்று கதை விடலாம் என்பதும், தமிழ்நாட்டில் தலித் எழுச்சி, இலக்கியம் கடந்து, சினிமா வரைக்கும் உறுதியாக வேர் கொண்டிருக்கும் நிலையில், அவர்களோடு அடையாளம் காட்டிக் கொள்வதால் கிடைக்கக் கூடிய பயன்கள் பெரிய அளவில் இருக்கும் என்பதும் தான் இந்தப் புதிய தலித் வேடத்திற்கான காரணங்களாக இருக்க முடியும்.

மறுபுறத்தில் புலிச் சார்புத் தமிழ்த் தேசியம் சீமான் போன்றவர்களால் தமிழ்நாட்டில் வளர்ந்து வருவதும், பெரியாரியச் சீடர்களே பிரபாகரனை பெரியாரோடு ஒப்பிட்டுக் கடவுளாக்கும் சூழ்நிலையில், மாற்றுக் கருத்துப் புலி எதிர்ப்புத் தற்கொலை முயற்சியை விட, தலித்தாகக் காட்டிக் கொள்வதில்

இந்த இலக்கியச் சீமானுக்குக் கிடைக்கக் கூடிய லாபம் அதிகம்.

இப்படித்தான், தமிழ்நாட்டில் இவர் ஒரு தலித் எழுத்தாளராகத் தான் வேடம் தாங்கியுள்ளார். பேராசிரியர் அ.ராமசாமியுடனான பாசாங்குகள் இல்லாத பகிர்வுகளின்போதும், இந்த இதழில் 'சோபா சக்தி தான் தற்போதைய தலித் எழுத்தாளர்' என்று சொல்லியிருக்கிறேன்.

இன்றைக்கு தலித் மேடைகளில் தலித்தாக, டானியலின் legacy யை சுமந்து செல்கிறவராக தமிழ்நாட்டில் வலம் வந்து கொண்டிருக்கிறார். இந்த தலித் வேடம் இன்று இவருக்கு பல்வேறு நெருக்கங்களையும், சந்தர்ப்பங்களையும் தந்திருக்கிறது. இயக்குனர் பா.ரஞ்சித் முதல் கவிஞர் இந்திரன் வரைக்கும், இவரை ஒரு தலித்தாகவே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய இவரது தமிழ்நாட்டு வெற்றிக்கு அந்த தலித் வேடம் தான் கணிசமான பங்கு வகித்திருக்கிறது.

(நான் தமிழ்ப்படங்கள் பெரும்பாலும் பார்க்காததால் எனக்கு முழுமையாகவும் அதை விளங்கிக் கொள்ளவும் முடியவில்லை. பா. ரஞ்சித்தின் படம் ஒன்றில், இவரது கதை எதிலோ வரும் மீன் கதை சொல்லும் காட்சி சம்பந்தமான ஏதோ வருவதாக யாரோ பேஸ்புக்கில் எழுதியிருந்தார்கள். அதைப் பற்றி நண்பர்களிடம் கேட்ட போதும் முழுமையாக தெரிந்து கொள்ள முடியவில்லை. நான் அது குறித்து அறிந்து கொள்ள ஆர்வம் காட்டியதன் காரணம், கியூபெக் இயக்குனரான Denis Villeneuve இன் Maelstrom பிரெஞ்சுப் படத்தில் மீன் கதை சொல்வது தான்.)

•••

இந்தக் கலகக்காரன் இப்போது தனக்குக் கிடைத்த அந்த உச்ச இடத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக பல்வேறு சமரசங்களைச் செய்து சிரமப்பட வேண்டி இருக்கிறது. அறச்சீற்றத்தைக் கூட அடக்கி வாசிக்க வேண்டி இருக்கிறது.

அ.முத்துலிங்கம், ஆசான் ஜெயமோகன் என்று இவர் ஒரு காலத்தில் சீற்றம் கொண்டு

**தான் போர்க்கொடி தூக்கிய பத்மநாப ஐயரின் பக்கத்தில் நின்று சிரித்துக் கொண்டே படம் போட்டு, 'புத்தகங்களின் காதலர்' என்று பதிவு போட வேண்டியிருக்கிறது.**

**பஞ்சமரான டானியலை தந்தை என்று அழைக்கும் இந்த இலக்கியச் சீமான், ஐயரைச் 'சித்தப்பா' என்றிருந்தால் 'செம ரசமாகவும்' இருந்திருக்கும்!**

எழுதியவர்களோடு சிரித்தபடி போஸ் கொடுக்க வேண்டி இருக்கிறது.

இவர்களை எல்லாம் பகைத்துக் கொண்டால், தமிழ்நாட்டில் பிழைப்பு நடத்த முடியாது என்ற வரவு செலவுக் கணக்கீட்டு அடிப்படையில் தான், அறச்சீற்றம் downgrade பண்ணப் பட்டிருக்கிறது. அடிக்கடி சண்டைக்கு இழுக்கிற, அம்பேத்காரின் 'முகத்திரையைக் கிழிப்பதை' முழுநேர வேலையாகக் கொண்டிருக்கும் வசு மித்ரவிற்கு எந்தப் பதிலையும் வழங்குவதில்லை. லீனா மணிமேகலையின் கவிதைக் குற்றச்சாட்டுக்கு மூச்சே இல்லை.

நீங்களே நினைக்காத உச்சங்களை எட்டியவன் நான், என் பெயரைக் கூகிளில் தேடினால் லட்சக்கணக்கில் தொடுப்புகள் கிடைக்கும் அளவுக்கு பிரபலமானவன், நான் விமர்சனங்களுக்குப் பதில் அளிப்பதில்லை என்ற பெரிய மிதப்போடு, இலக்கியப் பெருந்தகைகள் போல, எல்லாவற்றையும் கடந்து போக வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

காரணம், வாயைத் திறந்தால் நாறிப் போகும் என்பது தான்.

சாப்பாடு முதல் தலை முடி வரைக்கும் கவலைப்பட்டு, தனது இமேஜை காப்பாற்ற முயலும் சினிமா நடிகன் போல, கவனமாக இருக்க வேண்டி இருக்கிறது.

கலகக்காரன் ஹீரோ ஆகினால் ஏற்படுகின்ற பரிதாபம் அது.

ஃபோர்முலாக்களுக்குள் அடங்கி விட வேண்டியது கட்டாயம். Damsels in distress களைக் காப்பாற்றியே ஆக வேண்டும்.

தான் போர்க்கொடி தூக்கிய பத்மநாப ஐயரின் பக்கத்தில் நின்று சிரித்துக் கொண்டே படம் போட்டு, 'புத்தகங்களின் காதலர்' என்று பதிவு போட வேண்டியிருக்கிறது.

பஞ்சமரான டானியலை தந்தை என்று அழைக்கும் இந்த இலக்கியச் சீமான், ஐயரைச் 'சித்தப்பா' என்றிருந்தால் 'செம ரசமாகவும்' இருந்திருக்கும்!

•••

நான் சொன்னது போல, சாதியம் பெயர்களில் இல்லை, சிந்தனையில் தான் இருக்கிறது.

எவ்வளவு தான் முற்போக்குப் பேசினாலும், உள்ளூரச் சாதியச் சிந்தனையோடு, அது வன்மமாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை, இருக்கிற பலரைக் கண்டிருக்கிறேன். எதேச்சையான பேச்சுகளில், எழுத்துக்களில் அவர்களை அறியாமலே மேல் எழும் இந்தச் சிந்தனையின் போலித்தனத்தைக் கண்டு சிரித்துக் கொண்டே கடந்து போயிருக்கிறேன்.

அதே நேரம், சாதி என்பதையெல்லாம் ஒரு பொருட்டாகவே நினைத்துக் கொள்ளாத எத்தனையோ பேரைக் கண்டிருக்கிறேன். ஆனால், அவர்கள் ஒருபோதும், 'இப்ப ஆர் சாதி பாக்கினம்?' என்றோ, 'நான் சாதி பாக்கிறேலை!' என்றோ, 'நானும் தலித்' என்றோ பகிரங்க அறிவிப்புகள் செய்வதில்லை. அவர்கள் அதை ஒரு இயல்பான வாழ்க்கை முறையாகத் தான் பார்க்கிறார்கள். 'தன்னைப் போல தன் அயலானையும் நேசிக்கிற' அந்தப் பண்பு குறித்துப் பெருமை கொள்வதோ, அலட்டிக் கொள்வதோ இல்லை.

ஆனால், இந்த பகிரங்க அறிவிப்புத் திண்ணைப் பேச்சுவீரர்களிடம் நான் எப்போதுமே ஒரு கண்ணாய் இருப்பதுண்டு.

இதையெல்லாம் கடந்து, தமிழ்நாட்டில் ஐயா தந்தை டானியல் என்றெல்லாம், தன்னை ஒரு தலித்தாகவே ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டவர் மாதிரி அடையாளம் காட்டுவதன் பின்னணி என்ன?

தலித்தியத்திற்கும் இவருக்கும் என்ன சம்பந்தம்?

இவர் அல்லைப்பிட்டிக் கத்தோலிக்க வெள்ளாளர். அங்கே என் பெரியம்மா முறையானவர் திருமணம் செய்திருக்கிறார். சாதி வெறிக்குப் பெயர் போன இடம் அது. அங்கே இவரது சாதியினருக்கு சாதி ரீதியாகப் பிற்படுத்தப்பட்ட பிற சாதியினருடன் பகைமைகள் இருந்திருக்கின்றன. அது வெட்டுக் கொத்து, காயங்கள் வரைக்கும் போயிருக்கிறது.

அவ்வாறான பகைமைக் குடும்பங்களில் உள்ள பிறசாதிப் பெண்களின் பெயர்களைத் தான், இவரது கதைகளில் வரும் தவறான நடத்தைப் பெண் கதாபாத்திரங்களுக்கு வைத்திருக்கிறார் என்பது உட்பட்ட பல தகவல்களை, ஊரில் இவரைத் தெரிந்த ஒருவர் கூறியிருக்கிறார். இப்படியான, பழிவாங்கும் சாதிய வன்மச் சிந்தனை கொண்ட ஒருவர், எப்படி தன்னை தலித்தாகக் காட்டி நடித்துக் கொண்டிருக்க முடிகிறது? அந்த நடிப்புக்கு தமிழ்நாட்டுப் பிரபலங்கள் கூட எப்படி எடுபட முடிகிறது?

•••

இவருக்கும் எனக்குமான தொடர்பாடல்கள் என்று குறிப்பிடத்தக்க எதுவும் இல்லை. பேஸ்புக் நண்பர்களாக இருந்தாலும், பரஸ்பரம் விருப்புக்குறிகள் கூட இட்டுக் கொள்வதுமில்லை.

அவர் இங்கே வந்த போது கூட, இலக்கிய நண்பர்கள் சந்தித்துக் கொண்ட சந்திப்பில், என்னை என் சகபாடி வர அழைத்தபோது, 'அவரைப் பார்த்து நான் என்ன செய்யிறது?' என்று கூறியிருந்தேன். எனது வியாபார நிலையம் இருந்த இடத்திற்கு அருகில் இருந்த அலுவலகத்தில் நடந்த இரவுப் பார்ட்டிக்கும் அழைப்பு இருந்தும் நான் செல்லவில்லை.

நான் ஒரு தடவை, 'இந்த முள்ளிவாய்க்கால் இன அழிப்பு பற்றி இன்றைக்கு ஒப்பாரி வைக்கிற அத்தனை பேரிலும், அன்றைக்கு அந்த மக்களைப் புலிகள் வெளியேற விட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தவர்கள் யார்?' என்று பேஸ்புக்கில் பதிவு போட்ட போது மட்டும், ஒரு நாளும் இல்லாமல் பின்னூட்டத்தில் அது பற்றி தான் நிகழ்த்திய உரை ஒன்றில் கூறியிருந்ததாகக் குறிப்பிட்டிருந்தார்.

அதற்கு அவரது பதிப்பாளர் கருப்பு நீலகண்டனும் ஓடி வந்து, நீங்க ஏதோ கதையிலோ, கட்டுரையிலோ குறிப்பிட்டிருக்கிறீங்க, 'தலைவரே!' என்று முட்டுக் கொடுத்திருந்தார்.

சிலநேரம், றோயல்டி தொகை இப்படியான பின்னூட்டங்களாகத் தான் வழங்கப்படுகிறதோ யாருக்குத் தெரியும்?

அவர் தாயகத்தில் எழுதியதும் இல்லை. அவரைப் பற்றி நானோ, என்னைப் பற்றி அவரோ எதையும் எழுதியதாகவும் இல்லை.

இவர் தலித் அவதாரம் எடுப்பதற்கு நீண்ட நாட்களுக்கு முன்னால், நண்பர் சுகனும் இவருமாக என்னைத் தொலைபேசியில் அழைத்திருந்தார்கள். ஏதோ கட்டுரை கேட்பதற்காக என்று நினைக்கிறேன்.

அப்போது தான் இவரோடு பேசியிருக்கிறேன். இவருடைய எழுத்து நடையைச் சிலாகித்திருக்கிறேன்.

அவரும் என்னுடைய எழுத்துக்கள் பலரிடம் போகிறது, பலரும் வாசிப்பதாகச் சொல்லியிருந்தார்.

அப்போது அவர் அல்லைப்பிட்டி என்ற பேச்சு வந்தபோது, அங்கே தான் என் பெரியம்மா முறையானவர் திருமணம் செய்திருக்கிறார் என்று சொன்னேன். தனக்குத் தெரியவில்லை, சாதி என்னவென்று சொன்னால் தெரியும் என்றார்.

எனக்கென்ன? சாதியைச் சொன்னேன்.

இந்த உரையாடல் நடந்து கொஞ்ச நாட்களில் இவரது கட்டுரை ஒன்று வெளிவந்திருந்தது. அதில் புலன் பெயர் இலக்கியச் சூழலில் உள்ள கொஞ்சம் தலித் எழுத்தாளர்களின் பட்டியலைப் போட்டு, அதில் இறுதியில் ஜோர்ஜ் குருஷ்சேவ் போன்ற தலித் எழுத்தாளர்கள் என்றிருந்தது.

என்னைப் பற்றி எங்கேயும் பகிரங்கமாகச் சொல்லாத ஒருவருக்கு, தன்னைப் பின்னாட்களில் தலித்தாக அடையாளம் காட்டிக் கொள்கிறவருக்கு, இத்தனை வருடங்களாக புலிகளின் பாசிசத்துக்கு சவால் விட்டுக் கொண்டிருந்த, என்னையோ, என் எழுத்துக்களையோ தலித் அடையாளங்களோடு காட்டிக் கொள்ளாத என்னைப் பற்றிச் சொல்வதற்கு, 'போரை எதிர்த்து இலக்கியத் தரத்தோடு பிரதிகளை உருவாக்கிய ஏராளமானவர்கள் நம்மிடையே உள்ளனர். சனநாயகத்துக்காகக் குரல் கொடுத்ததற்காகச் சில எழுத்தாளர்கள் தமது உயிரையும் எங்கள் மத்தியில்தான் இழந்தார்கள். யுத்தத்தை மறுத்தும் சனநாயகத்துக்காகக் குரல் கொடுத்தும் எழுதப்பட்ட பிரதிகளே அறம் சார்ந்த பிரதிகள்.' என்றதில் அடங்கியிருக்கக் கூடிய என்னைப் பற்றிச் சொல்வதற்கு, நான் தலித் என்பது மட்டும் தான் கிடைத்திருக்கிறது. அந்த உண்மையை உடனடியாக உலகுக்கு அறிவிக்க வேண்டும் என்றளவுக்கு முக்கியமானதாக, ஆர்வம் பொங்கி எழுந்திருக்கிறது.

தன்னைப் போன்ற தலித் எழுத்தாளர்கள் என்றோ, அந்தத் தலித் எழுத்தாளர் பட்டியலில் இவர் தன்னைச் சேர்த்துக் கொள்ளவோ இல்லை.

அதுதான் நான் சொல்கிற, 'சாதியம் மனதில் இருக்கிறது, பெயர்களிலோ, விடுகிற ஸ்டேட்மென்டுகளிலோ இல்லை'.

இப்படியாகத் தானே, 'ஆபிரகாம் லிங்கன், கென்னடி, நேரு, காந்தி, அல்பிரட் துரையப்பா போன்ற பெரியார்களின் வரிசையில்' மாதிரி, சோபா சக்தியால் நானும் தலித் எழுத்தாளராக ஞானஸ்நானம் செய்யப்பட்டேன்.

அதனால் என்ன?

யேசுக்கிறிஸ்துவுக்குக் கூட, அவரது வருகையை அறிவிக்கவும், ஜோர்தான் நதியில் தண்ணீரால் ஞானஸ்நானம் கொடுக்கவும், ஒரு யோவான் வரவேண்டித் தானே இருந்தது!?

அ

**மட்டக்களப்புத் தமிழகம் என்னும் நாமம்:**

*வரலாற்று தேடல்கள் 11*

# கிழக்கின் பல்லினத் தன்மைக்கெதிரான இனவாத அணிதிரட்டலின் தோற்றம்

**எம்.ஆர்.ஸ்டாலின் ஞானம்**

1921ஆம் ஆண்டு மனிங் சீர்திருத்தம் ஊடாக உருவாகிய சட்டசபையிலிருந்தே கிழக்கு மாகாணத்தின் நவீன அரசியல் பிரதிநிதித்துவ வரலாறு ஆரம்பித்தது.

சட்டசபையில் எம்.எம். சுப்ரமணியம், ஈ.ஆர்.தம்பிமுத்து போன்றோரும் அதனைத் தொடர்ந்து வந்த காலங்களில் உருவாகிய அரசாங்க சபையில் ஏ. எச்.மாக்கான் மாக்கார், எஸ்.ஓ. கனகரத்தினம், சபா.தர்மரட்ணம், வி.நல்லையா, சின்னலெவ்வை, எம்.எஸ்.காரியப்பர் போன்றோரும் கிழக்கின் பிரதிநிதிகளாக பதவி வகித்தனர். இலங்கை சுதந்திரம் அடையும் வரை இந்நிலைமைகள் காணப்பட்டன. இத்தகைய அரசியல் தலைவர்கள் கிழக்கு மாகாண மக்களின் அடிப்படை பொருளாதார வளர்ச்சிக்காக தம்மாலான பெரும் பணிகளை ஆற்றி வந்தனர். இவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாக வி.நல்லையா, எம்.எஸ். காரியப்பர் போன்றோர் ஆற்றிய பணிகள் இன்றுவரை கிழக்கில் நினைவுகூரப் படுகின்றன.

கிழக்கின் அன்றைய தலைவர்களில் யாருமே தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள் என்கின்ற அடையாளங்களை முன்னிறுத்தி அரசியல் செய்யவில்லை. அதே போன்று கிழக்கு மக்களும் இனவேறுபாடுகளைக் கடந்தே இத்தகைய தலைவர்களை ஆதரித்து வந்தனர். தத்தமது மதங்களையோ தத்தமது இனங்களையோ குறிவைத்து இவர்களின் வேலைத்திட்டங்கள் அமைந்திருக்கவில்லை. தத்தமது அதிகார வரம்புக்குள் வாழ்ந்துவந்த அனைத்து மக்களுக்கும் உரிய இன-மதம் கடந்த தலைவர்களாக அவர்கள் பணியாற்றி வந்தனர். அதன் காரணமாக கிழக்கின் பல்லினச் சூழலுக்கும் அமைதியான வாழ்வுக்கும் எவ்வித பங்கமுமின்றிய ஒரு அரசியல் போக்கு கிழக்கில் நிலவியது.

அதேபோல கிழக்கிலங்கை மக்களின் வாழ்வும் வளமும் மண்ணையும் கடலையும் ஆறு குளங்களையும் மட்டுமே நம்பியிருந்தன. மிகச்சிலர் மட்டுமே அரச உத்தியோகஸ்தர்களாக இருந்தனர். விவசாயமும் மீன்பிடியுமே ஏறக்குறைய அனைத்து மக்களினதும் உயிர் நாடியாகவிருந்தது.

கொழும்பிலோ, இலங்கையின் ஏனைய பகுதிகளிலோ கிழக்குத்தமிழர்கள் எவ்வித வியாபார முயற்சிகளிலும் ஈடுபட்டாரில்லை. அதேபோன்று இலங்கையெங்கும் பரந்துபட்டு பணியாற்றிய துறைசார் உயர்பீடத் தலைவர்கள், ஆசிரியர்கள், தபாலதிபர்கள், போக்குவரத்துத் துறைசார் ஊழியர்கள் மற்றும் நீர்ப்பாசன திணைக்களங்களின் ஊழியர்கள் போன்ற உத்தியோகஸ்தர்களில் பெரும் பாலானவர்கள்

**கல்லோயா அணைக்கட்டு**



யாழ்ப்பாணத்தவர்களாக இருந்தன ரேயன்றி இவர்களில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தோர் வெகு சிலர் மட்டுமேயாகும்.

அதேபோன்று கடல் கடந்து மலேசியாவிற்கோ பர்மாவுக்கோ சென்று பொருள் தேடி வருகின்ற மணியோடர் பொருளாதாரம் என்பது கிழக்கு மக்கள் அறியாதது. எனவேதான் இன, மத, மொழி மற்றும் சாதி சார்ந்த போட்டிகளோ பொறாமைகளோ மற்றும் காழ்ப்புணர்வு கொண்ட அரசியல் போக்குகளோ இன்றிய 'பகிர்ந்துண்ணல்' வாழ்வு கிழக்கில் நிலவியது. மக்களின் ஆணைகளைப் பெற்ற சுயேச்சையான தலைவர்கள் ஆட்சியதிகாரத்தில் இணைந்து முடிந்தவரை தத்தமது பிரதேசங்களை வளம்பெறச் செய்து வந்தனர்.

இலங்கையெங்கும் அறியப் பட்ட பெருந்தலைவராயிருந்த பொன்.அருணாசலம் போன்றவர்கள் இலங்கை தேசிய காங்கிரசில் இருந்து பிரிந்து தமிழர் மகா சபை என்னும் வகுப்புவாத அமைப்பை உருவாக்கியபோது 'எமது தாயகத்தை மீட்பதற்கு நாமனைவரும் ஒருமித்து பயணிப்பது அவசியம்' என்று 1923 லேயே அறைகூவல் விடுத்தார். கற்றோர் குழாமாகவும் தனவந்தர்களாக கொழும்பை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்து வந்த யாழ்-மேட்டுக்குடித் தமிழர்களிடையே இத்தகைய அரசியற் போக்குகளுக்கு வரவேற்புக் கிடைத்தது. காரணம் படித்த யாழ்மேட்டுக்குடி அதிகார வர்க்கத்துக்கும் சிங்கள மேட்டுக்குடி அதிகார வர்க்கத்துக்கும் இடையிலான போட்டிகள் இத்தகைய வரவேற்பில் பின்னணியில் இருந்தன.

ஆனால் கிழக்கு மாகாணத்தின் சமூக பொருளாதார சிக்கல்களுக்கும் அப்பேச்சுக்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இருக்கவில்லை என்பதனால் கிழக்கில் உருவாகி வளர்ந்து வந்த அரசியற் தலைமைகளோ கிழக்கு வாழ் மக்களோ இந்த தமிழர் மகாசபை போன்ற அமைப்புகளின் பால் ஈர்க்கப்படவில்லை.

அதேவேளை யாழ்-



எம்.எஸ்.காரியப்பரும் டி.எஸ்.சேனநாயக்காவும்

தலைவர்கள் அரசாங்க சபை விவாதங்களில் மக்கள் விரோத நிலைப்பாடுகளை எடுத்துக்கொண்டு வெளியிலே வந்து 'விடுதலை', 'தாயக மீட்பு' என்று பேசுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பதே கண்கூடு.

இலங்கையில் அரசியல் சீர்திருத்தத்திற்கான டொனமூர் ஆணைக்குழுவானது 1931இல் சர்வசன வாக்குரிமை வழங்கப் படுவதற்கான முன்மொழிவுகளை வைத்தபோது அந்த ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கையில் எல்லா பிரசைகளுக்கும் தமது தலைமைகளை தெரிவு செய்யும் வாய்ப்பை வழங்கும் 'சர்வசன வாக்குரிமை' வழங்கப் படுவதை கடுமையாக எதிர்த்து விளக்கமளித்தனர் இந்த மேட்டுக்குடித் தலைவர்கள். சர்வசனவாக்குரிமை வழங்கப்பட்டால் அது 'இந்து மத வாழ்க்கை முறைக்கு பழிகேடு விளைவிக்கும் என்றும்' கும்பலாட்சிக்கு வழிவகுக்கும்' என்றும் வாதிட்டனர் பொன்.இராமநாதன் போன்றோர். அதாவது யாழ்ப்பாணத்திலுள்ள உயர்சாதிப்பிரிவை தவிர சாதிய பாகுபாடுகள் காரணமாக ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினரும் கிழக்கிலிருக்கும் முஸ்லிம்கள், முக்குகர்கள், மற்றும் சூத்திரர்கள், பெண்கள் போன்ற அனைவருமே சமூகத்தின் கீழ்நிலையில் இருக்க வேண்டுமென்பதற்காக பகிரங்கமாக கீழ்த் தரமான கருத்துகளை தெரிவித்தார். சமூக படிநிலைகளில் அடித்தட்டு மக்களெல்லோரும் அரசியலுக்கு வந்தால் அது கும்பலாட்சிக்கு வழிவகுக்கும் என்பதே அவரது வாதத்தின் உட்பொருளாயிருந்தது.

ஆனால் கிழக்கிலிருந்து இதற்கு மாறான முற்போக்கு சிந்தனைகள் வெளிப்பட்டிருந்தன. லாரா சித்தி தம்பிமுத்து என்கின்ற பெண் தலைமையிலான குழுவொன்று பெண்களுக்கான வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்று டொனமூர் ஆணைகுழுமுன் ஆஜராகி வாக்குமூலம் அளித்த வரலாறுகள் உண்டு.

அதேபோன்று 1944 ஆண்டு கொண்டுவரப்பட்ட இலவசக் கல்வித்திட்ட மசோதாவை அரசாங்க சபையில் எதிர்ப்பதில் ஜீ.ஜீ. பொன்னம்பலம், அருணாசலம் மகாதேவா, சிறிபத்மநாதன் என்கின்ற தமிழ் பெரும் தலைவர்கள் ஒற்றுமையாக நின்று எதிர்த்தனர். மத்தியதர வர்க்கத்தைத் தவிர கிழக்கிலங்கை மக்களோ யாழ்ப்பாணத்தில் ஒடுக்கப்பட்ட மக்களோ தென்னிலங்கையின் ஏழை எளிய மக்களோ கல்வியறிவு பெறக்கூடாது என்பதில் இந்த யாழ்-மேட்டுக்குடித் தலைமைகள் மிகக் கவனமாக செயற்பட்டனர்.

உண்மையில் பணக்கார வர்க்கத்தின் வசம் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்த கல்வி யானது பாமர மக்களுக்கும் சென்றடைவதனை மக்கள் நலனில் அக்கறைகொண்டிருக்கும் எந்த அரசியல் கட்சியும் வரவேற்காமல் இருக்கமுடியாது. ஆனால் தமிழ் மக்களின் விடுதலை விரும்பிகளாக தம்மைக் காட்டி இனவாத அரசியல் பாரம்பரியத்தை வளர்ப்பதில் முன்னின்ற தமிழ் காங்கிரசின் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் அதற்கு எதிரான செயற்பாடுகளையே

மேற் கொண்டனர். ஆனால் நல்லையா போன்ற கிழக்கின் தலைவர்கள் இலவசக்கல்வி மசோதாவை ஆதரித்து செயற்பட்டு, அவ்வேளை கல்வியமைச்சராக இருந்த கன்னங்கராவின் கல்விக்குழுவிலும் அங்கம் வகித்து கிழக்கு மாகாணத்தின் மூலைமுடுக்குகள் வரைக்கும் கல்வியறிவை கொண்டு செல்வதில் அயராது படுபட்டார். சுருங்கச் சொன்னால் கிழக்கின் கல்வித்தந்தை என்று போற்றப்படுமளவுக்கு நல்லையாவின் கல்விப் பணிகள் இருந்தன.

அதேபோன்று 1947 ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் எனும் புதியதொரு நாடு முகமட் ஜின்னா தலைமையில் உருவாகிய போது 'இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பிரிந்தது போல் இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் அதிலிருந்து பிளந்து தமிழீழம் எனும் புதியதொரு நாட்டை பெற்றுத்தரப் போகின்ற ஜின்னா நானே' என்று ஜீ.ஜீ.பொன்னம்பலம் இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் பிரச்சாரத்தில் (1947) பேசினார். இத்தகைய வெட்டிப்பேச்சுகள் சும்மா கன்னாபின்னா என்று பொன்னா மேடைகளில் கத்தியதை விட வேறு எவ்வித சலனத்தையும் மக்களிடம் ஏற்படுத்தவில்லை. அதன் காரணமாகவே ஜீ.ஜீ. பொன்னம்பலம் தமிழ் காங்கிரஸ் என்னும் அடையாளத்துடன் மட்டக்களப்பில் கால்பதிக்க எடுத்த பகீரதப்பிரயத்தனங்கள் முளையிலேயே கருகிப்போயின.

ஆனாலும் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் ஜீ.ஜீ. பொன்னம்பலம் பேராதரவைப் பெறத் தொடங்கினார். 1947ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றியீட்டிய 1948ல் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து கைத்தொழில் அமைச்சரானார். கையோடு தனது சகாவான வட்டுக்கோட்டை தொகுதி உறுப்பினர் க.கனகரெட்ணத்துக்கு பிரதியமைச்சர் பதவியையும் பெற்றுக்கொடுத்தார். இதன் காரணமாக தமிழ் காங்கிரசில் இருந்த மற்றுமொரு தலைவரான எஸ்.ஜே. வி.செல்வநாயகம் மனமுடைந்து தமிழ் காங்கிரசிலிருந்து பிரிந்து சென்று தமிழரசுக் கட்சி என்னும் புதிய கட்சியை ஆரம்பித்தார்.

அதேவேளை 1948 ஆம் ஆண்டு இடம்பெற்ற பத்து லட்ஷம் மலையக மக்களின் குடியுரிமைப் பறிப்பினை ஆதரிக்கும் நிலைப்பாட்டினை பாராளுமன்றத்தில் பொன்னம்பலம் எடுத்தார். அத்தகைய குடியுரிமைப் பறிப்பை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் எதிர்த்தார் என்பது உண்மை. ஆனால் மலையக மக்களின் குடியுரிமைப் பறிப்பு விடயத்தில் பொன்னம்பலம் எடுத்த நிலைப்பாட்டின் காரணமாகவே செல்வநாயகம் பிரிந்து சென்றதாகவும் அதன்காரணமாகவே தமிழரசுக் கட்சி உருவானதாகவும் புனைவுகள் அரங்கேறின. எஸ். ஜே.வி.செல்வநாயகத்தின் சொந்த ஊடகமான (தமிழ்காங்கிரஸில் இருந்தபோதே ஆரம்பித்த) சுதந்திரன் பத்திரிகையே இவ்வாறான புனைவுகளுக்கு அடிகோலியது.

இத்தகைய பொய்களோடும் புனைவுகளோடும் ஆரம்பித்த சமஸ்டிக் கட்சியையே (பெடரல் பார்ட்டி) தமிழ் பகுதிகளில் தமிழரசுக்கட்சி என்று மெருகூட்டி களமிறங்கினார் எஸ்.ஜே.வி. செல்வநாயகம். வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்து ஒரு சமஷ்டி ஆட்சி முறையை உருவாக்க வேண்டும் என்னும் இனவாத கோரிக்கையை அக்கட்சி முன்வைத்தது. தமிழரசுக் கட்சியினது புதிய வரவின் ஊடாக அதுவரைகாலமும் அமைதியாக இருந்த பல்லினச் சூழல் நிறைந்த கிழக்கிலும் அரசியல் சூறாவளி வீசத் தொடங்கியதை அவதானிக்கலாம்.

மலையக மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு நியாயம் வேண்டும் என்றே புதிய கட்சி தொடங்கியதாக களமிறங்கிய எஸ். ஜே.வி.செல்வநாயகத்தின் இனவாத அரசியல் அணிதிரட்டலுக்கு அவ்வேளையில் கிழக்கில் தொடங்கப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களில் பெரும்பான்மையாக சிங்களவர்கள் குடியேற்றப் பட்டமையும் வாய்ப்பானதாக அமைந்தது.

### நீர்ப்பாசனத் திட்டங்கள்

உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் 1941 ஆம் ஆண்டு டி.எஸ்.சேனநாயக்காவினால் புதிய நீர்ப்பாசனத்திட்டங்கள் தொடங்கப்பட்டன. இத்திட்டங்கள் திருமலை மாவட்டத்தின் கந்தளாய், அன்றைய மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்திருந்த அம்பாறை பிரதேசத்தின் கல்லோயா போன்ற பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டன. கல்லோயாவை ஒட்டிய பிரதேசங்களில் நீண்டகாலமாக முதலியாராக இருந்த எம்.எஸ்.காரியப்பர் இக்கல்லோயாத் திட்டத்தின் உருவாக்கத்துக்காக உழைத்தவர்களில் ஒருவராகும். 1947 தேர்தலின் பின்னரான காலங்களில் இவர் கல்முனைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகவும் உள்நாட்டு கிராமிய அபிவிருத்தி பிரதியமைச்சருமாக இருந்த வேளையில் சுதந்திர இலங்கையில் இத்திட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டது. மட்டக் களப்பின் மூதறிஞர்களில் ஒருவரும் மட்டக்களப்பு தமிழகம் என்னும் அரிய வரலாற்று நூலினை தந்தவருமான வி.சீ.கந்தையா அவர்கள் இந்த கல்லோயா திட்டம் பற்றி 'ஈழத்துணவு என்ற சங்ககாலத்து பெயரை மீட்டெடுக்க இந்த கல்லோயா திட்டம் வழிவகுக்கும்,கல்லோயா அணைக்கட்டு திட்டம் ஒரு அமுதசுரபி' என்று புகழுரைத்தார்.

அன்றைய காலகட்டத்தில் மட்டக்களப்பின் மக்கள் பிரதிநிதியாய் இருந்த வி. நல்லையா அவர்கள் இந்த திட்டத்தினால் மக்களுக்கு அரிய பயன் கிடைக்குமென்றும் அங்கே சென்று குடியேறுமாறும் மக்களிடையே பிரச்சாரம் செய்தார். அதன் பொருட்டு அன்றைய பிரதமர் டி.எஸ்.சேனநாயக்காவை மட்டக்களப்புக்கு அழைத்துவந்து தமிழ் மக்களை இத்திட்டத்தின் பயனை பெறும் வகையில் இந்த புதிய நீர்ப்பாசனத் திட்டத்தில் குடியேறுமாறு பிரச்சாரம் செய்தார்.

இதன்படிக்கு மாவட்ட காணிக்கச்சேரிகளில் பொதுக்

கூட்டங்கள் நடாத்தப்பட்டு கல்லோயா நீர்ப்பாசனத் திட்டத்தில் குடியேற விரும்புவர்களது பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்டது. அங்கே ஆரம்பிக்கப்பட்ட கொலனிகள் ஒவ்வொன்றும் தலா 150 வீடுகளைக் கொண்டனவாக இருந்தன. ஒவ்வொரு வீடுகளுக்கும் விவசாயத்துக்கென ஐந்து ஏக்கர் காணிகள் வழங்கப்பட்டன. இவ்வாறாக உருவாக்கப்பட்ட 44 கிராமங்களில் ஆறு கிராமங்களில் மட்டுமே (5,6,11,12,13,15) தமிழர்கள், மற்றும் முஸ்லிம்கள் குடியேற விண்ணப்பித்திருந்தனர்.

நீர்ப்பாசனம் மற்றும் குடியேற்றத் திட்டமான இந்தத் திட்டத்தில் சிங்களவருக்கென்று விசேடமான முன்னுரிமைகள் எதுவுமே அளிக்கப் பட்டிருக்கவில்லை. ஆனால் கிழக்குவாழ் தமிழ், முஸ்லீம் மக்கள் இத்திட்டத்தினை சரியாகப் பயன்படுத்தத் தவறியதன் காரணமாகவே காரணமாகவே எஞ்சிய 38 கிராமங்களும் சிங்களவருக்கு வழங்கப்பட்டது. ஆனால் இந்த உண்மைகள் எமது வரலாறுகளில் மறைக்கப் பட்டிருக்கின்றன.

கரையோரப் பகுதிகளில் வாழ்ந்து வந்த மட்டக்களப்பு தமிழர்களில் யாருமே அங்கு போய்க் குடியேறுவதை விரும்பவில்லை. ஏனெனில் சுமார் 10,000 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பையுடைய கிழக்கு மாகாணத்தில் அவ்வேளை மூன்று லட்சத்துக்கும் குறைவானோரே வசித்து வந்தனர். நிலத்துக்கு பஞ்சமற்ற கிழக்கு மாகாண மக்கள் கல்லோயாவில் போய்க் காடு வெட்டுவதற்கும் குடியேறுவதற்கும் கரும்புத் தோட்டத்தில் வேலை செய்வதற்கும் எவ்வித அவசியமும் இருக்கவில்லை. இந்த நிலையில் கல்லோயாவில் சிங்களவர் வந்து குடியேறுவதையிட்டு மட்டக்களப்புத் தமிழர்களோ முஸ்லிம்களோ பெரிதாக அலட்டிக் கொள்ளவுமில்லை. அதன்பின்னரே சிங்களவர்கள் அங்கு குடியேற்றப்பட்டனர்.

நீர்வளம் இன்றி புதர்கள் மண்டிக்கிடந்த பலநூறு ஏக்கர் நெற்காணிகள் இந்த குடியேற்றத்திட்டத்தின் காரணமாக பசுமைமிகு தரைகளாக மாறின. இந்த நீர்ப்பாசனக் கால்வாய்த் திட்டங்களினால் கல்முனை மற்றும் போரதீவு பற்று பிரதேசங்களை அண்டியிருந்த பல நூறு ஏக்கர் மேலதிக நெற்காணிகளும் நீர்ப்பாசன வசதி பெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண அரசியல் வாதிகள் இந்த குடியேற்ற திட்டங்களை எதிர்கொண்ட விதமானது ஆறுகளேதும் அற்ற வரட்சியும் நிலப்பஞ்சமும் மிக்க யாழ்ப்பாண நோக்குநிலையின் அணுகுமுறையாகும். அதே வேளை கிழக்கின் சமூக பொருளாதார யதார்த்தமான நிலைமைகளை உணராத வெறும் இனவாதக்கூச்சல்களாக இருந்தன. அதிலும் குறிப்பாக தமிழரசுக் கட்சியின் தேர்தல் வெற்றியை குறிவைத்த பேச்சுக்களாகவே அவை அமைந்திருந்தன.

எனவே தமிழர் வாழும் பிரதேசங்களை மையமாகக் கொண்டு அமைந்திருந்த இத்திட்டங்கள் எமது தாயகத்தை ஆக்கிரமிக்கும் செயற்பாடு என்று எஸ்.ஜே.வி. செல்வநாயகம் போன்ற தலைவர்கள் எதிர்ப்புக்குரல் எழுப்பினர். தமிழர்களின் மரபுவழித்தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களை பலவீனப்படுத்தும் முயற்சி இதுவென தமிழரசுக் கட்சித் தலைவர்கள் வாதங்களை முன்வைத்தனர். கல்லோயா போன்ற பகுதிகளில் சிங்களகுடியேற்றங்களை அரசாங்கம் ஏற்படுத்துவதால் தமிழர்கள் மட்டும் அல்ல முஸ்லிம்களும் பாதிக்கப்படுவர் என்று பிரச்சாரப் படுத்தினர்.

இதேபோன்றே திருகோண மலையில் இடம்பெற்ற கந்தளாய்க் குடியேற்றத்திட்டத்தையும் தமக்கு வாய்ப்பாக திரித்து தமிழரசுக் கட்சியினர் அரசியலாக்கினர்.

எது எப்படியிருந்த போதிலும் மலையக மக்களின் வாக்குரிமைப் பிரச்சனைகள் மீதும் கிழக்கிலங்கை மக்களது காணிப் பிரச்சனை மீதும் அக்கறை கொண்டதாகவே தமிழரசுகட்சி தன்னைக் காட்டிக்கொண்டு 1952ஆம் ஆண்டில் தனது கன்னி தேர்தலை எதிர்கொண்டது. இதன்காரணமாக 'தமிழ் பேசும் மக்கள்', 'சமஷ்டி' என்னும் கதையாடலை முன்வைத்து கிழக்கிலும் கால்பதிக்க முயன்ற செல்வநாயகத்தின் 'தமிழ் உணர்வு' பிரச்சாரங்களில் இராஜதுரை போன்ற இளைஞர்கள் பெருவாரியாக ஈர்க்கப்பட்டனர். முதல்வரவு என்பதனால் மட்டக்களப்பில் வேட்பாளர்களை கண்டுபிடிப்பதில் சிரமமிருந்தது. ஆனால் திருமலையில் இராஜவரோதயம் போட்டியிட்டு வென்றார்.

யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே அரசியல் தலைவர்களாக இருந்த பலர் தமிழரசுக் கட்சியில் இணைந்து போட்டியிட்டனர். கோப்பாய் தொகுதியில் கு.வன்னியசிங்கம் சிலநூறு வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவரைத் தவிர செல்வநாயகம் உட்பட ஏனைய அனைவருமே தோல்வி கண்டனர். யாழ்ப்பாண சமூகமானது மலையக மக்கள் குறித்தும் கிழக்கிலங்கை மக்கள் குறித்தும் கொண்டிருந்த உதாசீனமான பொதுமன உளவியல் தமிழரசுக் கட்சி அடைந்த இப்படுதோல்வி மூலம் வெளிப்பட்டது.

இதுபற்றி தமிழ் எழுத்துலகின் வணங்காமுடி எஸ்.பொ என்று அழைக்கப்படும் பொன்னுத்துரை அவர்கள் 'யாழ்ப்பாண மக்கள் தமிழ் உணர்வுக்கு மேலாக சொந்த நலன்களையும் வசதிகளையும் தக்கவைத்து கொள்வதற்கே முன்னுரிமை கொடுத்தார்கள் என்பதை இத்தேர்தல் மீள வலியுறுத்தியது' என தனது வரலாற்றில் வாழ்தல் என்னும் நூலின் முதற்தொகுதியில் 402ஆம் பக்கத்தில் பதிவுசெய்துள்ளார்.

ஆனால் மட்டக்களப்பாரோ தங்கள் மண்ணை வளப்படுத்தி வழிகாட்டியாய் அமைந்த நல்லையா போன்ற பெருந்தலைவர்கள் மீது 'அரச கைக்கூலி' என்கின்ற நச்சுப் பிரச்சாரத்தை கட்டவிழ்த்து விட்ட செல்வநாயகத்தின் பின்னால் அப்பாவித்தனமாக அணிதிரண்டு அழிவுப்பாதைக்கு செங்கம்பளம் விரித்தார்கள்.




# ஒரு பேய்வெட்டியின் பேய்க்கதை

பேரறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

எங்கள் வீட்டில் ஒரு பேய் குடியிருக்கிறது.

அது சாதாரணமான மயானங்களில் குடியிருந்து, இரவுகளில் தனியே விசிலடித்தபடியே கடந்து வரும்போது பின்னால் தொடர்ந்து வந்ததாக இருக்க நியாயமில்லை. சுன்னாகம் சந்தையில் பின்னேரம் வந்த மீனை வாங்கி உமலுக்குள் வைத்து, சைக்கிள் பின் கரியரில் கட்டி இரவு கொத்தியாலைச் சுடலையையோ, எங்காவது தனிப்பனைகளையோ கடக்கும் போது, தங்கள் வதிவிடங்களில் இருந்து, உடுக்காத சேலையோடு ஓடி வந்து, 'வாறியா, ரெண்டு பேரும் ஓடிப் போயிடலாம்?' என்று, கரியரில் தொத்தி வீடு வந்து சேர்ந்து, துடக்குச் சீலைகளுக்குள் அடைக்கலம் கொள்கிற கொத்தியாத்தை மாதிரியான பெண்பால் பேய்கள் தான் என்னைப் போன்ற பேயழகர்கள் மீது பேய்க்காதல் கொண்டு பின்னால் துரத்தக் கூடியன.

**ஆளரவம் அற்ற அதிகாலை வேளைகளில் காரில் வேலைக்குப் போகும்போது, அதே இடுகாட்டைக் கடக்கும் போதும், காரண காரியம் இல்லாமல் அந்த நேரம் கெட்ட நேரங்களில் நடைப்பயிற்சி செய்கிற பெண்களைக் கண்டாலும், கடந்து போன பின்னால், கண்ணாடிக்குள்ளால் தெரிகின்றார்களா என்பதையும் உறுதி செய்து கொள்வதுண்டு.**

**ஆவிகள், பேய்கள் எல்லாம் கண்ணாடிகளில் தெரிவதில்லை என்று எங்கேயோ அம்புலிமாமா கதைகளில் வாசித்த ஞாபகம்.**

இங்கே ஆளரவம் இல்லாத சுடலைகளும், தனிப்பனைகளும் இல்லை. புளியமரங்களும் ஆண் பேய்களுக்கு மட்டுமானவை. 'பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் புளியமரத்தில் ஏற வேண்டும்' என்பதே அதற்குத் தானே?

இங்குள்ள சேமக்காலைகள் பூங்காங்கள் மாதிரி! எப்போதும் சனநடமாட்டம் உள்ள பகுதிகளில் மட்டுமல்ல, குடியிருப்புகளுக்கு மிகவும் அருகில் கூட இங்கே உண்டு. பழங்காலப் புதைவிடங்களுக்கு அருகில் பெருமாடிக்கட்டடங்கள் நிறைய எழுப்பப்பட்டிருக்கின்றன. முன்பு நான் வாழ்ந்த மாடித்தொகுதிக்கு அருகில் பெரும் பழங்காலப் புதைவிடம் உண்டு.

பேய்களைக் கூலிக்கு அமர்த்தி ஏவி விடுவது இங்கே குடிசைக் கைத்தொழிலாகவும் இல்லை. எனவே, இங்குள்ள ஜார்விஸ் வீதியில் இரவுகளில் நின்று கை காட்டி அழைக்கிற, பெண் வேடம் போட்ட ஆண்

**கனடாவிலும் தங்களோடு மோதிக் கொண்ட சோதிடச் சாத்திரியார் ஒருவருக்கு ஐயர்மார் சூனியம் செய்ததாகக் கேள்விப்பட்டதுடன், நான் சொன்ன அதே பக்கத்து இடுகாட்டுப் பக்கமாக அந்தச் சாத்திரியார் தன்னைத் தொலைத்தவராக இரவுகளில் நடந்து திரிந்ததையும் கண்டிருக்கிறேன்.**

**ஐயர்மார் வாலாயம் பண்ணிய அந்த பில்லிப் பேய்கள் ஊரிலிருந்து ஏதும் துடக்குச் சீலையோடு வந்ததாக இருக்கக் கூடும். அல்லது காடுடைய சுடலைச் பொடியை, விபூதி என்று ஐயர்மார் கனடாவின் 'உள்ளுக்கவர் கள்வனாக' கொண்டு வந்திருக்கக் கூடும்.**

இரவுராஜனிகள் மாதிரி, வீதியோரம் நிற்கிற பேய்களை வசியம் பண்ணவும் முடியாது.

சூனியம் செய்ய பேய் வேண்டும் என்றால் கூட, தலை மாற்றிய பாஸ்போட்டில் கள்ள விசாவில் தான் கூட்டி வர வேண்டும். சில நேரம், இங்கு மூலைக்கு மூலை கடைகளின் நிலக்கீழ் அறைகளில் இருந்து சனி தோசம் நீக்குகிற தமிழ்நாட்டுச் சோதிடர்கள் மாதிரி, விசயத்தை விளங்கப்படுத்தினால், கனடிய அரசும் பேய்களுக்கான விசா விதிகளைத் தளர்த்தக் கூடும்.

எங்கள் வீட்டு குச்சொழுங்கைகளுக்கு உள்ளால் வந்து பெருந்தெருவில் இணைகிற பகுதியில் புதைவிடம் ஒன்றுண்டு. இப்படி கொஞ்ச நாள் இரவுகளில் நடைப்பயிற்சி செய்த நாட்களில், இந்த இடுகாட்டைக் கடந்து போகிற போது, ஒரு நாள் ஒரு பங்களாதேஷ் மனிசி, நரைத்த தலையோடு எதிரே வந்து, என்னை ஒரு மாதிரிப் பார்வையும் பார்த்து, என்னைக் கடந்து போனபோது, எதற்கும் மனதில் சந்தேகத்தோடு வீட்டே போகக் கூடாது என்பதற்காக, திரும்பிப் பார்த்து மனிசியின் கால்கள் நிலத்தில் படுவதை உறுதி செய்து தான் இருந்தேன். மறுநாளும் கிட்டத்தட்ட அந்த இடத்தில் அதே மனிசியைக் கண்டதால், பேயோ, பெண்ணோ, எதற்கு அனாவசியமான #MeToo தலையிடி என்பதற்காக கொஞ்சக் காலம் பாதையை வேறு மாற்றியும் இருந்தேன்.

ஆளரவம் அற்ற அதிகாலை வேளைகளில் காரில் வேலைக்குப் போகும்போது, அதே இடுகாட்டைக் கடக்கும் போதும், காரண காரியம் இல்லாமல் அந்த நேரம் கெட்ட நேரங்களில் நடைப்பயிற்சி செய்கிற பெண்களைக் கண்டாலும், கடந்து போன பின்னால், கண்ணாடிக்குள்ளால் தெரிகின்றார்களா என்பதையும் உறுதி செய்து கொள்வதுண்டு.

ஆவிகள், பேய்கள் எல்லாம் கண்ணாடிகளில் தெரிவதில்லை என்று எங்கேயோ அம்புலிமாமா கதைகளில் வாசித்த ஞாபகம்.

யாராவது சூனியம் செய்து அனுப்பிய பில்லிப் பேய் ஆக இருக்கவும் நியாயமில்லை. நான் படும் துன்பத்தைப் பார்த்து, 'ஆரும் உங்களுக்குச் சூனியம் ஏதும் செய்திருப்பினமோ?' என்ற பயமுறுத்துகிற, என் மேல் அன்பு பூண்ட நண்பர்களும் இருக்கிறார்கள். அப்படி சூனியம் செய்யச் சந்தர்ப்பம் உள்ளவர்கள் என்ற ஒரு பட்டியலை, நான் விரும்பாவிட்டாலும், மனம் தனியே கணக்குப் போட்டும் விடுகிறது.

சூனியம் பற்றி நீங்கள் நம்பாவிட்டாலும், ஊரில் நாங்கள் இருந்த காலத்தில் எங்கள் வீட்டில் நடந்த பல கதைகள் உண்டு. என்னை விட என் சகோதரர்களுக்கு அதில் நிறைய அனுபவம் உண்டு. நான் நேரில் கண்ட பல கதைகள் உண்டு. நள்ளிரவில் துயில் கலைத்து எழும்போது, உடுக்குச் சத்தம் கேட்கிற தொலைவில் வீட்டுக்கு இருபுறமும் ஊருக்குள் பேமஸான சூனியக்காரர்கள் இருந்தார்கள். ஒருவர் மட்டக்களப்பு மாந்திரீகரைக் கொண்டும் மற்றவர் மட்டுவில் மாந்திரீகரைக் கொண்டும் பேய்களை ஏவியும் கலைத்தும் வந்தார்கள்.

நாங்கள் இரண்டு தடவை வீடிழந்து நடுத்தெருவில் நின்றபோதும், எங்களை 'வீடு கொண்டெழுப்ப' சூனியம் செய்திருப்பதான நம்பிக்கை வீட்டாருக்கு இருந்தது.

கனடாவிலும் தங்களோடு மோதிக் கொண்ட சோதிடச் சாத்திரியார் ஒருவருக்கு ஐயர்மார் சூனியம் செய்ததாகக் கேள்விப்பட்டதுடன், நான் சொன்ன அதே பக்கத்து இடுகாட்டுப் பக்கமாக அந்தச் சாத்திரியார் தன்னைத் தொலைத்தவராக இரவுகளில் நடந்து திரிந்ததையும் கண்டிருக்கிறேன்.

ஐயர்மார் வாலாயம் பண்ணிய அந்த பில்லிப் பேய்கள் ஊரிலிருந்து ஏதும் துடக்குச் சீலையோடு வந்ததாக இருக்கக் கூடும். அல்லது காடுடைய சுடலைச் பொடியை, விபூதி என்று ஐயர்மார் கனடாவின் 'உள்ளுக்கவர் கள்வனாக' கொண்டு வந்திருக்கக் கூடும்.

அவர் நீண்ட நாட்களுக்கு முன் ஒரு தடவை சோதிட கணக்கீட்டின்படி, புதுவருடப் பிறப்பு நேரம் பற்றிய ஐயர்மாரின் கணிப்பும் அறிவித்தலும் தவறானது என்று கட்டுரை எழுதி, தாயகத்தில் பிரசுரிக்க வேண்டும் என்று கொண்டு வந்து தந்து, அதை நான் பிரசுரித்தும் இருந்தேன். ஐயர்மாரும், எங்கள் இலக்கியச் செம்மல்கள் மாதிரி, எழுதியவரை விட, 'நீர் எப்படிப் பிரசுரிக்கலாம்?' என்று, பிரசுரித்தவர் மீது தானே அதிகம் கோபத்தில் இருந்திருப்பார்கள்?

சாத்திரியார் தன்னைத் தொலைத்து அலைந்தது எல்லாம் தாயகம் நின்று போய், நீண்ட காலத்தின் பின்னால். அவர் என்னைக் கண்டிருந்தால் அடையாளமும் கண்டிருக்க

மாட்டார். அந்தச் சாத்திரியாரும் வயோதிபம் அடையாத வயதில் சென்ற வருடமோ, இந்த வருடமோ இறந்து போய் விட்டார்.

அதே ஐயர்மாருடன் எனது சந்தேகப்பட்டியலில் இருக்கும் ஒருவருக்குத் தொடர்பு இருந்ததாகவும் பின்னர் அறிந்தேன். அவரும் இளவயதில் பெருவியாதி வந்து இறந்து போயிருந்தார். அவருக்கும் எனக்குமான சம்பந்தம், அவருக்கு என் மீது இருந்த கோபம் என்பன நான் எழுதி தாயகத்தில் வெளிவந்த ஒரு கதை பற்றியது. அது பற்றிய விபரங்களை மேலும் சொன்னால் பிரச்சனைகள் அதிகம். அதன் பின்னால் விதி நான் நம்ப முடியாத, சாத்தியமேயில்லாத சில விசித்திரங்களை என்னோடு விளையாடியிருந்தது.

சில நேரம் அந்த ஐயர்கள் வாலாயம் பண்ணி, எனக்கு அனுப்பிய பேய்கள் தான் விலாசம் தெரியாமல், அவர்களிடம் போய்ச் சேர்ந்து 'ஆளை முடிச்சிருக்குமோ? யாருக்குத் தெரியும்? என்று ஒரு மன ஆறுதல்.

இப்படி, இந்த இடுகாட்டுப் பேய்கள், பில்லி சூனியப் பேய்கள் எல்லாம் எனது வீட்டில் அகதித் தஞ்சம் கோரியதற்கான சந்தர்ப்பங்களும் சாத்தியங்களும் குறைவு.

பேஸ்புக்கில் போகிற வழிக்குப் போட்டுப் போகிற RIP இனால் அமைதியில் இளைப்பாறாமல், பழி தீர்க்க அலையும் ஆன்மாவாகவும் இருக்கவும் சாத்தியமில்லை.

போகிற வழிக்கு புண்ணியம் கிடைக்கும் என்று, நான் சும்மா 'ஆன்மா சாந்தியடையட்டும்' என்றெல்லாம் பின்னூட்டம் விடுவதில்லை. என்னுடைய பின்னூட்டங்களுக்கு இறந்த ஆன்மா கண்ணீர்க் குறியோ, எமதர்மராஜன் விருப்புக்குறியோ, எமதர்மனின் சித்திரவதை முகாமுக்குப் பொறுப்பான பொட்டம்மான் சித்திரகுப்தன் கோபக் குறியோ போடப் போவதுமில்லை. பிறகெதற்கு அனாவசியமாக, என்ற எண்ணம்.

பதிவு போட்டவர்களுக்கே பின்னூட்டம் வாசிக்க நேரமில்லை, அதற்குள் இவர்களுக்கு எல்லாம் எங்கே நேரம் இருக்கும்?

இதற்குள், எனக்கும் எங்கள் ஊர்க் காட்டு வைரவருக்கும் ஒரு பிணைப்பு ஒன்று இருக்கிறது. அதை விட, வன்னிக்காட்டு வைரவருக்கும் எனக்கும் பெரும் நெருக்கமும் வேறு. அதைப் பற்றி, வன்னிக்காட்டு வைரவர் பற்றி தாயகத்தில் எழுதியிருக்கிறேன்.

அந்த காலபைரவர்கள் தான் இந்த நாயைத் திருச்சோதனை செய்கிறார்களோ என்றால், என்னுடைய துன்பம் எல்லாம் 2009 க்கு முன்னேயே என்னோடு இருக்கின்றன.

இந்தப் பேய் இப்படியான சாதாரண பேய்கள் மாதிரி இருக்க எந்த முகாந்திரமும் இல்லை. என்னைப் போன்றதொரு பேய்வெட்டியோடு சேட்டை விடும் அளவுக்கு இந்தப் பேய்களுக்குத் துணிவும் இருந்திருக்காது.

இது சாதாரண பேய்களில் ஒன்றாக இல்லாமல், பைபிளில் வருகின்ற, பேய்களுக்கு எல்லாம்

*அதன் பின் பைபிளில் சாத்தான் பற்றி எங்கும் குறிப்பிடப்படவில்லை. அந்தச் சாத்தான் வேறு எங்கும் போகவில்லை. நேரடியாக என் வீட்டில் தான் குடியிருக்க வந்திருக்கிறது.*

*வந்த சாத்தானுக்கு என்னோடு சேட்டைகள் விட முடியாது என்பது தெரியும்.*

*துப்பாக்கி வைத்திருந்த புலிக்கே பயப்படாத பேய்வெட்டி, பிறகு தான் எப்படி என்ற தன்னடக்கமாக இருக்கலாம்.*

*வைரவர் வீதியுலா வருகிற அமாவாசை இரவுகளில் அவருடைய கோயில் பக்கமாக இருளில், வெறும் ஒற்றையடிப்பாதையில், ஒரு குறிப்பில் சைக்கிளோடி வந்த விசயங்கள் தெரிந்தும் இருக்கலாம்.*

*எனவே, என்னோடு எந்தப் பேய்களும், பேயர்களும், வாலாட்டுவதில்லை.*

தலைவனான சாத்தானாகத் தான் இருக்க வேண்டும்.

பைபிளில் சாத்தான் முக்கியமாக மூன்று இடங்களில் வருகிறான்.

கடவுள் ஆதாமைப் படைத்து, ஆதாமின் விலா எலும்பிலிருந்து ஏவாளைப் படைத்து, இந்த உலகத்தை ஆண்டு அனுபவியுங்கள் என்று விடுகிறார்.

ஒரு fine print user agreement உடன்.

நடுவில் நிற்கும் அந்த மரத்தில் உள்ள விலக்கப்பட்ட கனியை மட்டும் உண்ணக் கூடாது.

சாத்தான் பாம்பு உருவத்தில் வருகிறது. ஏவாளுக்கு ஆசை காட்டுகிறது. 'கடவுள் உனக்குப் பொய் சொல்லியிருக்கிறார், அந்தக் கனியை உண்டால் உனக்கு அறிவு வந்து, நீயும் கடவுளைப் போலாகி விடுவாய் என்று தான் கடவுள் உன்னைத் தடுத்திருக்கிறார்.'

பிறகென்ன? ஏவாள் அந்த விலக்கப்பட்ட கனியை உண்டு, அவர்கள் தங்கள் நிர்வாணத்தை உணர்ந்து கொண்டு, ஏடன் தோட்டத்திலிருந்து துரத்தப்படுகிறார்கள். இறப்பு அவர்களுக்கு உறுதி செய்யப்படுகிறது. அவர்களின் ஆன்மாக்களும் அமைதியில் இளைப்பாற முடியாமல் அலைகின்றன.

இரண்டாம் தடவையாக, அந்தப் பேய் யோபுவைச் சோதிக்கிறது. அதற்கும், யோபுவிடம் வராமல் சாத்தான் கடவுளோடு தான் சவால் விடுகிறது.

யோபு கடவுள் மீது நம்பிக்கை கொண்டு புனிதனாக வாழுகிறான். கடவுள் ஒரு நாள் விசயம் தெரியாமல் சாத்தானிடம் கேட்கிறார், யோபுவைப் பற்றி என்ன நினைக்கிறாய்? அவன் இவ்வளவு நல்லவனாக இருக்கிறானே?

சாத்தான் சொல்கிறான், அவன் நீ கொடுத்த செல்வத்தினால் மட்டுமே உனக்கு விசுவாசமாக இருக்கிறான். அந்தச் செல்வத்தைப் பறித்துக் கொண்டால், அவன் உன் மீதான விசுவாசத்தை இழந்து விடுவான்.

இருவரும் விடும் சவாலுக்கு யோபு பகடைக்காய் ஆகிறான்.

கடவுள் அவனுக்கு ஏராளமான துன்பங்களைக் கொடுக்கிறார். ஆனால் யோபு கடவுள் மீதான விசுவாசத்தில் இருந்து கடைசிவரை தளரவில்லை. கடைசியில் சாத்தான் தன் தோல்வியை ஒப்புக் கொள்கிறான். யோபு தன் செல்வங்களை மீண்டும் பெற்றுக் கொள்கிறான்.

மூன்றாவது, சாத்தான் இயேசுவைச் சோதிக்கிறான். இயேசு மலையடிவாரத்தில் தவம் செய்யப் போகிறார். அங்கே வரும் சாத்தான் யேசுவுக்கு பலவிதமான சோதனைகளைச் செய்கிறான்.

யேசுவை மலையுச்சிக்கு கூட்டிக்கொண்டு போய், உலகின் ராஜ்யங்களை எல்லாம் காட்டி, 'நீ கடவுளை விட்டு என்னை வணங்கினால், இந்த உலகத்தின் சாம்ராஜ்யங்களை எல்லாம் உனக்குத் தருவேன்'னேன்கிறான்.

இயேசு சாத்தானே, அப்பாலே போ! என்கிறார்.

அதன் பின் பைபிளில் சாத்தான் பற்றி எங்கும் குறிப்பிடப்படவில்லை.

அந்தச் சாத்தான் வேறு எங்கும் போகவில்லை. நேரடியாக என் வீட்டில் தான் குடியிருக்க வந்திருக்கிறது.

வந்த சாத்தானுக்கு என்னோடு சேட்டைகள் விட முடியாது என்பது தெரியும். துப்பாக்கி வைத்திருந்த புலிக்கே பயப்படாத பேய்வெட்டி, பிறகு தான் எப்படி என்ற தன்னடக்கமாக இருக்கலாம்.

வைரவர் வீதியுலா வருகிற அமாவாசை இரவுகளில் அவருடைய கோயில் பக்கமாக இருளில், வெறும் ஒற்றையடிப்பாதையில், ஒரு குறிப்பில் சைக்கிளோடி வந்த விசயங்கள் தெரிந்தும் இருக்கலாம்.

எனவே, என்னோடு எந்தப் பேய்களும், பேயர்களும், வாலாட்டுவதில்லை.

எனவே, இந்தப் பேய் நான் வீட்டில் நிற்கும் போது நடமாடுவதும் இல்லை. நான் இல்லாத நேரங்களில் தான் வீட்டில் வெளியே வந்து நடமாடுகிறது.

சாத்தான் வீட்டில் நடமாடும்போது, மகிழ்ச்சியாக இருக்கும் பெண்ணைக் கண்டால், அதற்கு சும்மா இருக்க முடியுமா?

என் மனைவியைத் திருச்சோதனை செய்ய ஆரம்பித்து விடுகிறது.

மதங்கள் என்ன தான் கடவுள் சொன்னதாகக் கதையைக் கிளப்பினாலும், கடவுள் பெண்களை தளர்ந்த மனம் படைத்தவர்களாகச் சொல்லவில்லை. பெண்கள் பற்றிய மதக் கருத்துக்கள் எல்லாம் மதவாதிகள் கிளப்பியதே.

பெண்கள் மனதில் உறுதி மிக்கவர்கள் என்பதால் தான் கடவுள் பெண்களை மூடிக் கட்டச் சொல்லியிருக்கிறார். ஆண்களுக்குப் பெண்களின் அழகைக் கண்டால் பாவச் சோதனை வரும் என்பதால் தானே, கடவுள் பாதாதிகேசம் பெண்கள் தங்கள் உடலை மூடக்கடவார்கள் என்றிருக்கிறார்?

ஆண்கள் தான் சபல புத்தி கொண்டவர்கள், அவர்களுக்கு உறுதியான மனம் கிடையாது என்பது தான் கடவுளின் எண்ணம்.

பெண்கள் சபல புத்தி கொண்டவர்கள் என்று கடவுள் நினைத்திருந்தால், ஆண்களைக் கண்டதும் சாத்தான் அவர்களைப் பாவச் சோதனைக்கு உள்ளாக்கி விடுவான் என்று, ஆண்களைத் தானே பாதாதி கேசம் உடலை மூட வேண்டும் என்று சொல்லியிருப்பார்.

உடலை முழுமையாக கறுப்பு ஆடைகளால் மூடிய ஆண்களையும், ஆடைகளுக்கான சுதந்திரத்தை முழுமையாகக் கொண்ட பெண்களையும் கொண்ட உலகத்தைக் கற்பனை பண்ணிப் பாருங்கள். நிற, மொழி, இன, மத வேறுபாடு எதுவுமே இருந்திருக்காது.

ஆளை ஆள் யாரென்றே தெரியாது. எங்காவது யுத்தங்கள் வந்திருக்குமா? வாள் சண்டை போடுவார்களா?

எனவே, உந்த மதவாதிகளின் உல்டாவை நம்பி, நீங்கள் சும்மா சும்மா கடவுளை misunderstand பண்ணக் கூடாது.

**பெண்களை சபல புத்தி கொண்டவர்கள் என்று நினைப்பது சாத்தான். கடவுள் இல்லை.**

**அதனால் தான், சாத்தான் பெண்களை ஏமாற்ற முடியும் என்று நினைக்கிறான். ஏவாளுக்கு அந்தப் பழத்தை உண்டால், நீயும் கடவுள் போல ஆக முடியும் என்று சொன்ன சாத்தான் ஆதாம் இல்லாத நேரமாகப் பார்த்துத் தானே வந்தான்?**

**எனவே, பெண்களே, பெண்களை அடக்க வேண்டும், மூடிக் கட்டவேண்டும் என்று எந்த மதவாதியும் சொன்னால், அவர்கள் சொல்வது கடவுள் சொன்னதை அல்ல, சாத்தான் சொன்னதையே சொல்கிறார்கள்.**

**அந்த மதவாதிகள் சாத்தானின் பிள்ளைகளே!**

பெண்களை சபல புத்தி கொண்டவர்கள் என்று நினைப்பது சாத்தான்.
கடவுள் இல்லை.

அதனால் தான், சாத்தான் பெண்களை ஏமாற்ற முடியும் என்று நினைக்கிறான். ஏவாளுக்கு அந்தப் பழத்தை உண்டால், நீயும் கடவுள் போல ஆக முடியும் என்று சொன்ன சாத்தான் ஆதாம் இல்லாத நேரமாகப் பார்த்துத் தானே வந்தான்?

எனவே, பெண்களே, பெண்களை அடக்க வேண்டும், மூடிக் கட்டவேண்டும் என்று எந்த மதவாதியும் சொன்னால், அவர்கள் சொல்வது கடவுள் சொன்னதை அல்ல, சாத்தான் சொன்னதையே சொல்கிறார்கள்.

அந்த மதவாதிகள் சாத்தானின் பிள்ளைகளே!

•••

சமீபத்தில் என்னைப் பார்க்க கனடா வந்த என் அண்ணனிடம் என் துன்பங்களைச் சொன்ன போது, அவர் கத்தோலிக்க

சுவாமியார், பைபிளைத் தானே ஆதாரம் காட்டுவார். யோபுவின் கதையைச் சொல்லி, எங்கள் தந்தையாருக்கு எவ்வளவு துன்பங்கள் வந்தது, அவர் வீடு இழந்து எவ்வளவு அவமானங்களுக்கு உள்ளாகியிருந்தார், அவர் இறுதிவரைக்கும் தன் நம்பிக்கையைக் கைவிடவில்லைத் தானே என்று அறிவுரை சொல்லியிருந்தார்.

'சரி, கடவுள் என் கஷ்டங்களுக்கான, ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வுப்பொதியை, கொஞ்சம் பணத்தோடுதான், முன் வைத்தால், பரிசீலிக்கத் தயார்' என்று சம்பந்தர் ஐயா மாதிரிச் சொல்லியிருக்கிறேன்.

பல ஆண்டுகளுக்கு முன்னர் Jesus of Montreal என்றதொரு கியுபெக் பிரெஞ்சுப் படம் பார்த்து அதைப் பற்றி தாயகத்தில் எழுதியிருந்தேன். அந்தப் படத்திலும் கதாநாயகனை, யேசுவை மலை உச்சியில் கொண்டு போய் விட்டு சாத்தான் 'எல்லாவற்றையும் உனக்குத் தருகிறேன்' என்றது போல, 'என்னோடு வா, உனக்கு பணமும் புகழும் பெற்றுத் தருவேன்' என்று ஒரு உயரமான மாடியில் வைத்து ஒருவன் ஆசை காட்டுவான்.

சரி, என் வீட்டில் வந்து தஞ்சம் அடைந்த சாத்தானின் கதைக்கு வருவோம். அது நான் வீட்டுக்குள் இருக்கும் வரைக்கும் வெளியே தலைக்கறுப்புக் காட்டுவதில்லை.

நான் வேலைக்குப் போன பின்னால் தான் வந்து, சும்மா இருக்கிற என் மனைவியிடம் தன் ஏமாற்றுவேலைகளை ஆரம்பிக்கிறது. Idle mind is devil's workshop என்று சும்மாவா சொன்னார்கள்?

அதுவும் ஏதோ, நீயும் கடவுள் ஆகலாம் என்ற கதை எல்லாம் கிடையாது. மிகவும் சுலபமான விடயங்களில் தான் சோதனை செய்கிறது.

என்னுடைய பொருட்களை வைப்பதற்கு என்று எனக்கு ஒரு அறை இருக்கிறது. அது பெரிதாக ஒழுங்குமுறைப்படி அடுக்கி வைக்கப்பட்டது என்றெல்லாம் சொல்ல மாட்டேன். குப்பையாகக் கூட இருக்கும். ஆனால், அந்தக் குப்பைக்குள்ளும், எந்தப் பொருளை எங்கே எறிந்திருப்பேன் என்பது எனக்குத் தெரியும்.

இதனால், எப்போதும் என் மனைவிக்குச் சொல்லியிருப்பேன்... இதுக்குள்ள கை வைக்காதே!

சாத்தான் விடுமா? அது குடும்பத்தின் பூசலை உருவாக்கும் நோக்கத்துடன் தான் உள்ளே வந்திருக்கிறது போலும்.

நான் இல்லாத நேரமாகப் பார்த்து, மனைவியைச் சோதிக்கும். 'அவன் உன்னைத் துப்புரவாக்க வேண்டாம் என்று சொல்வதெல்லாம், அவனை விட நீ அழகாக அந்த இடத்தை வைத்திருப்பாய் என்பதால் தான். எனவே, நீ அதைத் துப்புரவு செய்' என்று தூண்டி விடும்.

மனைவி நல்லெண்ணம் மிக்கவள். எல்லோருக்கும் உதவ வேண்டும் என்ற நினைப்போடு இருப்பவள். வஞ்சகம் இல்லாத மனதோடு அதைத் துப்புரவாக்குவாள்.

**நான் இதையெல்லாம் செய்யப் போகிறேன் என்பது அந்தச் சாத்தானுக்கு ஏதோ வழியில் தெரிந்து விடுகிறது. சாத்தானும் கடவுள் மாதிரி வல்லமை கொண்டவன் என்று தானே புனிதப் புத்தகங்கள் சொல்கின்றன.**

**நான் நினைப்பதை அறிந்து கொள்ளும் வல்லமை அந்தச் சாத்தானுக்கு உண்டு. பிறகென்ன? திருச்சோதனை ஆரம்பிக்கும்.**

**அன்றைக்கு என்று பார்த்து, அந்தப் பொருட்களை என் மனைவி எடுத்து 'பத்திரமாக' வைத்து விடுவாள்.**

**அவ்வளவு தான். எங்கே வைத்தாள் என்ற நினைவையும் சாத்தான் வழமை போல அழித்து விடும். பிறகென்ன? குடும்பத்திற்குள் கலவரம் தான்.**

என்னுடைய பொருட்கள் எல்லாவற்றையும் எடுத்து பத்திரமாக வைப்பாள்.

ஆனால், இந்தச் சாத்தான் சும்மா இருப்பானா? மூளைக்குள் புகுந்து வேறு விளையாடுவான். எங்கே பத்திரமாக எடுத்து வைத்தது என்ற நினைவை அழித்து விடுவான்.

கேட்டால், 'உங்க தான் பத்திரமா எடுத்து வைச்சிருக்கிறன்.' என்று பதில் வரும்.
எங்கே? என்றால் தெரியாது.

அவ்வளவு தான். குடும்பத்தில் கலவரம்.

அதன் பின்னால், நான் வைத்த பொருட்களை காணவே முடியாது. எல்லாம் மறந்து போய், எனக்கு நேரம் கிடைக்கும்போது, அந்த அறையை ஒழுங்கு பண்ணும்போது, சம்பந்தம் இல்லாத இடங்களில் இருந்து எல்லாம் நான் தேடிக் கொண்டிருந்த பொருட்கள் வெளிப்படும்.

எதையாவது செய்வதற்காக பொருட்களை ஆங்காங்கே வைத்திருப்பேன். விளைச்சல் முடிவில் விதைகளைச் சேகரிக்க காய்கறி விதைகளை துப்புரவாக்க எங்காவது வைத்திருப்பேன். ஏதாவது புரஜக்ட் செய்ய பொருட்களும் கருவிகளும் வாங்கி வைத்திருப்பேன்.

சமையலறையில் நான் சமைக்கும்போது பயன்படுத்த என பல பொருட்களை வாங்கி வந்திருப்பேன். பாண், கேக், ஊறுகாய், பிரியாணி என்றெல்லாம் ஏதாவது எண்ணம் வரும்போது சமைக்கும்போது, வேலையை இலகுவாக்க வாங்கி வரும் பொருட்கள் அவை. அவை என் கண் முன்னால் மாதக் கணக்கில் இழுபடும். நானும் எனக்கு நேரம் கிடைக்கும் போது செய்வோம், அப்போது தேவைப்படும் தானே என்று இருப்பேன். என்றாவது ஒரு நாள் தோன்றும்போது, இந்த சமையலுக்கான பொருட்களைத் தேடி வாங்கிக் கொண்டு வீடு வந்து சேர்வேன்.

நான் இதையெல்லாம் செய்யப் போகிறேன் என்பது அந்தச் சாத்தானுக்கு ஏதோ வழியில் தெரிந்து

விடுகிறது. சாத்தானும் கடவுள் மாதிரி வல்லமை கொண்டவன் என்று தானே புனிதப் புத்தகங்கள் சொல்கின்றன.

நான் நினைப்பதை அறிந்து கொள்ளும் வல்லமை அந்தச் சாத்தானுக்கு உண்டு. பிறகென்ன? திருச்சோதனை ஆரம்பிக்கும்.

அன்றைக்கு என்று பார்த்து, அந்தப் பொருட்களை என் மனைவி எடுத்து 'பத்திரமாக' வைத்து விடுவாள்.

அவ்வளவு தான். எங்கே வைத்தாள் என்ற நினைவையும் சாத்தான் வழமை போல அழித்து விடும்.

பிறகென்ன? குடும்பத்திற்குள் கலவரம் தான்.

நான் செய்கிற ஒவ்வொரு வேலைக்கான கருவிகள் நிறைய வாங்கி வைத்திருக்கிறேன். கருவிகளையும் நான் பெரிதாக கவனமாக, ஒருவருக்கும் கொடுக்காமல், பத்திரப்படுத்துவதில்லை. எல்லாரும் பயன்படுத்துவதில் எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை. பயன்பட வேண்டும் என்று தானே பொருட்களை வாங்குகிறோம்.

ஆனால், பொருட்களைக் கவனமாகப் பாவிக்க வேண்டும். அவை பிறருடையனவாக இருந்தாலும்.

மற்றது எடுத்த பொருட்களை எடுத்த இடத்தில் வைக்கும் பழக்கம் வேண்டும். அடுத்த முறை தேடும் போது கிடைக்க வேண்டும் என்பதற்காக.

பிறகென்ன? சாத்தான் அந்தப் பொருட்களை எடுக்கச் சொல்லும். மனைவி அவற்றை எடுத்த இடத்தில் வைக்கவேண்டும் என்று நினைப்பதற்குள் நினைவுகளை சாத்தான் அழித்து விடும்.

'எடுத்த இடத்தில் எடுத்த பொருட்களை வைத்துப் பழகு' என்று எத்தனை தடவை மனைவி சொல்லியிருப்பேனோ தெரியாது. சாத்தான் அதை அவளின் நினைவில் பதிவதற்கு ஒருபோதும் விடுவதில்லை.

ஆனால், சில நேரங்களில் நான் கண்ணாடியையோ, செல்போனையோ எங்காவது வைத்து விட்டுத் தேடும் போது மட்டும், எனக்கே 'எடுத்த பொருட்களை எடுத்த இடத்தில் வைத்துப் பழகு' என்று சொல்லும் அளவுக்கு சாத்தான் அதை நினைவுக்கு கொண்டு வந்து விடும்.

சூனியம் அது இது என்று இல்லாவிட்டாலும், ஒருவேளை இந்தக் குடும்பத்திற்குள் கலவரம் ஏற்படுத்த, கடவுளும் சாத்தானும் ஏதோ பந்தயம் கட்டித் தான் இதெல்லாம் நடக்கிறதோ என்று கூட நினைப்பேன்.

அதிலும் முன்பின் ஆளைக் காணாமலேயே காதல் கொண்டு, தொலைபேசியில் காதலித்து, திருமணம் செய்த போது, 'உது எத்தனை நாளைக்கு எண்டு பாக்கத் தானே போறம்?' என்று எத்தனை பேர் நினைத்திருப்பார்கள்? அதையும் மீறி இவ்வளவு நாளாக வேறு குப்பை கொட்டிக் கொண்டுதான் இருக்கிறோம்.

'என்னைப் போல ஒருத்தன் கிடைக்க எத்தனை பிறவியில தவம் இருந்திருப்பாய்?' என்றெல்லாம் கேட்டு, அடிக்கடி பட்டினி எல்லாம் கிடப்பேன்.

சூனியம் அது இது என்று இல்லாவிட்டாலும், ஒருவேளை இந்தக் குடும்பத்திற்குள் கலவரம் ஏற்படுத்த, கடவுளும் சாத்தானும் ஏதோ பந்தயம் கட்டித் தான் இதெல்லாம் நடக்கிறதோ என்று கூட நினைப்பேன். அதிலும் முன்பின் ஆளைக் காணாமலேயே காதல் கொண்டு, தொலைபேசியில் காதலித்து, திருமணம் செய்த போது, 'உது எத்தனை நாளைக்கு எண்டு பாக்கத் தானே போறம்?' என்று எத்தனை பேர் நினைத்திருப்பார்கள்? அதையும் மீறி இவ்வளவு நாளாக வேறு குப்பை கொட்டிக் கொண்டுதான் இருக்கிறோம்.

'என்னைப் போல ஒருத்தன் கிடைக்க எத்தனை பிறவியில தவம் இருந்திருப்பாய்?' என்றெல்லாம் கேட்டு, அடிக்கடி பட்டினி எல்லாம் கிடப்பேன்.

இப்படியெல்லாம் சோதனை செய்கிற சாத்தான் ஏன் இன்னமும் என் மனைவியை யேசுநாதரைச் சோதனை செய்த மாதிரி, சோதனை செய்யவில்லை என்பது தான் தெரியவில்லை.

'உவனை விட்டு நீ போனால், உனக்கு உலகின் சகல செல்வங்களையும் தருவேன்' என்று இன்னமும் இந்தச் சாத்தான் ஆசை காட்டவில்லையோ தெரியவில்லை?

அவ்வாறு சொன்னாலும், 'நீ பயப்படாமல் அதற்குச் சம்மதி. எங்கட தமிழ் ஆக்கள் ஒன்றாக இருந்து கொண்டே, செப்பரேட் அடிச்சு, தாங்கள் பிரிஞ்சிருக்கிற மாதிரிக் காட்டிக் கொண்டே, அரசாங்கத்திட்ட காசு எடுக்கிற மாதிரி, நாங்களும் சாத்தானுக்கு செப்பரேட் அடிச்சு உந்த உலகின் செல்வங்களை எல்லாம் அனுபவிக்கலாமல்லோ!' என்று சொல்லித் தான் வைத்திருக்கிறேன்.

ஆனால், அதைக் கேட்டால், அதன் பின்னால் தனக்கு போக்கிடம் ஏதும் இல்லாமல் போய் விடுமோ என்ற பயத்தில் சாத்தான் என் மனைவியிடம் அதை இன்னமும் கேட்கவேயில்லை.

இப்போது கூட, அதிகாலை நித்திரை குலைந்து, நான் வேலைக்குப் போகும் அவசரத்திற்குள்ளும், 'பத்திரமாக' எடுத்து வைக்கப்பட்ட என்னுடைய உள்ளாடையைத் தேடிக் கொண்டிருக்கிறேன்.

இப்படிச் சாத்தான் என் பொறுமையை அதன் எல்லை வரைக்கும் சோதித்துக் கொண்டே இருக்கிறது.

I think I have had enough.

இன்றைக்கு வழியில் கொத்தியாத்தைகள் யாராவது லிஃப்ட் கேட்டால், உடுத்தின சேலையோ, உடுத்தாத சேலையோ, உள்ளாடை இல்லாமல் வந்தால் கூட, ஓடிப் போவதான முடிவோடு! அ

# சாத்தானே, அப்பாலே போ!

அந்த கண்களைக் கண்டேன்.

அவை
போதையால் நிறைந்து இருந்தன.

மயக்கத்தின் காரணம்
மதுவாகவும்...

மங்கைகளாகவும் இருப்பதும்
தெரியும்.

சூனியத்தை வெறித்துப்
பார்த்துக் கொண்டிருக்கும்...

துன்பமும் வேதனையும்
மறைந்து இருக்கும்
பல கண்களைக் கண்டிருக்கிறேன்.

அவை போலில்லாமல்
புகழ் போதையால்
அந்தக் கண்கள்
நிரம்பி வழிந்திருந்தன.

பொய்யான புகழ்ச்சிகளில்
புளகாங்கிதம் அடைவதற்கான
தாகம்
அந்த கண்களில் தணியாமல்
இருந்தது.

அறத்தின் வழி நின்று
நெஞ்சை நிமிர்த்தும்
பெருமிதம்
அந்த கண்களில்
இருக்கவில்லை.

கண்களை உற்று நோக்கி
கருத்தைச் சொல்லும்
துணிச்சலும் இருக்கவில்லை.

கண்களைத் தவிர்க்கும்
அந்தக் கண்களில் இருந்த
போதையை விட...

பொய்மையே
பெரிதாக இருந்தது.

சாத்தான்
யேசுவை மலையுச்சிக்கு
கூட்டிக் கொண்டு போய்...

பிரமிப்பூட்டும் சாம்ராஜ்யங்களைக்
காட்டி...
என்னை நீ தெண்டனிட்டு
வணங்கினால்...


இந்த உலகம் எல்லாவற்றையும்
தருகிறேன் என்றது.


'ஒருவன்
உலகமெல்லாம் தனதாக்கிக்
கொண்டாலும்...


தன் ஆத்துமாவை இழந்து
போவானாகில்...


அதனால்
அவனுக்கு என்ன பயன்?'

**ஜோர்ஜ் இ.**






# உலகெங்கும் அமசோனில்....

| | |
|---|---|
| இந்தியாவில்... | www.amazon.in |
| அமெரிக்காவில்... | www.amazon.com |
| கனடாவில்... | www.amazon.ca |
| இங்கிலாந்தில்... | www.amazon.co.uk |
| ஜேர்மனியில்... | www.amazon.de |
| பிரான்சில்... | www.amazon.fr |
| நெதர்லாந்தில்... | www.amazon.nl |
| அவுஸ்திரேலியாவில்... | www.amazon.com.au |
| இத்தாலியில்... | www.amazon.it |

**ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்**
**என்ற வார்த்தையைத்**

**தேடுங்கள்...**

**கண்டடைவீர்கள்!**